வாத்தியார் மறுபிறவி

மரண வாயிலில்...



ஆர்.எஸ்.ஜேக்கப்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (*E-Books*) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (*Download*) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (*E-Book*) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (*Email*) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

வாத்தியார் மறுபிறவி

மரண வாயிலில்...

ஆர்.எஸ்.ஜேக்கப்

பாளை

ஜெயா பப்ளிகேஷன்ஸ்

உரிமை : பாளை ஜெயா பப்ளிகேஷன்ஸ்
முதற்பதிப்பு : பிப்ரவரி, 2003
ஆசிரியர் : அருட்கலைஞர் ஆர்.எஸ்.ஜேக்கப்
ஜெயா நிலைய நூல் வரிசை : 92

வாத்தியார் மறுபிறவி
மரண வாயிலில்...
'Marana vayilil...'
(Second Part of **'Vathiyar'** Novel)
by R.S.Jacob in Tamil

விலை : ரூ.130/-

தயாரிப்பு : தியாரு, ஜே.பி.ஜெயதாஸ்
ஜே.பி.சந்தோஷ், ஜே.ஜெயவீரன்

இது ஒரு பாளை ஜெயா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு
ஆர்.எஸ்.ஜே.77 ஆம் வயதின் மகோன்னத படைப்பு

தலைமை அலுவலகம் : ஜெயா நிலையம்
22ஆம் தெரு
சாந்தி நகர், பாளையங்கோட்டை-627 002.
போன்:0462-2540803

சென்னையில் தொடர்பு முகவரிகள்:

- ஜெஸிந்தா தியாரு
பிளாட்எண்.11, தெருஎண்.17,
டான்சிநகர்,வேளச்சேரி,
சென்னை-600 042.
போன்: 22430964

- டாக்டர். பிரமிளா தாஸ்
பிளாட்எண்.11, 2 / 266 F தெருஎண்.9,
கந்தசாமிநகர், பாலவாக்கம்
சென்னை-600 041.
போன்: 2492 9262

அட்டை வடிவமைப்பு : எம். சத்யராஜ்
டீஷைன்ஸ்அட்வர்டைசிங் & கம்யூனிகேஷன்ஸ்.
சென்னை-600 024.
போன்: 24837168, 24844613

வடிவமைப்பு மற்றும் அச்சாக்கம் : ஆர்.எஸ்.ஜே.கிரியேட்டிவ் சர்வீசஸ்
சென்னை-600042.

வாத்தியார் மறுபிறவி

மரண வாயிலில்...

வாத்தியார் மறுபிறவி

மரண வாயிலில்...

ஒரு வரலாற்று முன்னுரை

'வாத்தியார்' நாவல் இரு பாகங்களைக் கொண்ட இரட்டைக் குழந்தைகள். முதற்பாகம் 1987இல் வெளியானது. இரண்டாம் பாகமான 'மரணவாயிலில்...' 2002 ஆகஸ்டில் எழுதி முடிக்கப்பெற்றது. 1998 ஜனவரியில் ஆரம்பமான 'உன்னத சிறகுகள்' என்ற காலாண்டு இதழில் 'மரண வாயிலில்...' தொடர் நாவலாக வெளிவரத் தொடங்கியது. எனவே முழுமையாக எழுதி முடித்துவிட முனைந்தேன். அதன் ஆசிரியர்களுக்கு நன்றி.

முதற்பாகம் 1945 ஜூன் முதல் 1950 வரை ஒரு கிராமப் பின்னணியைக் கொண்ட உண்மை வரலாறு. 1950 மார்ச் 17இல் வாத்தியார் கைதாகி கொக்கிரகுளம் சிறைக்குச் செல்லும் வரையிலான செய்திகளும் இந்நாவலில் அடங்கும். 'மரண வாயிலில்...' நெல்லைச் சதி வழக்கில் மாட்டியுள்ள வாத்தியார் மற்றும் தோழர்களின் மூன்றாண்டு சிறை இலக்கியமாகும்.

இந்திய இளைஞர்கள் சுதந்திரத்திற்காகப் போராடினார்கள். சுதந்திரம் கிடைத்த ஓராண்டிற்குள்ளாகவே 'இது மக்கள் சுதந்திரமல்ல' என்ற ஏமாற்ற உணர்வில் கொந்தளித்தார்கள். தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் இயக்கம் தீவிரமாகச் செயல்பட்டது. 1948 இல் அந்த இயக்கத்தைத் தடை செய்தார்கள்.

மக்களின் நல்வாழ்விற்காக மட்டுமே உழைத்த தீரமிக்க இளைஞர்கள், தலைவர்கள் கைது செய்யப்பட்டு கொடிய காட்டுமிராண்டித்தனமான துன்பங்களுக்கு ஆளானார்கள்.

பண்ணையூரின் நிலப்பிரபுத்துவ - முதலாளித்துவ கொத்தடிமையை அநியாய அக்கிரமங்களை எதிர்த்துப் போராடிய வாத்தியாரும் கைதானார்.

எனக்கு டைரி எழுதும் வழக்கம் உண்டு. என்னைக் கைது செய்தபோது பறிமுதல் செய்தவைகளில் எனது டைரிகளும் இருந்தன. ஒரு டைரியின் வாசகம் போலீசுக்கு நன்கு தீனிபோட்டது. நெல்லைக் கம்யூனிஸ்ட் சதி வழக்கு என்று ஒரு பெரும் வழக்கை ஜோடனை செய்து அதன் ஒரு பகுதி வழக்கிற்கு டைரியை மையமாக்கினார்கள். நான் மரணவாயிலில் நின்றேன்.

எனது விடுதலை அதிசயம், ஆச்சரியம், அற்புதம்.

வாத்தியார் நாவலின் முதற்பாகத்தைப் படியாதவர்கள் இந்த நாவலைப் படிக்கும்முன்பாகவாவது, படித்த பிறகாவது அதைக் கட்டாயம் படிக்க வேண்டுகிறேன்.

நெல்லை கம்யூனிஸ்ட் சதி வழக்கின் சரித்திர நாவலே 'மரண வாயிலில்....'

வழக்கு முடிந்து ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. அரை நூற்றாண்டுக்குப்பிறகு 21ஆம் நூற்றாண்டில் கணினி சகாப்தத்தில் இந்நூலை

எழுத என்ன அவசியம் நேர்ந்தது?

தேசீய உணர்வுகளே மழுங்கிப் போன காலகட்டத்தில் இப்படி ஒரு நூல் தேவையா?

வாத்தியார் முதல் பாகத்தைப் படித்த பலர் என்னை நேரில் பார்த்தும் கடிதவாயிலாகவும் மிகவும் கண்டிப்பாக இப்படிச் சொன்னார்கள் :

'வாத்தியார் முதற்பாகம் முற்றுப் பெறாத ஒரு நூல். இரண்டாம் பாகத்தை எழுதி முடித்தால்தான் அந்த நாவல் அர்த்தமுள்ளதாகும். ஏனெனில் அதன் கதாநாயகர் வாத்தியார். வாத்தியாராகிய நீங்கள் வாழ்கிறீர்கள். இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் விடுதலையின் இரகசியத்தை எழுதினால்தான் சாட்சியும் மாட்சியும்மிக்க நாவலாக மிளிரும்'.

இன்னும் சில இலக்கிய நண்பர்கள் மிகுந்த உரிமையுடன் 'உதிரி இதழ்களுக்கு எழுதுவதை நிறுத்திவிட்டு உருப்படியாக நாவலின் இரண்டாம் பாகத்தை முடியுங்கள்' என்று கடிந்துரைத்தார்கள்.

உண்மையில் இவ்வார்த்தைகள் என்னை உறுத்தின.

எழுதுவதில் பலப்பல இடர்ப்பாடுகள் எழுந்தன.

முதலில் காலமாற்றம். அடுத்து

கணினி. டி.வி. முதலிய ஊடக ஆதிக்கங்கள்.

இத்தகைய எண்ணங்களால் எழுதத் தயங்கினேன்.

மேலும் இரண்டாம் பாகம் முழுவதும் சிறை அனுபவங்கள்.

அன்றையச் சிறை வேறு. அன்றை கம்யூனிஸ்ட் கட்சி வேறு. இன்றையச் சிறை வேறு. கம்யூனிஸ்ட் கட்சிகள் வேறு. அன்றைய காங்கிரஸ் வேறு. இன்றைய காங்கிரஸ் வேறு.

இன்று சிறைநிரப்பும் பேராட்டங்கள் தினமும் சகஜமாக நடக்கின்றன. சிறை என்பது மாமியார் வீட்டிற்குப் போய்வருவது மாதிரி ஆகிவிட்டது.

எங்கள் காலச்சிறை அனுபவமோ மகா கொடியது.

இக்கால நிலைகளையெல்லாம் மறந்து நான் 1950களில் காலை ஊன்றி நின்று சிறை இலக்கியம் பண்ணவேண்டும்.

அன்று முதல் இன்றுவரை நான் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினன் அல்ல. இயக்கத்தில் ஈடுபாடும் இல்லை. இடது, வலது எதுவும் எனக்குக் கிடையாது. மார்க்சிசம் எனக்குப் பிடிக்கும். அதனை சரியாகப் படித்துப் புரிந்து கொண்டவன் என்ற முறையில் விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் எழுதமுடியும் என்று நம்பினேன்.

கம்யூனிஸ்ட்கள் மட்டுமல்ல எல்லோரும் படிக்க வேண்டிய ஒரு கால கட்டத்தின் வீரவரலாறு ஆகும் இந்த நவீனம்.

1949லிருந்து முற்போக்கு உள்ளம் கொண்ட நூற்றுக்கு மேற்பட்டோரைப் பிடித்து, சித்திரவதை செய்தார்கள். பாலதண்டாயுதம் மற்றும் இருவர் பிடிபடாததால் அந்த வழக்கை அப்படியே நிறுத்திவிட்டு தூத்துக்குடி பொன்னுவை முதல்குற்றவாளியாக வைத்து 97 பேரைக் கொண்டு 'நெல்லை கம்யூனிஸ்ட் சதிவழக்கு' என்ற பெயரில் முதல் குற்ற அறிக்கை தயார்

செய்தார்கள். கீழ்கோர்ட்டில் 67 பேரை வடிகட்டி மற்றவர்களை விடுதலை செய்தார்கள்.

67 பேர்களை மட்டும் கொண்டு வழக்கு நடந்தது. அதுவே நம் நாவல். மொத்தத்தில் பலர் மூன்று ஆண்டுகளாக சிறைவாசம். இருபெரும் சதி வழக்குகளாக நடந்து முடிந்தது.

நான் ஒரு நல்ல கம்யூனிஸ்ட்டாக

ஒரு நல்ல கிறிஸ்தவனாக

ஒரு நல்ல மனிதாபிமானியாக சிறைக்குள் வாழ்ந்தேன். அனைவரும் என் அன்புத் தோழர்கள், அருமை நண்பர்கள்.

எழுபது பேர்களுடைய வாழ்க்கையையும் நாவலில் கொண்டு வந்தால் ஆயிரம் பக்கங்கள் ஆகிவிடும். சுமார் இருபது பேர்களுடைய வரலாறுகள் சுருக்கி இடம்பெற்றுள்ளன.

இந்நாவலை எழுதுவதில் எனக்குப் பெரும் தொய்வும், சோர்வும் ஏற்பட்டன. எப்படியெனில் இரண்டாம் பாகத்தை எழுதத் தூண்டியும், படிக்க ஆசைப்பட்டும் காத்துக் கொண்டிருந்த நண்பர் சில்லாநத்தம் திம்மு ரெட்டியார் மற்றும் தோழர்கள் பிரம்ம தேசம் ஏ. நல்லசிவன், கடலூர் ப.மாணிக்கம் இன்னும் எண்ணற்ற நண்பர்கள் மரித்துப் போனார்கள். என் சகோதரி ரெபேக்கா, மற்றும் சகோதரிகள் கண்களில் நீர்மல்க, தம்பி சிறை எப்படி இருக்கும், கொஞ்சம் சொல்லு என்று பாசத்தோடு கேட்கும்போது 'இரண்டாம் பாகம் எழுதுறேன், படிச்சிக்கோ' என்பேன். அவர்களும் காலமாகிவிட்டார்கள்.

இனியும் நான் யாருக்காக எழுத வேண்டும்?

பாளை வக்கீல் சண்முகம் - வழக்கை நடத்தியவர் - தொலை பேசியில் தொடர்பு கொண்டு - (2000 பிப்ரவரி) 'என்னை வந்து பார்த்துப்போ' என்றார். போய் பார்த்தேன். 'வாத்தியார் நாவலை படித்தேன், அற்புதமாக இருந்தது. இரண்டாம் பாகத்தை சீக்கிரமாக எழுதிமுடி. சட்டசம்பந்தமான சந்தேகங்கள் இருந்தால் கேட்டுக்கொள்" என்றார்.

அவரும் 9.4.2000 அன்று மாரடைப்பால் மரித்துப்போனார்.

67 பேர்களில் பலப்பலர் காலம் சென்றுவிட்டார்கள்.

நான் ஏன் எழுதவேண்டும், யாருக்காக எழுத வேண்டும்? என்ற குரல் எனக்குள் பலமாக ஓங்கார சத்தம் போட்டது.

'என்னடா, எப்ப எழுதி முடிக்கப் போறா?' என்று கேட்டு மாயாண்டி பாரதி அடிக்கடி மதுரையிலிருந்து கடிதம் எழுதினார். என் பேத்தி, பேரன்மார், 'தாத்தா, நீங்க சிறையில் இருந்தீங்களாமே, அதைச் சொல்லுங்கள்' என்று கேட்டபோது நூல்வடிவில் வரும், படியுங்கள்' என்று சொல்லிவிடுவேன்.

என் வாழ்வில் நிகழ்ந்த சிறுசிறு காரியங்களும்கூட சின்னச் சின்னக் கதைகளாகும்போது மாபெரும் நெல்லைச் சதிவழக்கு ஏன் ஒரு நாவலாகக்கூடாது?

தோழர் பாலதண்டாயுதம் பத்தாண்டுகள் கோவை சிறையில் இருந்து விடுதலையானார். "ஆயுள்தண்டனை அனுபவங்கள்" என்ற தலைப்பில்

எழுதினார். எனக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. 1953முதல் 1962வரையில் உள்ள நிகழ்வுகளை 30.5.1965 சமரன் இதழில் எழுதத் தொடங்கி 10.10.1965 வரை பதினான்கு கட்டுரைகள் எழுதினார்.

நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டபின் அவரது பொதுப்பணிப் பொறுப்புகள் அதிகமாயின. இதற்கிடையில் பாலன் விமான விபத்தில் நம்மைவிட்டுப் பிரிந்தார் (1973, மே 31).

அவரது சிறை அனுபவங்கள அரைகுறையான நூலாக வெளிவந்தது. (ஜனவரி 1975). அந்நூல் எனக்கொரு சவாலாக இருந்தது. பாலனின் அனுபவங்கள் 1953முதல் ஆரம்பமாகிறது. ஆனால் நெல்லைச் சதி வழக்கு 1952இல் முடிகிறது. எனவே முந்திய மூன்றாண்டு நிகழ்வுகளை எழுதியாக வேண்டும் என்று தீர்மானித்தேன்.

அடுத்து 21.2.1951இல் 'தூக்கில் தொங்கிய பாலு' முந்திய நாள் எனக்குப் பேட்டி தந்து, எனக்கிட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டியதும் என் கடமையாக இருந்தது. அனைத்திற்கும் மேலாக என்னை உயிர்ப்பித்த இறைவனுக்கு நேராக - மக்கள் சக்திக்கு முன்னாக நான் பலரை உயிர்ப்பிக்க வேண்டாமா?

1955 நவம்பர் 25ல் தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் இரத்தம் கக்கி உயிர்நீத்த வீரத்தியாகி வேலாயுதம் பற்றி 13.3.1957இல் 'தியாகி வேலாயுதம்' என்ற நூலை வெளியிட்டு - அதன் லாபம் அனைத்தும் வேலாயுதத்தின் பிள்ளைகளுக்கே என்று கூறி நூற்களை தோழர் நல்லகண்ணுவிடம்* ஒப்புவித்தேன். அதில் உள்ள சிற்சில செய்திகளை இந்நூலில் இணைத்துள்ளேன்.

எங்கள் வழக்கில் வக்கீல்கள் மிகத்திறமையோடு வாதிட்டார்கள். ஆயினும் என் விடுதலை ஆன்மீகமயமான, ஆச்சர்யமான, அபூர்வ வெற்றி என்பது என் நம்பிக்கை. 'சத்தியம் உங்களை விடுதலையாக்கும்' என்ற வேதவாக்கு என்னில் நிறைவேறியது.

உண்மைகள் எல்லாவற்றையும் எழுதமுடியவில்லை. ஆனால் எழுதியவைகள் யாவும் உண்மை.

இந்நூலைப் புதினம் என்பீர்களோ, புள்ளி விவர சரித்திரக் கதை என்பீர்களோ, நாவல் என்பீர்களோ, நாள்குறிப்பு என்பீர்களோ எனக்குத் தெரியாது. நீங்கள் எப்படிச் சொன்னாலும் சரி. பல ஆண்டுகளாக எழுதத் தூண்டிய உண்மை நிகழ்வுகளை எழுதிவிட்டேன். தீர்ப்பு உங்கள் கையில்.

இந்நூலில் வரும் தோழர்கள், இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள், அவர்களின் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், படித்து எனக்கு எழுதினால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்.

இன்று வசதியோடு வாழ்பவர்கள் பலர் தங்கள் கடந்த கால வாழ்க்கையை எண்ணிப் பார்க்க வெட்கமடைகிறார்கள். ஆனால் அந்த ஆரம்பகால வாழ்க்கை இறைவனால் ஆயத்தம் செய்யப்பட்டது என்பது என் திடமான எண்ணம்.

---

*தோழர் நல்லகண்ணு – தற்போது வலது கம்யூனிஸ்ட் தமிழ்மாநிலச் செயலாளர்

தூய பவுல் அடியார் தம் மக்களுக்கு எழுதிய நிருபத்தில் இப்படிச் சொல்கிறார் : "சகோதரரே, எனக்கு சம்பவித்தவைகள், நற்செய்தி பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்".

இந்நூல் எழுதி முடிந்த இறைமாட்சி பற்றி ஒரு தனி நூல் வெளிவர உள்ளது. அது ஒரு சுவையான கதையாகும்.

இறுதியாக ஒன்றை நான் சொல்லியாக வேண்டும்.

இந்த நாவலை நான் எழுதுவேன் என்று நினையாத காலத்திலேயே (1952முதல்) இந்நாவலுக்கான ஆதாரங்களை, ஆவணங்களை சேகரித்துக் கொண்டேயிருந்தேன். நூற்றுக்கும் மேற்பட்ட உண்மை நிகழ்வுகளை மிகவும் ஜாக்ரதையுடன் பதிவு செய்துள்ளேன்.

'தூக்கில் தொங்கிய பாலு' பற்றிய குறிப்புகளை அருமைத் தோழர் மாயாண்டிபாரதி தந்துதவினார். மாகாணக் கமிட்டியின் அறிக்கையும் கிடைத்தது. நியாயத் தீர்ப்பின் முழுத்தகவல்களும் கிடைக்கப்பெற்றேன்.

ஒரு சில அதிகாரங்களை மட்டும் படித்துவிட்டு அவசர கதியில் -தம் 86 வயதில் வாழ்த்துரை எழுதித் தந்த தோழர் மாயாண்டி பாரதிக்கு என் உள்ளார்ந்த அன்பைக் கூறுகிறேன். ஆரம்ப முதல் என் எழுத்துக்களை பாராட்டி, ஊக்கமூட்டிவரும் முதுபெரும் எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்களின் அணிந்துரைக்காகவும் இதய ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறேன்.

இலக்கியத்திற்கு மிகமிகத் தேவை சொந்த அனுபவங்களே என்பது உண்மையாயின் இந்நூல் ஒரு சிறை இலக்கியம் ஆகும்.

சதி வழக்குத் தோழர்களில் ஒரேஒரு வாத்தியார். அவர்தாம் வயதில் குறைந்தவர். அவராகிய என்னைக் கொண்டு என் எழுபத்து ஏழாம் வயதில் இந்த சரித்திரத்தை புதினமாக எழுத வைத்தது இறைவனின் அனாதி தீர்மானமே. அந்த இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

எனது குடும்பப் பணிகள் பலவற்றை மறந்து பல ஆண்டுகளாக இம்முயற்சியில் ஈடுபட பொறுமையோடு காத்திருந்து உதவியும் செய்த அன்பு மனைவி, அருமை மக்கள், புண்ணியவாளன்புரத்து புண்ணியவாளர்கள், அனைவருக்கும் உள்ளம் ஊற்றெடுக்கும் அன்பைக் கூறுகிறேன். இந்நூலை எழுதும்படி ஆரம்பித்து வைத்த அருள்திரு. பொன்னுசாமி அடிகளார்க்கு என் அன்பு உரித்தாகுக.

அன்பன்

பாளையங்கோட்டை — ஆர். எஸ். ஜேக்கப்

23.8.2002

நெல்லைச் சதிவழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற

அன்புத் தோழர் ஐ. மாயாண்டி பாரதியின் வாழ்த்துரை

நாடு சுதந்திரம் அடைந்தவுடன் மக்களின் மத்தியில் பெரும் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டது. உழுபவனுக்கு நிலம், உழைப்பாளி மக்களுக்கு நலம், ஜனநாயக உரிமைகள் கோரி மக்களிடையே பெரும் எழுச்சி ஏற்பட்டது. எங்கும் போராட்டங்கள்!

அரசின் அடக்குமுறை இயந்திரம் வேகமாகச் சுழன்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சதிவழக்கு தொடுக்கப்பட்டது. அதுபோல, திருநெல்வேலி மாவட்டச் சதி வழக்கும் நடந்தது.

சதிவழக்கில் கம்யூனிஸ்ட் தோழர்கள் கே. பாலதண்டாயுதம், வி.மீனாட்சிநாதன், பி.மாணிக்கம், ஆர். நல்லகண்ணு, ஐ. மாயாண்டி பாரதி, தூத்துக்குடி பொன்னு, கிருஷ்ணகோனார், வேல் சாமித் தேவர், வாத்தியார் ஜேக்கப் முதலான 100 பேர்கள் மீது சதி வழக்கு விசாரணை மட்டும் 2 வருடங்கள் நடந்தது. முடிவில் 11 பேர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

தண்டிக்கப்பட்டவர்கள் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

அப்போது மதுரையில் ரிசர்வ் போலீஸில் பணியாற்றிய ஜவான் பாலுவும் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக் கைதியாக கண்டம் சிறைப்பகுதியில் அடைக்கப்பட்டிருந்தார். விசாரணை முடிவில் அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. நாளைக்கு தூக்குமேடை ஏறப்போகிறார். இன்றைக்கு அதே சிறையில் இருந்த மதுரை, இராமநாதபுரம், திருநேல்வேலி மாவட்ட கைதிகளுக்குப் பேட்டியளித்தார், மற்றும் எவ்வளவோ பேர்களுக்குப் பேட்டி அளித்தார்.

பேட்டியில் ஜேக்கப் வாத்தியாருக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதன் விவரமெல்லாம் உள்ளத்தை உருக்குவதாக இருந்தது. அது இந்த நாவலில் இடம் பெற்றுள்ளது. அவரது பேட்டியின் உண்மைச் செய்திகளை நம் வாத்தியார் ஞானமாக இணைத்துள்ளார்.

எங்கள் சிறைவாழ்க்கையைப் பற்றியும், தலைமறைவாக இருந்தபோது அனுபவித்த அல்லல்களைப் பற்றியும், ஒரு புதிய உலகம் - போரும் பகையுமற்ற ஒரு புதிய உலகம் - அனைவருக்கும் சமத்துவமும் - க்ஷேமமும் வழங்கக்கூடிய ஒரு புதிய உலகம் பிறக்கப்போகின்றது என்ற நம்பிக்கையுடன், உற்சாகமுடன் போராடிய சாகஸங்களைப் பற்றியும் நினைவுக்குக் கொண்டு வருகிறபோது மயிர்க் கூச்சலெடுக்கிறது.

வாத்தியார் ஜேக்கப், ஒரு சர்ச்சின் கிறிஸ்தவ உபதேசியாராகவும், தமிழ் வித்வானாகவும் இருந்தபோதிலும் ஏழையெளிய மக்களுக்காக தங்களை அர்ப்பணித்துக்கொண்ட ஊழியர்களை மனதார வாழ்த்தினார். அவர்களுடன் சேர்ந்து பணியாற்றினார். சிறைவாசமும் அனுபவித்தார்.

அவரது இலக்கிய மணம் கமழும் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சி

மிக்க எண்ணங்களையெல்லாம் எழுத்து வடிவமாக்கி - 'வாத்தியார்' முதல் பாகத்தை முடித்து - 'மரண வாயிலில்' என்ற தலைப்பில் இரண்டாம் பாகத்தை முடித்திருக்கிறார்.

படிக்கப் படிக்க பழைய நினைவுகள் முறுக்கேறுகின்றன. நீங்களும் படித்து - இப்படியெல்லாம் அந்தக் காலத்தில் நடந்திருக்கின்றனவா என்று வியப்பீர்கள்.

எனது சிறைத்தோழர். அன்பு நண்பர் வாத்தியார் ஜேக்கப் நீடுழி வாழ்ந்து இன்னும் பல அற்புத நூல்களைப் படைத்துத் தரவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

20.10.2002

இப்படிக்கு

ஐ. மாயாண்டிபாரதி

சுதந்திரப் போராட்ட வீரர்

ஜனசக்தி. தீக்கதிர் ஏடுகளின் துணை ஆசிரியர்

சாகித்ய அகாடமி விருது பெற்ற முதுபெரும் எழுத்தாளர்
திரு. வல்லிக்கண்ணன் அவர்களின்

அணிந்துரை

ஆர்.எஸ்.ஜேக்கப் எழுதிய 'வாத்தியார்' நாவல் தமிழில் வெளிவந்துள்ள சிறப்பான நாவல்களுள் விசேஷமாகக் குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும். வரலாற்றுத் தன்மையும், அரசியல் ரீதியும் கொண்ட சமூக தன்வரலாற்று இயல்பும் கொண்டுள்ளது.

'வாத்தியார்' நாவல் வாழ்க்கை உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட கற்பனைப் படைப்பு அல்ல. உண்மையாக நிகழ்ந்த சம்பவங்களை ஆதாரமாகக் கொண்டு, ஆசிரியரின் அனுபவங்களையும் உள்ளத்தின் உணர்வுகளையும் உரிய முறையில் பதிவு செய்திருக்கிற வாழ்க்கைச் சித்திரம் ஆகும்.

பண்ணையார் ஒருவரின் ஆதிக்கத்தில் இருந்த ஒரு கிராமத்துக்கு பள்ளி ஆசிரியராக வருகிறார் இளைஞரான வாத்தியார். அவர் ஒரு நல்ல கிறிஸ்தவர். லட்சியவாதி. ஏழை எளிய உழைப்பாளி மக்களிடம் அன்பும் அனுதாபமும் கொண்ட மனிதநேயர். முற்போக்குச் சிந்தனைகள் உடையவர். அப்பாவி மக்களின் துயர்துடைத்து, அவர்களுக்குக் கல்வி புகட்டி, அறிவு விழிப்பு ஏற்படுத்தி, அவர்களை நல்வாழ்வு பெறச் செய்ய வேண்டும் என்பதில் கருத்தாக இருந்து, நேரிய வழியில் தொண்டாற்றுகிறார். மக்கள் அவரிடம் மதிப்பும் அன்பும் கொண்டு அவரோடு ஒத்துழைக்கிறார்கள்.

வாத்தியாரின் செயல்கள் பண்ணையாருக்கு இடைஞ்சல்களாக இருக்கவும், வாத்தியாரை ஒழித்துக் கட்டும் முயற்சியில் பண்ணையார் தீவிரமாக முனைகிறார். ஆனால் வெற்றிபெற இயலவில்லை. மக்களின் சக்தி வாத்தியாருக்கு பக்கபலமாக இருக்கிறது.

வாத்தியார் உபதேசியாராகவும் பணியாற்றுகிறார். ஆன்மீகவாதியான அவர் நல்ல சமூக சிந்தனாவாதி. சமத்துவவாதியும் கூட. பண்ணையாரின் கொடிய அட்டூழியங்களை எதிர்த்துப் போராடுகிற அவர், கஷ்டப்படுகிற ஏழை எளிய உழைப்பாளி மக்களின் நலனுக்காகப் போராடும் பொதுவுடைமைக் கட்சித் தொண்டர்களுக்கு ஆதரவு அளிக்கிறார். ஆகவே அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்று குற்றம் சாட்டப்படுகிறார்.

வாத்தியார் சந்தர்ப்பவசத்தினாலும், அதிகார வர்க்கத்தின் சூழ்ச்சிகளினாலும், முக்கியமான கம்யூனிஸ்ட் போராளிகளுடன் சேர்க்கப்பட்டு, ஒரு சதிவழக்குக் குற்றவாளியாக மதிக்கப்பட்டு சித்திரவதைகளுக்கும் சிறைத்தண்டனைக்கும் ஆளாகிறார். போராடும் ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழ்ந்து காட்டிய அவருக்கும் அரசியல் கட்சிக்கும் தொடர்பு கிடையாது. ஆயினும், சந்தர்ப்ப சாட்சியங்கள் அவருக்கு பாதகமாக அமைகின்றன.

இவற்றையெல்லாம் விவரித்த 'வாத்தியார்' நாவலின் இரண்டாம்

பாகமாக எழுதப்பட்டுள்ளது. 'மரணவாயிலில்' எனும் இந்த நாவல். வாத்தியாரின் சிறை அனுபவங்களையும், அவருடன் வழக்கில் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு சிறைவாசம் அனுபவித்த பொதுவுடைமைத் தோழர்களின் இயல்புகளையும் செயல்பாடுகளையும், இதர பிறவகைக் கைதிகளின் போக்குகளையும் இந்த நாவல் உயிர்ப்புடன் எடுத்துக் கூறுகிறது.

கைதிகளிடையே உள்ள வார்டன்கள், சிறை அதிகாரிகள், அவர்களது அட்டுழியங்கள், முதலியனவற்றை யதார்த்தமாக இந்த நாவல் விவரிக்கிறது. வாத்தியாரும் இதர முக்கியத் தோழர்களும் சிறைக்குள் நடத்திய போராட்டங்கள், சிறைக்கைதிகளிடம் அவர்கள் ஏற்படுத்திய விழிப்பு உணர்வு முதலியவற்றை சுவாரசியமாகச் சித்திரிக்கிறது. நாவலாசிரியரே 'வாத்தியார்' என்பதும், அவருடன் சதிவழக்கில் ஈடுபட்டவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிற்காலத்தில் பெயரும் புகழும் பெற்ற கம்யூனிஸ்ட்டுத் தலைவர்கள் என்பதும் நாவலுக்கு வரலாற்றுத் தன்மையும் அரசியல் தன்மையும் சேர்த்துள்ளன. உண்மை நிகழ்ச்சிகளையும், சொந்த உணர்வுகள் சிந்தனைகளையும் சிறப்பான முறையில் பதிவு செய்திருப்பதால் இது தன்வரலாற்று நாவலாகவும் விளங்குகிறது.

மரண வாயிலில், தூக்குத் தண்டனையை எதிர்பார்த்து, சிறைக்குள் அடைபட்டுக் கிடந்தபோதிலும், உண்மையான ஆன்மீகவாதியாய், நற்சிந்தனையாளராய், சகமனிதர்களை நல்வழிப்படுத்தும் மனிதநேயராய் வாத்தியார் செயல்புரிந்து கொண்டிருப்பதை இந்த நாவல் அருமையாக விளக்குகிறது. இறைவனின் கிருபையால் வாத்தியார் தண்டனை பெறாது, விடுதலை பெறுகிறார். சமூக மக்களுக்கு நன்மை புரிவதில் ஆர்வமும், செயல்துடிப்பும் உள்ள ஒரு கிறிஸ்தவ உபதேசியாரே அவர், சதிவேலைகளில் ஈடுபடும் இயல்புடைய அரசியல் புரட்சிக்காரன் இல்லை என்கிற உண்மை நிலை நிறுத்தப்பட்டது. நியாயம் அவர் பக்கம் இருந்தது. வாத்தியார் வெற்றிபெற்றார்.

இந்த வரலாற்றை ஆர்.எஸ்.ஜேக்கப் சிறந்த முறையில் நாவலாக்கியிருக்கிறார். 'மரண வாயிலில்' நாவலைப் படிக்கிறவர்கள் அதன் தனித்தன்மையை நன்கு உணர்வார்கள். 'வாத்தியார்' நாவலையும் அவசியம் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு அதன் தேடலில் ஈடுபடுவார்கள் என்பது திண்ணம்.

- **வல்லிக்கண்ணன்**

வாத்தியார்

நாவலின் முதற்பாகக் கதைச்சுருக்கம்

வாத்தியார் பதினெட்டு வயது கட்டிளங்காளை. அவரது முழுப் பண்பையும் பிரதிபலிக்கும் வணங்காமுடி. ராசாவூர் சொந்தஊர். கிழக்கே மூன்று மைல் தூரமுள்ள பண்ணையூர் ஆரம்பப் பள்ளிக்கு ஆசிரியராக நியமுகம் பெற்றுச் செல்கிறார். பண்ணையூர், பாஞ்சையம்பதிக்குத் தெற்கே ஐந்து கல் தொலைவிலுள்ள பண்ணை ஆதிக்கக் கிராமம்.

பண்ணையூரை இந்தியாவின் மாதிரி புரம் ஆக்கிவிட வேண்டும் என்ற புரட்சி நோக்கில் - புதுமைத் துடிப்பில் வருகிறார் வாத்தியார்.

ஊரின் முகப்பில் பண்ணையாரின் பங்களா. முழு நீள வேட்டி கட்டி, கட்கத்தில் குடையுடன் செல்லும் வாத்தியாரைப் பார்த்த பண்ணையார் உறுமுகிறார். தொலைத்துக் கட்ட வர்மம் கூறுகிறார். 'எங்கிருந்து வந்த வெள்ள வேட்டி பண்டாரம்?' என்று ஏளனம் செய்கிறார்.

இரண்டு கிறிஸ்துவ அரிஜனக் குடும்பங்களுக்காக ஆங்கிலேயர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பப்பள்ளி.

மேகுடி, கீகுடி என்று ஊரிலிருக்கும் வேறுபாடுகளைப் போலவே பள்ளியும் இரு துண்டுகளாகப் பிரிந்திருந்தது. ஊர் முழுவதும் பண்ணையின் கொத்தடிமைகள். பண்ணை முதலாளி கொடிய அடக்கு முறையில் ஊரை அடிமைப்படுத்தி இருந்தார். காமவெறியன், தாய், மகள் என்று வேறுபாடு தெரியாத அவ்வளவு கீழ்த்தரமானவர்.

பள்ளியிலுள்ள தடுப்புச் சுவர்களை அகற்றி, முற்போக்கான முறையில் பள்ளிப் படிப்பு குதி போட்டது. ஊரின் ஒற்றுமை, முன்னேற்றம், கல்வி அறிவு, இவைகளைக் கண்டு பண்ணையார் வெகுண்டார், மருண்டார், மதி மயங்கினார்.

வாத்தியாரைக் கொல்ல சதி செய்து பள்ளிக்குத் தீ வைத்தார். வாத்தியார் பலமுறை தப்பினார்.

பெற்றோரைக் கூட்டி ஊர்க்கூட்டம் போடுகிறார். பண்ணையின் கைக் கூலிகளால் வாத்தியாருக்கும் அவரின் நண்பர்களுக்கும் அடி, மிதி, உதை கிடைக்கிறது.

மூக்காண்டியை ஒரு பழமொழிப் பிரசங்கியார் எனலாம். அவன் வாய் திறந்தால் ஒரு பழமொழி பிறக்கும். ஆண்டி ரெட்டி தேச எழுச்சிப் பாடகன். கந்தையா தினச் செய்தி வாசகன். அபூர்வமான கிராமியப்பாத்திரங்கள். (இதுவரை படிக்காதவர்கள் கட்டாயம் வாத்தியாரின் முதற் பாகத்தைப் படிக்கக் கேட்கிறேன்).

.

முத்தம்மா அழகுள்ள இளம் பெண். பண்ணையாருக்குப் பிறந்த மகளையும் வைப்பாட்டியாக்கப் பார்க்கிறார் பண்ணையார். காமக் களியாட்டம் ஆடத் துடிக்கிறார். முத்தம்மா கொடுமையை எதிர்க்கிறாள். ஊர் முன்னேற்றத்திலும், முற்போக்கிலும் ஆர்வம் காட்டுகிறாள்.

முத்தம்மா சித்தப்பா வீட்டில் தங்கி வாத்தியாரின் இயக்கத்தில் உயிர்த் துடிப்பாகச் செயல்படுகிறாள்.

விவசாய வாலிபர் சங்கம் கிளர்ந்தெழுந்தது. பயங்கர எதிர்ப்பினூடு சங்கக் கட்டிடம் எழும்பியது. பண்ணையார் சென்னையிலிருந்து வந்ததும் சங்கமும் தீக்கிரையானது. இளைஞர்கள் வீறு கொண்டு மீண்டும் புதுப்பித்தனர்.

கொத்தடிமையிலிருந்து. விடுபட மக்கள் கொதித்தெழுந்தனர். வாத்தியாரை சிறைக்குள் தள்ளிவிட பண்ணையார் கங்கணம் கட்டினார்.

முத்தம்மாளுக்கு வாத்தியார் மீது பற்று. அதன் கொடிய பின் விளைவுகளைக் கண்டறிந்த வாத்தியார் அவ்வெண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறிய எண்ணி தம் நண்பரான கந்தையாவுக்கு முத்தம்மா என்று முடிவு செய்து விடுகிறார்.

வயது வரம்பு இன்றி சொந்த சகோதரியின் பிள்ளைகளையே மணக்கும் மூடப் பழக்கங்களைக் கிள்ளி எறிகிறார். எதிர்ப்புகளை தாக்குப் பிடிக்கிறார்.

சாதி வேறுபாடின்றி இளைஞர்கள் இணைகிறார்கள். முத்தம்மாளைப் பலவந்தமாக பண்ணை கைக்கூலிகள் தூத்துக்குடி பங்களாவிற்கு இழுத்துச் செல்கிறார்கள். பண்ணையார் மனைவி வெள்ளையம்மாளின் ஆதரவு கிட்டுகிறது.

பண்ணையார் நிலங்களை விதையாமல் தரிசு போடுகிறார். ஜனங்களுக்கு வேலை இல்லை. பட்டினிச் சாவுகள் சகஜமாயின. ஆனால் பண்ணை வீட்டில் ஆயிரம் மூட்டை தானியம் மக்கி மடிகிறது. மாற்று வேலைகளுக்கு வழி செய்கிறார் வாத்தியார்.

பக்கத்துக் கிராம திம்மு ரெட்டியார் வாத்தியாரின் நண்பராகிறார். அவர் மூலம் சிலருக்குக் கல் வெட்டாங்குழிகளில் வேலை கிடைக்கிறது.

வாத்தியார் பண்ணையூருக்கும், சாமியூருக்கும், சேர்த்து உபதேசியார். கோயில்களில் கொடுக்கும் அருளுரைகள் மூலம் மக்களுக்கு ஆன்மீக - சமூகப் புரட்சிக் கல்வியூட்டினார்.

முதியோர் கல்வி போர்க்கால வேகத்தில் முடுக்கிவிடப்பட்டது.

1947 ஆகஸ்ட் பதினைந்து முதல் சுதந்திர தினம்.

இந்தியாவின் எந்த ஒரு கிராமத்திலும் நடந்திராத அளவு 77 மாடுகள் பூட்டி அணி வகுப்பு நடத்தி மிகுந்த உற்சாகத்துடன் - அனைத்து மக்களின் ஈடுபாட்டுடன் சுதந்திர தினம் மூன்று நாட்கள் பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

முத்தம்மா சொன்னாள் :

'ஒரு வாத்தியாராக நீங்க செய்த காரியம் மிகப் பெரிது ; ஆனா இன்னும் நெறையப் பாக்கி இருக்கு' என்றாள்.

இந்தியாவின் சிறந்த ஆன்மாக்களைத் தோற்றுவிக்க ஆரம்பப் பள்ளிகளே ஏற்ற இடம் என்ற குறிக்கோளுடன் வாத்தியார் தீவிரமாகச் செயல்பட்டார்.

மக்கள் 'வாத்தியார் ஐயா' என்பதைச் சுருக்கி 'வாத்திரியா' என்றே அன்புடன் அழைத்தார்கள்.

முத்தம்மாளின் இரகசிய முயற்சியால் புழுங்கி மடியவிருந்த தானிய மணிகள் ஊர் மக்களுக்கு வினியோகிக்கப்பட்டன.

'விதை அல்லது கட்டுக்குத்தகைக்குக் கொடு' என்ற சங்கத் தீர்மானம் பண்ணையாருக்கு ஈட்டி பாய்ந்தது போலிருந்தது.

அதிகாரிகள் விசாரணைக்கு வந்தனர்.

'விதைக்காட்டி நாங்களே விதைப்போம். தடுத்தால் உதைப்போம்' என்ற கோஷம் விண்ணைப் பிளந்தது.

தாசில்தார் வாத்தியாரைப் பார்த்து 'உமது செயல் கம்யூனிசம் போல இருக்கு....' என்றார்.

1948 இல் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. தாமதிக்க இடமின்றி தலைமறைவாகிவிட்ட தோழர்கள் பலர் பண்ணையூரில் அடைக்கலம் புகுந்தனர். பாலதண்டாயுதம் என்ற தலைமறைவுத் தலைவர் வேதக் கோயிலில் தங்கி இருந்தார். பாலனின் கொள்கை விளக்கம் வாத்தியாருக்குப் பிடித்தது.

பஞ்சம் தலைவிரித்தாடியது. பதுக்கல்கள் வெளியே வந்தன. பண்ணையூர் இயக்கம் ஒட்டப்பிடாரம் வட்டார 63 கிராமங்களுக்கும் பரவியது.

கம்யூனிஸ்ட் தோழர்களில் ஒருவர் 'அப்ரூவர்' ஆனார். 1950 மார்ச் 14ஆம் நாள் வாத்தியார் தம் பள்ளியில் வைத்து கைது செய்யப்படுகிறார்.

பண்ணையார் வீட்டில் விருந்தும் கேளிக்கைகளும் நடந்தன. ஊர் முழுவதும் போலீசை எதிர்த்தது. பின்பு ஊரே அழுதது.

போலீஸ் லாரியில் வைத்தே வாத்தியாரை மிருகத்தனமாக வேட்டையாடினர். போலீஸ் கஸ்டடியில் மூன்று நாட்கள் கொடிய சித்திரவதை, அடித்து இம்சித்து அரைகுறை உயிரோடு புலன் விசாரணை செய்தனர். மூன்று நாட்கள் கழித்து மார்ச் 17 ஆம் தேதி தூத்துக்குடி சப் ஜெயிலுக்குள் தள்ளினர்.

வாத்தியார் யாரையும் காட்டிக் கொடுக்கவில்லை. அவர் வாயிலிருந்து போலீசாரால் ஒரு வார்த்தையைக் கூட வாங்கமுடியவில்லை. அவரைக் கைது செய்தபோது அரிய நூற்கள், அச்சிற்கான கைப்பிரதிகள் முதலிய ஏராளமான உடைமைகளை அள்ளிச் சென்றனர். அவைகளில் அவர் அன்றாடம் எழுதும் டைரியும் ஒன்றிருந்தது.

ஆங்காங்கு பலர் கைது ஆயினர். 'நெல்லைச் சதி வழக்கு' என்ற ஒரு பெரிய சதியைப் பின்னினர்.

முத்தம்மாள் பண்ணையாரின் கொடிய சித்ரவதைக்குள்ளாகி மரித்தாள். பண்ணையாருக்குப் பைத்தியம் பிடிக்கிறது.

முத்தையாபுரம் கிருஷ்ணகோனார், தூத்துக்குடி பீர் இஸ்மாயில், பொன்னு, கடம்பூர் வேலையா, மாயாண்டி பாரதி, சுப்பா ரெட்டியார் என்று 19 பேர் கைதாயினர்.

பதினான்கு நாட்கள் தூத்துக்குடி சப்ஜெயில். பின்பு, அங்கிருந்து திருநெல்வேலி கொக்கிரகுளம் சப்ஜெயிலுக்கு மாற்றினர். சிறைக்குக் கொண்டு செல்லும் போது தூத்துக்குடி பஸ்-ஸ்டாண்ட் பக்கம் போலீஸ் வளையத்திற்குள் நிற்கின்றனர். அவ்வேளை பண்ணை முதலாளி கால் விலங்கு, கை விலங்கோடு அங்கு நிற்கிறார்.

வாத்தியாருக்குப் பெரும் அதிர்ச்சி.

மரண வாயிலில்...

சிறகுகள் இதழுக்கு எழுதிய ஒரு சிறிய முன்னுரை

'வாத்தியார்' நவீனத்தின் முதற்பாகம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த பழங்கதை. ஆனால் புது உலகைப் படைக்கத் தூண்டும் புத்தம் புது சரிதைக் கதை.

1945 ஜூன் முதல் 1950 மார்ச் வரையிலான சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் உள்ள ஒரு கிராமக் கதை வாத்தியார் நாவல். அது ஒரு முழு உண்மை வரலாறு.

ஒரு கொத்தடிமைக் கிராமத்தை மீட்டு புதுமைப் புரட்சி செய்த வாலிப வாத்தியார் கம்யூனிஸ்ட் என்று கைது செய்யப்படுகிறார். கொடிய சித்ரவதைகளுக்கு ஆளாகி தூத்துக்குடி போலீஸ் சிறையில் தம் குழுவினரோடு கொடுமைகளை அனுபவிக்கிறார்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு நெல்லை கொக்கிரகுளம் சப்ஜெயிலுக்கு எடுத்துச் செல்லப்படுவதோடு 'வாத்தியார்' முதற்பாகம் முற்றுப் பெறுகிறது.

'நெல்லை கம்யூனிஸ்ட் சதி வழக்கு' என்ற மாயப் பின்னலின் வலைக்குள் மாட்டி சிறைக்குள் தள்ளி 67 பேர் மீது சதி வழக்கைத் தொடர்ந்தனர். சிலர் சிறைக்குள் மாண்டனர். இன்னும் சிலரை சுட்டுக் கொன்றனர். எங்கள் தலைக்கு மேல் மரணக்கயிறு தொங்கியது.

சிறை தனி உலகம். அங்கும் ஒரு மானுட சமூகம் உண்டு. ஒரு சமுதாயத்தின் ஓட்டை உடைசல்களை முழுமையாகச் சிறையில்தான் காணமுடியும்.

இரண்டாம் பாகத்தை உடனடியாக எழுதும்படி பல கடிதங்கள் வந்தன. நூல் உருவில் தரும்படி சில பதிப்பகங்கள் கேட்டன.

முதற்பாகம் வெளியாகிப் பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த இடைப்பட்ட ஆண்டுகளில் இரண்டாம் பாகத்திற்கான ஆவணக் குறிப்புகளைச் சேகரித்துக் கொண்டே இருந்தேன். சிறையில் வைத்து எழுதிய இரகசியக் குறிப்புகளையெல்லாம் ஒன்று திரட்டினேன். சில ரிக்கார்டுகளை இழந்து போனேன். எங்கள் வழக்கின் நீதிமன்றத் தீர்ப்பு 1,19,262 வார்த்தைகளில் அடங்கி இருந்தது. அதையும் கைப்பற்றினேன். சதி வழக்கிலிருந்து விடுதலை பெற்று ஆண்டுகள் கடந்தன. என் வயதும் கூடிக் கொண்டே சென்றது. பாதுகாத்து வைத்த பத்திரங்கள் பல செல்லரிக்க ஆரம்பித்தன. எனக்குள் பயம் எழுந்தது. இரண்டாம் பாகம் இருண்டே போய்விடுமோ என்று அஞ்சினேன்.

எனினும், எனது வாலிப வாழ்வின் பயங்கரச் சிறை அனுபவங்கள். என் இளமையை அள்ளிச் சுருட்டிக் கொண்ட துக்கானுபவங்கள். நான் கண்டு உணர்ந்த சமூகக் கோளாறுகள் அனைத்தும் இளம் தலைமுறைகளுக்குத் தெரியாமலே அழிந்த போய்விடக்கூடாதே என்று கலங்கினேன்.

'மானுடம் மட்டமாக மதிக்கப்படும் வரை மக்களின் உரிமைகள் பறிக்கப்படும்வரை - மனித நேயங்கள் மறுக்கப்படும் வரை - என் இருபாக

நாவல்களும் உயிர்பெற்று இலங்கும் என்ற நம்பிக்கை எனக்குள் பலமாக எழுந்தது.

இதனைத் தெய்வத் தூண்டுதலாக கருதினேன்.

ஆழமுள்ள கடலில்தான் அலைகள் இருக்கும். அலைகளினூடு முக்குழி போடுவதில்தான் இன்பமும் இருக்கும். அலை ஓய்ந்த பிறகு குளிக்கலாம் என்றால் முடியவே முடியாது. எனவே பிரச்சினைகளுக்கும், குடும்பப் பிடிவாரண்ட்களுக்கும் மத்தியில் இரண்டாம் பாகத்தை எழுதத் தொடங்குகிறேன்.

தெரிந்து கொள்ள ஐந்து குறிப்புகள்

1. தோழர் கே. பாலதண்டாயுதம் :

சதி வழக்கின் முதல் குற்றவாளி. அவரை பாலன் என்றே மக்கள் அன்புடன் அழைப்பர். வாழ்வின் பாதிக்குமேற்பட்ட காலத்தை சிறைகளிலும், தலைமறைவு வாழ்விலும் கழித்தவர். 1973மே இறுதி நாளன்று டில்லிக்கு அருகில் நிகழ்ந்த விமான விபத்தில் காலமானார். சிறந்த இலக்கிய கர்த்தா.

2. தூக்கில் தொங்கிய தோழர் பாலு :

22.2.1951 அன்று மதுரை மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்ட போலீஸ் தோழர் பாலு. தூக்கிலிடப்படுவதற்கு முந்தியநாள் வாத்தியாருக்கு சிறப்புப் பேட்டி கொடுத்தார்.

பாலனுக்கும் பாலுவுக்கும் வேறுபாடு காண்க.

3. தோழர் ஐ. மாயாண்டி பாரதி :

சுதந்திரப் போராட்ட வீரர். 13 ஆண்டுகள் சிறைவாசம் புரிந்தவர். இவரது உரைநடை நூற்கள் கனல்கக்கும், புரட்சி வெடிக்கும். தோழர்கள் இவரை அன்புடன் பாரதி என்றே அழைப்பர்.

4. தோழர் சி.ஏ.பாலன் :

'தூக்குமர நிழலில்' என்ற நாவலை எழுதியவர். கொலைக் குற்றத்திற்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர். 13 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்.

விடுதலைக்குப்பின் தமிழ்-மலையாளம் இலக்கியங்களுக்கு ஒரு பாலம் அமைத்துக் கொடுத்தவர்.

பாலன், பாலு, சி.ஏ.பாலன் வேறுபாடு காண்க.

5. வாத்தியார் ஜேக்கப் :

'வாத்தியார்' நாவலில் வாத்தியாராக வருபவர். இரண்டாம் பாகமான 'மரண வாயிலில்...' புதினத்தில் வாத்தியார் ஜேக்கப் எனப் பெயர் பெறுகிறார்.

ஆர்.எஸ்.ஜேக்கப் ஆகிய இவரை தோழர்கள் 'வாத்தியார்' என்றே அன்புடன் அழைக்கின்றனர். இரண்டரை ஆண்டுகள் விசாரணைக் கைதியாக சிறைகளில் இருந்தவர்.

வாத்தியார் மறுபிறவி

மரண வாயிலில்...

1

1950 ஏப்ரல்

பேருந்து கரிய புகையைக் காரி உமிழ்ந்து சென்றது. வாத்தியாரின் தலை முடி குத்திட்டு நின்றது. சேவல் சண்டையில் கெலிக்கப்போகும் சேவலின் முடி சிலிர்த்து நிற்பது போன்று வாத்தியாரின் முடி மட்டுமன்று உடலும் சிலிர்த்தது.

அரசியல் கைதிகளைத் தூத்துக்குடி சப்ஜெயிலிலிருந்து நெல்லை கொக்கிரகுளம் சப்ஜெயிலுக்குக் கொண்டு செல்வது கடுஞ் சிறையிலிருந்து கொடுஞ்சிறைக்குப் 'புரமோஷனில்' போவது போன்றிருந்தது.

தூத்துக்குடி பேருந்து நிலையத்தில் பண்ணையார் கால் விலங்கு கைவிலங்கோடு நின்றது வாத்தியாரை நிலை குலையச் செய்தது.

சரியாகப் பதினேழு நாட்களுக்கு முன்பு - வாத்தியாரைக் கைது செய்யும் போது - செந்துர்க்கம் பொட்டோடு - விரல் இடுக்கில் சிகரெட் துண்டோடு 'வாத்தியான் ஒழிந்தான்' என்று வாய் நிறையச் சொல்லி விருந்து நடத்திக் களியாட்டம் போட்டாரே... அதற்குள் என்ன ஆனது?

ஊர் மக்களின் சாபமா? அல்லது நியாய தேவதையின் கோபமா?

பஸ்ஸினுள் பத்தொன்பது கம்யூனிஸ்ட் கைதிகள்.*1 அவர்களுக்குப் பாதுகாப்பாகப் பத்துப் போலீசார், இரண்டு ஏட்டுகள், ஒரு சார்ஜண்ட்... அனைவரும் துப்பாக்கி சகிதம்.

பஸ் பயணிகளோடு பண்ணையூர் ஆண்டி ரெட்டியும், மானேஜர் முத்தையா ரெட்டியாரும் ஏறிக் கொண்டது பெரிய துணிச்சலாகும். ஆசிரியர் மீதுள்ள ஆதங்கத்தினால் நெல்லைக்கு டிக்கெட் எடுத்து கடைசி சீட்டில் அழுத கண்களோடு அமர்ந்திருந்தனர்.

ஆண்டி ரெட்டி ஆவேசமிக்க இளைஞன். வாத்தியாருக்கு உறுதுணையாக விளங்கியவன்.

'முதியோர்களுக்கும், மாணவர்களுக்கும் முன்னேற்றக் கல்வியும், முற்போக்குச் சிந்தனையும் ஊட்டி வளர்த்த எங்க வாத்தியார் என்ன பாவம் செய்தார். அவர் ஒரு கைதியா? அவருக்குச் சிறைச் சாலையா? என்று ஆண்டி ரெட்டி அடுத்த' பயணியிடம் மெதுவாகச் சொல்லி ஆத்திரம்

*** 1950களில் போலீஸ் லாரிகள் அதிகம் கிடையாது. பெரும்பாலும் கைதிகளை பஸ்களிலேயே போலீஸ் எஸ்கார்ட்டுடன் அழைத்துச் செல்வர்.**

கொண்டான். மானேஜர் ரெட்டியார் பண்ணையின் பொறுப்பாளர், முதலாளியின் கொடுமைகளை எதிர்த்தவர். முத்தம்மாளின் கொலைக்குப் பிறகு பண்ணையைத் தூக்கி எறிந்து வெளியேறியவர்.

மானேஜர் ரெட்டியார் வெற்றிலைக் காம்பைக் கிள்ளி பல்லைக் குத்தியவாறு பக்கத்துப் பயணியிடம் பக்குவமாகச் சொன்னார். 'பண்ணையாரின் அக்ரமம் அவர் வீட்டு வாசற்படியில் படுத்துக் கிடக்கிறது. பண்ணையன் பைத்தியம் பிடித்துத் திரிகிறான். சத்தியம் வாத்தியாரை விடுவிக்கும்' என்றார்.

வாத்தியார் தம் கனிந்த கண்களினால் மானேஜரை நோக்கினார். அவரிடம் முத்தம்மா குறித்துப் பேச எண்ணம். ஆனால் நெருங்க முடியாதே. கம்யூனிஸ்ட்களிடம் யாராவது பேசினால் உடனே கைது, விசாரணை. விசாரணை என்றால் 'விலா எலும்பை முறித்தல்' என்று பொருள்.

பேருந்து 'மூணாம் மைலைக்' கடந்து கோரம்பள்ளம் வரவும் இரு மருங்கிலும் பனங்காடுகள் நிறைந்த காட்டு ரோட்டில் கார் நின்றது.

முன்சீட்டிலிருந்த சார்ஜன்ட் உள்ளே வந்து 'ரைட்' என்று ஒரு குரல் கொடுத்தார். சரேலென எழுந்த போலீசார் இரண்டிரண்டு பேராகச் சேர்ந்து கைவிலங்குகளை மாட்டினார்கள். தோழர்கள் அதிர்ந்தார்கள்.

வாத்தியார் கையோடு விலங்கைப் பிணைத்திருந்த மாயாண்டி பாரதி 'தூத்துக்குடி நீதிபதி விலங்கு மாட்டக் கூடாதுன்னு சொல்லி இருக்கார். பிறகு ஏய்யா விலங்கு?' என்று சொல்லிச்சத்தமிட்டார். 'உங்கள் வாரண்ட்களில் பயங்கரக் கம்யூனிஸ்ட்' என்று எழுதி இருக்கே' என்று கூறி சார்ஜன்ட் கோபங் கொண்டார்.

தோழர்களிடம் சலசலப்பு எழுந்தது.

முக்கியத் தோழர்களில் ஒருவரான மாணிக்கம் சார்ஜண்டிடம் பேசினார். அவர் 'இந்து' ஆங்கில இதழை ஆட்டியவாறு, 'வத்ரா இருப்பு பகுதியில் கோர்ட்டுக்கு கொண்டுவந்த கம்யூனிஸ்ட் கைதியை - ஊர் மக்கள் சூழ்ந்து போலிசார் கண்களில் மிளகு பொடியைத் தூவி மீட்டுக் கொண்டு போய்ட்டாங்க. எங்க வேலைக்கே ஆபத்து ஆயிடும்' என்றார்.

சுலோச்சனா முதலியார் பாலத்துப்பக்கம் கைதிகளை இறக்கிவிட்டுப் பஸ் தன் போக்கில் சென்றது.

கை விலங்குகளோடு சிறைவரை நடந்து போனார்கள். அவர்களின் உறவினர்கள், நண்பர்கள், என்று ஒரு பெருங்கூட்டம் நடுக்கத்தோடு கூடி இருந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த பொருள்களைக் கொடுக்க அனுமதி மறுத்ததோடு விரட்டி விட்டு ஓட ஓட அடித்தார்கள். வாத்தியாரின் எழுபது வயதுத் தந்தை ஆடாமல் அசையாமல் ஆத்திரத்தோடு நின்று கொண்டிருந்தார். 'பெரியவரே, போகல்லியா?' என்று ஒரு போலீஸ் லத்திக் கம்பை சுழட்டினார்.

ஒரு பெரிய மனிதர் சார்ஜன்டிடம், 'இவங்களுக்கெல்லாம் என்ன கேஸ் ஸார்? நல்லா படிச்சவங்களாட்டம் தெரியுதே' என்று கேட்டார்.

'இவங்க தண்டவாளத்தைப் பேத்து ரயிலை கவுத்தவங்க, கொலை,

கொள்ளை எல்லாம் செய்தவங்க. மரணதண்டனை தலை மேல தொங்குது' என்று சொல்லி சிகரெட் துண்டை சுண்டி எறிந்தார்.

தோழர்களின் கண்கள் சிவந்தன.

மாயாண்டி பாரதி பல்லை நறுநறுவென்று கடித்தார். 'நாங்க குற்றவாளிகள் அல்ல. விசாரணைக் கைதிகள், கோர்ட் விசாரணையில் உங்க வண்டவாளம் தண்டவாளத்தில் ஏறும்' என்று முணுமுணுத்தார். அந்த சார்ஜன்ட் ஆறுமுகம் திருச்சியில் காவல்துறை கட்டிடக் காண்ட்ராக்டரின் மகன். காண்டிராக்ட் மூலம் கொள்ளையடிப்பதே அவரது தொழில். ஊழலில் ஊறி வளர்ந்த மகனுக்கு 'கம்யூனிஸ்ட்' என்றாலே வெறுப்பு.

'அமைதலான கடலால் திறமையான மாலுமியை பிறப்பிக்க முடியாது. அது போல, கொடுமை அலைகளுக்குள்ளிருந்துதான் மக்களின் சிறந்த தொண்டர்கள் தோன்ற முடியும்' என்று மாயாண்டிபாரதி உதட்டைக் குவித்து உறுதிப்படக்கூறினார்.

சிறைவாயில் முன் கைவிலங்குகளோடு குந்த உட்கார வைத்தார்கள். சிறையின் கோர வாயில் திறந்தது.

'புதியவரவு பத்தொன்பது' என்று ஒரு கருப்புக் குல்லாய் கைதி கத்தினான்.

சார்ஜன்ட் சிறை அதிகாரியிடம் காதிற்குள் ஏதோ கிசுகிசுத்தார்.

போலீசார் சிறை நிர்வாகிகளிடம் கைதிகளை ஒப்படைத்துவிட்டு வெளியேறவும் 'இவன்களை உள்ளே அனுப்பு' என்று சீஃப் வார்டர் இரைந்தார்.

உள்ளே புகவும் கடுவாய் போன்ற முன்கேட் மூடியது. கண்மூடி கண்முழிக்குமுன் சடச் சடார், மடமடார், டம், டும் என்று பல அடிபாடுகளில் போர்க்களம் போன்று அந்த இடம் காட்சியளித்தது. இருபதிற்கும் மேற்பட்ட கருங்காலிக் கைதிகள் பத்தொன்பது பேரையும் சமட்டினார்கள்.

'பயங்கரக் கம்யூனிஸ்ட்களின் பருப்பு இங்க வேகாது' என்று கைக் கூலிக் கைதி ஒருவன்' * தொண்டைக் கிழியக் கத்தினான்.

புலன் விசாரணையின் பேரால் அடித்து, ஒடித்து, நொறுக்கி முறுக்கி கொடுமைக்கு ஆளான தோழர்களுக்கு மீண்டும் ஒரு இடிபாடா?

புதிதாகச் சிறைக்குள் நுழைபவர்களுக்கு இப்படி ஒரு சிறை விருந்து கொடுப்பது வழக்கமாம். இதற்கு தர்மஅடி என்று பேராம்.

கடம்பூர் வேலையாவும், முத்தையாபுரம் கிருஷ்ணக் கோனாரும் எதிர்த்துத் தாக்கவே சிறை நிர்வாகம் கடுமையாக உஷாரானது. தண்ணீரை அறைக்குள் விட்டார்கள்.

வாத்தியாருக்கு வலதுகாலில் அடி, செண்பகத்திற்குப் பல் உடைந்தது.

* தண்டனை பெற்ற ரவுடிகளான சில கைதிகளுக்கு கைக்கூலி கொடுத்து, கைக் கருவிகளாக வைத்துக் கொண்டு மற்றக் கைதிகளை அடிக்க—அடக்க சிறை நிர்வாகம் பயன்படுத்துவது வழக்கம்.

மாபாவிற்கு* ஊமை அடி. இப்படியே ஒவ்வொருவரின் அடிபாடுகளை வர்ணித்தால் அது சிறை பாரதமாகிவிடும்.

'இன்று உங்களுக்கு சிவராத்திரிதான்' என்று ஒரு கைதி பரிதாபமாகச் சொன்னான்.

தோழர்கள் இரவுச் சாப்பாட்டை சாப்பிட மறுத்தார்கள். லாக்கப் முன்னால் அலுமினியத் தட்டில் கட்டிச் சோறுகள் காய்ந்தன.

'சக்கரம் சுழல்கிறது. ஆனால் அச்சாணி சுழல்வதில்லை. அதுபோல சிறையில் பல கொடுமைச் சக்கரங்கள். சுழலும், மக்களின் தொண்டர்களான நாம் அச்சாணி போன்று அசையாது ஸ்திரமாக இருக்க வேண்டும்' என்றார் செண்பகம். அவர் தூத்துக்குடி ஆர்விமில் ஸ்பின்னிங் தொழிலாளி. 1943 முதல் சிவப்புக் கொடியின்பால் கவர்ச்சிக்கப்பட்டவர். ஜில்லா சதி வழக்கில் அவரை இணைத்து ஏழு ஆண்டுகளாக விசாரணைக் கைதியாக வாட்டி வதைத்தார்கள். அப்பொழுதெல்லாம் கொடியை கீழேபோட்டுவிடாது உயர்த்திப் பிடித்தவர். இப்பொழுது மீண்டும் ஒரு வழக்கு.

அவர் கூற்றில் எவ்வளவு உண்மை உள்ளது !

'1948இல் களப்பால் குப்புவை சிறையில் விஷமிட்டுக் கொன்றார்கள். வேலூர் சிறையில் சுப்பையா மாண்டார். சென்னை சிறையில் அன்னை இலட்சுமிபாய் உயிர் பறிக்கப்பட்டது. இதையெல்லாம் பாத்துட்டுத்தான் வந்திருக்கு. மரணவாயிலிருந்து தப்பி வந்தவங்க நாங்க... நல்லா ஊத்து.... தண்ணியை நிறைய ஊத்து.... நெருப்பில் நடந்து வந்த நாங்க வெயிலுக்குப் பயப்பட மாட்டோம்...." என்று இரைந்து சொன்னார் மாயாண்டி பாரதி.

இருட்டானது. வார்டர்கள் மாறினார்கள். வாத்தியார் தம் வழக்கப்படியே இரவு தியானத்தை மனதிற்குள் உச்சரித்தார்.

'இறைவா, உன் அருளோடு கலவாத பொருள்களெல்லாம் இலக்கத்தோடு தொடர்பில்லாத பூஜ்யங்கள் போன்று பலனற்றுப் போகின்றன. பூஜ்யமாகிய எங்களுக்கு முன் ஓர் இலக்கமாக நின்று எங்களைப் பெருமைப்படுத்து'

ட்யூட்டி வார்டர் டார்ச்லைட் அடித்தவாறு சுற்றிவரும் பொழுது, தம் அறைச் சுவரில் யாரோ ஒரு கைதி கரித்துண்டினால் எழுதி இருந்ததை வாத்தியாரால் தெளிவாக வாசிக்க முடிந்தது.

'அவர்கள் முறிந்து விழுந்தார்கள். நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்'.

'ஆ... என்ன பொருத்தமான வேத வசனம்? ஆம். நாங்கள் நிமிர்ந்து நிற்போம். மனுக்குலத்தின் நல்வாழ்விற்காகக் கடைசி நிமிடம் வரை வாழ்ந்து காட்டுவோம்'' என்று சொன்ன வாத்தியார் சுவரைப் பார்த்துப் பேசினார் :

---

* மாயாண்டி பாரதியை மாபா என்றும், பாரதி என்றும் சுருக்கமாக அழைப்பார்கள்.

"எனக்குச் சிறுவயது முதல் டைரி எழுதும் பழக்கமிருந்தது. டைரி எழுதுவது என் வாழ்வின் பிரிக்க முடியாத பகுதி. இன்று என் கையில் டைரி இருக்குமானால் இப்படி எழுதுவேன்"

'மருக்கொழுந்து பூக்காமலே மணக்கும்,
மல்லிகை பூத்து மணக்கும்'
ஏசுவால் கழுமரம் தொழுமரமானது.
எங்கள் தோழர்களால்
மரணவாயில் மோட்ச வாயிலாக மாறும்''

இப்படிச் சொல்லி வாய் விட்டுச் சிரித்தார்.

பரணி ஆற்றினுள் பைத்தியம் பிடித்த நாய் ஒன்று வெங்கலத் தொண்டையில் பிலாக்கணம் வைத்தது. அது சிறைவரை கேட்டது.

அதைத் தொடர்ந்து சிறை முழுவதும் ஒரே கலகலப்பு எழுந்தது.

விபச்சாரக் கேஸில் பிடிபட்ட லட்சுமி என்ற பெண்ணை சிறைக்குள் கொண்டு வந்தார்கள். அவள் மிகவும் அசிரத்தையாக அநாயாசமாக அலுக்கி குலுக்கி நடந்து வந்தாள்.

'திரும்பவும வந்துட்டியாம்மா...' என்று லாக்கப்பினுள்ளிருந்த ஒரு கைதி சத்தம் போட்டான். அவனை ஏறிட்டுப் பார்த்த லட்சுமி ஆப்பு அரைந்தாற்போல் பதில் சொன்னாள் :

'வக்கத்த அரசு, விபச்சாரத்துக்கும் விற்பனை வரி வச்சிட்டுப் போலாமே....'

கொள்ளை கொள்ளையாய் அள்ளிக் கொட்டுவமே! கோமுட்டிப் பசங்க, ஆட்சி நடத்துறான் பாரு'

அதன்பிறகு அவள் வாயிலிருந்து கேவலமான கெட்ட வார்த்தைகள் பிறந்தன.

தோழர்கள் அனுதாபத்தோடு அவள் யார் என்ற வினாவினை எழுப்பினர்.

நீரால் நிறைந்திருந்த அறையில் படுக்க முடியாது. ஆனால் சிந்திக்க முடியும்.

2

சிறைக் கம்பிகளைப் பற்றிக் கொண்டு நின்றிருந்த வாத்தியார் அப்படியே சிறிது நேரம் கண்ணயர்ந்தார். 'மலைப் பகுதியில்

சுற்றுலாக் குழுவினரோடு சென்ற அவரை சிங்கம் ஒன்று தாவிப் பாய்ந்து கழுத்தைக் கவ்வியது.

சொப்பனங்கண்டு அலறி விழித்தார் வாத்தியார்.

'விடுதலை வீரர் மோசே முன் முட்செடி ஒன்று தீப்பிடித்து எரிந்தது. ஆனால் அது கருகவில்லை' என்ற திருமறை நிகழ்வை நினைத்து 'இன்னும் அதிசயங்கள் நிகழ்ந்து கொண்டுதானே இருக்கின்றன' என்று உதட்டில் கூறி உள்ளத்தில் சிரித்தார்.

வாத்தியாரின் எண்ண அலைகள் எழுந்து மோதின. 'அலை மோதும் கடல் நகராம் தூத்துக்குடியே! முத்து அளங்களும், உப்பு அளங்களும், மீன் அளங்களும், நூற்பு ஆலைகளும் நிறைந்து விளங்கும் திருமந்திர நகரே! தென்னகத்தின் ஆக்ஸ்போர்டாம் நெல்லை நகரே!* உனக்காக உழைத்த தியாகச் செம்மல்கள் சிறைகளிலும், தலைமறைவுகளிலும், சித்ரவதைப்படுவது இன்னும் எத்தனை நாளைக்கு? தோழா.... விழித்தெழு.... தூங்காதே...'

'உலகப் பொருளாதாரப் புலிகள் இந்தியாவிற்கு இட்ட பெயர் 'தூங்கும் சிங்கம்' என்பதாகும். அதனைச் சிறையில்தான் காணமுடிகிறது. தன்னந்தனியாய் நின்று அதர்மத்தை எதிர்த்துப்போராடி 'கிரிமினல் கைதி' என்று முத்திரை குத்தப்பட்டு எத்தனை இளம் சிங்கங்கள் இங்குத் தூங்கி வழிகின்றன'.

'நான் ஒரு உபதேசியராக ஆன்மீகவாதி, ஒரு வாத்தியாராகச் சமூக சிந்தனாவாதி, ஒரு இந்தியனாகச் சமத்துவவாதி... ஒரு பண்ணையாரின் கொடிய அட்டூழியங்களை எதிர்த்துப் போராடியமைக்கு - போராடும் ஒரு கிறிஸ்தவனாக வாழ்ந்து காட்டியமைக்குச் சிறையும், சித்ரவதையுமா?

'சமூக நீதிக்காக ஓர் இறையியலாளன் போராடலாமா? சிறைக்குச் செல்லலாமா? அது கேவலமில்லையா?' என்பன போன்ற கேள்விகள் வாத்தியாரின் அடி மனத்தில் துளிர்விட்டன.

வாத்தியாரின் சிந்தனைப் பொறியில் மற்றுமோர் மின்வெட்டு தெரிந்தது.

'சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகியிடம் காதல் பண்ணும்போது கூட 'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே' என்று கவிதையில் மொழிவதைக் கண்டு சீகன்பால்க் என்னும் ஜெர்மானியர் சிரித்தார். தமிழுக்கு உரைநடை இல்லையே என்று வருந்தினார். அவர் ஓர் இளம் மிஷனெரி. 1706 இல் தமிழ் நாட்டுத் தரங்கம்பாடிக்கு வந்தார். தரையில் எழுதித் தமிழ் பயின்றார். தமிழ் இலக்கியங்களைக் கற்றார். திருமறையைப் பாமர எளிய தமிழில் மொழி பெயர்த்தார். இச்செயல் இந்திய வரலாற்றையே மாற்றி அமைத்தது. மன்னர்களிடமும், புலவர்களிடமும் மட்டுமே நடம் புரிந்த தமிழ், வசன நடையாக சாதாரண மக்கள் கைக்கு வந்தது.

'அந்த மகான் கொஞ்ச நாள் சிறையில் இருந்தார். ஓர் ஏழைப் பெண்ணை பொய்க்குற்றம் சாட்டி சிறைக்குள் தள்ள முயன்ற அதிகாரிகளை எதிர்த்துப் போ்ராடினார். ஆத்திரங் கொண்ட டேனிஷ்

* தூத்துக்குடிக்கு திருமந்திர நகர் என்ற பேரும் உண்டு.

கவர்னர் சீகன் பால்க்கை சிறைக்குள் தள்ளினார்.

'சமூக நீதிக்காக சிறை சென்ற முன் நிகழ்வு ஒன்றை நினைத்துப் பார்த்த வாத்தியார் ஏழு அடி அகல அறைக்குள் அங்கும் இங்குமாக உலாவினார்.

என்ன வாத்தியார், சொப்பனம் கண்டியா?' பாரதி கேட்டார். 'சொப்பன மில்ல பாரதி, உண்மையைத்தான் கண்டேன்'.

'வாத்தியார் என்றாலே எங்க ஊர் வாத்தியார் கதை நினைவுக்கு வந்துவிடும். உடனே சிரிப்பும் பொத்துக் கொண்டு வரும்' என்றார் செண்பகம்.

'அதென்ன கதை, சொல்லு, மகிழ்ச்சியோடு விடியட்டும்' என்றார் பாரதி.

'நம்ம வாத்தியார் கோபப்படக் கூடாதே' என்று செண்பகம் குழைந்தார்.

'அதெல்லாம் ஒண்ணுமில்ல. சும்மா சொல்லுங்க' என்று வாத்தியார் சொல்லவும் செண்பகம் ஆரம்பித்தார்.

'நான் பிறந்த சத்திரப்பட்டிக் கிராமத்தில் ஏட்டுப் பள்ளிக்கூட வாத்தியார் நாயகத்திற்கு ரொம்ப மதிப்பு. முப்பது வயதிருக்கும், கொஞ்சம் பொம்பள விஷயத்துல வீக். நம்ம பாகவதர்* மாதிரி ஆள் அழகா இருப்பார்.

'எங்க சித்தி மங்கம்மா, அவளோட மகன் செல்லம் பயலை பள்ளியில கொண்டுவிட வந்தாள். அவா அழகப் பாத்திட்டாரு. அவ்வளவுதான். வாத்தியாருக்கு ஒரே கிறக்கம் - சித்திக்கு இருபத்தைந்து வயதிருக்கும். அவ மாப்பிள்ளை பருத்தி வியாபாரி. அடிக்கடி கோவில்பட்டி, குறுக்குச்சாலை, தூத்துக்குடின்னு வெளியூர் போயிடுவாறு.

'வாத்தியார் செல்லம் பயல கூப்பிட்டு, 'ஏல, நா இன்னிக்கு உங்க வீட்டுக்கு வரலாமான்னு கேட்டுட்டு வான்னு' இரகசியமாச் சொல்லி அனுப்பினாரு. அம்மா மூணு நாளா பதில் சொல்லல. ஆனா, எங்க சித்தி அவா மாப்பிள்ளை வந்த பிறகு பக்குவமா விஷயத்தைச் சொன்னா. இருவரும் காதும் காதுமா ஏதோ பேசிக்கிட்டாங்க. மறுநாள் மகனிடம், 'இன்னிக்குச் சாயங்காலம் உங்க வாத்தியரை வரச் சொல்' என்று சொல்லி விட்டாள்.

'வாத்தியாருக்கு ஒரே கொண்டாட்டம். முகத்தை மழித்தார். நல்லாக் குளித்தார். பானைக்குள் பத்திரமா வைத்திருந்த பட்டு வேட்டியையும், மஞ்சள் நிற ஜிப்பாவையும் போட்டுக் கொண்டு புறப்பட்டார். அவர் உடல் முழுசும் சந்தன மணம், எந்த வீட்டுக்குள்ளயும் போகிற அளவுக்கு அவருக்கு ஒரு செல்வாக்கு இருந்தது.

'பெரிய பக்காவுக்கு நாலுபடி 'கேப்பையை'** ஒரு நார்ப்பெட்டியில் போட்டு திரிகை முன் வைத்துத் திரித்தாள். ஒரு காலை மடக்கி, மறு காலை நீட்டி கொஞ்சம் கொஞ்சமாக கேப்பையை அள்ளிப் போட்டுத் திரித்துக் கொண்டிருந்தாள். வெண்பட்டுப் போன்ற கேப்பை மாவு திரிகையைச் சுற்றி விழுந்து கொண்டிருந்தது.

---

* *ஆரம்ப காலத் திரை உலகில் கொடி கட்டிப் பறந்த தியாகராஜ பாகவதர்.*

** *'கேழ்வரவு' மக்கள் மத்தியில் கேப்பை ஆனது.*

'ஏட்டு வாத்தியார் எகத்தாளமாக எட்டுப் போட்டார். வீட்டிற்கு வரவும் - மங்கம்மா எழுந்து வரவேற்றாள். செல்லம் மடத்துப் பக்கம் பம்பரம் விளையாட ஓடிவிட்டான்.

'மங்கம்மா உன்னையே நினைச்சேன்' வாத்தியார் கொஞ்சல் மொழியை ஆரம்பித்தார். 'காப்பி கொண்டு வாரேன்' என்று அடுப்புப் பக்கம் போன மங்கம்மா சடக் சடக் என்று செருப்புச் சத்தம் கேட்டு பதறியடித்து ஓடி வந்தாள்.

'அண்ணாவி, எம் புருஷன் ரொம்பக் கோபக்காரரு. அவர் வந்துட்டுப் போகும் வரை கேப்பை திரியுங்க. போனப்புறம் பாத்துக்கலாம்' என்றாள். அவர் திரிகை முன் உட்காரவும் ஒரு சேலையை எடுத்து தலையும், முகமும் தெரியாமல் ஒன்றாக மூடிவிட்டாள். ஒரு முக்காடு போட்ட மூதாட்டி மாவு திரித்துக் கொண்டிருந்தது போலிருந்தது. பாதிக் கேப்பையைத் திரிக்கும் மட்டும் அவள் புருஷனோடு சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். பின்பு அவர் பின் கட்டுக்குப் போகவும் மங்கம்மா வாய் நிறைய வெற்றிலையோடு வந்து, 'அண்ணாவி, ஓடிப் போயிருங்க, நாளை பாத்துக்கலாம்' என்றாள்.

வாத்தியாரும் பாரதியும் தங்கள் உடல் வலிகளை மறந்து குதித்துக் குதித்துச் சிரித்தார்கள்.

'கத இன்னும் முடியல்ல. கொஞ்சம் பொறுங்க' என்று சொன்ன செண்பகம் மீதிக் கதையைத் தொடர்ந்தார்.

மறுநாள் மகனிடம், 'உங்க வாத்தியாரை இன்னிக்கு கட்டாயம் வரச்சொல்' என்று சொல்லிவிட்டாள்.

மகன் சொன்னபோது வாத்தியார் சொன்னார், 'ஏலே, எதுக்குல வரணும்? மீதிக் கேப்பையைத் திரிக்கவா?' என்று கேட்டார்.

வெடிச்சிரிப்பு சிறை முழுவதும் வியாபித்தது. 'பக்குவமா நடந்து அண்ணாவிக்குப் புத்தி புகட்டிய மங்கம்மாவிற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்' என்றார் வாத்தியார்.

அறையினுள் மூத்திரக் கலையங்கள் நிரம்பி வழிந்தன. மலச் சட்டிகள் முடை நாற்றம் வீசின. குவளைத் தண்ணீர் காலியாயிற்று. தரை சற்று உலர்ந்திருந்தது.

தோழர்களைக் காட்டிக் கொடுத்த வெங்கடசாமி பற்றி மாயாண்டி பாரதி மிகுந்த கவலையோடு கண் கலங்கினார்.

விடியல் அணு அணுவாக நெருங்கியது. அனைத்து செல்களி லிருந்தும் மலநாற்றம் மூக்கை கருக்கியது.

'உருக விரும்பாத மெழுகால் ஒளிதர முடியாது. சிறைத் துன்பங்களாகிய சிலுவையைத் தூக்கிச் சுமந்தாலொழிய உண்மையை நிலைநாட்ட முடியாது' என்று வாத்தியார் தம் உள்ளமாகிய டைரியில் குறித்துக் கொண்டார்.

3

காலை ஆறு மணிக்கு சிறைக் கதவுகள் 'கடக், கடக்' எனத் திறந்தன. ஆறு அறைகளில் பிரிந்து கிடந்த தோழர்கள் ஒரு சில நிமிடங்கள் கூடிப் பேசினர்.

கைதிகள் மூத்திரக் கலயங்களைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். கக்குஸ் அவர்களை நெருக்கியது.

ஒரு கைதி மெதுவாக வந்து கிருஷ்ணக் கோனாரிடம் பேசினான்:

'அண்ணாச்சிமார், எப்படி 'வெளிக்கு' போப் போறீங்க. அது ஒரு மலக் கிடங்கு. காலைக்கடன்களை முடிக்கிறது ஒரு கேவலமான வேதனை. அசிங்கமான அனுபவம், இருபது இருபது பேரா அனுப்புவாங்க, விசில் ஊதினவுடனே அரைகுறையா விழுந்தடிச்சி ஓடி வரணும்... மனுஷன் மிருகமாயிடறான்"

அதைக் கேட்ட கோனார் 'உனக்கு என்ன கேஸ் தம்பி?' என்றார். அவன் 'கோழி கேஸ்' என்றான். அதற்குள் அங்கு வந்த காணிக்கை வார்டன் பாண்டி கையில் வைத்திருந்த பிரம்பினால் அவனை விளாசினான். 'இந்தத் தோழர்களிடம் யாரும் பேசக் கூடாதுன்னு சொன்னேன்ல்ல' என்று அனைத்துக் கைதிகளும் கேட்கும்படி இரைந்தான். பின்பு நாடக பாணியில் பேசினான் :

"அவன் பேரு கோழி கோவாலு. எப்பவும் கோழி கேஸ்லதான் வருவான். கோழியைத் தவிர வேறு ஒண்ணும் திருடத் தெரியாது. கோழிக் கூட்டில் தங்கமே கிடந்தாலும் எடுக்க மாட்டான்,

அந்தா போறானே, அவன் சங்கிலி வீரன். தங்கச் சங்கிலிய மட்டும் தான் அறுப்பான். அவன் கூட நிக்கானே அவன் சைக்கிள் ஐயப்பன். நூறு சைக்கிள் திருடி வித்திருப்பான். அவன் ரயில்ல போனாலும் பணக்காரன்தான், ஜெயில்ல போனாலும் பணக்காரன்தான். இப்படிப் பல ரகங்கள் இங்கு உண்டு.... அண்ணாச்சிமார் நீங்க கஞ்ச குடிங்க... இது நமக்கு மாமியார் வீடுதானே...''

அவன் மீது தோழர்களுக்கு கடுமையான ஆத்திரமிருந்தது

'நாம் யாருக்காக உழைக்கிறோமோ அந்த மக்களிடமிருந்தே கருங்காலிகளைத் தேர்ந்தெடுத்து கைதிகளைக் கொண்டே கைதிகளை உதைப்பது மகா கொடுமை. இதை ஒழித்தாக வேண்டும்' என்று மாயாண்டி பாரதி சொன்னபோது சுப்பாரெட்டியார் குறுக்கிட்டார்.

'சிலந்தி தன் வலையில் தான் சிக்கிக் கொள்வதே இல்லை. அப்படித்தான் சிறைநிர்வாகமும். தாங்கள் பழி பாவங்களை ஏற்றுக் கொள்வதே இல்லை. அடிமட்டக் கைதிகளை அடியாட்களாக வைத்துக் கொள்கிறார்கள்' என்றார்.

'கூட்டங் கூடக் கூடாது. செல்லுக்குள்ள போங்க' என்று கையில்

விளாருடன் விரட்டிக் கொண்டு அங்கு வந்த கருப்புக் குல்லாய் கணபதியின் இரு கைகளையும் பாரதி பிடித்துக்கொண்டு,

'தம்பி, உங்களுக்காகத்தான் நாங்க பாடுபட்றோம். உன் கையைக் கொண்டே உன் கண்ணைக் குத்தலாமா? உன்னைக் கொண்டே உன் போன்ற கைதிகளை அடிக்க வைக்கிறாங்களே... இத நீ செய்யலாமா? உன்னை ஒரு கைதியாக அல்ல, காம்ரேடாக நினைக்கிறோம்' என்று அவன் கன்னங்களை அன்புடன் வருடினார்.

அப்பொழுது கிருஷ்ணக் கோனார், 'அவனுக்கு பீடி, பிரியாணி, மிட்டாய் எல்லாம் தட்டாம கிடைக்கே, விடுவானா?' என்றார். அதற்கு அவன் 'ஜெயிலுக்குள்ள இருக்கிற வரையில் சுகமா அனுபவிச்சிட்டுப் போக வேண்டியதுதான' என்று சொல்லிக் கொண்டே ஓடிவிட்டான். அவனோடு சேர்ந்த கூட்டாளி சொன்னான் :

'அவனுக்கென்ன மாராசன், வெளியே போனா திருடுறான். உள்ள வந்தா என்ஜாய் பண்றான்'.

காலைக் கஞ்சி, அண்டாக்களில் வந்தது. கைதிகள் வரிசையாகச் சென்று வட்டமான அலுமினியத் தட்டுக்களை ஏந்தினார்கள். ஒரு கருப்புக் குல்லாய் குவளையில் கோரி விட்டான். அடுத்தவன் ஆளுக்கொரு துவையல் உருண்டை கொடுத்தான். பாதி வயிற்றுக்குக் கூடக் காணாமல் பாதிப்பேர் தட்டை வழித்துக் குடித்தனர். போனவாரம் கொள்ளைக்கேசில் உள்ளே வந்த வெள்ளைச்சாமி 'எங்க ரேஷன்ல பாதி ஊழல்ல போயிரும்' என்றவாறு வயிறு ஏங்கி நின்றான்.

'ஒண்ணு கஞ்சைக் குடிக்கணும், இல்லாட்டி செல்லுக்குள்ள போகணும்' என்று உரக்கக் கத்தினான் ஒரு காணிக்கை வார்டன்.

தோழர்கள் ஒரு தலைமையின் கீழ் மிகவும் கட்டுப்பாடாக இருந்தார்கள். அதனையும் மீறி உணர்ச்சி வசப்பட்ட கடம்பூர் வேலையா,

'கைதிகள் ரேஷனை திருடாதே, நீதி நிலைக்கட்டும், புரட்சி வெடிக்கட்டும்' என்று சத்தம் போட்டார்.

சாகப் போகும் மீனைப் பிடித்துத் தண்ணீரினுள் போட்டால் உடன் துள்ளிப் பாய்வது போன்று - லாக்கப்பினுள் உள்ள கைதிகள் பலர் நடனமாடிக் களித்தார்கள். நமக்காகக் குரல் கொடுக்க ஒரு கூட்டம் இருக்கிறது என்றெண்ணிய போது மகிழ்ந்து கூத்தாடினார்கள்.

சிறைக்குள் ஒரு தடியடி நடக்குமோ என்று ஒரு பய பீதி எழுந்தது.

ஹெட்வார்டர் வேலையாவைப் பிடித்துக் கொண்டு 'ஜெயிலுக்குள்ள எப்படி கோஷம் போடலாம். முட்டிக்கு முட்டி தட்டி உள்ளே போடணும்' என்றார்.

அதற்குள் பாரதி வேலையாவைப் பிடித்துக் கொண்டு சொன்னார் :

'இவர் யார் தெரியுமா?' ஒரு நாளைக்கு எட்டுமணி நேர வேலை, வாரத்தில் ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை' என்ற ஷாப் சட்ட விதிகளை அமுல் நடத்தப் போராடி ஜில்லா சதி வழக்கில் ஒண்ணரை வருடம் ஜெயில்ல இருந்தவரு. 23 வயது வாலிபன். இப்போ விவசாயிகளின்

நல்வாழ்விற்காகப் பாடுபட்டு இங்க வந்திருக்காரு. உங்களுக்காகத்தான் இந்தப் பாடுபடறார்' என்று பொரிந்து தள்ளினார்.

ஹெட்வார்டர் டேனியல் நாடார் சிறை அலுவலகத்திலிருந்து விரால் போல் பாய்ந்து வந்தார்.

'ஜெய்லர் வாரார், எல்லோரும் உள்ளே போங்க, இரண்டுபேர் மட்டும் நில்லுங்க'.

தோழர்கள் உள்ளே போக மறுத்தார்கள். பலவந்தமாக உள்ளே தள்ள முயற்சித்த போது ஜெய்லர் வந்துவிட்டார்.

'அவர்கள் நிற்கட்டும்' என்று மெதுவாகச் சொன்னார் ஜெய்லர். தோழர்கள் சுற்றி நின்றார்கள்.

'ஆபிஸிற்கு வாருங்கள்' என்று சொல்லிக் கிளம்பினார். 'ஜெய்லர் ஸார், நாங்க கொஞ்சம் பேசணும்' என்றார் தோழர் மாணிக்கம்,

'சிறைக்குள் புகுந்த பிறகு எங்களை அடித்தது கொடுமை'

'கைதிகளைக் கொண்டு அடித்தது அதைவிடக் கொடுமை'

'எங்கள் யாவரையும் ஓரே பிளாக்கினுள் வைக்க வேண்டும். எங்களுக்குப் படிக்கப்பேப்பர் வேண்டும்'

தோழர்கள் ஆளுக்கொரு குற்றச்சாட்டை கூறினார்கள்.

அதிகாரி மிகவும் பரிவோடு கேட்டுப் பதில் சொன்னார்.

'பிரதர்ஸ், நீங்க இன்னிக்கு ஜெய்ல்ல இருப்பீங்க. நாளை ஆட்சியில இருப்பீங்க. உங்க ஆளுங்க கூட எங்களைப் பழி தீர்க்க வாய்ப்பு உண்டு. ஆகையினாலே அரசியல் கைதிகளை நாங்க தொடறதில்ல. முள்ள முள்ளாலதான் எடுக்கணும். கைதிகளுக்குத் தான் கைதிகள் அடங்குவார்கள். உங்களுக்கு தயவு காட்ட ஆசை இருக்கு, ஆனா முடியாதபடி அரசாங்கக் கெடுபிடி இருக்கு.

'மெது மெதுவா நல்லது நடக்கும். ஆனா ஒண்ண மட்டும் நல்லா நினைவில் வச்சிக்கீங்க. நீங்க ஜெயில்ல இருக்கீங்க என்ற எண்ணம் எப்போதும் இருக்கட்டும். இப்போ நீங்க சாப்பிட்ட பிறகுதான் நான் போவேன்...'

தோழர்கள் மனம் குளிர்ந்தது.

அப்பொழுது அங்கு வந்த பிக்பாக்கெட் அந்தோணி ஜெய்லருக்குக் கூழைக் கும்பிடு போட்டு நின்றான்.

'டேய், உங்க ஆளுங்க ஏங்கிட்டே கைவரிசையைக் காட்டிட்டாங்களே..' என்றார் ஜெயிலர்.

'என்னங்க எஜமான்'

'நேற்று ஷாப்பிங் போனேன். பஸ்ஸை விட்டு இறங்கவும், பிக்பாக்கெட் அடிச்சிட்டாங்க. எப்படி அடிச்சான்னே தெரியல்ல. அவ்வளவு டெக்னிக். எனக்கு அவமானமாப் போச்சி'.

அந்தோணி சிறிதும் ஆச்சரியப்படாமல், 'எந்த இடம், எத்தனை மணிக்குன்னு கரெக்டா சொல்லுங்க எஜமான்' என்றான்.

'இரவு ஏழு மணி, நெல்லை சந்திப்பு பஸ் நிலையம்'

அந்தோணி ரொம்ப அசால்ட்டாகச் சொன்னான். 'இரவு ஏழு மணிக்குன்னா நம்ம குட்டக் கருப்பன் கோஷ்டிதான். அவன் வெல்லூர் ஜெய்ல்லே இருந்தவன். அதனால உங்களை தெரியாது. சரி, இன்னிக்கு இரவு எட்டு மணிக்குள்ள உங்க பணம் வீடு தேடி வரும் - போலீசுக்கான பங்கு போயிருக்கும். ஆனாலும் முழுத் தொகையும் உங்களுக்குக் கிடைக்கும்'.

அந்தோணியின் திறமையையும், திருட்டுத் தொழிலின் திட்டமிட்ட செயல்பாடுகளையும், நினைத்த வாத்தியார் துன்பப் பெருமூச்சுவிட்டார். மற்றத் தோழர்கள் சமுதாயக் கீறல்களை எண்ணிக் கிளர்ந்தார்கள்.

அன்று மாலைக்குள் மேலும் ஆறு தோழர்கள் புதிதாக வந்து சேர்ந்தார்கள்.

அனைவரையும் புலன் விசாரணையின் பேரால் அடித்துக் கடித்துக் குதறி சிறைக்குள் தள்ளி இருந்தார்கள்.

'உங்கள் தலைவன் பாலதண்டாயுதத்தை எங்கே?காட்டிக் கொடு' புலன் விசாரணையின் போது போலீஸ் கேட்ட ஒரே கேள்வி இதுதான். அநேகத் தோழர்களை இரத்தம் பீறிட வைத்த கேள்வியும் இதுதான்.

மாயாண்டி பாரதியை கைது செய்யும் போது, 'பாலனை காட்டிக் கொடு. உன்னை விட்டுவிடுகிறேன்' என்றார்களாம். அதற்குப் பாரதி, 'பாலனை என் மடியிலயா கெட்டி வச்சிருக்கன், அவுத்துத்தர, நீ கண்டுபிடியயா! அவர் தலைமறைவாய் ஒளிச்சி இருக்கல்ல, மக்கள் மத்தியில் இயங்குகிறார். பண்ணைகளிடமுள்ள பதுக்கல் தானியங்களை வெளிக் கொணர அரசாங்கத்துக்கு தகவல் கொடுப்பதே அவர்தானே - உன்னால முடிஞ்சா புடிய்யா' என்று கொட்டி முழக்கினார். போலீசார் அவரது செவிடு உடையும்படி அடித்தார்கள். அதன்பிறகு அவரது காது மந்தமாகிவிட்டது.

அப்பொழுது அவரை நன்கு அறிந்திருந்த மதுரை போலீஸ் பரமசிவன் சற்று விலகி நின்று சொன்னார்.

'மாயாண்டி படிக்கும் போதே எனக்குத் தெரியும். அப்பவே உதவி செய்யத் துடிப்பார். அவரது மூத்த தமையனார் 1930ல் வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரக அடக்குமுறைக்கு ஆளானவர். மாயாண்டி அந்தக் காலத்திலே நல்ல பேச்சாளர், புரட்சிகரமாக எழுதுவார். பத்திரிகையாளர், காங்கிரஸ் பிரச்சாரகர், நாலு முறை நாட்டுக்காக ஜெயிலுக்குப் போனவர். அவர் சிறையில் இருக்கும்போது அவரது தாய், தந்தை, சகோதரி... இப்படி குடும்பமே இறந்து போனது. . தியாகின்னா இவர்தான் உண்மையான தியாகி... இவரை என் கையினாலே அடிக்க மாட்டேன். சவம்... போலீஸ் உத்தியோகம் கேவலம் பிடித்த தொழில்...' என்று சொல்லிக் கண் கலங்கினார். மேலும் சென்னார்,

'பாலனை உயிரோடு பிடிக்க முடியாது. நேரில் பார்த்தாகூட பிடிக்க மாட்டான்க. அவர் மக்கள் மடியில் வளர்கிறார். தாய் தன் மகனைக் காட்டிக் கொடுப்பாளோ?

'தமிழில் தோன்றிய முதல் நாவலில் இப்படி ஒரு காட்சி வரும். ஒரு சிப்பாய், எதிரியின் காலை வெட்டி விட்டதாக வீரம் பேசுவான். நீர் தலையை வெட்டாமல் காலை வெட்டியதென்னவென்று அடுத்த சிப்பாய் கேட்பான். அதற்கு முதல் சிப்பாய்,

'நான் என்ன செய்வேன்? எதிரியினுடைய தலையை வேறு ஒருவன் முன்னமே வெட்டிக் கொண்டு போய்விட்டானே என்பான். அதுபோலத்தான் நம்ம போலீஸ்காரங்க பொழைப்பும் இருக்கு' என்றார்.

மாலைப்பொழுது வந்தது. சிறையின் இட நெருக்கடியாலும், தோழர்களை ஒன்றாகக் கூடவிடக்கூடாது என்ற அறிவுறுத்தலாலும், இரண்டிரண்டு தோழர்களாகப் பிரித்து மற்றக் கைதிகளோடு கலந்து அடைத்தார்கள்.

சிறையின் லாக்கப்கள் அடி தண்டாக்களை இழுத்துக் கிறீச்சிட்டன. ஒரு கைதி சொன்னான் :

'இனி செத்தாலும் பொணத்தை காலையிலதான் எடுப்பாங்க'

வாத்தியாரும், சுப்பாரெட்டியாரும் ஒரு செல்லில் அடைந்தார்கள்.

இரண்டு அல்லது மூன்று பேரைப் போட வேண்டிய அறையில் ஏழு பேரைப் போட்டு அடைத்தார்கள். வாத்தியார் லாக்கப்பின் கம்பிகளை பிடித்துக் கொண்டு இரவு தியானத்தை ஏறெடுத்தார்.

'காரிருளில் என் நேச தீபமே நடத்துமேன் - வேறொளி இல்லை, வீடும் தூரமே நடத்துமேன்'. சிறிது காற்றுக்காக வாசல்பக்கம் வந்து குந்திய ரெட்டியார், 'கொஞ்சம் சத்தமாகப் பாடுங்க, எனக்கும் ஆறுதலா இருக்கும்' என்றார்.

வாத்தியார் உணர்வு கலங்க - உயிர்த் துடிப்புடன் பாடினார்.

அடுத்த அறையிலிருந்த கடம்பூர் வேலையா, 'பட்டினிக் கொடுஞ் சிறைக்குள் பதறுகின்ற மனிதர்காள், பாரில் கடையரே எழுங்கள், வீறுகொண்ட தோழர்காள்' என்ற பாடலைத் தொடங்கினார். முதலில் அனைத்து செல்களிலும் உள்ள தோழர்கள் தொடர்ந்து பாடினார்கள். பின்பு அனைத்துக் கைதிகளும் சேர்ந்து பாடினார்கள். குதித்துக் கும்மாளமிட்டுப் பாடினார்கள்.

ஒரு பயங்கர யுத்த முழக்கம் போன்றிருந்தது.

வார்டர்கள் அலறினர்.

கருப்புக் குல்லாய்களினால் அடக்க முடியவில்லை. பாட்டு முறையாக சீராக ஒலித்தது.

ஜெயிலதிகாரி தாசன் வீட்டிலிருந்து விழுந்தடித்து சிறை அலுவலகத்திற்கு ஓடி வந்தார். சீஃப் வார்டரோடு சேர்ந்து ஆலோசனை செய்தார்.

4

1950 ஏப்ரல் இறுதி

சிறை அலுவலகத்தில் சீஃப் வார்டர் ஜெய்லரை சந்தித்தார். சீஃப் வார்டரின் கண்கள் கோழிரத்தம் போல் கோபத்தில் சிவந்திருந்தன. 'நீங்க இந்தப் பயல்களுக்கு ரொம்ப இடம் கொடுக்கீங்க, நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும். கைதின்னா கையிலுள்ள தீன்னு நம்ம வார்டன் அடிக்கடி சொல்வார். நெருப்பை மடியில் வைத்துக் கட்டக்கூடாது'

'ஏன், என்ன நடந்தது?'

'சிறை முழுவதும் யுத்த முழக்கப்பாடல், போராட்டக் கூச்சல், கம்யூனிஸ்ட்களையும் மற்றக் கைதிகளோடு கலந்து 'லாக்கப் பண்ணச் சொன்னீங்க'. அவன்க கிரிமினல்களுக்கும் நல்லாப் பாடம் படிச்சிக் கொடுத்துட்டாங்க, ஒவ்வொரு பயகளும் 'எழுங்கள் வீறு கொண்ட தோழர்காள்' என்று தொண்டை கிழியக் கத்தறான்க. எல்லா அறைகளுக்குள்ளும் தண்ணியக் கொட்டி தூங்கவிடாமப் பண்ணுவோம்' சீஃப் முழங்கினார்.

'வேண்டாம், அது கூடாது. நீங்க உலகம் தெரியாமப் பேசுறீங்க. 1929இல் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் மரண தண்டனை விதித்த டாக்டர் ஹோசிமின் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் தலைவரானார். நேருவும் காமராஜரும் நம்ம காலத்தில ஜெயிலுக்குள்ள இருந்தவங்கதான். விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழக்கூடாது. பட்டும் படாமலும் போகணும்'.

ஜெயிலர் மறுத்தார் 'காற்று புக முடியாத இடத்திலயும் கம்யூனிஸ்ட் புகுந்திருவான். அவங்க இரண்டு பேர் ஒண்ணு சேர்ந்தா ஓர் இயக்கமே உருவாகிவிடும். அவங்க யாரைத் தொடுறாங்களோ அவங்க சிவப்பாகி விடுவாங்க. சிவப்புக் கொடியை பிடித்தவன், கீழே போடவே மாட்டான். அவங்க விஷயத்தில நாம ஜாக்ரதையா இருக்கணும், இல்லாட்டா நம்ம ஜெயில் பேர் கெட்டுப் போயிரும்'.

'அவங்கள மிகக் கடுமையாக நடத்தச் சொல்லி இன்றைக்கும் மேலயிருந்து உத்தரவு வந்திருக்கு. அதெல்லாம் அரசியல் காழ்ப்புகள். மெய்ன்கேட் வார்டர் முத்துக் கிருஷ்ணன் ஓடி வந்தார். 'பாடி முடிச்சிட்டாங்களா' ஜெயிலர் கேட்டார். ஏழாம் அறையிலுள்ள இரண்டு பேர், 'நம்ம ஜெயிலருக்கு சிக்கல் வந்துறக்கூடாது. பாடினது போதும்' என்று சொல்லிவிட்டாங்க. எல்லா அறைகளும் அமைதியாயிற்று. அவங்களுக்கு ஒரு தலைமை இருக்கு. அவங்களுக்கு ஒரு ஒழுங்கு இருக்கு, கட்டுப்பாடு இருக்கு'.

'அவங்க இரண்டு பேரையும் இங்க கூட்டிப் பேசுவோமா'

'கைதியை கைதியாகத்தான் நடத்தணும். இரவு ஆறு மணிக்குப் பிறகு லாக்கப்பை திறக்கக்கூடாது'.

புதிதாக வந்திருக்கிற ஆறு பேரும் தீவிர இயக்கவாதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள், கொடிய சித்திரவதைகளுக்குப் பிறகு உளவுத்துறை அவங்களை உள்ளே தள்ளி இருக்கு. இந்த வழக்கின் பேரால் இன்னும் பலர் கைதாகிக் கொண்டிருக்கிறார்கள். இவங்கள வச்சிப் பாதுகாக்கிறது கஷ்டம்தான்'.

'அவங்களால மற்றக் கைதிகளும் கெட்டுப்போயிருவாங்க...'

'அவங்க 25 பேரையும் எப்.ஐ.ஆர் போட்ட பிறகு மதுரைக்கு எடுத்துக் கொள்வதாகப் பதில் வந்திருக்கு. நான் சலுகை காட்டுவதாக அரசு எம்பேர்லயும் ஒரு கண் வச்சிருக்கு. சரி நீங்க போங்க...'

சீஃப் வார்டர் அலுவலகத்தை விட்டு வரவும் தலையில் அடித்துக் கொண்டார்.

'ஓநாய்களுக்குக் கருணைகாட்டி ஆட்டுக்குட்டிகளை கொல்லப் பார்க்கிறார் நம்ம ஜெயிலர். கம்யூனிஸ்ட்கள் ஓநாய்கள் என்று அவருக்குத் தெரியாது. அவர் தாம் பெரிய அறிவாளின்னு நினைக்கிறார். ஒவ்வொருவனும் தன்னை அறிவாளின்னு நினைக்கிற படியால் உலகில் நிறைய முட்டாள்கள் உருவாகிவிட்டார்கள்.

'நான் எத்தனையோ ஜெயிலர்களைப் பார்த்துவிட்டேன். 'மொட்டை' எழுதி இவரையும் ஒரு கைபார்க்க வேண்டியதுதான். சீஃப் வார்டர் கொண்டல் ராவ்னா ஆந்திராவே அலறும், திருநெல்வேலி எம்மாத்திரம்?' என்று மனதிற்குள் கருவிக்கொண்டு வீறு நடைபோட்டார்.

ஜெய்லர், அலுவலகத்தில் அங்கும் இங்குமாக உலாவினார். மனக் குகையிலிருந்து ஏதோ பொங்கி வழிவது போன்றிருந்தது.

'சொற்கள் வெறும் நீர்க்குமிழிகள். செயல்களோ தங்கத்துளிகள். ஆளும் அரசியல்வாதிகள் வெறும் சொற்களை உதிர்க்கிறார்கள். பொதுமை பேசும் இளைஞர்கள் செயல்வடிவம் தருகிறார்கள். தானியங்களைப் பதுக்கி வைத்து பஞ்ச நாடாக்கிய பண்ணையார்களை தோல் உரித்துக் காட்டிய பாலதண்டாயுதம் தலைக்கு விலை வைத்திருக்கிறார்கள்.

'பைபிளில் மெத்துசலா என்ற ஒரு பெரியவர் 969 வயது வரை வாழ்ந்திருக்கிறார். அவருடைய சாதனைகள் எதுவுமில்லை. 33 வயதுவரை மட்டும் வாழ்ந்த ஏசு கிறிஸ்து செய்த புரட்சிகரமான சாதனைகளை எண்ண முடியாது. முழுக்கு முனிவர் யோவானும் 34 வயது வரைதான் வாழ்ந்தார். நல்ல கனி கொடாத மரங்களை வெட்டி வீழ்த்த வேண்டும் என்று புரட்சி பேசியதோடு நிற்கவில்லை. ஏரோது மன்னனின் அக்கிரமத்தை எதிர்த்தார். மன்னனை நரி என்று கூறி இடித்துரைத்தார். இரத்தச் சாட்சியாக மரித்தார். அப்படித்தான் இந்தத் தோழர்களையும் காண்கிறேன். பயங்கரமான நற்செயல்களைச் செய்தவர்களுக்கு 'பயங்கர கம்யூனிஸ்ட்' என்ற பேரா?

'கைதிகளின் ஒழுக்கக் கேட்டையும், கைதிகளின் ரேஷனைத் திருடுவதையும் என்னால் தடுத்து நிறுத்த முடியவில்லை. நான் செய்த பாவம் ஜெயில் அதிகாரியாக வந்திருக்கிறேன்' என்று வெளியே சொல்ல முடியாத கருத்துக்களை மனதிற்குள் சொல்லி மகிழ்ந்தார். பிறகு புழுங்கினார்.

ஆனாலும், 'கைதிகளின் வயிற்றிலடிப்பதை உடனே தடுத்து நிறுத்துவேன்' என்று சபதம் செய்தவராக வீட்டிற்குச் சென்றார். அவரது மனம் மிகவும் பாரமாயிருந்தது.

அன்று புதிதாகச் சிறைக்குள் வந்திருந்த ஒரு புதுக் கைதியை நினைத்துப் பார்த்தார்.

'பூசாரி ஒருவர் தம் காதலிக்கு நகை செய்து போட ஆசைப்பட்டு தாம் பூஜை செய்துவந்த பெருமாளையே சுரண்டி - கைதாகி உள்ளே வந்திருக்கும் அந்த இளைஞனை மனக்கண் முன் கொண்டுவந்தார். தூக்கம் வராமல் அங்கும் இங்கும் புரண்டார்.

5

சிறை, இருளில் ஆழ்ந்து கிடந்தது. பத்தொன்பதாம் எண் அறை விழித்திருந்தது. வாத்தியார் வாசலில் நின்று இரும்புக் கம்பியைப் பற்றியவாறு நெடு நோக்கு நோக்கினார்.

'நாம் குற்றவாளிகள் இல்லை என்ற உண்மை தெரிகிறது எப்போ? நாம் விடுதலையாகி வீடு போகிறது எப்போ?' சுப்பா ரெட்டியார் மிகுந்த கவலையோடு வாத்தியாரைக் கேட்டார்.

வாத்தியார் சற்று உள்ளே வந்து வென்றிலேட்டர் வழியாக நோக்கினார். சில நட்சத்திரங்கள் தெரிந்தன. அவைகளைக் கண்டு ஆனந்தம் கொண்டார்.

'ஆம், உண்மைகள் தெரிய காரிருள் போன்ற துன்பங்கள் தேவையே' என்று பலமாக முணுமுணுத்தார்.

அந்த அறையினுள் ஏழுபேர். அறை முழுவதும் கொசுக்களின், மூட்டைப் பூச்சிகளின் ஆதிக்கம். சுப்பா ரெட்டியார் சணல் பாயை மடித்துப் போட்டு காற்றோட்டத்திற்காகக் கதவோரம் உட்கார்ந்தார். கம்பிக்கு வெளியே கைகளை நீட்டினார். பலவிதமான துர்நாற்றங்கள் மூக்கைப் பிசைந்தன.

மாரிமுத்து வார்டர் இரு பிக்பாக்கெட் கைதிகளுக்கு பிரியாணி பாக்கெட் கொண்டு போகிறார். இருளில் பேரம் பேசி பிஸினஸ் பண்ணுகிறார் வார்டர் சந்திரக் கோனார். தொப்பிக்குள் பீடி, சிகரெட்களை வைத்துக் கொண்டு அன்றைய செலவிற்கான 'கிம்பளம்' பெறப்போகிறார்.

ரெட்டியாரிடம் உள்ளேயுள்ள ஒரு கைதி சொன்னான் : ஜெயில் கேட்டுக்குள்ள நுழைய முடியாதது மட்டுமே வராது. மற்ற எல்லாம் வந்துவிடும். வார்டர் தொப்பிக்குள் ஒரு பலசரக்குக் கடையே இருக்கும். பத்துமடங்குக்கு அதிகமாக விலை போகும். புகைப் பொருட்கள்தாம் பண்டமாற்றின் மையப்பொருள்கள். லஞ்சமும் ஒரு வகைக்கு நல்லதுதான். கைதிகள் சிலரும் ஏழை வார்டர்கள் சிலரும் கொஞ்சம் வசதியைத் தேடிக்கிறாங்க' என்றான்.

வாத்தியார் மற்றக் கைதிகளை நோக்கினார். 'நண்பர்களே கொஞ்சம் வாங்க, வட்டமா உக்காருவோம்' வாத்தியார் கனிவுடன் சொன்னார்.

'முதலில் நம்மை நாமே அறிமுகம் செய்து கொள்வோம்' என்று ஆரம்பித்த வாத்தியார்,

'நான் பண்ணையூர் வாத்தியார், கிராம மாணவர்களின் ஞானக் கண்ணை திறந்தது அந்த ஊர் பண்ணையாருக்குப் பிடிக்கல்ல. கொடுமையை தொடுத்தார். மாட்டையும் மனிதனையும் ஒன்றாக ஏர்க்காலில் பூட்டி உழவு போட்டார். அதைக் கண்ட என் வாலிப இரத்தம் கொதித்தது. எதிர்த்தேன். இளைஞர்களைத் திரட்டி இயக்கமாக எதிர்த்தோம். பல சாகசங்கள் புரிந்தோம். கம்யூனிசக் கலர் பூசி கம்பி எண்ண வச்சிருக்காங்க.

'நண்பர் சுப்பா ரெட்டியார் விவசாயி. நல்ல மெக்கானிக், விவசாயிகளின் புதுவாழ்விற்காகப் போராடியவர். நல்ல ரசிகர்' என்று சொல்லி முடியவும் பதினெட்டு வயது மதிக்கத்தக்க இளைஞன் எழுந்து பேசினான்.

'என் பேர் மோகன், இவன் பேர் முத்து' என்றபோது இருவரும் தோளில் கைபோட்டு அணைத்துக் கொண்டார்கள்.

மோகன் தொடர்ந்து பேசினான்.

'எங்க ஊர் வேலாயுதபுரம். இரண்டு பேரும் பத்தாம் வகுப்பு படிச்சிட்டு வேலை இல்லாம விவசாயத்த பாத்துக்கிட்டிருந்தோம். எங்களுக்குப் பெரிய அறிவாளிகளா வரணும்னு ஆசை வந்தது. தூத்துக்குடிக்கு நாலு மைல் நடந்தே போய் பேட்டை நூல் நிலையத்தில் பத்திரிகைகள் படிப்போம். நிறைய புத்தகங்களையும் எடுத்து வாசிக்க ஆரம்பித்தோம்.

ஒருநாள் நல்ல மழை. இரவு எட்டு மணிவரை நூற்கள் படித்தோம். பிறகு படத்திற்குப் போனோம். வயிர் நிறைய பச்சத் தண்ணியக் குடிச்சிட்டு மெயின் ரோட்ல சீனா வானா வீட்டுத் திருணைல படுத்துத் தூங்கிட்டோம். இப்படிப் பல நாட்கள் படுத்துத் தூங்கி இருக்கோம்,

"அன்று இரண்டு போலீஸ்காரங்க வந்து தூக்கத்தில அடிச்சி எழுப்பி ஸ்டேஷனுக்குக் கொண்டு போனாங்க. லத்திக் கம்பால முட்டுக்குக் கீழே அடி நொத்துனாங்க. டாக்டர் வீட்ல நடந்த கொள்ளையை நாங்கள் இருவரும்தான் சேர்ந்து செய்தோம் என்று ஒப்புக் கொள்ளச் சொன்னங்க. ஆமான்னு ஒப்புக் கொள்கிற வரை அடிச்சாங்க. இப்போ சந்தேகக் கேஸ்ல உள்ள இருக்கோம். ஒரு மாதமாக மாமியார் வீட்டுச் சோறு." என்று கூறி முடியவும் அடுத்த மூன்று பேரையும் முத்து அறிமுகம் செய்தான்.

“இவங்க இரண்டு பேரும் தீரன், கொம்பையா, ஊர் கொலையன் கரிசல். சின்னக் கொழும்பு என்று சொல்லக்கூடிய வளம் படைத்த கிராமம். மீதியை தீரன் சொல்வான்' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தான். தீரன் குனிந்து வெட்கிப் பேசினான் :

'நாங்க இரண்டு பேரும் ஒரு வாழைக்குலையை வெட்டிக் கொண்டு போய் வித்துட்டோம். அது சரியான கோழிகூட்டு வாழைப்பழம். எங்க ரெண்டு பேரையும் பனையில கட்டி வச்சி பச்ச மட்டையால அடிச்சாங்க. பிறகு அவுத்துவிட்டு விசாரிச்சாங்க. அதே பச்சமட்டய எடுத்து விளாசிட்டோம். அது கூட்டக் கலவரமாயிற்று. வாழைக்காரன் ஆஸ்பத்திரியில இருக்கான். நாங்க ஜெயில்ல இருக்கோம்'.

'இந்தா இருக்கானே, இவன் பேர் வைகுண்டம். சிரிவை குண்டத்துக்காரன். ஊரான் தோட்டத்திலிருந்து தண்ணீர் இறைக்கிற மோட்டாரை கழட்டிக் கொண்டுபோய் வித்துட்டான். இவன் பேர்ல களவுகேஸ் என்று முடியவும் வைகுண்டத்தை எழுப்பிவிட்டான். அவன் மெதுவாகச் சொன்னான் :

'தங்கச்சி கல்யாணம் முடிஞ்ச பிறகுதான் உனக்குக் கல்யாணம்' என்று என் அப்பா சொல்லிட்டாரு. தங்கச்சி காதுல, கழுத்துல, தங்கப் பொட்டு ஒன்றுமில்லை. சோலை நாயக்கர் தோட்டத்தில இருந்த இஞ்சினை எடுத்துப்போய் வித்து தங்கச்சிக்கு இரண்டு கம்மல் தோடு வாங்கிட்டு வந்தேன். கம்மலும் போச்சி, மானமும் போச்சி. இப்போ அச்சடிச்ச சோத்துக்கு எச்சி ஊறுது'.

மேலும் வைகுண்டம் பேசினான் :

“நம்ம மோகனும், முத்தும் இரட்டையர் மாதிரிதான். இரண்டு பேரும் பேசினா அறிவு சொரியும். கேக்க ஜாலியா இருக்கும். அறிவாளிகள் என்று பேர் வச்சிருக்கோம்' என்றான்.

அதற்குள் முந்திரிக்கொட்டை போன்று முந்திக் கொண்ட தீரன் “வாத்தியார் ஸார், குளிக்க மூணு குவளை தண்ணி, கழிக்கிற இடத்தில் சரியா சுத்தம் பண்றதில்ல, இதப் பற்றியெல்லாம் கொஞ்சம் எடுத்துப் பேசுங்க” என்றான்.

“தோழர்கள் அதுபற்றி யோசிக்கிறாங்க . இப்பதானே வந்திருக்கோம்” என்று வாத்தியார் சொல்லி வாய் மூடவும் முத்து எகிறிக் குதித்தான்.

“காலையில் புளிச்ச கஞ்சி, மத்தியானம் புழு நெளியும் கீரைத்தண்டு இப்படியே நாள் முழுவதும் இதுதானா பேச்சி?... கழகத்துக்காரங்க கலை, இலக்கியம், கூத்து நாடகம், சினிமான்னு ஏதேதோ சொல்லி இளைஞரை சேத்துட்டாங்க. உங்க தோழர்கள் எப்போ பார்த்தாலும், 'வேலை கொடு: சோறு போடு. கூலி கொடு: போனஸ் போடு... நாள் முழுசும் இது தான் முழக்கம் ... அவங்க கிட்ட யாரு சேருவா?.... பட்டினி கிடந்தாவது படம் பாக்கணும் என்று ஆசைப்பட்றான்... கொஞ்சம் ஜாலி வேண்டாமா?' என்றான்.

வாத்தியார் அதை ஆமோதிப்பது போன்று சிரித்தார். கலை கலை என்று அடித்துக் கொள்ளும் சுப்பா ரெட்டியார் இந்தப்பக்கம் திரும்பினார்.

முத்து மேலும் பேசினான் :

'ஏகநாதர் ஐந்து அப்பத்தை ஆசீர்வதித்து ஐயாயிரம் பேர் திருப்தியா சாப்பிடும்படி செய்தார். சோறா முக்கியம்?

உடனே மோகன் குறுக்கிட்டான்.

'அன்றைக்கு ஒரு சிறுவன் சாப்பிட்ற சிறிய உணவை ஐயாயிரம் பெரிய மனுஷிங்க வயிர் நிரம்பச் சாப்பிடும்படி செய்தார். இன்னிக்கு நம்மவங்க ஆச்சியில ஐயாயிரம் முழு ஆம்பளைங்கள் சாப்பிட்றதை ஐந்து கொழுத்த மண்டைகள் தின்னுட்டு இருக்கு.

திசையை திருப்பினான் முத்து:

'அந்தியில கிடச்ச விடுதலை விடிவனாங்குது. முதற்கோணல் முற்றும் கோணல்தானே?'

'ஆச்சி நடத்துறவங்களுக்கு இவர் சப்போட் பண்றாரு. ஆடு நனையுதுன்னு ஓநாய் அழுததாம்...'

'ஆடு நனஞ்சி சளி பிடிச்சிட்டா, ஓநாய்க்குக் கஷ்டம்தான?....'

இருவரின் பேச்சுக்களை வாத்தியாரும், சுப்பையாவும் ரொம்ப ரசித்தார்கள்.

'காக்கை குருவி எங்கள் சாதின்னு 'பாரதி பாடினானே... அப்படி பரந்த பண்பு நம்மவங்களுக்கு வரணும்?'

'அது உண்மைதான். காக்கய பாத்துத்தான் மனிதன் களவு செய்யப் படிச்சான். குருவியப் பாத்துத்தான் குடிசை வீடுகளை கட்டினான்'.

நம்ம நாடு உருப்படணும்னா மதவாதப் போக்குகளை பொசுக்கித் தள்ளணும்...'

'அட, போப்பா... மதவாதம் அல்லாத கட்சிகளையும் அடிச்சி நொறுக்கணும்'.

'ஏன்னா.... தனி மனிதனை தலைவனாக்கி, பிறகு கடவுளாக்கி.. ஜனநாயகமே செத்துப் போயிரும்...'

அதற்குள் கொம்பையாவிற்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டு மல டப்பாவில் ஏழிசை நாதங்களோடு மலங்கழித்தான்.

'சோளச் சோறு வேல பண்ணுது' என்றான் தீரன். ரவுண்ட் வந்து கொண்டிருந்த வார்டரைக் கூப்பிட்டு சுப்பையா சொன்னார். அவர் முணுமுணுப்போடு அலுவலகம் போய் ஓமவாட்டர் பாட்டிலை தூக்கி வந்தார். ஆளுக்குக் கொஞ்சம் தேன் குடிப்பது போன்று குடித்தார்கள். அறையினுள் இருக்க முடியாத முடை நாற்றம்.

வாத்தியார் முத்து மோகனை கட்டியணைத்து மகிழ்ந்தார். 'மணி, பன்னீரண்டுக்கு மேலாயிற்றே... ம்ற்ற நண்பர்களிடம் பேச நேரமில்லையே?' என்று வருந்தினார்.

'வாத்தியார் சார், எங்களுக்கு எழுதப்படிக்கத் கத்துத்தாங்க' என்று தீரன் பணிவோடு கேட்டான்.

'கஞ்சியில கெடக்கிற கல்லுகளை பொறுக்கிக் கொண்டு வாருங்கள். நாளையே ஆரம்பிச்சிரலாம்' என்றபோது வாத்தியார் குதூகலித்தார்.

இருவர் மட்டும் விழித்திருந்தனர்.

சுற்றிவந்த 'தீவார்டர்' வாசல் முன் துண்டை விரித்து உட்கார்ந்தார். தொப்பிபை தூக்கிக் கீழே வைத்தார். அரிக்கன்லைட் திரியை உயர்த்தி கொஞ்சம் வெளிச்சம் கொடுத்தார்.

வாத்தியார் வாய் சும்மா இருக்குமா?

'வார்டர் சார், உங்களை கைதிகள் தீ வார்டர்ன்னு சொல்றாங்க. ஏன்னு கேட்டேன். கைதி என்றால் கையிலுள்ள தீன்னு அடிக்கடி சொல்வீங்களாம் நீங்க. அப்படிச் சொல்றதுக்குப் பின்னால் ஏதோ ஒரு கதை இருக்கும். அதக் கொஞ்சம் சொல்லுங்களேன்' என்றார் வாத்தியார்.

'நம்ம வாத்தியார் கத எழுதுவார். புத்தகம் வெளியிட்டிருக்கார், உங்க கதையையும் எழுதிவிடுவார்' என்றார் ரெட்டியார்.

தீ வார்டர் பெருமூச்சு விட்டார்.

பின்பு 'உங்களுக்கு உறக்கம் வரல்லியா' என்றார். 'கொசுக்கள் பாட்டுப்பாடி தாலாட்டி எங்கள தூங்கவைக்கப் பார்க்கிறது. அது நடக்குமா?' என்றார் ரெட்டியார். கொசுக்கடியையாவது தாங்கிக்கலாம் போல... மூட்டைக்கடி ரொம்ப அநியாயமாக இருக்கு' என்றார் வாத்தியார்.

எட்டாவது அறையில் சத்தம் கேட்டு அங்கே ஓடினார். 'தீக்கைதிகளா, நாப்பயல்களா, ஏங்கழுத்த ஏன் அறுக்கீங்க, படுத்துத் தூங்குங்க' என்றார். தெற்கு ஓரத்து மூலையில் டார்ச் அடித்தார். உடனே அணைத்து விட்டார்.

இரு கிரிமினல் கைதிகள் தகாத உறவில் ஈடுபட்டிருந்தனர். இது அவருக்கு சாதாரணம்தான்.

'கைதிகள் தீ மட்டுமல்ல, தீக்கோழிகள், பண்ணிப் பிறவிகள்' என்று முணுமுணுத்தவாறு மனதுக்குள் உரக்கச் சொன்னார்.

'உடல் பசியை தீர்த்துக் கொள்வதில் மனிதனும் மிருகமும் ஒண்ணுதான். ஆனால் மனிதன் தோல்வி கண்டான். மிருகம் வெற்றி பெற்றது. இப்பொழுது மிருகத்தோடு போட்டி போட்டுத் தடுமாறுகிறான்'.

விசில் ஊதிக் கொண்டே பத்தொன்பதாம் எண் அறைக்கு வந்தார்.

அழுக்கு உருட்டிக் கொண்டிருந்த வாத்தியாரும் சுப்பையாவும், 'வார்டர், உட்காருங்க, அமைதியான வேளை; உங்க கதையை ஆரம்பிங்க' என்றனர்.

'நான் யார்ட்டயும் சொன்னதில்ல, உங்கபேர்ல எப்படியோ ஒரு பற்று. ஆனா, உங்க யார் வாழ்க்கையிலும் நடக்கக்கூடாது' என்ற போது வார்டர் கண்கள் கலங்கின. இருவரும் மிகுந்த ஆர்வத்துடன் மூக்கை கம்பிக்கு வெளியே நீட்டினார்கள்.

'அப்போ நான் ஆந்திர மாகாணத்தில் ராஜமுந்திரி சிறையில வார்டனா இருந்தேன். அது பெரிய ஜெயில். குறைந்த தண்டனைக் கைதிகள் எட்டுப்பேரை சிறை மதிலுக்கு வெளியே, ஆனால் சிறை வளாகத்திற்குள்

தோட்டத்தில் வேலை செய்ய கூட்டிப் போனேன். அதிலேதான் எனக்கும் வீடு இருந்தது' .

நாலு பீர்க்கங்காய், கொஞ்சம் வெண்டைக்காய்களைப் பறித்து கண்ணன் என்ற கைதியிடம் கொடுத்து வீட்ல கொண்டு வச்சிட்டு வரச் சொன்னேன். அரைமணி நேரமாகியும் அவன் வராததினால வீட்டுக்குப் போனேன். என் மனைவியோடு பலவந்தமாக உடல் உறவு செய்து கொண்டிருப்பதை என் கண்ணால் கண்டு வந்துவிட்டேன். அந்த இடத்தில் நான் என்ன செய்தாலும் கொடிய குழப்பமாகியிருக்கும்'.

'அவ அழகா இருப்பா. அப்போ அவள் வயது நாற்பது. என் வயது நாற்பத்தெட்டு. பிள்ளைகள் மூவரும் பாளையங்கோட்டை மிஷன் ஸ்கூல் போர்டிங்ல படிச்சாங்க. அவள் சிறிதும் நடத்தை தவறாதவள். அவள் தரையில் படுத்து நல்ல தூக்கத்திலிருக்கும் பொழுது இது நடந்திருக்கிறது'.

'நான் வீட்டிற்குப் போன பொழுது அவள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். தடுத்தேன். வலுக்கட்டாயமாகத் தடுத்தேன். அவளை நம்பினேன். அவளை மன்னித்தேன். அதிகமாக நேசித்தேன். இன்றும் நாங்கள் வாழ்கிறோம். பிள்ளைகள் நல்ல நிலையில் உள்ளார்கள். குடும்பத்தை உடைக்காமல் கட்டிக் காத்தேன். ஆனால் கைதிகளை நேசிக்க என்னால் முடியல்ல'

அவர் முகம் மங்கிய விளக்கொளியில் பிரகாசமாக ஜொலித்தது. 'வார்டர் ஸார், உம்மில் ஒரு முழு மனிதனை மட்டுமல்ல, கிறிஸ்து பெருமானையே காண்கிறேன்' என்று வாத்தியார் சொன்னார்.

'நாமும்தான் கிறிஸ்தவமும், கம்யூனிசமும் பேசுகிறோம். வெட்கக் கேடு' என்றார் சுப்பா ரெட்டியார்.

6

லாக்கப்பை திறக்கும் முன்னர் 'கேட் வார்டர்' முத்துக் கிருஷ்ணன் வந்து நின்றார்.

'மக்களை நல்லவங்களாக்க ஆயிரக்கணக்கான சட்டதிட்டங்கள் உண்டு. இன்னும் பல்லாயிரக்கணக்கான நீதி நூல்கள் இருக்கு. ஆயினும் 'நல்ல மாட்டுக்கு ஒரு சூடும், உணர்வுள்ள மனிதனுக்கு ஒரு சொல்லும் போதும்' என்றார்.

'வேதாந்தம் வேண்டாம், விஷயத்திற்கு வாரும். அந்த ஒரு சொல் என்ன? என்றார் வாத்தியார்.

'அன்பு செய்' என்றார் முத்துக் கிருஷ்ணன். இன்ப அதிர்ச்சியில் அதிர்ந்து நின்றார் வாத்தியார்.

'என்ன ஆச்சி, மண்டையில் ஏதாவது கோளாறா?'' என்றார் சீனிவாசன்.

'கோளாறு ஏதுமில்லை, தேனாறு பாயுது, நாளை பெண் கைதி லட்சுமிக்கு விடுதலை'' என்றார் முத்துக்கிருஷ்ணன்.

'விளக்கமாத்தான் சொல்லுமே' என்றார் சீனிவாசன்.

'லட்சுமி, விபச்சாரக்கேஸ், ஒரே கெட்ட வார்தைதான் பேசுவா. கைதிகளே அவளிடம் பேசப் பயப்படுவாங்க. பெண் வார்டர்கள் கூட கிட்ட நெருங்க யோசிப்பாங்க. ஆனா, போன வாய்தாவிற்குப் போய் வந்ததிலிருந்து அவளுக்குள் பெரிய மாற்றம்'.

'எனக்கு முத்தம் கொடுத்தது யார்? என்று கேட்டுக் கொண்டும், கன்னத்தை வருடிக் கொண்டும், அழுது கொண்டும் இருந்தாள். வாய்தாவிற்குப் போன இடத்தில் ஏதாவது நடந்திருக்குமோ? அல்லது சிறைக்குள் ஏதும் அசம்பாவிதம் நடந்ததோ, என்று மனத்திற்குள் எண்ணி எல்லாரும் வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருந்தோம்.'

'மூணு நாளைக்கு முன்னால் ஓர் அம்மா அவளைப் பார்க்க வந்தாங்க. அவங்க மாதர் சங்கத் தலைவி. சமூக சேவகி. நல்லா படிச்சவங்க. ஒரு விவசாய அதிகாரியின் மனைவி. நம்ம ஜெய்லர் அந்தம்மாவை சந்தித்து விசாரித்தார்.'

'இருவருக்கும் உரையாடல் இப்படி நடந்தது :

அம்மா - லட்சுமி என்ற பெண் கைதி இப்போ எப்படி இருக்கா?

ஜெய்லர் - இப்போ பத்து நாளா ரொம்ப வித்தியாசம்' எனக்கு முத்தம் கொடுத்தது யார்? என்று கேட்டுக் கொண்டே இருக்கிறாள். எங்களுக்கு ஒரே பயம். அதை கோர்ட்டிலே போய் சொன்னா எங்க ஜெய்லுக்கு எவ்வளவு கெட்டபேர்? உங்களுக்கு ஏதாவது தெரியுமா? அந்தப் பெண் கைதி உங்களுக்குச் சொந்தமா?

அம்மா - அவள் யார், எவர்ன்னு எனக்கு ஒன்றும் தெரியாது. அவள் ஒரு பண்ணையாரால் கசக்கி எறியப்பட்ட மலர் என்றும், தற்போது ஓர் அநாதை என்று மட்டும் அறிந்திருந்தேன். ஆணாதிக்கம் அவளை விபச்சாரியாக்கியது. அவளுக்கு விலங்கு மாட்டி கோர்ட்டிலிருந்து கொண்டுவரும்பொழுது கண்டு கொண்டேன். அவளுக்கு எப்படியாவது ஒரு நல்ல செய்தியை சொல்லிவிட வேண்டுமே என்று துடித்தேன். அதற்குள் ஜெயிலை நெருங்கி விட்டார். படாரென்று அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்து ஓடிவிட்டேன். காவலர்கள் தடுக்குமுன் கணப்பொழுதில் செய்து முடித்தேன்.

ஜெய்லர் - இப்போ அவளிடம் என்ன பேசப்போறீங்க ?

அம்மா - உன்மீது அன்புகாட்ட ஒருவர் இருக்கிறார் என்ற ஒரே செய்தியைத்தான் சொல்லப்போறேன்.

வழுக்கி விழுந்த பெண்களுக்கு மறு வாழ்வு மையம் ஒன்று அமைத்திருக்கிறோம். அதிலே அவளை சேர்க்கப்போகிறோம்.

ஜெய்லருக்கு ஒரே ஆச்சர்யம், 'அன்பு செய்வதிலே கூட பெரும் புரட்சி ஏற்பட்டு விடுகிறதே' என்று சொல்லிமுடித்த முத்துக் கிருஷ்ணன் அவசரமாக அலுவலகத்தை நோக்கி ஓடினார்.

'யூதாஸ் ஒரு முத்தத்தினால் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். இந்த யூத் செக்கரட்டரி அம்மா ஒரு முத்தத்தினால் திசைமாறிய ஓர் அம்மாவை மீட்டுட்டாங்க. அவளுக்குப் புது வாழ்வு கிடைக்கப் போகுது' என்று சொன்ன வாத்தியாரிடம், 'வே, இது மத மாற்றமா?' என்று கிண்டலாகக் கேட்டார் சீனிவாசன்.

'பூனையின் பற்கள் கூர்மையானவை. அந்தப் பற்களால்தான் தன் குட்டிகளையும் தூக்கிச் செல்கிறது. எலிகளையும் கடித்துக் குதறுகிறது. எல்லாம் நம் அணுகு முறையில்தான்' என்றார் வாத்தியார்.

மலச்சட்டிகளின் குமட்டல் குடலைப் புரட்டியது. ஆனால் வாத்தியார் முகத்தைச் சுளியாமல் அதனை ஏற்றார்.

'அப்படியானால்தான் இந்த நாள் முழுவதையும் நான் அனுபவிக்க முடியும். கைதிகளின் ஆன்மாவிலிருந்து வெளிப்படும் தெய்வீக ஒளியை என்னால் கண்டு கொள்ள முடியும்' என்று கூறி மனதிற்குள் தியானித்தார்.

'கதிரவன் ஒளி சிறைக்குள் வர அஞ்சுகிறது. ஆனால் உமது சுடரொளி எனக்குள் தாராளமாகப் புகட்டும். வெளியே நாள் முழுவதும் கடல் கொந்தளிக்கிறது. சிறைக்குள்ளே என் உள்ளம் அமைதியாகப் பயணிக்கிறது. வெளியே கப்பல்கள் கடும் புயலால் தாக்குண்டன. உள்ளே, எனக்கோ, எத்தனை பாதுகாப்பு? இறைவா, உனக்கு நன்றி' என்று ஆன்மீகச் சிந்தனை செய்த வாத்தியார் திடீரென்று முள்ளில் மிதித்தது போல் ஆவென்று துள்ளினார்.

'ஆ... என் சிந்தனை எத்தனை தவறானது. துறைமுகத்திலிருக்கும் கப்பல்கள் பத்திரமாயிருக்கும் என்பது உண்மையே. ஆனால் கப்பல்கள் அதற்காகச் செய்யப்படவில்லையே'

'நானும் என் தோழர்களும் கூட அப்படித்தானே? வெளி உலகு சென்று அரும்பும் வேர்வை உதிர்த்து - அரும்பாடுபட்டு உழைத்து மக்களுக்காக தொண்டாற்ற வேண்டும் என்பதுதானே எங்களைக் குறித்த இறைவனின் திட்டமாக இருக்க முடியும்? நான் மட்டும் பாதுகாப்பாய் இருந்தால் போதுமா என்று நினைத்த வாத்தியார் மல உபாதைக்கு உந்தித் தள்ளப்பட்டார்.

லாக்கப்புகள் திறவுண்டன. 'இனி நரகத்தினுள் நான்கு நிமிடங்கள்' என்று அவர் வாய் முணுமுணுத்தது.

7

காலை ஏழுமணிக்கு ஒரு அலுமினியக் குவளையில் கொஞ்சம் கஞ்சியும், சிறு உருண்டைக் கடலைத்துவையலும் கிடைக்கும்.

கஞ்சி குடிக்கும் நேரம் கைதிகளுக்குச் சற்று சுதந்திர வேளை. அதோ காதறுப்புக் கேஸில் வந்த காதர் மைதீன். இதோ களவு கேஸ் கைலாசம். அங்கே திருட்டு முழி ஜோசப். இங்கே பட்டப்பகலில் கன்னமிடும் பழனிச்சாமி... சூசைமரியான்.... இப்படியாக அனைத்து சமயத்தார்களும் ஒரேவித உணவை உண்ணும் சமத்துவம் கண்ட வாத்தியார்.

''ஆறு சமயங்கள் தோறும் வேறு வேறாகி விளையாடுவது நீயன்றோ, பராபரமே' என்ற தாயுமானவரின் அடிகளை மனதில் முனகியவாறு கடலைத் துவையலை ருசித்தார்.

கஞ்சியிலுள்ள கற்களை உதப்பியவாறு துப்பினார். சுவையான பழத்தில் கொட்டைகள் இருப்பது போல கஞ்சியில் கற்கள் இருக்கட்டுமே என்றெண்ணிய வாத்தியார் 'இதென்ன சுவையான கஞ்சியா? ' என்று தனக்குள்ளே கேட்டு ஏளனமாகச் சிரித்தார்.

'உணவில் ஒரு சிறுகல் கிடந்ததற்காக என் தங்கையை என்ன பாடுபடுத்தி இருக்கிறேன். ஒரு முறை இட்லியில் தலை முடி கிடந்ததற்காக அவள் தலை முடியைப் பிடித்து இழுத்து அடித்திருக்கிறேன். அதற்குத் தண்டனை வேண்டாமா?' என்று வாத்தியாரின் உள்மனம் உறுமியபோது, ஆடு திருட்டுக் கேஸ் ஆழ்வார் 'கஞ்சி முழுதும் கல்' என்று மெதுவாக முணுமுணுத்தான். அதற்குள் கஞ்சை அப்படியே கீழே கொட்டிவிட்டு உள்ளே நிறைந்து கிடந்த கற்களை வார்டரிடம் கொண்டு காட்டினார் தோழர் வேலையா.

'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா?' என்று மாயாண்டி பாரதி பாடிக்கொண்டே 'அப்படி ஒரு பள்ளிக்கூடம் வைக்கக் கூடாதாய்யா?' என்று கேட்டார்.

கைதிகள் கஞ்சை குடியாமல் 'கல்லு, மண்ணு' என்று கத்தினார்கள். வார்டர்கள் விரைந்தார்கள். தங்கள் லத்திக் கம்புகளினால் லாக்கப் இரும்புக் கம்பிகளில் பலமாக அடித்து ஓசை எழுப்பினார்கள். கைதிகளை உள்ளே தள்ளி கதவுகளைப் பூட்டினார்கள்.

'கைதிகளின் ரேஷனை திருடாதே, கஞ்சியில் கல்லைப் போடாதே' என்ற குரல்கள் வெடித்தன.

தோழர்கள் மட்டும் உள்ளே போகாமல் நின்று கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது ஒரு போராட்டம் தேவை இல்லை. வீணாகக் கைதிகளை அடித்துச் சமட்டுவார்கள் என்று கருதிய தோழர்கள் மாணிக்கமும், நல்லகண்ணும் தங்கள் கஞ்சிக் குவளையிலுள்ள கற்களைக் கொண்டு காண்பிப்பதற்காக ஜெய்லரிடம் சென்றார்கள்.

அவர் விசாரணை செய்வதாகவும், மறுநாள் முதல் இப்படி இருக்காது என்று வருத்தத்துடன் உறுதியாகக் கூறினார்.

'வாத்தியார்' என்ற பெருங்குரல் கேட்டு வாத்தியார் விழித்தார்.

வார்டர் வந்து 'உங்களுக்கு இண்டர்வீயூ வந்திருக்கு' என்றார்.

வாத்தியாருக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சி. வெளியே தளர்ச்சி. 'சரியாகப் பதினோரு மணிக்கு ரெடியாக இருங்க. ரெண்டு மனுக்கள் வந்திருக்கு' என்று சொல்லிச் சென்றார் வார்டர்.

வாத்தியார் மிரண்டு நின்றார். சீனிவாசன் அவரை செல்லுக்குள் இழுத்துச் சென்று தலையில் தண்ணீர் தெளித்து கையினால் தலைசீவி விட்டார். முகத்தைத் துணியினால் துடைத்து சற்று புதிதாக்கினார்.

குறுந்தாடி வளர்ந்திருந்தது. குத்திட்டு நின்ற தலை முடியை படிய வைக்க முடியவில்லை. பற்கள் நெக்குவிட்டுப் போயிருந்தன. புலன் விசாரணையின் போதுள்ள கொடுமையின் தழும்புகள் இன்னும் மாறவில்லை. 'வே. சீனி நாம சிறையிலதான் இருக்கோம். அலங்காரம் எதுக்கு?' என்றார் வாத்தியார்.

'இரக்கப்போனாலும் சிறக்கப் போன்னு சொல்லுவாங்க' என்றார் சீனி.

வார்டன் வந்தார். உடன், வாத்தியார் சென்றார். போகும்போதே முதலில் யாரிடம் பேசுவது என்று சிந்தித்தார்.

'அப்பா, அண்ணனிடமா? மூக்காண்டியிடமா?

'நான் பிறந்த ராசாவூரிலே சிலுவையிலே இறைவனைத் தேடினேன். காணவில்லை. நான் சிலுவைப்பாடுகளை சகித்த பண்ணையூரிலே உயிருள்ள மனிதரிலே இறைவனைக் கண்டேன். மேலும் ஐந்து ஆண்டுகளாகப் பண்ணையூரில் நடத்திய புனிதப் போரில் மூக்காண்டியும் ஒரு போர்வீரன்தானே?' என்று எண்ணிய வாத்தியார் 'முதலில் மூக்காண்டியை வரச் சொல்லுங்கள்' என்றார்.

அலுவலகத்திற்கும் பிரதான வாசலுக்கும் நடுவேதான் பேட்டி நடந்தது.

இருவரும் கட்டித் தழுவினார்கள். கண்ணீர் பொலுபொலுவென்று வழிந்தோடியது.

'நெருங்கிப் பேசக்கூடாது. விலகி நில்லுங்கள்' என்றார் வார்டர். கேட் வார்டரின் சமிக்ஞையினால் சற்று சுதந்தரமாகப் பேச முடிந்தது.

'அணுகுண்டுக்குக் கலங்குவதைவிட அன்பற்ற இதயங்களால்தான் அதிகக் கலக்கம்' என்று ஆரம்பித்த மூக்காண்டி, 'இப்போ அன்புள்ள மனிதர்களையே காணோம். பண்ணைவீடு பிணக்காடு மாதிரி கிடக்கு. முத்தம்மாவை கொன்ற ஆவி லேசில் விடுமா? அவள் இன்றிருந்தால் உங்கள் பணியைத் தொடர்வாள். அவள் தலைமையில் உற்சாகமாகச் செயல்படுவோம், இன்று யாரும் இல்லையே.

'நம்ம காரவீட்டுக் கந்தையாவை போலீஸ் கூட்டிட்டுபோய் ஒரே தொந்தரவு கொடுத்தாங்க. அடி, மிதி, உதை... எல்லாம்தான். உங்களுக்கு விரோதமா பொய்சாட்சி சொல்லச் சொல்லி மூன்று நாளா துவச்சி எடுத்துட்டாங்க. அவர் கொழும்பிலிருந்து வந்த பிறகு முத்தம்மாவை தேடியது பரிதாபமாக இருந்தது. பாதி ஆளா ஆயிட்டாரு.

'பண்ணையாருக்குப் பைத்தியம் முத்தி கால், கை விலங்கோடு திரிகிறார். மேலெல்லாம் இரத்தக் கோரைகள். நீங்க போலீஸ்ல பிடிபட்டதும், பண்ணையாருக்குப் பைத்தியம் பிடித்ததுமான இரு நிகழ்வுகளையும் இணைச்சிப் பாக்றாங்க. இப்போ மக்கள் உங்களை கம்யூனிஸ்டாக அல்ல தெய்வப் பிறவியாகப் பாக்கறாங்க என்று சொன்ன மூக்காண்டி' 'நானே பேசிட்டிருக்கேன். நீங்க பேசுங்க வாத்தியார் ஐயா' என்றான்.

'நான் இப்பொழுது உங்கள் மனச்சிறையில் இருக்கிறேன். நூறு பேரைக் கொண்ட ஒரு பெரிய சதி வழக்கைப் பின்னுறாங்க. தோழர் பாலனைப் பிடிச்ச பிறகு வழக்கை நடத்த நாளைக் கடத்துறாங்க'

உடனே மூக்காண்டி, 'அது சமுத்திரத்தில் அலை ஓய்ந்த பிறகு குளிக்கலாம் என்ற கதைதான் ' என்றான்.

இருவர் கண்களும் பனித்திருந்தன. வாத்தியார் கேட்டார்.

'பள்ளிக்கூடம் எப்படி இருக்கு?'

'இழுத்து மூடிக்கிடக்கு'

'மக்கள் என்ன நினைக்கிறாங்க?'

'உங்க உழைப்பும், கொள்கையும் இப்பதான் பிடிபடுது. ஆனாலும் அடிமையில் ஊறின மக்கள்...'

'மே காட்டுக் கந்தையா எங்க போனான்?'

'ஆளக்காணோம். இருந்தாலும் முத்தம்மாவிற்கு அடுத்த பலிகிடா ஆயிருப்பான்'

'தொடர்ந்து செயல்படுங்கள்' என்றார் வாத்தியார்.

இருவரும் கைகளைக் கோர்த்து விரல்களைப் பிசைந்தார்கள். 'உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையை தியாகம் செய்யக்கூடாது' என்று சொன்ன மூக்காண்டி உங்களைப் பிரிந்ததுதான் எங்களுக்குப் பெரும் நஷ்டம் என்றான்.

'தற்காலிகப் பிரிவில் நாம் கற்பது ஏராளம்' என்றார் வாத்தியார். 'போதும், போதும்' என்று சொல்லிய வார்டர் மூக்காண்டியைத் தள்ளினார். அவன் கொண்டுவந்த பலகாரங்கள் சோதனைக்குச் சென்றன.

அடுத்து அப்பாவும் அண்ணனும் வந்தார்கள். இருவரும் கண்கலங்கி நின்றார்கள்.

எதைக் கண்டும் கலங்காத தந்தை சந்தோஷம் கண்களில் நீர்நிறைந்து நின்றது. 'அண்ணன் அனைத்தையும் உள்ளடக்கி விழிபிதுங்கி நின்றான்.

'எதைப்பற்றியும் கலங்க வேண்டாம். நல்ல போராட்டம் வெற்றியில்தான் முடியும். இடையில் கஷ்டங்கள், துன்பங்கள் வரும். அண்ணனுக்கு திருமணத்தை ஒழுங்கு செய்யுங்கள்' என்று வாத்தியார் சொன்னவுடன், 'நீ வரும்வரை எனக்கு ஒரு மணமும் வேண்டாம்' என்றான் அண்ணன் கோயில்.

அப்பா, மெதுவாக ஆனால் தெளிவாகப் பேசினார். 'மூணு நாளைக்கு முன்னால போலீஸ்காரங்க நம்ம வீட்டுக்கு வந்து சோதனை போட்டாங்க. மருத்துவ ஏடு, பெரிய எழுத்து கதைப்புத்தகங்கள், நீ வாங்கி வைத்திருந்த புத்தகங்கள் எல்லாத்தையும் அள்ளி ஜீப்ல போட்டுக் கொண்டு போறாங்க. நல்ல வேளையா, தூத்துக்குடி முருகானந்தமும், ஐசக்கும் முன்கூட்டியே வந்து சொல்லி இருந்தாங்க.

'நீ எழுதின எழுத்துக்கள், நோட்டுக்கள், கலியுகப் பெருங்காவிய ஏடு' எல்லாத்தையும் எடுத்து பால்பாண்டி வீட்டு மாட்டுக் காடியில் ஒளிச்சி வச்சிருந்தேன். தப்பியது'.

'பூமணி அக்கா மகா, பெரிய மனுஷி ஆகி இருக்கா. அண்ணன், சின்ன மாமா சிட்டைக் கடையை விட்டுட்டு பம்பாய் போகப் போறானாம். நீ எழுதி வச்சிருக்கிற டைரியே உனக்கு தூக்குத்தண்டனை வாங்கிக் கொடுக்குமுன்னு போலீஸ்காரங்க சொல்லிட்டுப் போறாங்க. ஆனா கடவுள் உனக்கு ஒரு தீங்கும் விடமாட்டார். உப்பைத் தின்னவன்தானே தண்ணி குடிக்கணும். உனக்கென்ன ராசா? உன் அக்காமாரும், தங்கச்சியும் ஓயாம கதறி அழுறாங்க. ரெபேக்காதான் ரொம்ப அழுறா. அவா உனக்கு சில்லுக் கருப்பட்டியும், சிலுந்தியும் கொடுத்து விட்டிருக்கா.

'கோணக் கொம்புமாடு குட்டிபோட்டிருக்கு. அதை அக்காவீட்ல கொண்டு விட்டுட்டேன். நம் அடுப்பங்கரை தீபுடிச்சி ரொம்ப சேதம். உன்னோட நண்பர்கள் ரொம்ப விசாரிச்சாங்க. உனக்காக நம்ம ஊர் கோயில்ல ஜெபம் பண்றாங்க'.

அண்ணன் கவலையே உருவாக நின்றான். அவர்கள் கொண்டுவந்த பொருள்கள் சிறை நிர்வாகத்திடம் கொடுக்கப்பட்டன.

தோழர்கள் அநேகரைப் பார்க்க பலர் வந்திருந்தார்கள். புதிய புதிய செய்திகள் கிடைத்திருந்தன.

அன்று இரவு வாத்தியாருக்கு முத்தம்மாள் பற்றிய எண்ணம் அதிகமாக எழுந்தது. மூக்காண்டி சொன்னதை நினைத்துப் பார்த்தார். உறங்கிக் கிடந்த நினைவுகள் குமிழியிட்டன.

'முத்தம்மா, நீ எங்களோடு இணைந்து மக்களின் நல் வாழ்வுப் போரில் பங்கு கொண்டாய். உன்னையே பலித்தியாகம் செய்தாய். பண்ணைக் கொடுமையை வீறுகொண்ட சிறுத்தையாக எதிர்த்தாய். இரத்தச் சாட்சியாக மரித்தாய். உன் தியாகம் மகாப்பெரிது. நான் கைதாகாமல் இருந்திருந்தால் உன்னைப் பத்திரமாக கந்தையாவிடம் ஒப்படைத்திருப்பேன்'.

'கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் மிகுந்த பலனைத் தரும். ஆம், உன் மரணத்தினால் பண்ணை அழிகிறது. அந்த மண்ணை நம்பிய மக்கள் வாழ்கிறார்கள். உனது உரிமைக்குரல் ஓங்காரமாக ஒலிக்கும். ஓராயிரம் முத்தம்மாக்கள் அந்த மண்ணிலிருந்து பிறப்பார்கள்'.

இவ்விதம் நினைத்தவராக வாத்தியார் தூங்கிவிட்டார். உறவினர்கள் மூலம் வந்த பொருள்கள் பொதுமையாக்கப்பட்டு சம பங்காக வந்தன.

நைட் ட்யூட்டி வார்டர் தம் 'டெல்டேல்'* (Telltale) கிளாக்கை தோளில் போட்டுக்கொண்டு ஆறு இடங்களிலும் 'பஞ்ச்' பண்ண சென்றார்.

8

சீனிவாசன் இருபத்தாறு வயது அழகு இளைஞன். கோவில்பட்டி பக்கம் கொல்லங்கிணறு சொந்த ஊர். மாஜி ராணுவத்தார். 1947இல் மோட்டார் கம்பெனியில் மெக்கானிக்காக வேலை பார்த்தார். மோட்டார் தொழிலாளர் சங்கம், சிமெண்ட் பேக்டரி ஆகிய இடங்களில் பணி செய்து தொழிலாளர் நலம் பேணி வாழ்ந்ததால் டிஸ்மிஸ் ஆனார். பின்பு கட்சிப் பணியில் தீவிரமானார். மாந்தர் நல்வாழ்வு அவரது உயிர்மூச்சு.

ஏழாம் நம்பர் அறை. மற்ற கைதிகள் தூங்குகிறார்கள். சீனிவாசனுக்கும் வாத்தியாருக்கும் தூக்கம் வரவில்லை. மனம் விட்டுப் பேசினார்கள்.

போலீஸ் சித்ரவதையால் சிவந்த சீனியின் மேனி திட்டுத் திட்டாய் வீங்கி இருந்தது.

வாத்தியார் சொன்னார் :

'கம்யூனிஸ்ட் கட்சியின் நடைமுறை மாறலாம். அதன் தலைவர்கள் தடம் புரளலாம். ஆனால் மனிதநேயம் பேணும் மார்க்சீயம் வளர்ந்து பெருகும் விஞ்ஞான ஆற்றல் கொண்டது. நாட்டு நலம் தேடும் பொதுமை ஒருநாளும் பொய்க்காது. ஆன்மீகமும் மார்க்சியமும் கைகோர்த்தால் இயக்கம் இன்னும் வீறுகொண்டு எழும், புதுஉலகு படைக்கும்'.

சீனிவாசன் பலவந்தமாக கண்களை மூடினார். உழக்குக்குள் கிழக்கு மேற்கு பார்ப்பது போல் வாத்தியார் சிறை அறைக்குள் உலாவந்தார்.

'கூட்டுப் புழுகூட ஒருநாள் கூட்டை உடைத்துக் கொண்டு வெளியே வந்துவிடும். எங்கள் கதி என்ன..?'

கல்கத்தா முதல் மாநாட்டில் (1948) அதிதீவிரச் செயல்கள் அங்கீகாரம் பெற்றன. அம்மாநாட்டில் தயாரித்த உறுப்பினர் பதிவுப் புத்தகம் துரோகிகளால் போலீஸ் கையில் சிக்கிவிட்டது. மாவட்டம் முழுவதும் தோழர்களைக் கண்மூடித்தனமாகக் கைது செய்து வருகிறார்கள்.

---

* 'டெல்டேல்' என்பது வார்டர் தூங்கிவிட்டால் காட்டிக்கொடுத்துவிடும். தாமதித்துச் சென்றாலும் பிடித்துக் கொடுத்துவிடும். சிறை முழுவதும் சுற்றி வராமல் கள்ளத்தனம் பண்ணினால் இந்தக் கருவி காட்டிக் கொடுத்துவிடும்.

கைது செய்து பிறகு எந்த வழக்கில் சேர்ப்பதென்று தெரியாமல் பதுக்கல் தானியங்களை எடுத்துக் கொடுத்த தூத்துக்குடி தோழர்கள் மீது 'நெல் கொள்ளை' என்று வழக்குப் போடுகிறார்கள்.

கடத்திச் செல்லப்பட்ட நெல் மூட்டைகளை பிடித்துக் கொடுத்த சிவகிரி தோழர்கள் மீது வழிப்பறி வழக்குப் போட்டு செல்லையா, சுப்ரமணியன், லட்சுமணன் முதலிய தோழர்கள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வாத்தியாரைக் கைது செய்தபோது சிக்கிய முற்போக்கு எழுத்தாளர் சங்கக் கட்டுரைகளை வைத்துக் கொண்டும், பண்ணையாரின் கொடுமைகளை எதிர்த்து எழுதிய இலக்கியப் படைப்புகளை ஆதாரமாகக் கொண்டும் பத்திரிகை குற்றச்சாட்டு என்று வழக்குப் போடுவோமா, அல்லது சதிவழக்கில் இணைத்துவிடுவோமா என்று தவிக்கிறார்கள் என்று எண்ணியவாறு 'கார் இருளின் என் நேச தீபமே' என்ற பாடலை வாய்விட்டு முணுமுணுத்தார்.

சீனிவாசன் கம்பளியை தூக்கி முழங்கால்களுக்குள் எறிந்து விட்டு 'என்ன ஜேக்கி, தூக்கம் வரவில்லையா' என்றார். (அவர் வாத்தியாரை செல்லமாக ஜேக்கி என்பார், வாத்தியார் அவரை சீனி என்பார்).

'நெப்போலியன் தூங்கியதைப் பற்றி சரித்திரம் பேசுகிறது. நான் தூங்கியதைப் பற்றி சரித்திரமா வரப்போகிறது' என்றார் வாத்தியார்.

"வே, ஜேக்கி 'கார் இருளின்' என்ற பாடலை உமது வாய் அடிக்கடி முணுமுணுக்கிறது... அதுக்குப் பின்னால ஒரு கதை இருக்கும்னு தோணுது'

'கதை இருக்கு' என்று சொல்லிவிட்டு வாத்தியார் ஆரம்பித்தார்.

'கட்சிக்கு நெருக்கடியான நேரம். கட்சி ஆளுங்களை அடித்து நொறுக்கினார்கள். கட்சி அனுதாபிகளைக் கூட விட்டுவைக்கவில்லை. அறிவுஜீவிகளான சிலரைப் பிடித்து நிர்வாணமாக விட்டு அடித்தார்கள். நாங்கள் பண்ணையூரில், பண்ணையாரின் நிஷ்டூரங்களை எதிர்த்து அமைதிப்புரட்சி செய்துகொண்டு இருந்தோம்.

கிரேக்க புராணத்தில் ஒரு கதை உண்டு. மண்ணின் மைந்தனான ஒரு ராட்சசன் இருந்தான். அவன் பூமியில் கால் வைத்திருக்கும்வரை அவனை யாராலும் கொல்ல முடியாது. அப்படித்தான் பாலன் கதையும். அவர் மக்களோடு இரண்டறக் கலந்து மக்களுக்காகப் பாடுபடுகிறார். அவர் மக்களைப் பிரியாதவரை எந்தக் கொம்பனாலும் அவரைப் பிடிக்க முடியாது. ஆனால் ஒன்று, பாவப்பட்ட அப்பாவித் தொண்டர்களைப் பிடித்து 'பாலனை எங்கே காட்டு' 'உன் தலைவன் எங்கே சாப்பிடுவான் சொல்லு' என்று காவல்துறை கேட்டால்... அவர்களை நினைத்து சிரிக்கத்தான் தோணுது.

1950ஆம் ஆண்டு மார்ச் பத்தாம் நாள்.

நண்பர் சுப்பாரெட்டியார் மூலம் எனக்கொரு உத்தரவு வந்தது.

நடுநிசி 11 . 30லிருந்து 12க்குள் பண்ணையூர் காட்டுஓடையின் பக்கம்

நிற்க வேண்டும். அங்கு ஒரு தோழர் ஒயிட் பேண்ட் சட்டையோடு வருவார். கழுத்தில் சிவப்பு நிற துவாலை நிறத் துண்டு அணிந்திருப்பார். கையில் டார்ச் லைட் வைத்திருப்பார். கைக்குட்டையை எடுத்து ஒரு முடிச்சு போடுவார். அவர் 'நம்மாள்' என்பதற்கு இவைகள் அடையாளம். அவரைக் கூட்டிக் கொண்டுபோய் பாதுகாக்க வேண்டும்.

இதுதான் உத்தரவு.

அந்தநாள் வந்தது. இரவு பத்துமணி வரை பாலர் கல்வி, முதியோர் கல்வி, பெற்றோர் சங்க ஆயத்தங்கள், வாலிபர் சங்க பணிகள் அனைத்தையும் முடித்துவிட்டு பள்ளி பெஞ்சின்மீது சிறிது அமர்ந்தேன். சரியாகப் பத்து மணிக்கு ஆண்டிரெட்டி விழுந்தடித்து ஓடிவந்தான். என்னை ரகசியமாகக் கூப்பிட்டு 'வடக்கு ஓடைப் பக்கம் சிறு வெளிச்சம் தெரிகிறது' என்றான்.

அவன் எனது நம்பத்தகுந்த இளைஞன். ரகசியங்களை இரும்புக் கரத்திற்கும் பயப்படாமல் இமைபோல காப்பான். மாணவர்களையும் பெரியவர்களையும், வீட்டிற்கு போகச் சொல்லிவிட்டு ஓடைப்பக்கம் சென்றோம். மணி பத்தரை தானே ஆகிறது. எதிர்பார்க்கும் தோழர் அதற்குள் வரமாட்டாரே, கரெக்ட்டா இருப்பாங்களே. ஆனாலும் போய்ப் பார்ப்போம் என்று ஓடைப்பக்கம் நின்று அந்த ஒத்தப்பனையை நோக்கினோம். மினுக்மினுக்கென்று ஒரு ஒளி. பின்பு அணைந்தது. மீண்டும் ஒளிர்ந்தது. 'முன்பு பாலன் மணித்துளி தவறாமல் சரியாக வந்தாரே' என்று உள்ளத்திற்குள் சொல்லிக் கொண்டார்.

'திருடனாய் இருக்கலாம்' என்றார் ஆண்டிரெட்டி.

'திருடன் வீட்டு மாம்பழமும் இனிக்கும். திருடனையும் திருத்திவிடலாம். அவனும் சீரழிந்த இந்த சமுதாயத்தின் ஒரு சிற்பிதானே' என்று கூறியபின்,

'வந்து நல்வரம் தந்தனுப்பையா... ஆதிநாதா ஜோதிவல்ல ஆவியை நல்கி ஆளையா' என்ற கீர்த்தனைப் பாடலை பாடினார் வாத்தியார்.

'உங்க ராகத்தைக் கேட்டு திருடன் ஓடிவிடுவான்' என்றான் ஆண்டி. 'அதற்காகத்தான் பாடினேன்' என்றார் வாத்தியார்.

அருகில் நெருங்கியபோது ஒரு இளைஞன் நின்று நடுங்கிக் கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் படபடப்போடு 'வணக்கம் சார்' என்றான்.

'வன்னிராஜாவா, ஏன் இங்கே...'

'பயமா இருக்கு சார்'

'எவ்வளவு நேரமா நிக்கிறே?'

'ஒரு மணிக்கு மேல இருக்கும்'

'இந்த இருட்டுல ஏன் தனியா வந்தே'

'தூத்துக்குடியில் இருந்து ஒரு கல் லாரியில் ஏறிவந்தேன். நம் ஊர் வரை வரும் என்றான். பின்பு ரோட்டில் இறக்கிவிட்டுட்டு நத்தம் கல் கோரிக்கு போய்ட்டான்'.

'உன் கையில்தான் டார்ச் இருக்கே'

'சார், அது சிறு ஒளிதான். என் காலடிதான் தெரியுது, கொஞ்சம் நடந்தேன். பயமா இருந்தது. யாராவது வருவாங்களான்னு பயத்தோடும், நம்பிக்கையோடும் நிக்கிறேன்'.

மூவரும் கரம் கோர்த்து ஒரு வட்டம் அமைத்தோம். நான் பாடினேன்.

'காரிருளில் என் நேச தீபமே நடத்துமேன்
வேறொளி இல்லை. வீடும் தூரமே நடத்துமேன்.
நீர்தாங்கின் தூரக்காட்சி ஆசியேன் ஓர் அடி மட்டும்
என்முன் காட்டுமேன்'

இந்தப் பாட்டிற்கு எனக்கு ராகம் நன்றாக வந்தது. 'ஓர் அடி மட்டும் என் முன் காட்டுமேன்' என்ற கடைசி அடியை ஏற்ற இறக்கம் கொடுத்து மும்முறை பாடினேன்.

மூவரும் அமர்ந்தோம். ஆண்டிரெட்டியை பாடச் சொன்னேன். அவன் பாடினால் நல்ல பாம்பும் நிமிர்ந்து நின்று கேட்கும்.

'வன்னி ராஜா மாதிரி இருட்டுக்குள் மாட்டிக் கொண்ட ஒருவர் தாம் இந்தப் பாடலைப் பாடி இருக்க வேண்டும்' என்றான் ஆண்டி.

'ஆம், இந்தப் பாட்டு, பிறந்த ஒரு கதை உண்டு' என்று கூறி ஆரம்பித்தேன்.

1833ஆம் ஆண்டு, அக்காலம் கப்பல்கள் காற்றை நம்பி இருந்தன. ஆரஞ்சுப் பழங்களை ஏற்றிக் கொண்டு ஒரு கப்பல் இத்தாலி நாட்டிலிருந்து பிரஞ்சு நாட்டிலுள்ள மாஞ்சேல்ஸ் என்ற ஒரு துறைமுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

காற்றே இல்லாத அமைதி ஏற்பட்டது. பானுபேசியோ என்ற ஜலசந்தியில் கப்பல் தங்கும்படியாயிற்று. ஆறு நாட்கள் ஆகியும் கப்பல் அசையவில்லை.

அந்தக் கப்பலில் ஒரு பாதிரியார் பயணம் செய்தார். அவர் மத்திய தரைக்கடல் நாடுகளை சுற்றுப்பயணம் செய்தபிறகு, தம் சொந்த நாடான இங்கிலாந்து செல்கிறார். பாதிரியாரின் உடல் மிகவும் பலவீனப்பட்டது. தம் ஆங்கில மக்களை சந்திப்போமா என்ற பயம் அவருக்குள் பலமாக எழுந்தது. தம் இனத்தார், சிநேகிதர், பெற்றோரை பார்ப்போமா என்ற திகில் வாட்டியது.

அப்பொழுதுதான் இந்தப் பாடலை எழுதிப்பாடினார். ஜீவமரணப் போராட்டமாக மகா உருக்கத்துடன் பாடினார்.

ஒரு சிறு காற்று.

அடுத்து வாய்ப்பான காற்று வீசியது.

கப்பல் குறிப்பிட்ட இடம் போய்ச் சேர்ந்தது.

இந்தப் பாடல் இன்று உலகப் புகழ் பெற்றது. சபைப் பாகுபாடின்றி - மதப் பிரிவுகளின் வேறுபாடின்றி உலக மக்கள் இணையும் இடத்தில் பல மொழிகளில் - ஒரே ராகத்தில் ஒன்றுபோல் பாடும் ஒரு பாட்டாக உள்ளது.

நம்மில் அநேகரும் வன்னி ராஜாவைப் போல்தான் இருக்கிறோம். நம் தேவைகளை கடவுள் அப்படியே ஒரேயடியாகக் கொண்டு கொட்டிவிடுவார் என்று கருதுகிறோம். வன்னி ராஜா வீடுவரை வெளிச்சமாய் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறான். இருக்கிற வெளிச்சத்தை பயன்படுத்திக் கொள்ளத் தெரியவில்லை. ஒருஅடி எடுத்து வைத்தால் மறுஅடி கிடைக்கும் என்று அவன் எண்ணியே பார்க்கவில்லை'.

'வே, சீனி கேக்கீரா' என்று கேட்ட வாத்தியார் மீண்டும் தொடர்ந்தார்.

'நம் ஜெயிலுக்கு நேற்று வந்த ஒரு கைதி வசதி படைத்த பட்டதாரி மாணவன். ஒரே நாளில் திடீர் பணக்காரனாக திட்டமிட்டான். சரியான ஒரு கொள்ளையடித்து வீடு, வாசல், தோட்டம், துறவுன்னு பெரிய மனுஷனா ஆயிரணும்னு ஆசப்பட்டான். அதற்குள் பிடிபட்டு மாட்டிக்கிட்டான்.

வன்னி ராஜாவை வீட்டில் கொண்டு விட்டுவிட்டு இருவரும் மீண்டும் வந்தோம். வரும்போதே என் உள்ளம் குமுறியது. வன்னி ராஜாவை ஏன் சொல்ல வேண்டும்? நம் கட்சி தலைவர்கள் கதையும் அப்படித்தானே இருக்கு?

ஒரே நாளில் புரட்சி செய்து - ஒரே நாளில் டில்லி கோட்டையில் செங்கொடியை பறக்கவிட நினைக்கிறார்கள். அது சாத்தியமா? ஒவ்வொரு அடியாகத்தானே எடுத்து வைக்க வேண்டும். அதுதானே நிலைக்கும். ஆயினும் கட்சி ஆணைக்குக் கீழ்ப்படிவது நம் கடமை என்றெண்ணி விரைந்தோம்.

ஆண்டிரெட்டியை வேவு பார்க்கும்படி சற்று தூரத்தில் நிறுத்திவிட்டேன். குறிப்பிட்ட நேரத்திற்கு சரியாக தோழர் வந்தார்.

சீனிவாசன் சிரித்தவாறு நிமிர்ந்து உட்கார்ந்தார். 'வே, ஜாக்கி அன்று வந்தது நான்தானே' என்றார்.

'வாத்தியாருக்கு தூக்கி வாரிப்போட்டது'

'வே, திருட்டு மனுஷா' என்று கூறி அணைத்துக் கட்டினார்.

பிக்பாக்கெட் அந்தோணி இருந்த அறையிலிருந்து ஒரு பாடல் உடைந்து பீறிட்டது.

'திருட்டுத் தொழிலே எந்தெய்வம்;

திறமைதான் எம் செல்வம்'

அவன் வார்டர்களுக்கு பணம் கொடுத்து உதவி செய்யும் வளமான பிக்பாக்கெட்.

9

வாத்தியாருக்கு அக்காவின் நினைவு அதிகமானது. என்னை நினைத்து ஏங்கிக் கொண்டே இருக்கும் என் அக்காவிற்கு நான் என்ன செய்யக்கூடும்? கண்ணீரைக் காணிக்கையாக்கி கொண்டிருக்கும் அவளுக்கு நான் என்ன எழுதுவது?

அன்று பகலில் யாருடனும் பேசாமல் நினைவுச் சூழலில் சிக்கினார். நினைவுகள் அலை அலையாய் எழுந்தன.

எனக்கு மூத்த அக்கா ரெபேக்கா. என் இளவயதின் வாழ்வோடு இரண்டறக் கலந்தவள். இருவருக்கும் ஐந்து வயது வித்தியாசம்.

எங்கள் ஊரில் குடிதண்ணீருக்குக் கஷ்டம். ஆனால் எங்கள் வீட்டில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதே இல்லை. அதிகாலை இருட்டோடே ஒரு மைல் தூரம் நடந்து சென்று தண்ணீர் கொண்டு வந்து அனைத்துக் குடங்களையும் நிரப்பி விடுவாள். தாகம் என்று வருகிறவர்களுக்குக் குடத்தோடு தூக்கிக் கொடுப்பாள்.

அக்கா கடுமையான உழைப்பாளி.

எங்களூரில் நாடகம் மூன்று நாட்களும், பாவைக் கூத்து பத்து நாட்களும் நடைபெறும். பொரி கடலை வாங்கி வைத்துக் கொண்டு விடிய விடியக் கொரிப்போம்.

ஊருக்கு வடக்கே கூப்பிடு தூரத்தில் புஞ்செய் இருக்கிறது. நீண்ட சதுரத்தில் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் நான்கு பக்கங்களிலும் ஓங்கி வளர்ந்த பனைகள் நீதிமான்கள் போல் நிமிர்ந்து நிற்கும்.

எங்கள் பனைகளை ஏறும் காளி அண்ணனுக்கு நல்ல வளம். ஐந்து மாதங்களில் ஒரு வருடத்திற்கான உணவுப் பொருள்களை சேகரித்து விடுவார். ஒருநாள் பதனீர் அவருக்கு, மறுநாள் பதனீர் எங்களுக்கு.

எங்கள் முறை வரும் நாளில் எல்லோரும் நன்றாகப் பதனீர் குடிக்கலாம். ஓசிக்குப் பலர் வருவார்கள். மீதியை சுக்கு, எள், பொரி கடலை போட்ட கருப்பட்டியாக்குவோம். காய்ச்ச முடியாத நாளில் பக்கத்திலுள்ள சாமியூர் கிராமத்தில் சென்று நானும் அக்காவும் விற்று வருவோம்.

அந்த அனுபவங்கள் பதனீரைவிட இன்னும் இனிக்கின்றன. பெருமாள் நாயக்கர் வீட்டில் பதனீரைக் கொடுத்துவிட்டு இட்லி சாப்பிடுவோம். அந்தச் சிவப்பு நிற சட்னியின் ருசியே தனி. அவர்களோடு பழகி ஓர, நீளு என்று தெலுங்கு பேசுவோம். இன்னும் மீதி இருந்தால் மாரி முத்துக் கோனார் வீட்டில் கொடுத்துவிட்டு பதிலுக்கு ஆட்டுப்பால் குடிப்போம்.

பதனீரை பருத்திக்குப் பண்டமாற்று செய்வதில் அதிகக் கணக்கறிவு வேண்டும். கணக்கு அக்காவிற்கு நல்லா வரும். கிராமக் கணக்குப் பிள்ளை அக்காவின் கணித ஞானம் கண்டு ஆச்சரியப்படுவார். ஊரையெல்லாம் ஏமாற்றும் அவர் அக்காவை ஏமாற்றமுடியாது.

வருகிறவர்களுக்குப் பதனீரை இலவசமாகக் கொடுப்பாள்.

எங்கள் புஞ்செய் பக்கம் ஒரு சிற்றோடை ஓடுகிறது. மழைக் காலங்களில் வெள்ளம் வந்து வடிந்த பிறகு அழகழகான கூழாங்கற்கள் கிடக்கும். அவைகளை நான் பொறுக்கி வருவேன். அக்கா தோழியரோடு சேர்ந்து கற்களை சுட்டி பிடித்து விளையாடுவாள். ஒவ்வொரு கல்லுக்கும் ஒரு பாட்டு. அப்படியே பத்துக் கற்களுக்கும் பத்துப்பாட்டுப் பாடுவாள். பத்தாவது கல்லை வலது புறங்கையில் போட்டுப் பிடிக்கும்பொழுது,

'**பத்துள்ள என் தம்பி, பணமுள்ள என் தம்பி, சொத்துள்ள என் தம்பி, சுகமுள்ள என் தம்பி**' என்று பாடுவாள்.

தம்பியைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து அம்மானை பாடுவாள். எனக்கு கலை உள்ளமும், இலக்கியப்பற்றும், ஏழை எளியவர்கள் மீது அன்பும் ஏற்பட்டதற்கு அக்காவும் ஒரு காரணமாகும்.

இரவில் மணிக் கணக்காகப் பைபிள் படிப்பாள். வேதநாயகம் சாஸ்திரியாரின் பாடல்களை தாளலயத்தோடு அழகாகப் பாடுவாள். அவரின் சாத்திரக் கும்மி அக்காளுக்கு ரொம்பப் பிடிக்கும். அவர் ஈ.வெ.ராமசாமிப் பெரியாருக்கும் பல ஆண்டுகளுக்கு முன்னே மூட நம்பிக்கைகளைச் சாடி 850 சாத்திரக் கும்மிகள் பாடியுள்ளார்.

எல்லா நாளையும் நல்ல நாளென
எமைப்படைத்தவன் செய்திருக்க
பொல்லா நாளென்றும் நல்ல நாளென்றும்
புகல்வதாரடி ஞானப் பெண்ணே!
மாட்டைத் தொட்டுத் தலை முழுகாத நீ
மனுஷனைத்தொட்டு ஸ்நானஞ் செய்தாய்
மாட்டைப் பார்க்கிலும் மனிதன் இளப்பமோ
மறுமொழி கொடு ஞானப் பெண்ணே !

இதுபோன்ற பாடல்களை உணர்வு பூர்வமாக பாடுவாள். ஆனால் என் அக்காவின் வாழ்நாள் துன்பத்தின் பள்ளத்தாக்கு. துயரக் கேணிகள், முட்கள் நிறைந்த பாதைகள், நெருஞ்சி முள்ளில் நடந்து வந்த அனுபவங்கள்.

அது ஒரு மழைக்காலம். தங்கை மெர்சிக்கு மூன்றரை வயது. ஆரோக்கியமாகவும், அழகாகவும் இருப்பாள். வெள்ளம் நிறைந்து ஓடிய ஒரு நாள் வீட்டுக்குத் தெரியாமல் விளையாடச் சென்று - வெள்ளம் முங்கி ஓடிய மிஷன் கிணற்றில் தங்கை மூழ்கி இறந்து போனாள். அவளைத் தூக்கிச் சுமந்த அக்காதான் ரொம்ப அழுதாள். மரணத்தின் கொடுமையைக் கண்டு தகித்துப் போனாள்.

அக்காவிற்கு நிறையத் தோழியர்கள், பாட்டிமார்கள் உண்டு. வாழ்க்கையில் மிகவும் நொந்துபோன கோடாங்கிப் பாட்டி தற்கொலை செய்து கொள்ளாமலிருப்பது அக்காவால்தான்.

'அக்கா நீ கருப்பாயிருந்தாலும் ரொம்ப அழகா இருக்கே' என்று நான்

சொல்லும்போது அக்கா உள்ளுக்குள் மகிழ்ந்து சிரிப்பாள். இரண்டு அக்காமார்களுக்குத் திருமணமாகி அவர்கள் நல்லபடியா வாழ்கிறார்கள். தங்கை அம்மாவோடே ஒட்டிக் கொள்வாள். நானும் அக்காவும்தான் ரொம்ப தோஸ்து.

கோடை விடுமுறை எங்களுக்குக் கொள்ளை இன்பம். பனை புஞ்செய்க்குப் போய் பயித்தங்காய், தக்காளிப்பழம், முதுக்கம்பழம், கம்பங்கதிர், கேப்பக்கதிர், வெள்ளரிப்பிஞ்சு, இளம் வெண்டைக்காய்.. இப்படி நொறுக்குத்தீனிகளை நிறையத் தின்போம். நுங்கு போட்டு மாலைப் பதனீர் குடிப்போம்.

அக்காளுக்குப் பதினேழு வயது. திருமணம் ஒழுங்கானது. மாப்பிள்ளைக்கு முப்பது வயதாம். ஊரில் கிசுகிசுப்புகள் கிளம்பின. சிலரின் பரிகாசப் பேச்சுகள்.

அம்மாவும், அக்காவும் வெளியே தலை காட்ட முடியாமல் அழுதார்கள். மறுபக்கம் சில ஆறுதலான செய்திகளும் வந்தன.

'மாப்பிள்ளை தங்கக் கம்பி. தயாள குணம்' செழிப்பான கூட்டுக் குடும்பம். நீர்வளமிக்க நல்ல கிராமம்.

ஒழுங்கு செய்தபிறகு எப்படி மாறுவது என்று ஐயாவிற்குக் கவலை. அக்காவின் ஊமை அழுகை எனக்குப் புரிந்தது. நான் ரொம்ப துடுக்காகச் சொன்னேன்.

'யாரும் அழாதீங்க. நான் போய் மாப்பிள்ளையை இங்கு இழுத்துக் கொண்டு வாரேன். நேரில் பார்த்துக்குவோம்'.

அக்கா சிரித்தாள். என்னைத் தழுவி தலையில் முத்தினாள். "திருமணத்திற்கு இன்னும் ஒரு வாரம் இருக்கு. நிறுத்தி விடுவோமா?" என்று ஐயா அழாக் குறையாக கேட்டபோது அக்கா சொன்னாள் 'எனக்கு அந்த மாப்பிள்ளை போதும், யாரும் அழக்கூடாது' என்றாள்.

அக்கா எப்பொழுதுமே அப்படித்தான். பிறர் கண்ணீரைத் துடைத்து விட்டு அவள் மட்டும் தனியா அமர்ந்து அழுது கொண்டிருப்பாள்.

திருமணம் தடபுடலாக நடந்தது. ஐந்து சகோதரர்களிலும் மூத்தவர் அத்தான். ஐவரும் பஞ்ச பாண்டவர்கள் என்றால் என் அத்தான் தர்மர். பசித்து வந்தவர்களுக்குச் சோறு போட்டால் காணாதென்று சோத்துப் பானையையே தூக்கிக் கொடுத்துவிடுவார்கள்.

பதனீர் குடித்த அக்கா இளநீர் குடித்தாள். பனங்கொட்டையை வெட்டித் தவண் தின்றவள் இளநீரில் இருக்கும் வழுக்கையைத் தின்றாள். அக்காவின் அன்பால் அத்தான் 'இளவட்டம்' ஆனார்கள். இருவரும் அன்பில் திளைத்தார்கள். அதுகண்டு நான் மகிழ்ந்தேன் என்றாலும் என்னால் அக்காவைப் பிரிந்திருக்க முடியவில்லை.

அக்காவிற்கு இப்போ ஏழாவது மாசம். வில்வண்டி கட்டி ஒட்டன் மாடு பூட்டி சோறு பொங்கிப் போட்டு அக்காவை அழைத்து வந்தோம். வண்டிக்காரப் பால் அண்ணன் வண்டி ஆடாமால் அசையாமல் இருபது கிலோ மீட்டர் தூரமும் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்தான்.

1942ஆம் ஆண்டு ஈஸ்டர் பண்டிகை நாள். அந்த உயிர்ப்பின் பண்டிகை எங்களுக்கு மரண ஓலமாயிற்று. அம்மாவின் திடீர் மரணம் எங்களை மயான துயரத்தில் ஆழ்த்தியது. பால் பொங்கிவரும் பொழுது தாழி உடைந்து போயிற்று.

நிறை கர்ப்பிணியான அக்கா அழுது வழிந்தாள். அவளுக்கு ஏதாவது சேதம் வந்து விடாதபடி பக்கத்திலிருந்து பாதுகாத்தேன்.

வயிற்றுப் பிள்ளைக்கு ஆபத்து வந்துவிடாதபடி கோடாங்கி பாட்டி அக்காவிற்கு உறுதுணையாக இருந்து உதவி செய்தாள்.

அண்ணனும் நானும் ஆசிரியப் பயிற்சிக்காக நெல்லை சென்று விட்டோம்.

தாயினும் மேலாக அக்கா என்னை நேசிப்பாள். அத்தானுக்கும் என் மீது அளவு கடந்த பாசம். நான் அங்கு சென்றவுடன் அத்தான் வலையைத் தூக்கிக் கொண்டு மீன்பிடிக்கக் கிளம்பி விடுவார்கள்.

உன் தம்பி வந்தால் பெரிய விரால் மீனாகக் கிடைக்கிறது, 'யோகக்காரப் பயல்' என்று அத்தான் அக்காவிடம் சொல்வார்கள். சில வேளைகளில் நானும் அத்தானோடு சேர்ந்து மீன்பிடிக்கச் செல்வேன்.

சம்பங்கோரையிலுள்ள பூவிலிருந்து அக்கா செய்துதரும் சம்பவங்களியும், காட்டுக் கோரையின் தூரிலிருந்து எடுத்து சுத்தம் செய்து தரும் 'சிலுந்தி' என்னும் ஒருவகை அரிசி மணியும் நாள் முழுவதும் தின்றுகொண்டே இருக்கலாம்.

அக்கா வீடு ஒரு திறந்த இல்லம் - களவு போன நாளே கிடையாது. யார் வேண்டுமானாலும் வேண்டியதை வந்து பெற்றுச் செல்வார்கள். அக்காவின் அன்பான பேச்சினாலும் - தாராளத் தன்மையாலும் அந்த ஊரிலுள்ள அனைவரும் அக்காவை செல்லப்பிள்ளை போல நேசித்தார்கள்.

அக்கா என்னை சிறையில் வந்து பார்க்க வந்தது ஒரு துன்பியல் நாடகம். எழுதவே முடியாது.

தரையில் விழுந்து அழுது புரண்டபோது வார்டர்கள் தூக்கி எடுத்து தண்ணீர் தெளித்து ஆற்றித் தேற்றி பஸ் ஏற்றினார்கள்.

வாத்தியாரின் கண்கள் குளமாயின.

அக்காவின் கள்ளங் கபடமற்ற வேண்டல்கள் வாத்தியாரை மரண வாயிலிருந்து மீட்குமா?

10

தம்பீ' என்ற அழுகுரல் தேவாலய உச்சியைப் பிளந்தது. கோயில் ஆராதனையில் இருந்த சிலர் 'யார்?' என்று வினா எழுப்பினார்கள். மற்றும் சிலர் 'என்ன? என்ன?' என்று கேட்டனர்.

'தம்பீ, தம்பீ...' என்ற அழுகுரல் வீறிட்டுக் கிளம்பியது. அழுகையை அடக்க முடியவில்லை. ஏக்கப் பெருமூச்சு எழுந்தது.

ஞாயிறு ஆராதனையில் 'லித்தானியா' என்னும் பொதுவான பிரார்த்தனையை படித்துக்கொண்டிருந்த பாதிரியார் ஒரு நிமிடம் அமைதிப்படுத்தி மீண்டும் தொடர்ந்தார்.

'காவலில் அடைபட்டவர்கள், சிறைப்பட்டவர்கள், மரணதண்டனைக்கு ஏதுவானோர் யாவருக்கும் இரக்கம் செய்ய வேண்டுமென்று...' என்று பாதிரியார் மொழிந்து இராகம் இழுக்கவும்,

'நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் கர்த்தாவே' என்று மக்கள் மறுமொழி சொல்வர். ஆனால் அந்த மறுமொழியை மீறி 'தம்பீ.. தம்பீ...' என்ற அழுகை ஒலி பலமாக எழுந்தது.

'நம்ம ரெபேக்கா அக்காதான் அழுறாங்க...' என்ன விஷயம்?' கோயில் மண்டபத்திலிருந்த ராகேல் சொன்னாள்.

அதற்குள் ரெபேக்காள் மயங்கி விழுந்தாள். குருவானவர் இறுதி பிரார்த்தனையை சுருக்கமாகச் சொல்லி ஆராதனையை சட்டென்று முடித்தார்.

ஆலயக்கூட்டம் அழுகுரல் வந்த இடத்தைச் சுற்றிச் சூழ்ந்தது.

சோடா கொடுத்து முகத்தைக் கழுவி விசிறி, சற்று ஓய்வு கொடுத்தனர்.

' கோயிலில் பக்தி பரவசத்தோடு ஜெபித்துக்கொண்டே இருப்பீங்களே.. இன்னிக்கி என்ன நடந்தது?' பாதிரியார் பரிவோடு கேட்டார்.

'சிறைப்பட்டோருக்காக நீங்க ஜெபிக்கச் சொன்னபோது என்னால தாங்க முடியல்ல ஐயா...' ரெபேக்காள் திக்கித்திணறி வேதனை நெஞ்சை அடைக்கச் சொன்னாள்.

'அக்காவோட் தம்பி ஒரு வாத்தியார். ரொம்ப நல்ல பையன். அவரை கம்யூனிஸ்ட்டுன்னு புடிச்சி ஜெயிலுக்குக் கொண்டு போய்ட்டாங்க. அரசாங்கத்துக்கு விரோதமா கொலை, கொள்ளை என்று பல கேஸ்களில் சேத்திருக்காங்களாம். அது புரூவ் ஆனா மரண தண்டனை கிடைச்சாலும் கிடைக்கும் என்று ஆர்விமில்லில் வேலைபார்க்கும் ஆல்பர்ட் சொல்லிவிட்டுப் போறான். அதக்கேட்டுக்கிட்டிருந்த ரெபேக்கா அழுதுகிட்டேதான் கோயிலுக்கு வந்தாங்க' என்று பூரணக்கா விரிவாகச் சொன்னாள்.

'ஐயோ... நம்ம கோயில்ல கூட அந்த வாத்தியார் தம்பி பிரசங்கம் பண்ணியிருக்கே... 'தரித்திரர்களுக்கு சுவிசேஷம்' என்ற பைபிள் வசனத்தின் பேரில் முன்பு ஒருமுறை கருத்தாழமுள்ள செய்தி

கொடுத்தாரே.. நல்லவங்களுக்கு காலமில்லை' என்று பெரியவர் கோயில் பிள்ளை மிகுந்த கரிசனையோடு கண்கலங்கச் சொன்னார்.

'வாத்தியார் தாம் வேலை பார்த்த ஊரை நல்லா முன்னுக்குக் கொண்டு வந்தாரு. சாதி சமய வேறுபாடின்றி நீதி நியாயங்களைச் செய்தாரு. அது அந்த ஊரு முதலாளிக்குப் புடிக்கல. சாராய நெடியில் மிதந்த பண்ணையாரு பணத்தைக்கொட்டி வாத்தியாரை எப்படியும் கம்பி எண்ண வச்சிரணும்ன்னு ஒத்தக்கால்ல நின்னாரு... இப்போ அவர் நிலை கேவலம்' என்று முத்துநகர் உப்பளத் தொழிலாளி பால்ராஜ் சொன்னான்.

கூட்டத்தை இடித்துக்கொண்டு வந்த அன்னாள் அக்கா, 'நம்ம கோயில்ல எல்லா ஞாயித்துக்கிழமையும் சிறைப்பட்டோருக்காக ஜெபிப்பது வழக்கம். அப்போல்லாம் அக்கா காதில விழல்ல... அவங்க தம்பி ஜெயிலுக்குப்போன உடனே மாத்திரம்... அவ்வளவு வேதனையா...' என்று கேலியாகப் பேசி, 'அழாதீங்க, நம்ப உபவாச ஜெபக்கூட்டத்தில் உங்க தம்பி பேரச் சொல்லி ஜெபம் பண்ணுவோம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்' என்று கைபிடித்துத் தூக்கவும் ரோட்டிலிருந்து விழுந்தடித்து ஓடிவந்த ஆபிரகாம்,

'பண்ணையாருக்குப் பயித்தியம் முத்தி கால்விலங்கு கைவிலங்கோடு ரோட்ல திரியறார். நான் பாத்தேன். வாயில கேவலமான கெட்ட வார்த்தைதான் வருது. அத்தானோடு சேர்ந்து நூறுபேர் பேரில் பெரிய சதிவழக்கு போடப்போறாங்களாம். வக்கீல் சொன்னார்' என்று மூச்சி இறைக்க இறைக்கச் சொன்னான்.

அங்குவந்த பால்பாண்டி வாத்தியார் 'அறுப்புக்காலம் வரை பொறுத்திருப்போம், அப்பொழுது பதர்கள் சுட்டெரிக்கப்படும். அறுவடை நாளே புரட்சிநாள். புரட்சி ஓங்குக' என்று கைமுஸ்டி காட்டினார்.

'வாத்தியாரை விடுதலை செய்' என்று விடலை பயல்கள் கத்தினார்கள்.

கோயில் பாடகர் வேதநாயகம் வேதாந்தமாகப் பேசினார்.

'அக்கா அழாதீங்க. இழுத்து மூடும் இருட்டை விரட்ட ஒரு தீக்குச்சி போதும். அநியாய அக்ரமங்களை விரட்ட ஓர் உண்மை உள்ளம்போதும். போங்க, எல்லாரும் வீட்டுக்குப் போங்க. நல்லவங்க ஜெயிலுக்குப் போனாத்தாம் நாட்ல நல்லது நடக்கும். நம்மவங்க அரசியலுக்குள்ள புகுந்தால்தான் யோசேப்பு, தானியேல் மாதிரி நீதிமான்கள் நாட்டை ஆள்வார்கள்' என்றார்.

1950 ஏப்ரல் இறுதி வாரத்தில், தூத்துக்குடி அண்மை கோரைக்குளம் கிராமம் முழுவதும் இதே பேச்சாயிருந்தது. கோயில் வெறிச்சோடிக் கிடந்தது.

11

வேல்சாமித்தேவரின் கண்கள் கலங்கி இருந்தன. உறுதி குலையாத அவரது உள்ளத்தில் ஈராயிரம் ஈட்டிகள் பாய்ந்தன. மக்களுக்காக சதா இயங்கிக் கொண்டிருக்கும் அவரது கால்களும் கைகளும் ஸ்தம்பித்து நின்றன.

ஆம், எங்கோ தொடர்புக் கண்ணி அறுந்துவிட்டது. யாரோ கைதாகி உள்ளார்கள். போலீஸ் நாய்கள் என் இருப்பிடத்தை மோப்பம் பிடிக்கக்கூடும்.

போலீஸ் பிடிவாரண்டிற்குத் தப்பித் திரியும் தலைமறைவுப் புரட்சிவாதி பூதலப்பூரம் வேல்சாமித்தேவர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

'இந்திய முதல் பொதுத்தேர்தல் வரப்போகிறது. அதற்குள் பொது உடைமைத் தோழர்களைக் கொத்தி எடுத்து கொக்கிரகுளம் சிறையில் நிரப்பிவிட வேண்டும். இன்னும் ஒரு சிலரை உயிர்போகாத நிலையில் அடித்து இம்சித்து அப்ரூவர்களாக்கி கருவறுத்துவிடலாம், இதுதான் அரசின் திட்டம்.

ஒரு கம்யூனிஸ்ட் கைதானால் உடனே தலைமறைவுத் தோழர்கள் தங்கள் இருப்பிடங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். கைதானவர்கள் இரகசியங்களை எளிதில் சொல்லமாட்டார்கள். ஒருவேளை அடிதாங்காமல் உண்மையை கக்கிவிட்டால்...

தேவர் உடனே இடமாற்றம் செய்தார். மற்றவர்களும் அப்படியே இடம் பெயர்ந்தனர்.

மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்குமோ? மார்க்சீயவாதியா, கொக்கா?'

தேவர் இப்பொழுது போயிருக்கும் வீடு விவசாய மக்களும், பீடித்தொழிலாளர்களும் நிறைந்த இடம். அம்மக்கள் தேவரைப் பத்து ஆண்டுகளாக அறிவர். சமுத்திரத்தில் வாழும் மீன்கள்போன்று சுறுசுறுப்பாகத் துள்ளிச் செயல்பட்டார். கடலில் வாழும் இந்த வரால் மீனை போலீஸ்காரர்கள் குறிவைத்துச் சுடட்டுமே பார்க்கலாம். கடந்த சில தினங்களாகப் போலீஸ் லாரிகள் சர் சர் என்று ரோந்து சுற்றித்திரிகின்றன. காந்தி கணக்கில் பெட்ரோல், பிரியாணிகளை செலவு எழுதி கஜானா காலியாகிறது. வரிப் பணத்தில் பெரும் பகுதியைக் காவல்துறை பிடுங்கிக் கொள்கிறது.

கோயில்பட்டி கோடங்கால் குருசாமி கைதாகி உள்ளார் என்று தெரிகிறது. அதனால்தான் தொடர்பு அறுந்துள்ளது. அவர் வாயிலிருந்து வார்த்தைகளை போலீசால் இலேசில் பிடுங்க முடியாது. ஆனால் இன்று இன்னொரு விபரீதம் நிகழ்ந்துவிட்டது.

பீடித்தொழிலாளர்களின் கூலி உயர்வு, மருத்துவ வசதி பற்றி முக்கிய தொழிலாளர்களை சந்தித்துவிட்டு மறைவிடம் திரும்பும் பொழுது இவ்வூர் நிலப்பிரபுவின் அடிவருடியான ஒரு துரோகி பார்த்துவிட்டான்.

போலீசில் தெரிவிக்கும் அளவிற்கு அவனுக்குத் துணிவுகிடையாது. நிலப்பிரபு இன்று ஊரில் இல்லை. எப்படியும் நாளை பகலில் இடம் மாற்றியாக வேண்டும். அதில் இன்னொரு சிக்கல் உள்ளது. நாளை விடியவும் இரு இரகசிய சிட்கள் (தபால்கள்-குரியர்) வந்து விழும். அது போலீஸ் கையில் சிக்கிவிட்டால் மாகாண கமிட்டிக்கே ஆபத்து. எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாகிவிடும். அதைவிட நான் மட்டும் மாட்டிக்கொண்டால் பரவாயில்லை.

பீடியின் அடிக்கட்டை புகைந்து உதட்டைப் பொசுக்கும்வரை சிந்தித்துக் கொண்டே இருந்தார்.

பீடித்தொழில் தோழர்களுக்குச் செய்தி தெரிந்துவிட்டது. விடியுமுன் தங்கள் தலைவரை கடத்திவிட முனைந்தார்கள். தேவர் அவசர அவசரமாக டார்ச்லைட் ஒளியில் இரகசியக் கடிதங்களை எழுதி அனுப்பினார்.

தேவர் மாணவப்பருவத்திலேயே சைமன் கமிஷனை எதிர்த்து பகிஷ்கார இயக்கத்தில் கலந்துகொண்டு அபராதம் கட்டியவர். 1933 முதல் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரப் பங்காற்றினார். மாசார்பட்டி பிர்க்காவின் காங்கிரஸ் தலைவரானார். அக்காலத்தில் எட்டையபுரம் ஜமீன்தாரின் வரிக் கொடுமைகளை எதிர்த்து - வரிகொடா இயக்கம் நடத்தி ஜமீனைப் பணியவைத்தார்.

1942 ஆகஸ்ட் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக விசாரணையின்றி பாதுகாப்புக் கைதியாக சிறையில் அடைபட்டார்.

தஞ்சாவூர் ஸ்பெஷல் ஜெயிலில் தமிழ், ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்பு கைதிகள் அனைவரும் இருந்தனர். அவர்களோடு தேவரும் இருந்தார். அவர்களின் தொடர்பால் கம்யூனிஸ்ட் கொள்கைக்குள் ஈர்க்கப்பட்டார். 1944 டிசம்பர் 15இல் விடுதலையானார்.

விடுதலையாகி வந்ததும் தன் வட்டாரத்தில் விவசாய சங்கத்தைக்கட்டி வளர்த்தார். மாகாண விவசாய சங்கத் தலைவராகவும் பணி செய்தார். அம்பை தாலுகா சிவகிரி வட்டார விவசாய நலன்களுக்காக ஜமீன்களையும், நிலச்சுவான்களையும் எதிர்த்து விவசாயிகளின சரிவாரம், கூலி உயர்வு தண்டத்தீர்வை ஒழிப்பு முதலிய கோரிக்கைகளுக்காகத் தலைமை தாங்கி போராட்டங்களை நடத்தினார்.

அரசின் கண்களில் விரலை விட்டு ஆட்டினார். அரசு சும்மா விடுமா?

தேவர் புதிய இருப்பிடத்திற்கு வந்துவிட்டார். அப்பொழுது அதிகாலை நான்கு மணி. சிறிது கண்ணயர நினைத்தார்.

அதற்குள் இருளைக் கிழிக்கும் வெளிச்சம். போலீஸ் எம வாகனம். ஹாரன் கொடாமல் மெதுவாக உறுமியவாறு வருகிறது. காட்டிக் கொடுக்கும் பணியில் நிலச்சுவான்தார் தீவிரமாகச் செயல்பட்டிருக்கிறார்.

தேவர் கணப்பொழுதில் இரகசிய தஸ்தாவேஜ்களை சுட்டுப் பொசுக்கினார். ஒரு சிறு துணிப்பையினுள் அவரது உடைமைகள் இருந்தன. அது பற்றி கவலைப்படவில்லை. இப்பொழுது எப்படித் தப்புவது என்பதுதான் அவரது கவலையாக இருந்தது.

விரித்துப்படுக்க அந்தப் பையினுள் ஒரு கிழிந்த சேலை இருந்தது. சேலையை வரிந்து கட்டி வேஷமாற்றம் செய்து கொண்டார்.

தலைமறைவு வாழ்க்கை உடலை வெகுவாகப் பாதித்துவிட்டது. போலீசின் மிருகவெறிக்கு இரையாக உடலில் வலு இல்லை.

புலன் விசாரணையின்போது தூத்துக்குடி தோழர் பொன்னுவின் மீசை மயிற்றை ஒவ்வொன்றாகப் பிடுங்கிய செய்தியும், உப்பளத் தொழிலாளி காசியை சுடுமணலில் உருட்டியதையும் அவர் அறிவார்.

போலீஸ் லாரி நேராக அவர் தங்கி இருந்த மாடிவீட்டு முன்னால் வந்து நின்றது. மாடியில் ஏறி அடுத்த வீட்டு மொட்டை மாடிக்குத்தாவினார். படுத்தும் நெளிந்தும் ஏழு வீடுகள் தாண்டினார்.

போலீஸ் அவர் தங்கி இருந்த மாடியைச் சுற்றி வளைத்து வேலியமைத்து நின்றனர்.

'இன்று அவன் தப்ப முடியாது' என்றார் ஏட்டு.

ஒரு கம்யூனிஸ்ட்டை பிடிப்பதென்றால் எளிதான காரியமா? தங்கள் துப்பாக்கிகளில் தோட்டாக்களைப் போட்டுச் சரி செய்தனர். தங்கள் உடைகளை நிமிர்த்தி இறுக்கிக் கொண்டனர்.

அதற்குள் தேவர் மூன்று தெருக்களைக் கடந்து தெரிந்த ஒரு வீட்டின் குளியல் அறையினுள் நுழைந்து கொண்டார். அங்கு சிறுநீர் கழிக்க வந்த பீடி சுற்றும் தொழிலாளியிடம் காரியத்தைக் கூறிவிட்டார்.

இனி அவருக்குக் தான் கைதாவதில் கவலை இல்லை. மாடிவீட்டைச் சுற்றி போலீஸ் டமீல், டமீல் என்று ஆகாயத்தை நோக்கி வெத்து வேட்டுகளைக் கிளப்பினர். தேவரிடம் துப்பாக்கியும், வெடிகுண்டுகளும் இருக்கும் என்ற பயம் அவர்களுக்கு. திடீரென்று மாடிக்கு ஏறபயம். யாருக்கும் சாகச் சம்மதம் கிடையாது.

நாய் வாழ பூனை தாலி அறுக்குமா?

ஏட்டு தலைமையில் ஏழுபேர் உயிரைப் பிடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள். மாடி ஏறித்துழாவினார்கள். யாரும் இல்லை. பெருத்த ஏமாற்றம்.

முந்திய ஏமாற்றுக்களைவிட இது சிறப்பானது. 'ஊரையே தீவச்சி பொசுக்குவோம்' என்றார் எஸ்.ஐ. ஆனால் தெற்குத்தெருவில் மட்டும் ஒரு வீட்டின் முன்னால் பெண்கள் கூட்டமாக நின்று கலகலவென்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

'ஏய், பொம்பளைகளா, என்ன கூட்டம்?' போலீஸ் உருட்டல். பதினைஞ்சி வருடத்திற்குப் பிறகு அபூர்வமா ஆம்பளப்புள்ள பிறந்திருக்கு. அஞ்சி நாளாச்சி. இன்னிக்கு அக்காவுக்குத் தண்ணீவிடணும்... ஏ பிராட்டியக்கா வெத்தலைபாக்கு, போலீஸ் ஐயாமாருக்குக் கொடுப்போம்".

'அங்க குளியலறைக்குள் என்னளா கூட்டம்?' 'அதாம் சொன்னமே. பெருமாள் மாமா மனைவிக்கு தவமிருந்து ஆம்பளப்பிள்ளை பொறந்திருக்கு. இன்னிக்கு குளிப்பாட்டும்போது மயங்கி விழுந்துட்டா. ஐயையோ, பச்சை உடம்பு, என்னாகுமோ... எக்கோய் கீழூர் பண்டுவர கூட்டிவர ஆள் அனுப்பு'

பனைமீது அணிலை ஏறவிட்ட நாய்போல போலீஸ் விரக்தியுடன் விழித்தது.

மக்கள் இம்முறையும் தங்கள் தலைவனைத் தப்பித்து விட்டார்கள். இப்படி போலீசுக்கு டிமிக்கி கொடுத்த சம்பவம் நடந்து ஐந்து நாளாயிற்று.

சற்றும் சுயநலமின்றி ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காகப் பாடுபடும் பொதுமைத் தோழர்களை நினைத்து வாத்தியார் பெருமையினால் தோள் உயர்த்தி 'புனிதப்புரட்சி எழுக! ஆன்மீகக் கம்யூனிசம் ஓங்குக' என்று ஆர்ப்பரித்தார்.

அப்பொழுது அங்கு வந்த வார்டர் துரைராஜ் 'பூதலப்புரம் வேல்சாமியைக் கைது செய்து கொண்டுவந்திருக்காங்க'. காலை நொண்டி நொண்டி நடக்காரு. செம அடி கொடுத்திருப்பாங்க போல' என்று சொல்லிச் சென்றார்.

தோழர்களுக்குள் பெரும் கலக்கம் எழுந்தது. வாத்தியார் சிறைக்கம்பிகளைப் பிடித்தவாறு நிலைகுலைந்து நின்றார்.

12

பத்தொன்பதாம் எண் அறை. எட்டுப் பேர். ஒரே கலகலப்பாயிருந்தது. வார்டர் துரைராஜ் வந்து 'கடக், கடக்' என்று சிறைக்கதவுகளைப் பூட்டினார்.

முத்து மிகுந்த கவலையோடு,

'சிறைக்கதவுகள் மூடியேதான் இருக்குமா?..' என்றான். அவன் நண்பன் மோகன் 'பயப்படாதே, சவப்பெட்டிக் கடைகள் திறந்தேதான் இருக்கின்றன' என்றான்.

வாத்தியாரும் சீனிவாசனும் சிரித்தார்கள். வாத்தியார் சொன்னார் :

'வே, சீனி! நான் வேணும்ன்னுதான் இங்கே வந்தேன். மோகனும் முத்துவும் இரட்டையர்கள். இரண்டு பேரும் எதிரும் புதிருமாப் பேசறது ஒரே ஜாலியா இருக்கும். பாலைவனத்துக்குள்ளும் ஒரு சோலைவனம் இருக்கு. இரண்டு பேரும் சந்தேகக் கேஸ்ல உள்ள இருக்காங்க'.

சீனிவாசன் மூக்கைப்பிடித்துக் கொண்டு, 'எட்டுப்பேர் இதுல எப்படிப்படுக்க? இதென்ன ஆட்டுப்பட்டியா, இது அநியாயம்' என்றார். 'நண்பர்களே' என்று ஆரம்பித்த வாத்தியார் தொடர்ந்து பேசினார் :

'இந்த இரவிற்கு நான் ஒரு நிகழ்ச்சி தயார் பண்ணி இருக்கிறேன். முதல்ல, புதிதாக வந்திருக்கிற எங்க இரு தோழர்களை அறிமுகம்

செய்வேன். அப்புறமா நம்ம இரட்டையர்களின் வாய்மொழி. நாங்கள் வாய்விட்டுச் சிரிப்பதில் எங்கள் நோய்விட்டோட வேண்டும். இறுதியாக தீரனுக்கும் கொம்பனுக்கும் தமிழ்ப் பயிற்சி. ஏற்கனவே எழுதக்கற்று நிறையப் படிச்சிட்டாங்க. இன்று கேள்விகள் கேட்பேன். சரியா?"

மடித்து வைத்திருக்கும் தங்கள் சாக்குப் பாயின் மீது வட்டமாக அமர்ந்தார்கள்.

அந்த வழியாக வந்த வார்டர் 'இப்படியெல்லாம் செய்யக்கூடாது, ஜெய்லர் வந்தால் திட்டுவார்'

'ஜெய்லர் வந்தால் நாங்க பேசிக்கிறோம்' என்றார் சீனிவாசன். வார்டர் போய்விட்டார்.

'ஆடுகள் இருக்கிற இடத்தில் ஓநாய்கள் இருக்கத்தானே செய்யும்' என்றான் மோகன். 'ஜெய்ல் சூப்பிரண்டிலிருந்து வார்டர் வரை ஓநாய் கூட்டங்கள்தாம்' என்றான் முத்து.

முகத்தை அருவருப்பாக வைத்துக் கொண்டிருந்த சீனிவாசனுக்கு சற்று மகிழ்ச்சி ஏற்பட்டது.

'வே, ஜேக்கி! இந்த ஜெயிலுக்கு 'உம்ம வாத்தியாரா வச்சிரலாம்போல, எல்லா கைதிகளுக்கும் உம்ம தெரியுதே' என்றார் சீனி.

'சரி இப்போ, அறிமுகப்படலம். தோழர் கிருஷ்ணசாமி கொஞ்சம் எழும்பி நில்லுங்க' என்று வாத்தியார் சொல்லவும் அவர் எழுந்து வணக்கம் போட்டார்.

'இவர் கோயில்பட்டி தாலுகா, கோடங்கால் கிராமம். நியூஸ் ஏஜெண்ட் சிறுவயதிலேயே கிராம நற்பணியில் ஈடுபட்டுவிட்டார்'.

1940ல் காங்கிரஸில் சேர்ந்து கடுமையாக உழைத்தார். 1942ல் செயலர் ஆனார். அவர் பிறந்த ஊர்ல ஒரு ஆரம்பப் பள்ளிக் கூடம் கிடையாது. 1947ல் போராட்டம் நடத்தி ஒரு ஜில்லா போர்ட் பள்ளிக்கூடம் திறக்கச் செய்தார்.

1948 டிசம்பரில் சர்க்கார் விவசாயிகளுக்குச் சலுகைகாட்டி, ஏழை விவசாயிகளை ஏமாற்றினார்கள். அதை எதிர்த்து மக்களை திரட்டினார். போராடினார். இவரோடு சேர்ந்து ஐவர் பேரில் கேஸ் போட்டாங்க. தலைமறைவானார். இவருடைய வீட்டை அடித்து நொறுக்கினாங்க. இவருடைய தாயாரின் நகைகளை பறிமுதல் செய்தான்க. இப்போ சதி வழக்கில் இருக்கிறார். மலையாளம் தெரியும். வருங்காலத்தில் மலையாள இலக்கியங்களைத் தமிழுக்குத் தருவார். இவருக்கு வயது 28தான் ஆகுது. இன்னும் நிறைய இருக்கு. இப்போ போதும்.

அடுத்து 'எசக்கி ஆசாரி' எனவும் அவர் எழுந்து கும்பிடு போட்டார்.

சந்தனக் கட்டை தேய்ந்தால் பெட்டிக்கு அடியில் வைப்பாங்க. அது மணத்துக்கிட்டே இருக்கும் என்றான் மோகன் - படாரென்று முத்து எழும்பி 'துடைப்பக்கட்டை தேய்ந்தால் குப்பையிலே போடுவாங்க, நீங்கள்ளாம் சந்தனக்கட்டைகள், என்றைக்கும் மணம்தான்' என்று சொல்லி அமர்ந்தான். வாத்தியார் தொடர்ந்தார்.

இந்த எசக்கி ஆசாரி இருக்காறே இவர் ஒரு வைரக்கல், ஆள்தான் குட்டை, அவர் வேலைகள் மிகப் பயங்கரம்.

அம்பை தாலுகா மன்னார் கோயில் அவரது ஊர். கொல்வேலையை விட்டுட்டு 1942லிருந்து சிங்கை மில்லில் ஸ்பின்னிங் தொழிலாளி ஆனார். செங்கொடி தொழிற்சங்கத்தில் தீவிர ஊழியர்.

1949 ஜில்லா போர்ட் தேர்தல் காலத்தில் காங்கிரஸ் கூட்டத்தில் பாம்போட்டதாகக் குற்றம்சாட்டி ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்று நையப்புடைத்தார்கள். சித்ரவதையின் உச்சக்கட்டத்தில் இவரது உயிர் போயிற்று. மூச்சு அடங்கிவிட்டது என்று கண்ட போலீசார் போட்டுட்டு ஓடிட்டாங்க. கேஸ் போடாம விட்டுட்டாங்க. பெற்றோர் வந்து மார்பிலடித்து அழுது புரண்டு வீட்டுக்குத் தூக்கிட்டுப் போனாங்க. உயிர் வந்துவிட்டது. செத்தவர் பிழைச்சிட்டாரு. உயிரைக் கொடுத்தும் கொடியைக் காப்பாற்றும் உத்தம தோழர் - சிங்கையில் நடந்த அத்தனை அடக்குமுறைகளிலும் போலீசின் முதல் குறி இவர்தாம். அடி பட்டுப்பட்டு வைரம் பாஞ்ச உடல்.

1950 பிப்ரவரியில் கைது செய்யப்பட்டார். இவர்மீது கொலைக்குற்றம் உள்ளது. வயது 26. இவர் செய்த பாவம் நாட்டு மக்களுக்குப் பாடுபட்டார்.

பொற்காலம் இவருக்குப் புதஞ்சி கிடக்கு என்றான் மோகன். ‘அதைப் பிதுக்கி எடுக்கும் எதிர்காலம்’ என்றான் முத்து.

தோழர்கள் சிரித்தார்கள். வார்டர் மீண்டும் வந்து வட்டமாக இருக்காதீங்க. அரசியல் வகுப்பு நடத்துற மாதிரி தோணுது. சாதாரணமா பேசிட்டு இருக்கிற மாதிரி இருங்க’’ என்று கடிந்து கொண்டார்.

‘வேலை நிறுத்தங்கள் விஷமத்தனமானது’ என்றான் முத்து. ‘ஏன்னா இயந்திரங்கள் மழுங்கிப்போகும்’ என்றான் மோகன். ‘யந்திரங்கள் பழுதானால் புதுப்பித்துக் கொள்ளலாம். மனிதயந்திரம் பழுதானால் யார் ஈடுகொடுப்பது?’ என்று கேட்டார் கிருஷ்ணசாமி. அடுத்த அறையிலிருந்த பாரதி, ‘ஏய், வாத்தியான், என்னையும் அங்க கூட்டிக்க’ என்றார்.

‘நீங்க ஆரம்பிங்க’ என்று வாத்தியார் முத்துவைப் பார்த்துச் சொன்னார்.

‘பேச்சுவாக்கில்தான் கருத்துக்கள் உதயமாகுமே தவிர கச்சேரி மாதிரி நினைச்ச உடனே பாடமுடியாது’ என்றான் மோகன்.

‘கந்தலை தச்சி நூலை வீணாக்கின முத்து, நீ முதல்ல ஏதாவது சொல்.’

‘கிழவியை முத்தி நாளை வீணாக்கின மோகன் நீ முதல்ல ஆரம்பி’.

'பணக்காரன் நினைத்தபோதெல்லாம் தின்பான்'

'ஏழை கிடைத்தபோதெல்லாம் உண்பான்'.

'மனித குலத்தின் ஆரம்பம் ஏதேன் தோட்டம்'.

'மனித குலத்தின் முடிவு கல்லறைத் தோட்டம்'.

'சிறு குற்றம் செய்தவர்களுக்கு சிறைவாசம்'.

'பெரிய குற்றம் செய்தவர்களுக்கு பங்களாவாசம்'

'ஜெயிலைப் பார்வையிட கலெக்டர் துரை வருகிறார். அமைதி, அமைதி'

என்று இரு வார்டர்கள் அலறினார்கள்.

அதற்குள் சர்க், சர்க் என்ற பூட்ஸ் சத்தம் கேட்டது.

மாயாண்டி பாரதி கம்பிக்கு வெளியே கையை நீட்டினார்.

எடுபிடிகள் முறுமுறுத்தன.

கலெக்டர் 'என்ன?' என்றார்.

'நான் காங்கிரஸ் கால தியாகி. இப்போ கம்யூனிஸ்ட், படிக்க தினப்பத்திரிகை வேணும்'.

தலையை ஆட்டிச் சென்றார்.

தீரனும், கொம்பனும் பகல் வேளைகளில் வாத்தியாரிடம் ஓயாது கேட்டு எழுதப்படிக்க கற்றார்கள். பின்பு வாய் மொழிக் கல்வி நிறையப் பெற்றார்கள்.

கேள்வி நேரம்.

'தீரன், 'பிணை' பொருள் சொல்லு'.

'தெப்பம்'

'கொம்பன், 'வேய்' பொருள் கூறு'.

'மூங்கில்'.

பல வருடங்கள் தன் முகத்தை கண்ணாடியில் பாராதிருந்த மனிதன் யார்?

'மகாத்மா காந்தி' என்று இருவரும் சொன்னார்கள்.

'நன்றாகக் கற்றுள்ளீர்கள். அடுத்து சந்தி இலக்கணம் கற்றுத் தருவேன். நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாத ஒரு நபர் கூட இருக்கக் கூடாது. அப்போதுதான் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர் - ஆம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற பாரதி வாக்கு மெய்யாகும்' என்று வாத்தியார் கூறி முடியவும் மோகன் குறுக்கிட்டான்.

'வாத்தியார் ஐயா, எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்றிருந்தால் அந்த நாடு எப்படி உருப்படும்? அப்படி ஒரு சோஷலிஸ நாடு உதயமானால் அது அழிந்தே போகும். 'எல்லாரும் இந்நாட்டு உழைக்கும் மக்கள். ஆம் எல்லாரும் இந்நாட்டு உழைக்கும் மக்கள்' என்று பாட வேண்டும்' என்றான்.

வாத்தியார் மோகனை ஆச்சரியத்தோடு பார்த்தார்.

மாரிமுத்து வார்டர் யாரோ ஒரு கைதிக்கு புரோட்டா செட் கொண்டு போகிறது தொப்பிக்குள் இருந்து மணத்தது.

13

தாமிரவர்ணி ஆற்றுக்குள்ளிருந்து கிளி ஒன்று ‘கிக், கிக்’ என்றது. அது எங்களை மதுரைக்கு வழி அனுப்புவது போன்றிருந்தது. மைனாக்கள் ‘அக்கக்கா’ என்று கத்தியது எங்களுக்காக அழுதது போன்றிருந்தது.

மதுரை போகிறோம் என்றபோது ஆங்கு நீதி தவறாமல் ஆட்சிபுரிந்த பாண்டியன் நெடுஞ்செழியன் நினைவு எழுகிறது. அத்தகு நல்லாட்சியா இன்று நடைபெறுகிறது?

தூக்குத் தண்டனைக் கைதியாக மதுரை சிறையில் ‘கண்டம் செல்லில்’ துன்புறும் போலீஸ் பாலு நினைவிற்கு வருகிறார்.

மதுரை மத்திய சிறையில் ‘ஏ’ செல்லில் பாலுவின் தூக்குத்தண்டனையை எதிர்த்து உண்ணாவிரதமிருந்த தோழர்களைக் கொடுமையாக இம்சித்தார்கள். இருபது வயதுள்ள இளம் தோழர் ராமநாதனை இரவு எட்டு மணிக்கு அடித்து மிதித்துக் கொன்றார்கள் (20.3.1950) தோழர் கிருஷ்ணனைப் படுகாயப்படுத்தி நிர்வாணமாய் விட்டார்கள். குற்றுயிராய்க் கிடந்த தோழர் கருப்பையாவை, செத்துவிட்டதாகக் கருதி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு அவர் உயிர் துடிதுடித்துக் கதறியது. கால், கை, மண்டை உடைந்தோர் ஏராளம்.

சேத்தூர் நடராஜன் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் இரத்தம் கொட்டி ஆவி துடித்து மதுரை மத்திய சிறையில் இறந்தார் (20.4.1951 ‘விடுதலை இதழ்’) .

மதுரை பற்றிய இந்த நினைவுகள் வாத்தியாரின் மனதை அழுத்தியது. அனைத்துத் தோழர்களின் உள்ளங்களும் இறுகிப் பிழிந்தன.

தோழர்கள், மதுரை மத்தியசிறை வந்து சேர்ந்தார்கள். கைகளில் விலங்குகளோடு வந்தாலும், மதுரை நகரை அசைக்கப் போகும் மாவீரர்கள் போன்றே உள்ளே நுழைந்தார்கள்.

சிறையின் பிரதான ‘கேட்’ தன் அசுர வாயைத் திறந்து, மானுட உயிர்களை நொறுநொறுவென்று கடித்துத் துப்பியது போன்றிருந்தது.

நிர்வாணமாக விட்டு அடிக்கும் கொடுமை நீசத்தனமாக இருந்தது. இந்த காட்டுமிராண்டித்தனம் என்று ஒழியுமோ?

கீழும் மேலுமாக பல அறைகளைக் கொண்ட ரிமாண்ட் பிளாக்கில் தோழர்களை அடைத்தார்கள்.

ஒவ்வொரு அறையும் பன்னிரண்டடி நீளம், எட்டடி அகலம், மேலே ஒரு வென்றிலேட்டர் சன்னல், அதுமட்டும் இல்லாவிட்டால் மூச்சு முட்டிச்சாக

வேண்டியதுதான். சிமிண்ட் தரை, சுவர்கள் முழுவதும் மூட்டை இரத்தம். கிழிசலான ஒரு சாக்குப் பாய், கந்தலான கம்பளி, மூத்திரச்சட்டி, மலமிருக்கும் டப்பா, ஒரு குவளை... இவைகளே எங்கள் உடைமை.

அறைகள் அடைபட்டன. ஒன்பதாம் எண் அறையில் வாத்தியார், பாரதி உட்பட ஐவர் இருந்தார்கள். காய்ந்த கட்டிச் சோறு வயிற்றை உருட்டிப் புரட்டியது.

மாயாண்டி பாரதி சொன்னார். 'ராமநாதபுரம் சதி வழக்கில் கூத்தங்குடி சண்முகம் முக்கியத் தோழர். மதுரையிலிருந்த தேவகோட்டை கோர்ட்டுக்குப் போகும்போது, போலீசார் கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவி விசுவாசமிக்க விவசாயத் தோழர்கள் தங்கள் தலைவனைக் கடத்திக் கொண்டு போய்விட்டார்களாம். இது இரகசியச் செய்தி' என்றார்.

'இது நியாயமா பாரதி?... அதன்பிறகு போலீசாருக்கு எத்தனைபாடு? கடத்திக் கொண்டு போன விவசாயக் குடும்பங்களுக்கு எத்தனை வேதனை?' என்று வாத்தியார் கேட்கவும் செண்பகம் குறுக்கிட்டார்.

'ஆற்றின் அக்கரையில் எதிரிகளோடு போராட படை ஒன்று பாலத்தைக் கடந்து செல்கிறது. பாலத்தைக் கடந்ததும் படைத்தளபதி பாலத்தைக் தகர்த்து நொறுக்கிவிட்டான். ஏன்?

'தோற்றுப் போனால் பாலத்தின் வழியே பத்திரமாகத் திரும்பி வந்து விடலாம் என்ற மனப்பான்மை வீரர்களுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக. முட்டி மோதித்தான் முன்னேற வேண்டும். லட்சியம் என்பது ஒரு முரட்டுத்தனமான தத்துவம்தான்' என்றார் தம் நடுப்பல்லை அசைத்தவாறு.

'அப்படீன்னா போராட்டங்களே வேண்டாம் என்பது வாத்தியார் எண்ணமா?' மா.பா. கேட்டார். உடனே வாத்தியார், 'போராட்டங்கள் வேண்டும். போராயுதங்கள் தேவையா? யானையின் துதிக்கையில் எலும்புகளே கிடையாது. ஆயுதங்கள் இல்லாமல் பலசாலியாக விளங்க முடியும்'' என்றார். அடுத்த நிமிடம் 'இத்தரை யாத்திரையே, எக்காலம் போராட்டமே' என்ற கீர்த்தனைப் பாடலை ராகத்துடன் பாடினார்.

மீண்டும் தொடர்ந்து பேசினார்:

'1924 ஆம் ஆண்டில் கோட்டையம் மாவட்டத்திலுள்ள வைக்கம் கோயிலைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும் உயர் சாதியினர் மட்டும் உலாவரலாம். தாழ்த்தப்பட்டவர்கள் அந்தப் பக்கம் காலடி வைத்தால் தீட்டு. இது ஊர்க் கட்டுப்பாடு. இந்தக் கொடுமையைக் கேரள மக்கள் தலைவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. தமிழ்நாட்டில் உள்ள ஈ.வெ. ராமசாமி பெரியாரை அழைத்தார்கள்.

பெரியார் தலைமையில் சத்தியாகிரக போராட்டம் நடந்தது. பெரியாரைச் சிறையில் தள்ளி சித்ரவதை செய்தார்கள். மகாத்மாவின் தலையீட்டாலும், பெரியாரின் உறுதியாலும், வைக்கம் அனைத்து மக்களுக்கும் சொந்தமானது.

வாத்தியாருக்கு பழைய நினைவுகள் திரும்பின.

'வைக்கம் போராட்டத்திற்கு 22 ஆண்டுகளுக்குப் பிறகு பண்ணையூரில் மேல்சாதி மக்கள் வாழும் நடுத்தெரு வழியாக கீழ்சாதி மக்கள் தண்ணீர் எடுத்துவரக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்து. அந்தக் கொடுமையை எதிர்த்தேன்.

'தண்ணீர்க் குடத்தோடு ஊர்வலம் போனோம். எங்களுக்கு அடி, உதை, மிதி எல்லாம் கிடைத்தது. எதிர்த்தோம், ஆனால் ஆயுதங்களை எடுக்கவில்லை'.

'நம்ம வாத்தியாருக்கு தூக்குத் தண்டனை காத்திருக்கு, அப்போ அமைதியாக ஏற்கலாம்' என்று குத்தலாக இடித்தார் பாரதி.

'வைகை ஆற்றுக்குள் அமலைச் செடிகளும், காட்டுக்குள் நீர்க்கருவைகளும் செழித்து வளர்ந்து நிலத்தின் பூசாரம் கெடுவது போல் - தமிழகச் சிறைகளில் நிரம்பி வழியும் கைதிகளால் மனித சக்திகளின் வலுவிழந்து நாடு நலிகிறது...' என்று எண்ணி பெருமூச்சு விட்ட வாத்தியாரிடம் நண்பன் சீனிவாசன் சொன்னார் :

'மகத்தான நவம்பர் புரட்சியும், அதன் விளைவாக எழுந்த சோவியத் யூனியனும் உலகளாவிய செல்வாக்கைப் பெற்றுள்ளது. ஆனால் புதிய தலைமுறைகளின் பழகு முறைகளிலும், செயல்பாடுகளிலும் ஒரு ஓட்டை விழுந்திருக்கிறது. அது ஆன்மீகம் இல்லாத ஒரு 'தான்மீகம்' எனும் ஓட்டை. அதாவது தான்தோன்றித்தனம் வளர்ந்து வருகிறது. அது எங்கேபோய் முடியுமோ' என்று ஏங்கினார்.

வாத்தியார் தூக்கத்திற்கு ஆய்த்தமாக,

'சாவின் பள்ளத்தாக்கில்
அஞ்சவே மாட்டோம்
பாதாளத்தின் மேலும்
ஜெயங்கொள்வோம்' என்ற பக்திப் பாடலைப் பாடினார்.

'வே, ஜேக்கி, இது ஜெயிலாப் போச்சி, இல்லாட்டா உம்ம பாட்டைக் கேட்டு கழுதை வந்திருக்கும்' என்றார் தோழர் சீனிவாசன்.

'நான் குதிரைக்கு வாலாய் இருப்பதை விட, கழுதைக்கு தலையாயிருக்க விரும்புகிறேன்' என்று கூறிய வாத்தியார் கம்பளியை ஒரு மூலையில் எறிந்துவிட்டு துண்டை விரித்துப் படுத்தார். ஒரு பெருமூச்சு எழுந்தது. அதுதான் அவரது பிரார்த்தனை.

பேரிரைச்சலோடு கூடிய பெரியதோர் பிரார்த்தனையைவிட பலவீனமான ஒரு பெருமூச்சு இறைவனின் பார்வையில் பெரிதாயிருக்கும்.

14

நெல்லைச் சதிவழக்கு என்னும் ஒரு மாய வழக்கில் எங்களை மாட்டி எண்ணற்ற மலட்டு வாய்தாக்களில் இழுத்தடித்தார்கள். வருடக்கணக்காய் இருள் குகையினுள் அடைத்து வாய்தாவை ஒத்திப்போட்டார்கள். காற்றை விதைத்த இவர்கள் புயலைத்தானே அறுவடை செய்ய முடியும்.

நாளைக் காலை நாங்கள் நெல்லை-கொக்கிரகுளம் கோர்ட்டிற்கு வாய்தாவிற்குச் செல்ல வேண்டும்.

வாயதாவிற்குப் போய்வருவதென்றால் வேதனைதான். பிரயாணம் முழுவதும் இரு தோழர்களை பிணைத்து விலங்கு. ஒருநாளைக்கு பத்து அணாதான் படி. ஆயினும் சில நன்மைகளை நினைத்து வாய்தாக்களை ஆர்வத்துடன் எதிர்பார்ப்போம்.

வாய்தாவிற்கு வெளியே போனால் வானத்தைப் பார்த்து பரவசமடைவோம், ஆகாய விரிவுகளைக் கண்டு மகிழ்வோம். வேதனைகளோடு எங்களைப் பார்க்க வரும் உறவினர்களை ஆற்றித் தேற்றி அனுப்புவோம். சுதந்திரமாகக் காற்றைச் சுவாசிப்போம். எண்ணெய், சோப்பு முதலிய பொருள்கள் கிடைக்கும். ஊர்ச் செய்திகளையும் உலகச் செய்திகளையும் சற்றே தெரிந்து கொள்வோம். ஆங்காங்கு பொதுமக்களின் தரிசனம் கிடைக்கும். வாய்தாவின் வாய்ப்புகள் இவைகளே.

வாய்தாவிற்குப் போகும்போது எங்கள் கம்பீரமான முகத்தையே மக்களிடம் காட்ட விரும்புகிறோம். மக்களின் நல்வாழ்விற்காகப் போரிட்ட எங்களைச் சிறை வாழ்வு கறைப்படுத்தவில்லை என்பதை மக்கள் அறிய வேண்டுமல்லவா? எங்களைப் பேட்டி காணவரும் தோழர்களாயினும், பெற்றோர்களாயினும் யாரிடத்திலும் எங்கள் மலர்ந்த முகங்களைக் காட்ட நாங்கள் தயங்குவதே இல்லை.

'என் பெயரின் அருகே துயரத்தின் சாயல் நெருங்காமல் இருக்கட்டும்' என்றுதானே தூக்கில் இடப்பட்ட யூகோ தோழர் ஜூலிஸ் கற்றுத் தந்திருக்கிறார்.

நாளை கோர்ட்டிற்குப் போக வேண்டுமாதலால் எங்கள் எளிய உடைகளை இன்றே சோப்புப் போட்டு வைத்திருக்கிறோம்.

இனி முடி வெட்டிக் கொள்ள வேண்டும்.

கைதிகளுக்குள் முடிவெட்டத் தெரிந்தவர்கள் இருந்தால் பன்னருவாள் போன்ற பல்லாண்டு கத்தியை எடுத்துத் தருவார்கள். எங்களில் நெல்லைத் தோழர் வேலாயுதமும், முகவைத் தோழர் செல்லையாவும் சிகை சிங்காரிக்கும் தொழிலாளர்கள்.

பண்ணிமுடி போன்று குத்திட்டு நிற்கும் வாத்தியாரின் முடியை தோழர் வேலாயுதம் மட்டுமே பதம் பார்ப்பார்.

சவரத் தொழில் எனப்படும் முடிவெட்டும் தொழிலை இழிவாகப் பேசுவது பழிபாவம். யாராயிருந்தாலும் கைவருந்தி உழைப்பவர் எங்கள் தெய்வம். பாடுபட்டுழைக்கும் பாட்டாளி வர்க்கத்தைப் பார்த்து கவிபாரதி

'பெரும் புகழ் நுமக்கே இசைக்கின்றோம்

பிரம்ம தேவன் கலையிங்கு நீரே' என்று பாடுகிறாரே, அவரோடு சேர்ந்து நாங்களும் வாழ்த்துகிறோம்.

எங்கள் சதி வழக்குத் தோழர்களில் திறமை மிகுந்தவர்கள் நிரம்ப உண்டு.

'கை தேர்ந்த கடைசல் தொழிலாளி ராமையா

மைகொட்டி அழகாக எழுதும் ராமலிங்கம்.

டைப் அடிப்பதில் ஓவர் ஸ்பீட் காட்டும் சுடலை
பைப் ரிப்பேர் செய்யும் மெக்கானிக் சுப்பா ரெட்டியார்
குனிந்த குனியில் குறுக்கம் நிலம் வெட்டும் சிவனார்
குஸ்தியில் புகழ்பெற்ற பயில்வான் பரதேசியாப் பிள்ளை
மூளை உழைப்பில் முன்னேறிய நல்லசிவன்
முடிவெட்டுவதில் நிபுணரான வேலாயுதம்
கதை எழுதுவதில் சமர்த்தரான வாத்தியார்
சதையை துண்டுதுண்டாக்கியும் செங்கொடி காக்கும்
மாயாண்டி பாரதி (மாபா)
விவசாய நுணுக்கங்களை நன்கு அறிந்த தோழர் நல்லகண்ணு
எல்லோரும் எங்களுக்குச் சமமே.

எல்லோரும் எங்கள் அன்பிற்குரிய தோழர்களே.

வாத்தியாரின் வணங்காமுடியை வெட்டும் போதே வேலாயுதம் சொல்வார் 'இப்படி முரட்டு முடியை வெட்டும்போதுதான் தொழிலாளியின் திறமையைப் பார்க்க முடியும்' என்று சொல்லிக் கொண்டே கத்திப் பிடங்கினால் முடியை அமுக்கி சப்பென்று மடக்கிவிடுவார்.

வாத்தியார் முகம் பிரகாசமாக இலங்கும்.

சிறைச் சங்கு பகல் பன்னிரெண்டு மணியை அறிவிக்கப் பிலாக்கணம் வைத்தது. இரவிலேயே கட்டியடித்து விளிம்புகளெல்லாம் காய்ந்துவிட்ட சோளக்கட்டிப் பாடைகள் ரிமாண்ட் பிளாக்கை நோக்கி வந்தன.

அதற்குள் மேஸ்திரிக் கைதிகள் கிரிமினல் குற்றவாளிகளை ஐம்பது, ஐம்பது பேராகக் குளிக்க அனுப்புகிறார்கள். விழுந்தடித்து ஓடி தண்ணீர்த் தொட்டியைச் சாடி முழுமுண்டமாக நிற்கிறார்கள். ஆளுக்கு இரண்டு குவளை தண்ணீரை அள்ளிவிடுகிறார்கள். உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை ஓடித்திரியும் சேலை பேன்கள் விஷயம் புரியாமல் வெரள வெரள விழிக்கின்றன. அதற்குள் ஓர் கருப்புக்குல்லா அவர்களின் முரம்போன்ற முதுகில் பளார், பளார் என்று அடிக்கின்றான். துவட்டாமலே வேட்டியைக் கட்டிக் கொண்டு சோத்துக் கட்டியை வாங்க அலுமினியத் தட்டுகளை ஏந்தி நிற்கிறார்கள்.

அடுத்த ஐம்பதுபேர் அதே நிர்வாணக் குளிப்பு. மாற்று உடை இல்லாத பலர் வேறு எப்படிக் குளிக்க முடியும்? உடல் நனையக் குளிக்க வேண்டுமென்றால் மூன்று முழுப்பீடியாவது மூலதனமாக இருக்க வேண்டும். பீடியைப் பணமாக்குவது கருப்புக்குல்லாய்களுக்கு எளிது.

இன்னும் சிறிது நேரத்தில் தொட்டியில் தண்ணீர் வீணாகச் சிந்தி வழியும். இந்த நாட்டில் பற்றாக்குறை என்பதே பகிர்ந்து கொடுக்க மன மில்லாமைதான்.

கைதிகள் என்றால் அவ்வளவு கேவலம். எள்ளி நகையாடும் தோரணையில் 'கைதிப்புள்ளி' என்றுதான் சொல்வார்கள்.

ஆனால் கோலத்தின் ஆரம்பம் புள்ளிகளே. கோலம் என்றால் அழகு. உலகம் மானுட ஜீவிகளைக் கொண்டதால் அது அழகு பெறுகிறது. சிறையின்

பொது மகா ஜனங்கள் கைதிகள்தானே?

ஒரு கருப்புக் குல்லா கைதியை வாத்தியார் அன்புடன் அழைத்தார். அவன் வர மறுத்தான்.

'நான் ஒரு வாத்தியார், கொஞ்சம் வாயேன்'

வந்தவன் 'பீடி வேணுமாய்யா, காசு இருக்கா?' என்றான்

'இல்ல, உன்ட்ட ஒண்ணு கேக்கணும்'

'கேளு'

'உனக்கு என்ன கேஸ்?'

'கொலை கேஸ், இரட்டை ஆயுள் தண்டனை. ஒரு சொத்து தகராறில் இரண்டு கொலை செய்தேன். திட்டமிட்டுக் கொலை செய்ததால் இன்னொரு ஆயுள் தண்டனை. ஆக மொத்தம் மூணு. இவைகளை ஏக காலத்தில் அனுபவிக்கணும்னு உத்தரவு. கூட ஒரு கொலை செய்யாம வந்துட்டனேன்னு கவலை'.

நெஞ்சை நிமிர்த்திச் சொன்னான்.

வாத்தியாரின் இதயம் வேதனையால் விம்மியது.

'ஒவ்வொரு கைதிக்கும் பின்னால் ஒரு வீரகாவியம் அல்லது ஒரு நாவல் சரிதை உள்ளது. இவைகளையெல்லாம் எழுத வேண்டாமா....' என்று ஏங்கிய வாத்தியாருக்கு பிறிதொரு ஏக்கம் பிறந்தது.

'1945 முதல்' 'தினசரி மடல்' இதழில் அச்சேறிய அனைத்துக் கதைகளும், மற்றும் இதழ்களில் வெளியான கதைகளும் என்னைக் கைது செய்யும்போது போலீஸ் அள்ளிச் சென்று தொலைத்துவிட்டார்கள். கையெழுத்துப் பிரதிகளையும் கொண்டு சென்று நாசமாக்கிவிட்டார்கள். அனைத்தும் நூல் உருப்பெற்றிருந்தால் புதுமைப்பித்தனை அடுத்து வந்த கு.அழகிரிசாமி போன்றோரின் சிறுகதை எழுத்தாளர் வரிசையில் இடம் பிடித்திருப்பேனே... மணிக்கொடி இதழில் மணிமணியான கதைகளை எழுதி இருந்திருப்பேனே... என்று வயிறெறிந்த வாத்தியார் 'போனது போகட்டும்' என்று இரு கைகளையும் உயர்த்தி ஒரு வீரசபதமேற்றார்.

'நான் மரணவாயிலிருந்து தப்பி விடுதலை பெற்றால் நெல்லைச் சதிவழக்கை ஒரு பெரும் நாவலாக வடிப்பேன்' என்று முஷ்டி தூக்கி வலக்கையை உயர்த்தி சவால் விட்டார் வாத்தியார்.

15

திடீரென்று சிறையில் கெடுபிடிகள் ஏவிவிடப்பட்டன. எங்காவது புரட்சி வெடித்திருக்கும். ஒரே வழக்கில் உள்ளவர்களை ஒன்றாய் இருக்க அனுமதியுங்கள் என்று கேட்டதற்கு மாறாக அறைக்கு மூவர்

நால்வராக அடைத்தார்கள். கிரிமினல் விசாரணைக் கைதிகளையும் அவ்வப்போது அறைக்கு மூன்று நான்கு பேர்களைத் தள்ளிவிடுவார்கள். அவர்களையும் புது விருந்தாளிகளாக வரவேற்று கற்போம், கற்பிப்போம்.

தோழர்களுக்கு இடையேயுள்ள தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. ஆயினும் துடைப்பம் எங்களுக்கு துணை செய்தது.

கீழும் மேலுமான அறைகளில் அடைபட்டிருந்தோம். மேலும் கீழுமாக இரு துடைப்பங்கள் உண்டு. வார்டர்கள் குடித்துப் போடும் பீடிக்கட்டுகளின் தாள்களை, சிகரெட் பெட்டிகளின் அட்டைகளை 'லபக்' கென்று எடுத்துக் கொள்வோம்.

துண்டுத்தாள்களில் செய்தியை எழுதி பெருக்குமாற்றினுள் வைத்து அடுத்த அறைக்கு அனுப்பிவிடுவோம். 'பெருக்குமாறு' அடுத்தடுத்த அறைகளுக்குப் பிரயாணம் செய்யும்.

விளக்குமாற்றின் உத்தரவுப்படி ஒருநாள் சிறை அடக்குமுறையை எதிர்த்து உண்ணாவிரதமிருந்தோம்.

துளியளவு வெற்றி கிட்டியது. துடைப்பம் துள்ளியது. அன்றைய லாக்கப், அறைக்கு இரண்டிரண்டு தோழர்கள், மற்றும் மூன்று கைதிகள்.

அன்று இரவு வாத்தியாரும் தோழர் அழகுமுத்தும் ஒன்றாய் இருந்தார்கள்.

அழகுமுத்து அம்பைத் தாலுகா, மன்னார் குடித்தோழர். ஏழைக்கூலி விவசாயி. சதிவழக்கு நாடகத்தில் கொலைக் குற்றவாளி. விவசாயி வர்க்கப் போராட்டங்களில் முன்னணி வீரர். வறுமைக் கொடுமையின் காரணமாக பள்ளியில் ஒதுங்கவில்லை. படிப்பு வாசனை கிடையாது. அவருக்குக் கற்றுக் கொடுப்பது வாத்தியாரின் கடமையாயிற்று.

ஆனால் எப்படிப் படித்துக் கொடுப்பது. எவ்வித சாதனமும் கிடையாதே. 'சிறை என்பது படிக்கவும் ஓய்வு எடுக்கவுமான ஓர் இடம்' என்று நேரு எழுதி இருக்கிறார். அந்த அனுபவம் எங்களுக்கு இல்லை. வெள்ளையன் காலத்தில் கைதிகளை மதித்திருந்த அளவு மரியாதை இந்தியன் காலத்தில் இல்லாமல் போயிற்றே. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்தில் நேரு, பரிலி, நைதி, டேராடுன் என்று மூன்று சிறைகளில் மூன்று ஆண்டுகள், அலைக்கழிக்கப்பட்டார். அதுபோதுதான் நேரு தம் பதிமூன்று வயது சிறுமி இந்திராவிற்கு எழுதிய கடிதங்களே 'உலக சரித்திரம்' என்ற நூலாகப் பரிணமித்தது. அன்றிருந்த படிக்கவும் எழுதவுமான சுதந்திரம் - சுதந்திர இந்தியாவில் இல்லாமல் போயிற்றே.

அழகுமுத்துவிடமும், வாத்தியாரிடமும் ஒரு சட்டையும், வேட்டியும் வைத்துக் கொள்ள ஆளுக்கொரு சாக்குப்பை இருந்தது. அதன் ஒரு பக்கத்தில் அ, ஆ, இ, ஈ என்ற பன்னிரு உயிர் எழுத்துக்களும், ஆய்த எழுத்தும் இருந்தன. பையின் மறுபக்கம் ஒரு மளிகைக் கடை முதலாளியின் முகவரி விளம்பரம் இருந்தது.

அழகுமுத்து 'அ' போடக் கற்றுக்கொள்ளும்போதே 'ஓ' போடத் தலைப்பட்டார். வெகு துரிதமாகக் கற்றுக் கொண்டார். கைதிகளின் கைப்பைகள் அவருக்குப் பாடப்புத்தகங்களாயின.

ஒருநாள் நண்பகலில் அழகுமுத்து லாக்கப்பினுள் புன்முறுவலுடன்

நுழைந்தார். அவரது உயர்ந்த நெடிய தோற்றத்தை நிமிர்ந்து பார்த்த வாத்தியார் 'கையில் என்ன?' என்றார். முத்துப்பல் காட்டி நகைத்த அழகுமுத்து இரு கைகளையும் விரித்தார்.

கைநிறைய பொடிப்பொடிக் கற்கள். சாப்பாட்டுத் தட்டுகளிலிருந்து எடுத்துப் போட்ட கற்களைக் கூட்டி அள்ளிக் கொண்டு வந்திருந்தார்.

'ஏன்?' என்று கேட்ட வாத்தியாரிடம் எழுதிப் படிக்க என்றார். கற்றுக் கொள்வதில் அவருக்கிருந்த தாகத்தைக் கண்ட வாத்தியார் களிநடம் புரிந்தார்.

சிறையில் இரவுப்பொழுது மிகவும் உபயோகமாகக் கழிந்தது.

பீடிக்கட்டுத்தாள் ஒன்றை எடுத்துவந்த அழகுமுத்து, எழுத்துக் கூட்டாமலே 'ராம்சேட் பீடி, முக்கூடல்' என்று அதன் வாசகத்தைப் படித்துக் காட்டினார். வாத்தியாருக்கு இருந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

வரகவி பாரதி அழகாகச் சொன்னார்

'வணிகமும் பொருளும் பிதற்றுவார்
வாழுநாட்டில் பொருள் கெடல் கேட்டிலார்''

பாட்டாளி வர்க்க சக்திகளைப் புரிந்து கொள்ளாத பட்டதாரிகளால் நாட்டுக்கு என்ன லாபம்? ஆனால் அழகுமுத்து பள்ளியில் படியாவிட்டாலும் வாழுநாட்டில் பொருள் கெடல் தெரிந்து வர்க்கப் போராட்டங்களில் புடம் போட்டு எடுக்கப்பட்ட தோழர். இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் நேசிக்கிறார். நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக நிமிர்ந்து நின்று போராடுகிறார். இதைவிட இவருக்கு வேறு என்ன சர்டிபிகேட் வேண்டும்.

அவர் போன்ற தோழர்களுக்குக் கல்வி கற்பிப்பதில் தோழர்கள் யாரும் சளைக்கவில்லை. இப்படியே ஒவ்வொரு செல்களிலும் ஆங்கிலம், இந்தி, மலையாளம் ஆகிய மொழி வகுப்புகளும், அரசியல், தத்துவம் போன்ற பாட வகுப்புகளும் நடந்தன.

தோழர் பாஸ்கர பிள்ளையிடம் கோடங்கால் கிருஷ்ணசாமி மலையாளம் கற்றார். அம்பை சங்கரன் செட்டியார் தமிழில் யாப்பு இலக்கணம் கற்றுக் கொடுத்தார். வாத்தியார் மார்க்சீயமும், ஆங்கிலமும் கற்றார். தோழர்கள் நல்லகண்ணும், பாரதியும் அரசியல் வகுப்புகள் நடத்தினார்கள். வாத்தியார், வாத்தியாராகவும், மாணவராவும் இருந்தார்.

கம்யூனிஸ்ட்கள் எவ்விதமான கொடிய இடுக்கண்களையும், வேதனைகளையும தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வதைக் கண்ட சிறை நிர்வாகம் அதிர்ந்தது. சற்றே தாராளமாக விட்டுவிட்டால் சிறைக் கூடத்தையே பல்கலைக்கழகமாக்கிவிடுவார்கள் போலும் என்றெண்ணி பயந்தார்கள்.

சிறை அதிகாரிகளுக்கு மொட்டை மனு போயிருக்கிறது. தோழர்களின் அறைகளை அதிகாரிகள் வந்து திடீர் சோதனை போட்டார்கள். எழுதிப்படிக்க உபயோகித்த சிறு கற்களையும், மணல்களையும்கூட 'நாட்டு வெடிகுண்டுகள் தயாரிக்கும் துகள்கள்' என்று சந்தேகித்துப் பயந்தார்கள்.

'இவர்கள் பயங்கரவாதிகள், ஜாக்ரதை' என்று அதிகாரிகள் வார்டர்களை எச்சரித்துச் சென்றார்கள்.

எங்களுக்கு எதிரேயுள்ள மேடை அறைகளில் 300 பேருக்குமேல்

கிரிமினல் விசாரணைக் கைதிகள் அடைந்து கிடந்தார்கள். அங்கு வாத்தியாரும் இருந்தபடியால் அவர்களின் இரவுப் போது எப்படிக் கழியும் என்று வாத்தியாருக்குத் தெரியும்.

ஒரு மூலையில் ஐந்தாறு கைதிகள் வட்டமாக அமர்ந்து மத்தியானம் குடித்த மீதிப்பீடியை ஆளுக்கொரு 'தம்' அடித்து ரசித்துக் குடிப்பார்கள். இன்னொரு மூலையில் கருப்புக் குல்லாய்கள் ஒன்றுகூடி கைதிகளின் ரேஷனில் திருடிய கடலை உருண்டைகளை பங்கிடுவதில் சிறிது பலாத்காரமும் ஏற்படும்.

ரிமாண்ட் பிளாக்கையே ஆட்டிப் படைக்கும் கைதி அப்துல் இருமுறை கொலை கேசில் வந்து விடுதலையாகிப் போய்விட்டான். இப்பொழுது கொள்ளைக் கேசில் வந்திருக்கிறான். அவனுக்குச் சிறை மாமியார் வீடு. பல வழிகளில் அவனுக்குப் பணம் கிடைக்கும். இரவில் 'புரோட்டா செட்' சாப்பிடுவான். ஒரு வார்டர் அவரின் தேவைக்காக அவனிடம் வந்து கெஞ்சி நிற்கிறார்.

கைதிகளின் ரேஷனைக் கொள்ளையடித்து கட்டிச் சோறு பாதியாகக் குறைந்துவிட்டபடியால், பல கைதிகள் அரைவயிறு கூட நிரம்பாமல் இராப் பட்டினி கிடக்கிறார்கள்.

இன்னும் எத்தனை கோர சோக நாடகங்கள். கிரிமினல் கைதிகளை அடைக்க இடமில்லாமல் திடீர், திடீரென்று அரசியல் கைதிகள் இருக்கும் எங்கள் அறையில் கொண்டு நுழைப்பார்கள். அது எங்களுக்கு மிகுந்த நெருக்கடி, இருக்கத்தின் சுகாதாரக் குறைவு, இன்னும் பல கேடுபாடுகள் உண்டு. ஆயினும் அவர்கள் எங்களோடிருப்பது எங்களுக்கு மக்கள் மத்தியில் இருப்பது போன்ற இன்ப உணர்வுகள் எழும்.

அன்று எங்களோடிருந்த பணக்குடி தம்பி

பாவம், 18 வயது கூட நிரம்பாத இளைஞன்

வீட்டில் தரித்திரம், மூன்று நாளைக்கு ஒரு முறைகூட கால்வயிற்றுக்குக் கஞ்சி கிடையாது. மணிமுத்தாறு அணைக்கட்டிற்கு வேலை செய்ய நிறைய ஆள் எடுப்பதாகக் கேள்விப்பட்டான். நெல்லைக்கு வந்தான். இருட்டிவிட்டது. பூட்டிய ஒரு கடையின் பலகையில் படுத்துத் தூங்கிவிட்டான். இரவு காவலர்கள் இருவர் அவனைப் பிடித்து வேலை வாங்கித் தருவதாகக் கூறி அடித்து, உதைத்து சந்தேக கேஸ் போட்டு உள்ளே தள்ளிவிட்டார்கள். அவன் அழுதுகொண்டே இருந்தான். சிறை அனுபவங்களை எடுத்துக்கூறி வீட்டிற்கும் கடிதம் எழுத உதவி செய்தோம்.

தோழர்கள் மாணிக்கம், நல்லசிவம், நல்லகண், மூவரும் ஜெயிலரைப் பார்த்து முறையிட்டதன் விளைவாக அன்றுமுதல் சோத்துக் கட்டிகள் சிறிது பெரிதாயின.

கிரிமினல் நண்பர்கள் தங்கள் கண்களால் எங்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். அன்று மாலை லாக்கப்பிற்கு முன் அழகுமுத்துவின் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது.

'என்ன அழகுமுத்து, இத்தனை சந்தோஷம்?' வாத்தியார் கேட்டார்.

அழகு முத்து தன் குவளையை எடுத்துக் காட்டினார்.

அது நிறைய கீரைத்தண்டுகள் இருந்தன.

'வாத்தியாரே, இந்தக் கீரைத் தண்டுகளைக் கொண்டு எழுதிப் படிக்கப் போறேன்' என்றபோது அழகுமுத்துவின் வாயெல்லாம் பல்லாயிருந்தது.

வாத்தியார் வாய்திறந்து சிரித்தார்.

அன்று அழகுமுத்துவிற்கு வந்த அஞ்சல் அட்டையில் பாதிக்குமேல் மைபூசி அடிக்கப்பட்டிருந்தது. அவரது தகப்பனார் படுத்த படுக்கையில் இருக்கிறார் என்ற ஒரு செய்தி மட்டும் விளங்கியது. பெற்றோர்களின் ஆத்திர உணர்வுகள் அடிக்கப்பட்டிருந்தன.

'சமதர்மம் ஓங்குக, பொதுஉடைமை வாழ்க, உலக மக்களே ஒன்றுபடுக' போன்ற வாசகங்களை அழகாக எழுதிக்காட்டினார் அழகுமுத்து.

கட்சித் தோழர்களுக்கு ஒரே மகிழ்ச்சி.

வார்டர்களின் தொப்பிகள் கடலை உருண்டைகளால் உப்பி உயர்ந்தன. பாவம், அவர்கள் நிரந்தரக் கைதிகள்.

லாக்கப்பிற்குள் புகுமுன் மேல்மாடி அறை வராண்டாவில் சிறிது நேரம் நின்ற வாத்தியார் மகிழ்ந்தார். மதுரை மாநகரிய மின்விளக்குகள் மின் ஒளிகளை சிந்திச் சிரித்தன. மதில்கள் இல்லாத வறுமைச் சிறைகளில் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அழுது கொண்டிருப்பார்கள். மேற்கே சிறிது தூரத்தில் தூக்கு மேடையில் லைட் எரிந்து கொண்டிருக்கிறது.

தன் காம இச்சைக்கு இணங்க மறுத்த மருமகளை வெட்டிக் கொன்ற ஒரு காமுகனை இன்று அதிகாலை விழுங்கிய மிதப்பில் தூக்கு மேடையின் தூண்டில் முள் ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறது.

ரிமாண்ட் பிளாக்கில் திங்கள் காலைதோறும் '∴பைல்' என்பது ஒரு கேலிக்கூத்து நாடகம். கைதிகள் அணிவகுத்து நிற்பர். சிறையின் மேலதிகாரிகள் வலம் வருவர். குறைகேட்க வருகிறவர்கள் ராணுவ நடை போடுவர். யாருக்காவது குறை இருப்பின் வலக்கையை இடுப்போடு ஒட்டி நீட்ட வேண்டும். ஆனால் யாரும் கைநீட்டக் கூடாது என்பது கண்டிப்பான கட்டளை. யாராவது தெரிந்து தெரியாமல் கையை நீட்டிவிட்டால், அதிகாரிகள் போனபிறகு மணிக்கையை ஒடித்துவிடுவார்கள். அரசியல் கைதிகளை இந்த அணிவகுப்பிற்கு அழைக்கமாட்டார்கள்.

ஒருமுறை எல்லோரையும் அழைத்திருந்த போது கம்யூனிஸ்ட் தோழர்கள் தங்கள் கரங்களை நீட்டி, 'சோப்பு, எண்ணெய், தினத்தாள், படிக்கநூல்...' என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்.

எல்லோருமே கூட்டுக் கொள்ளையர்கள்தானே?

'கேள்விமுறை இல்லையோ....'

இவர்களுக்காகக் கேட்பவர்கள் கம்யூனிஸ்ட்கள் மட்டும்தானே?

இரவில் அழகுமுத்து தம் வரலாற்றைச் சுருக்கிக் கூறினார்.

'இருபத்து நான்கு வயதுவரை ஆடுமேய்த்தேன். முதுமையான தாய் தந்தையரையும், இளமையான சகோதர சகோதரிகளையும் காப்பாற்ற கொடுமையாக உழைத்தேன். ஆயினும் பிழைக்க வழியில்லை. நாலாள் வேலையை செய்தும் கால் வயிற்றுக்கும் கஞ்சி கிடைக்கவில்லை. 1947இல் எங்கள் ஊரில் விவசாய சங்கம் வந்தது.

எங்கள் உழைப்பு சுரண்டப்படுகிறது என்று தெளிவாகத் தெரிந்தேன். நாங்கள் கொத்தடிமைகளாக வாழ்கிறோம் என்பதை சங்கம் சொல்லித் தந்தது. சங்க உறுப்பினன் ஆனேன். கம்யூனிஸ்ட் கட்சி எங்களை சிந்திக்கத் தூண்டியது. சிந்தித்தோம். இயக்கமாகச் செயல்பட்டோம். 1950ல் கைது செய்து கொலைக் குற்றம் சுமத்தி சதி வழக்கில் சேர்த்து விட்டார்கள்' என்றார்.

அவரின் எளிய செய்தி மற்றக் கைதிகளைச் சிந்திக்க வைத்தது.

சமுதாயக் கொடுமைகளை தனிப்பட்ட முறையில் எதிர்த்து கிரிமினல் கைதியாக சிறைக்கு வந்திருக்கும் தங்களுக்கும் - இயக்க ரீதியாகப் போராடி வந்திருக்கும் அழகு முத்துவிற்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்தார்கள்.

ஒரு விவசாய அரிஜனத்தோழரை எவ்வளவாக மதிக்கிறார்கள் என்று கண்டு கட்சிக்குத் தலைவணங்கினார்கள்.

அன்று இரவு குடிதண்ணீர் பற்றாக்குறை. இரவு குவளைகளில் குடிதண்ணீர் கிடைக்கவில்லை. அதிகாலை ஐந்து மணிக்கே கூச்சல்களும் குமச்சல்களும் ஆரம்பமாயின. மூத்திரச் சட்டிகளைத் தூக்கிக் கொண்டு 'தண்ணீர், தண்ணீர்' என்று கத்தினார்கள்.

கம்யூனிஸ்ட்களின் தைரியத்தில் இப்படிச் செய்கிறார்கள் என்று கருதிய சில வார்டர்கள் கொதித்தெழுந்தார்கள். ரிமாண்ட் கைதிகள் இருவரை வெளியே எடுத்து வந்து எங்கள் முன்னிலையில் 'கத்தாதே' என்று சொல்லி அடித்து இம்சித்தார்கள்.

'அடிக்காதே, அடிக்காதே', 'தண்ணீர், தண்ணீர்' என்று எங்கள் தலைமையில் எல்லோரும் சேர்ந்து இரைந்தார்கள்.

தோழர் வேலையாவிற்கு வாயில் நீர் சுரந்திருந்தது. காலை வேளையாதலால் அது துர்நாற்றம் வீசியது. வாய் கொப்புளிக்க அவருக்குத் தண்ணீர் வேண்டும். தண்ணீர் கேட்டுப் பார்த்தோம், கிடைக்கவில்லை. அவர் என்ன செய்வார்?

தம் கையில் மூத்திரம் பெய்து வாய் கொப்பளித்தார்.

தேசபக்தரான வ.உ.சி மூத்திரச் சட்டியில் தண்ணீர் குடித்தார். சுதந்திரத்திற்குப் பின்புள்ள மக்கள் போராளிகளான சில தோழர்கள் மலச் சட்டியில் தண்ணீர் குடித்தார்கள்.

தோழர்களுக்குப் பயந்த வார்டர்கள் அன்று காலை 5.15 க்கே செல்களைத் திறந்தார்கள்.

மற்றபடி பிணமாக விழுந்தால்கூட அதிகாலை ஆறுமணிக்கு முன்பு திறக்கவே மாட்டார்கள்.

16

வையயென்னும் பொய்யாக்குலக்கொடி' என்று இளங்கோவடிகள் பேசினாரே அந்த வைகைபாயும் மாமதுரையின் மத்தியில் தானையா நாங்கள் வசிக்கிறோம்.

எங்கள் உடலை நனைத்துக் கொள்ளக்கூட தண்ணீர் இல்லை. கைதிகளின் கண்ணீரும், காயம்பட்டுக் கிடக்கும் கைதிகளின் புண்ணீரும், போர்க்குணமிக்க கைதிகள் சிந்திய பச்சை இரத்தமும் சேர்ந்து வைகை ஆற்றில் கைவைக்கும்படி வறட்சியாகிவிட்டதோ?

தலைமைத் தோழர்கள் அனுப்பிய குறிப்புகளைக் கொண்டு வாய்தாவிற்குச் சென்று வரும்போது நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றி செல்களில் விவாதித்து முடிவெடுத்தோம்?

வாய்தாவிற்குப் புறப்படும் நேரம் நெருங்கிவிட்டது. ஸ்பெஷல் போலீசார் சிறைவாயிலின் முன் இரும்பு விலங்குக் காப்புகளுடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காய்ப்புப் பிடித்துவிட்ட எங்கள் மணிக்கைகளை விலங்கு மாட்டக் கொடுத்தோம்.

வாத்தியாரையும், சீனிவாசனையும் சேர்த்து விலங்கு இணைத்தது. இருவரும் இலக்கியச் சுவைமிக்க நண்பர்கள்.

மக்கள் பிரதிநிதிகளைச் சுமந்து கொண்டு ரயில் உற்சாகமாக விசிலடித்துச் சென்றது. நாங்களும் எங்கள் துக்க-துயரங்களை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நம்பிக்கை நட்சத்திரங்களாக இயங்கினோம்.

சீனிவாசன் மெதுவாகக் கேட்டார்.

'வே, ஜேக்கி, கிறிஸ்தவக் கம்யூனிசம் என்கிறீரே, அது எப்படி? அது ஓர் புதிய மதமாகிவிடாதா? அது ஆபத்தில்லையா? நமக்கோ தலைக்குமேல் தண்டனை தொங்குகிறது. வீண் வம்புகள் எதற்கு?'

வாத்தியார் சொன்னார் :

'நான் தண்டனைக்குப் பயப்படவில்லை. ஆனால் உண்பதும், உறங்குவதும் மட்டும் மனித வாழ்வாகிவிடாது. இதற்கும் மேல் விண்ணையும் நோக்கிப் பார்க்கும் உயரிய உணர்வுகள் வேண்டும். பொதுஉடைமை அரசுக்கும் மேலாக இறை அரசை நோக்கும் இலட்சியம் வேண்டும். இதனைக் கிறித்தவக் கம்யூனிசம் அல்லது கூடுதல் கம்யூனிசம், அல்லது ஆன்மீகக் கம்யூனிசம் என்று கூடச் சொல்லாம்'.

சீனிவாசனுக்கு மூக்குச் சிவந்தது.

'இயேசுவைக் குறித்து உமது அரசியல் கண்ணோட்டம்தான் என்ன?' என்று சீனி சற்று சீரியசாகக் கேட்டார்.

வாத்தியாரின் கண்கள் பிரகாசித்தன. அவர் பேசினார் : 'இயேசு வரலாற்று

நாயகன், கி.பி. என்பதன் கர்த்தா. அமுக்கப்பட்ட அடிமட்டத்து மக்களுக்கு விடுதலை செய்தியைக் கொண்டு வந்தார். அவரே அந்தச் செய்தியாகவும் வாழ்ந்து காட்டினார். ஆகவே அவர்மீது எனக்கு ஓர் ஈர்ப்பு ஏற்பட்டது. உலக உழைக்கும் மக்களுக்கு நம்பிக்கை தோணியாயிருந்தார். பண்ணையூரில் நான் செய்த புரட்சிகரமான செயல்கள் அனைத்தும் அந்த வெளிச்சத்தில்தான்'

இருவரும் தத்துவ விசாரணையில் இறங்கினார்கள்.

இவ்வேளையில், தங்கள் கைகளை இஷ்டம்போல ஆட்டமுடியாதவாறு இறுக்கிப் பிணித்திருந்த விலங்குகளைச் சற்றே தளர்த்தி விட்டுக் கொண்டார்கள்.

சீனிவாசன் சொன்னார்.

'வருங்கால உருவமாற்றங்கள் எத்தகையதோ? இனிமேலுள்ள காலத்தில் வர்க்க நலன்களையும் தாண்டி உலகளாவிய மானுடப் பண்புகளே மேலானவை என்ற புதிய கோட்பாடு வளர்ந்து வருவதைக் காண்கிறோம். கம்யூனிசத்தைவிடவும் ஒரு சிறந்த அமைப்பு தோன்றலாம்'.

ரயில் கோயில்பட்டி வந்தது - அதே ரயிலில் ஏறிய ஜம்புலிங்கபுரம் துரைராஜ், வாத்தியாரின் நண்பர். வாத்தியாரிடம் பேச முடியாமல் தவித்தார். மிகவும் வசதிபடைத்தவர். அவர் சதிவழக்கில் மாட்டாமல் இருந்தது வாத்தியார் புண்ணியம். அவர் போலீசிடம் உதைகளை வாங்கிக் கொண்டு பிற தோழர்களின் பெயர்களை உச்சரிக்க மறுத்துவிட்டார்.

எங்கள் விலங்குக்குச் சொந்தமான இரு காவலர்களை வசப்படுத்திக் கொண்டார். ஆளுக்குப் பத்து ரூபாய் கொடுத்து கண்களால் மட்டும் பேசிச் சென்றார். இப்படிச் சிலருக்குப் பரிசுகள் கிடைத்தன.

மீண்டும் வாய்தா.

'வையம் பெயரினும் ஒரு பொய்யுரைக்க மாட்டான்' என்று புகழேந்திப் புலவர் தமிழர் பெருமைபாடினார். அத்தகைய நாட்டில் பொய்சாட்சிகளை இன்னும் போதுமான அளவு திரட்ட வேண்டி போலீசார் போக்குச் சொல்லி கால அவகாசம் கேட்டார்கள். ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கலியாணத்தை முடி' என்ற பழமொழி இந்த சமூக அமைப்பின் அவலத்தைக் காட்டுவது போல - பொய்யான, போலியான, ஜோடனையான வழக்குகளைப் பின்னுதல் புரையோடிப்போன சீரழிந்த சமுதாயத்தின் சீரழிவுகளைக் காட்டுகின்றன.

வாய்தாவிற்குப் போய் வந்தபிறகு தோழர்கள் அனைவரும் கூடிப் பேச வேண்டி இருந்தது. தோழர் மாணிக்கம் ஜெய்லரிடம் அனுமதிபெற்று ஒன்பதாம் எண் அறையில் கூடினர்.

வாய்தாவிற்குப் போய் வந்ததில் சில பிரச்சினைகள் எழுந்தன. ஒரு சில தோழர்களுக்குக் கிடைத்த பண்ட வகைகள், பணம் இவைகளை என்ன செய்வது?

தோழர்கள் அனைவரும் பகிர்ந்துண்பது என்று மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டனர். அடுத்து பீடிப் பிரச்சினை பெரிதாகப் புகைந்தது.

வாய்தாவிற்குச் செல்லும்போது சில காவலர்கள் புகை மண்டலத்தைக் கிளப்பிக் கொண்டிருப்பார்கள். புகை குடியர்களுக்கு இது ஒரு பொல்லாத

தொத்து நோய். விலங்கு மாட்டியதால் தொத்துநோய் தாவாதா? சில போலீசார் சகோதர பாசத்தில் பீடி அல்லது சிகரட்டைக் கொடுத்து ஊதச் செய்வார். ரயிலின் சன்னலை அடைத்துக் கொண்டு விலங்கை சற்றே அவிழ்த்து விட்டு புகைக்கக் கொடுப்பார்கள். பலமுறை வாய்தாக்களுக்குச் சென்று வருவதால் பழக்கதோஷமும் ஆகிவிட்டது. சில வார்டர்களும் சிறை அறைகளில் இப்படிச் செய்வதுண்டு.

இது சரிதானா?... இந்தப் பீடிகளைக் குடிக்கலாமா?

இதுதான் பிரச்சினை.

புகைபிடிக்காத வாத்தியார் போன்ற தோழர்களுக்கு இது அவமானமாகப் பட்டது.

தோழர் இஸ்மாயில் ‘வாய்ப்பு இருக்கிற இடத்தில் பீடி குடித்தால் குற்றமில்லை’ என்றார்.

‘பல தோழர்களுக்கு வாய்ப்பு இல்லாமலே போகிறதே....?” தோழர் வேலாயுதம் கொதிப்போடு கேட்டார். அவர் கட்டுக்கட்டாய் பீடி குடித்தவர். அவர் குடித்துக் குடித்து அவரின் உதட்டுத்தோல் வெளுத்துப் போயிருக்கும்.

விவாதம் சூடு பிடித்தது.

தோழர் வேலாயுதம் பேசினார்.

‘தோழர்களே, பீடி குடிப்பது உடலுக்குக் கேடு. மேலும் சிறை நிர்வாகம் பீடி குடியைச் சட்ட விரோதமாக்கி இருக்கிறது. பீடி சிறையில் லஞ்சலாவண்யப் பொருள். பீடி கைதிகளை அடிமைப்படுத்துகிறது, அவமானப்படுத்துகிறது. கைதிகளின் ரேஷனிலும் கைவைக்கிறது. இதில் நாம் மிகவும் கண்டிப்பாகவும், கட்டுப்பாடாகவும் இருக்க வேண்டும். அநேகக் கிரிமினல் கைதிகளைக் கருப்புக் குல்லாக்களாவும்*, கைதிகளின் துரோகிகளாவும் மாற்றி இருப்பது பீடிகளே. அதிகாரிகள் கிரிமினல் கைதிகளைக் கொண்டு நம் தோழர்களை அடிக்க ஏவிவிடுவதும் பீடியினாலேதான்.

‘கொலைக்கேசில் வந்திருக்கும் கொம்புத்தேவர் சிறையில் பிரியாணி சாப்பிடுவது பீடிச் செருக்கினால்தான். கருப்புக் குல்லா ராமச்சந்திரன் தன் வைப்பாட்டிக்கு மாதம் பத்து ரூபாய் அனுப்புவதும் சிறை நாணயச் செலவாணியான பீடியினால்தான். நாமும் இந்தப் பீடிக்கு அடிமையானால் கட்சிக்கு அவமானம். கட்சிக்கு அவமானம் என்றால் என் போன்ற தோழர்களால் தாங்க முடியாது’ என்றார்.

உணர்ச்சி வசப்பட்டு ஒரே மூச்சில் பேசி முடித்து துண்டை உதறி கீழே போட்டு உட்கார்ந்தார்.

பத்து நிமிட இடைவெளிக்குப் பிறகு தொடரும் என்று அறிவிப்புக் கொடுத்தார் தோழர் நல்லகண்ணு.

* கருப்புக் குல்லா : அவர்களுடைய தொப்பியில் கருப்புப்புள்ளி இருக்கும். பெரிய குற்றங்கள் செய்த கொடிய கைதிகள். சிறை நிர்வாகத்திற்கு விசுவாசமாகவும், சக கைதிகளுக்கு துரோகிகளாகவும் இருப்பார்கள்.

17

கட்சிக்கு அவமானமென்றால் வேலாயுதத்திற்கு மட்டும்தான் அவமானமா?.. எங்களுக்கு இல்லையா?' என்று பீடிகுடிப்பதை ஆதரித்த தோழர் பட்டாணி நாடார் ஆத்திரத்தோடு கேட்டார். இவர் தூத்துக்குடி ஆர்வி மில் பஞ்சாலைத் தொழிலாளி. சுதந்திரத்திற்காகப் போராடியவர். 1949இல் 'கிடைத்தது போலி சுதந்தரம்' என்று கண்டு உண்மையான விடுதலைக்காகப் போராடினார். சதி வழக்கின் பேரால் கைது செய்யப்பட்டு கடந்த 14 மாதங்களாகச் சிறையில் அவதியுற்றார்.

வயிற்று வலியால் அவதியுறும் பி.மாணிக்கம் இருகுவளை தண்ணீரை விழுங்கிவிட்டு வயிற்றைத் தடவிக்கொண்டே வாசலில் விழிப்பாக நின்றார். வாதத்தால் அவதியுறும் வேல்சாமித் தேவர் காலை நீட்டி உட்கார்ந்திருந்தார்.

அவர், 'தோழர்களே' என்று ஆரம்பித்தார்.

'கட்சிக்கு அவமானம் என்றால் எல்லாத் தோழர்களுக்கும் அவமானம்தான். ஆனால் தோழர் வேலாயுதம் பெருமையுடன் சொல்ல உரிமையுள்ளவர். குடும்பத்தோடு கட்சிக்கு சர்வபரித்தியாகம் செய்தவர். நம் தோழர்களிடமெல்லாம் உறவு முறையில் பழகி கட்சிக்கு உழைத்த குடும்பம்.

'அம்பை ரயில் நிலையத்தில் இறங்கி வாகைக்குளம் எல்லைக்குள் நுழையும்போது மகிழ்வுடன் வரவேற்று தோழர்களின் வயிற்றை நிறைத்து அனுப்பும் முதல்வீடு தோழர் வீடே. கட்சி ஊழியர்கள் கூடும் கேந்திரமான இடம் அவர் வீடே. இப்பொழுது தோழர் காச நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார். தலைக்குமேல் கொலைக் குற்றச்சாட்டு தொங்குகிறது. அவர் மனைவியும் பிள்ளைகளும் வெளியே தவிக்கிறார்கள். கட்சியின் வாழ்வுதானே அவரது வாழ்வு'.

அமைதி நிலவியது. வாத்தியார் மனதிற்குள் வேலாயுதத்தைப் பூஜித்தார். மறுகணம் எழும்பி நின்று பேசினார்.

'தோழர்களே, நான் கட்சிக்கு அப்பால் நின்று பேசுகிறேன். சிறைக்குள் பீடி குடியை சட்டமாக்கப் போராடுவது நம் வேலையல்ல, நமக்கு வேறு போராட்டங்கள் நிறைய உள்ளன. நம் தோழர்கள் பீடியை இன்றும் என்றும் குடிப்பதில்லை என்று சபதமேற்க வேண்டும். நமது சரீரம் இறைவன் வசிக்கும் இல்லம்'.

சிறு சிரிப்பொலி எழுந்தது.

சிறை சைரன் நடுப்பகலை நினைவூட்டியது. சோத்துக் கட்டிகள் - பாடைகள் போன்று சுமந்துகொண்டு வரப்பட்டன.

'மாராசன் சிறையிலே மணியடிக்கச் சாப்பாடு' என்று ஒரு சிறைப்பறவை விசிலடித்துக் கொண்டே வந்தது. அரைக்கட்டிச் சோற்றை அப்படியே எடுத்து விழுங்கியது.

வயிற்று வலிக்காரர்களான வேலையா, முத்தையா, மாணிக்கம், மணி,

பரமசிவம், பரதேசியாபிள்ளை ஆகியோரின் தட்டுகளிலுள்ள எஞ்சிய கீரைத் தண்டுகளை எடுக்கக் கிரிமினல் சோதரர்கள் சிலர் முண்டியத்து ஓடி வந்தார்கள். சுடலை, சுப்பையா, நல்லகண்ணு, நல்லசிவன் ஆகியோர் தோழர்களுக்குள் மிஞ்சும் களிக்குக் காத்திருந்தார்கள்.

வேலாயுதம் தமக்கு மிஞ்சிய களியை வாத்தியாருக்குக் கொடுத்து நறுக்காகச் சொன்னார்:

'நம்ம வாத்தியார் வாகைக் குளத்து மேல்சாதிக்காரங்க வழக்கத்தை நம்மகிட்ட காட்றார். வயலில் விளைச்சல் இல்லையென்றால் 'வரி கொடுக்க முடியாது' என்று சர்க்காரிடம் சண்டை போடத் தெரியாது, குடிமகனாகிய எங்ககிட்ட' நெல்விளையல்ல, கூலிதரமுடியாது என்பார்கள். அதுபோல சோறு காணல்லன்னா ரேஷனை கூட்டச் சொல்லணும்' என்று சொல்லி நாசூக்காகச் சிரித்தார்.

சீனிவாசன் கீரைத்தண்டிலிருந்து உயிரோடு வெளிவந்த ஒரு பெரிய புழுவைத் தூக்கி வெளியே போட்டார்.

'நமக்கென்ன மட்டனா கிடைக்கிறது? உமக்கு வேகவில்லை. எனக்குப் புழு வெந்துவிட்டது. உயிருள்ள மீன்தானே ருசியாக இருக்கும்?' என்று கூறிக்கொண்டே புழுவைக் களியோடு குழப்பி விழுங்கினார் சுப்பாரெட்டியார்.

அவர் பேச்சை தோழர்கள் ரசித்தார்கள். என் தட்டை சோதித்தேன். கீரைத் தண்டுகளாகிய எலும்புகளுக்குள் புழுக்களாகிய மூளை வெந்து உலைந்து குளுகுளுவென்றிருந்தது. அதுவும் சேர்ந்துதான் எங்கள் ரேஷன். அப்படியும் அரைவயிறுதான் நிறையும்.

சாப்பாட்டிற்குப்பின் வகுப்புகள் ஆரம்பமாயின.

எசக்கி நாயுடு, சுடலைமுத்துப்பிள்ளை, ராமச்சந்திரன், அழக்ராஜ், நல்லகண்ணு, வாத்தியார் ஆகியோர் வாத்தியார்கள். அரசியல் வகுப்பு, இந்தி வகுப்பு, ஆங்கில வகுப்பு என்று பல வகுப்புகளாகப் பிரித்து சிறை நிர்வாகத்திற்குத் தெரியாமலே நடைபெறும்.

வேலாயுதம், கண்ணுப்பிள்ளை, அழகு முத்து, சுலைமான், சொர்ணம் தமிழை இலக்கண முறையோடு கற்கவும், பொது அறிவைப் பெற்றுக் கொள்ளவும் வாத்தியாரிடம் வந்தார்கள்.

சதிவழக்குத் தோழர்கள் சிலர் குறைந்த படிப்புள்ளவர்கள். பலர் அனுபவப் படிப்பும், மொழியறிவும் அதிகம் பெற்றவர்கள். தமிழில் பல வகுப்புகள் நடத்திய வாத்தியார் தம் மாணவர்கள் பொது அறிவிலும் தேர்ந்துவிளங்க ஆசைப்பட்டார். முந்திய நாள் கற்றுக் கொடுத்தவைகளைக் கேள்வி கேட்டார்.

இந்தியாவில் வானொலி தொடங்கிய ஆண்டு எது எனக் கேட்கவும் 1927 என்று அழகுமுத்து அழகாகக் கூறினார். நோபல் பரிசு பெற்ற முதல இந்திய யார் என்று கேட்கும் முன் 'தாகூர்' என்று சுலைமான் கூறினார். நம் தேசபக்த தலைவர்களில் மரணமில்லாது சிரஞ்சீவியாக வாழ்பவர் யார்? எனக் கேட்கவும் 'நேத்தாஜி' என்று கண்ணுப்பிள்ளை சொன்னார். நேத்தாஜி என்ன செய்தார்? என்று ஒரு கேள்வியைப் போடவும் சொர்ணம் கணார் என்று 'நேத்தாஜி நாட்டின் விடுதலைக்காக இந்தியாவில் மட்டுமின்றி தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வாழ்ந்த 30 இலட்சம் இந்தியர்களைத் திரட்டி இந்திய தேசிய

இராணுவத்தை நிறுவினார்' என்று கூறினார்.

'வாத்தியார் மிகவும் மகிழ்ந்தார். மீண்டும் கேள்விகளைத் தொடுத்தார்.

'தமிழ்நாட்டுச் சிறைகளில் பெரியது எது?'

'வேலூர் சிறை'

'காஷ்மீர் சமஸ்தானம் எப்போது இந்தியாவோடு இணைந்தது?'

'1947 இல்'

'காரல் மார்க்ஸ் வெளியிட்ட கம்யூனிஸ்ட் அறிக்கை எந்த ஆண்டு?'

'1864 இல்'

'தெலுங்கானாவில் நடந்த விவசாயப் போராட்டத்தில் உயிர் இழந்தவர்கள் எத்தனை பேர்?'

'3432 பேர்'

'ஆசியாவிலேயே முதன்முதலில் 8 மணிநேர வேலை அமுலுக்கு வந்தது எங்கே?'

'தெலுங்காணாவில்'

கேள்விகள் கேட்கக் கேட்க அம்பு பாய்வதுபோல் பதில்கள் வந்தன.

மேலும் இருபது கேள்விகளுக்கு விடைகள் கற்றுக் கொடுத்தார்.

கொடும்பாடுகளுக்கும் கொடுமைகளுக்கும் மத்தியில் சிறைக் கூடத்தைப் பல்கலைக்கழகமாக்க முனைந்தனர் தோழர்கள்.

வேலாயுதம் தம் வீட்டிற்கு சுயமாகக் கடிதம் எழுதக் கற்றுக் கொண்டார். நன்கு படிக்கவும் பழகிக் கொண்டார். அன்றொரு நாள் அவர் மனைவி பாப்பு அம்மாவிடமிருந்து வந்த கடிதத்தை எல்லாத் தோழர்களிடமும் காட்டி மகிழ்ந்தார்.

கடிதம் இப்படியிருந்தது

'அன்புள்ள பத்தாவிற்கு மனைவி பாப்பு அம்மாள் எழுதுவது:

(கருப்பு மையால் அடிக்கப்பட்டிருந்தது)

க்ஷயரோகத்தால் கஷ்டப்படும் நான் வெளியே வந்தாலும் என்ன வேலையைச் செய்துவிடப் போகிறேன், என்று நீங்கள் எழுதியிருந்தீர்கள். அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். நான்கு வீடுகளில் சோறு வாங்க எனக்கு தைரியமிருக்கிறது. நம் தோழர்களோடு சந்தோஷமாயிருங்கள்'.

இந்தக் கடித வரிகள் அவருக்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுத்தது. சிறை மருத்துவர்கள் கொடுக்கும் மருந்தைவிட நூறுமடங்கு சத்துள்ளதாயிருந்தது. கருப்பு மையால் அடிக்கப்பட்ட பகுதியில் என்ன எழுதியிருப்பாள்? என்ற ஆய்வில் இறங்கினார் வேலாயுதம். 'கொலைகாரச் சிறையில் நிலைகுலையாமல் இருங்கள். மக்கள் உங்களை விடுவிப்பார்கள்? என்ற எழுத்துக்களை அடித்திருக்கிறார்கள் என்று கண்டுபிடித்தார் செண்பகம்.

கம்யூனிஸ்ட்டுகளுக்குத் தந்த 'சி' வகுப்பு இருக்கிறதே அது இருளின் குகை. வியாதிகளின் ஊற்று. போலீஸ் சித்ரவதையைத் தொடர்ந்து இரண்டு

ஆண்டுகள் சிறையில் அழுந்திய எமது அருமைத் தோழர்கள் பற்பல வியாதிகளில் வீழ்ந்து வெந்தார்கள்.

ஆள்விழுங்கி மதுரைசிறை எஞ்சிய தோழர்களையும், நோயாளிகளாக்கி உயிரோடு கொன்று கொண்டிருந்தது.

18

தோழர் வேலாயுதத்திற்கு காசநோய் கோரமானது. சிறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கண்டம்* செல்லுக்குப் பக்கத்தில் இருந்ததால் தூக்குத் தண்டனை தோழர் பாலுவைத் தினம் காணும் பேறுபெற்றார். இரவில் பாலு பாடும் செங்கொடிப் பாடல்களைக் கேட்டு மகிழ்வார். தினம் இரு 'லால் சலாம்' கிடைக்கும்.

ஒரு துயரச் செய்தி வந்தது. போலீஸ் பாலு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு கடந்த எட்டு மாதங்களாக மதுரை 'கண்டம்' செல்லில் இருக்கிறார்.

உலக சமாதான இயக்கங்கள், உலகத் தொழிற்சங்கங்கள், கருணை நிலையங்கள், தர்ம ஸ்தாபனங்கள், மத நிறுவனங்கள் அனைத்தும் தூக்குத் தண்டனையை ரத்து செய்யும்படி வேண்டின, முயன்றன, போரிட்டன - முடியவில்லை. கடைசியாக கவர்னர் பவநகர் ராஜாவும் கைகழுவி விட்டார்.

உலகத் தொழிற்சங்க சம்மேளம் இதர நாடுகளின் ஜனநாயக நிறுவனங்கள் பாலுவின் தண்டனையை ரத்து செய்யக் கோரின. பல ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சல் அட்டைகள் எழுதினர்.

இனி என்ன நடக்கப் போகிறது?

பாலு யார்?

பாலு ஒழுக்கத்தின் சொந்தக்காரன். நீதி நியாயத்தின் சத்புத்திரன். மானுடநேயம் கொண்ட மனிதன். பாட்டு என்றால் பாலுவிற்கு உயிர்தான். எண்ணற்ற நூற்களை வாசிக்கும் சிறந்த வாசகன். அழகான இளைஞன். விவசாயக் குடும்பத்திலிருந்து வந்த உத்தமன்.

கே.பி.ஜானகி, மாயாண்டி பாரதி, எம்.ஆர்.எஸ்.மணி ஆகியோர் 1940 இல் கூட்டம் போட்டு பேசும்போது மேடையின் முன்னால் உட்கார்ந்திருப்பார்...

'ஐ.வி.சுப்பையா, எம்.எம்.மாணிக்கம் முதலியவர்கள் பாடும் புரட்சிப் பாடல்கள்தான், என்னை முதன்முதலில் செங்கொடியின் பக்கம் இழுத்தது' என்று பாலு சொல்கிறார். அழகாகப் பாடுவார். அவர் பாடினால் நரம்புகள் முறுக்கேறும். அவரது செங்கொடிப் பாடல்கள் செத்த பிணத்தையும் துள்ளி நடக்கச் செய்யும்.

---

* கண்டம் செல் – தூக்குக் கைதிகளுக்கான தனியறை

மரண வாயிலில்...

ஒரு தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம்பிக்கும்போதே சுரண்டலை இயற்கையாக எதிர்த்தார். ஆதிக்க சக்தியைத் துச்சமென மதித்தார். அவரது இளமையிலேயே அநியாயத்திற்குத் தலை வணங்கமாட்டார். வேலை தேடும்போது ரிசர்வ் போலிஸில் வேலை கிடைத்தது. அங்கும் காவலர்களிடமுள்ள களங்கங்களைத் துடைக்கப் போராடினார்.

ஆள் ஆஜானுபாகுவாக இருப்பார்.

காவல்துறை அதிகாரிகள் பலர் சாதாரண கான்ஸ்டபிள்களை அடிமைகளாக நடத்துவதை வேங்கைப் புலியெனச் சாடினார்.

போலீஸ்-பொதுமக்களின் நல்லுறவு, போலீஸ்காரர்களின் உரிமைகளைப் பெறல் இவைகளுக்காக சளைக்காது போராடினார்.

நல்ல போராட்டத்தைப் போராடினார். ரிசர்வ் போலீஸ் வேலை பறிபோனது.

அதன்பின்பு மக்களுக்காக உழைக்கும் முழுநேரப் பணியில் இறங்கினார். மதுரைத் தொழிலாளர்களின் ஊழியராக அல்லும் பகலும் அயராது பாடுபட்டார். இதைச் சகிக்காத ஆளும் முதலாளித்துவக் கட்சி ஒரு கொலை வழக்கில் மாட்டி மரண தண்டனையை வாங்கிக் கொடுத்தது.

‘கருணை, இரக்கம், மனித நேயம் இவைகளை முன்னிறுத்தி ஒரு உயிரைக் காப்பாற்றுங்கள்? என்று மக்கள் சக்தி கேட்டது. மாற்றுக் கட்சியினரும் வேண்டினர்.

பாலு நிறைய படிப்பார். சிறையிலுள்ள நூலகத்தின் அனைத்து நூல்களையும் படித்தார். தினமும் ஐந்துமுதல் பத்து நூற்கள் வரை வரச்செய்து படிப்பார். அப்படிப் படித்த நூற்களில் ஒன்று, 'ஆர்.எஸ்.ஜேக்கப்' எழுதிய 'மோசம் போன மோதிரம் முதலிய சிறுகதைகள்' * என்ற நூலாகும்.

18-2-1951 இல் அதனைப் படித்துவிட்டு ‘ஒரு கிறிஸ்தவர் அற்புதமான சிறுகதைகளைப் படைத்திருக்கிறாரே’ என்று பரவசமுற்றார் பாலு.

இந்த எழுத்தாளரை அடையாளம் கண்டு மணிக்கொடி இதழுக்கு எழுத சிபாரிசு செய்ய வேண்டுமே என்றெல்லாம் எண்ணி, அந்நூலை மீண்டும் ஒருமுறை படித்துவிட்டு தம் பக்கத்தில் வைத்தார்.

சிறை நூலகர், சிறைக் காவலர்கள், அதிகாரிகள், கண்டம் செல் காவலர்கள் அனைவர்க்கும் ஒரே ஆச்சரியம். ‘சாகப் போகிற மனுஷன் வேகம் வேகமாக எவ்வளவு நூற்களைப் படிக்கிறார். எத்தனை ஆர்வத்தோடு கற்கிறார்’ என்று விந்தையோடு 'இது எப்படி' என்று வினா எழுப்பினர் பலர். விபரீதம்....’ என்று விழிகளைப் பிதுக்கினர் சிலர். ‘கழுத்துல கயிறு தொங்குகிற மனுஷன் புத்தகங்களை விழுந்து விழுந்து படிக்கிறாரே. ஆச்சரியமாயிருக்கே...’ என்று கண்டம் செல் கண்காணிப்பு வார்டர்களின் பேச்சு முழுவதும் அதுவாகத்தானிருந்தது.

சிறைவாழ் கைதிகள் அனைவர் மத்தியிலும் பாலு மீது ஓர் அன்பு சுரந்தது. நல்ல மனிதன். இவருக்குத் தண்டனை ரத்தாகி விடும் என்றனர் சிலர். சமயத் தலைவர்கள் கூட ஜனாதிபதிக்குக் கருணை மனு அனுப்பினர்.

---

* 1946, 47ஆம் ஆண்டுகளில் இதழ்களில் எழுதி 1948 இல் நூல் வடிவு பெற்ற நூல். 120 பக்கங்களில் 9 சிறுகதைகளைக் கொண்ட ஆசிரியரின் கன்னிப் படைப்பாகும்.

'போலீஸார் மத்தியில் ஒழுக்கத்தையும் ஐக்கியத்தையும் வளர்த்த மனிதர். மரண தண்டனையை ரத்து செய்யுங்கள்? என்று பல நிறுவனங்கள் தந்தி கொடுத்தன. நாடு முழுவதும் பாலு பாலு என்று வீரநாதம் ஒலித்தது.

19

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுவிக்க திரிகரண சுத்தியோடு பாடுபடவேண்டும்' என்ற விவிலிய வாக்கை நினைத்துப் பார்த்து வாத்தியார் ஏங்கிப் பொருமினார்.

அன்று 20-2-1951

தோழர்கள் மத்தியில் ஒரு பெரும் கலக்கம் எழுந்தது. எங்கும் காரிருள் சூழ்ந்தது. அதிகாலை 6 மணி. தோழர் மாணிக்கத்திற்கு* வக்கீல் தோழர்களிடமிருந்து செய்தி வந்தது.

22-2-1951 அன்று பாலுவிற்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்.

67 தோழர்களும் காலைக் கஞ்சியைக் குடிக்கவில்லை. சிறை அதிகாரிகளின் அனுமதிபெற்று தோழர் மாணிக்கம் பாலுவைப் பார்க்கச் சென்றார். பாலுவுக்கு இன்னும் செய்தி தெரியாது.

மாணிக்கம் அழுகையோடு சென்றார். அங்கே போகும்போது பாலு படித்துக் கொண்டிருந்த நூல் 'மோசம் போன மோதிரம் முதலிய சிறுகதைகள்' என்ற நூல். அட்டையின் அடியில் சிவப்பு எழுத்தில் 'ஆர்.எஸ்.ஜேக்கப்' என்ற எழுத்துக்களைப் பார்த்த மாணிக்கம், 'இதென்ன பாலு? இது என்ன புத்தகம்? இது ஏது' என்றார். பாலு புத்தகத்தை மூடிவைத்துவிட்டு இந்த ஆசிரியர் அற்புதமாக எழுதியுள்ளார். அனைத்தும் பக்திக் கதைகள் என்றார். உடனே மாணிக்கம் 'இந்தத் தோழர் இன்று சதி வழக்கில் நம்மோடிருக்கிறார். அவர் ஒரு வாத்தியார்' என்றார்.

அவ்வளவுதான்.

பாலு துள்ளிஎழுந்தார். இந்த நூலை எழுதியவர் நம் தோழரா! ரிமாண்ட் பிளாக்கில் உங்களோடு இருக்கிறாரா? உடனே நான் பார்க்க வேண்டும், கூட்டி வாருங்கள்.

ஆனால் மாணிக்கம் இன்னும் தாங்க முடியாமல் 'ஓ' .... என்று அழுதார்.

'தோழரே, என்ன?' என்றார் பாலு.

---

* கடலூர் மாணிக்கம் : அவர் மாணவர் அரங்கத்தில் முழுநேரப் பணிபுரிந்தனர். 1948இல் நெல்லை மாவட்ட கம்யூனிஸ்ட் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கடினமாக உழைத்தவர். இன்று சதிவழக்கு கைதியாக சிறையிலுள்ளார். பின்னாளில் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலராக இருந்தார்.

தோழர் மாணிக்கம், விம்மினார், விக்கினார், பேச முடியாமல் திணறினார்.

'தெரிந்ததுதானே தோழர், கண்ணற்ற இந்த அரசு கருணை காட்டாது என்று எனக்குத் தெரியும், அழாதேயுங்கள்... என்றைக்கு அந்தச் சடங்கு? ' என்றார்.

அதற்குள் நாடு முழுவதும் செய்தி பரவிற்று.

மாணிக்கம் திரும்பும்பொழுது அந்நிலையிலும் பாலு, 'தோழரே மறந்திடாதீங்க, ஆர்.எஸ்.ஜேக்கப்-ஐ அழைத்து வாருங்கள், தோழர்களை அமைதியாய் இருக்கச் செய்யுங்கள்' என்றார்.

சிறையில் மேலதிகாரி வெளியிலிருந்து பார்க்க வரும் தோழர்களை தாராளமாக - ஒழுங்காக அனுமதித்தார்.

சிறையின் மேலதிகாரமே குலுங்கிக் குமுறியது.

தோழர் மாணிக்கம் ரிமாண்ட் பிளாக்கிற்கு வந்து வாத்தியாரை உடனே அழைத்து வந்தார்.

வாத்தியாருக்கு விவரிக்க இயலாத பூரிப்பு ஒரு பக்கம். மறுபக்கம் அரசின் காட்டு மிராண்டித்தனத்தை எண்ணி நெஞ்சு விம்மினார்.

தோழர்கள் நீர்நிறைந்த கண்களோடு வாத்தியாரைப் பெருமையாகப் பார்த்தார்கள். காலை மணி பத்துக்குள் உள்ளூர் பிரமுகர்கள், கட்சித் தோழர்கள் வர ஆரம்பித்துவிட்டார்கள்.

தோழர் மாணிக்கம் பாலுவைப் பார்த்து, 'காம்ரேட் பாலு ஆர்.எஸ்.ஜேக்கப் வந்திருக்கிறார். நாங்கள் வாத்தியார் ஜேக்கப் என்று அன்போடு அழைப்போம்.

அவ்வளவுதான். துள்ளிக்குதித்து எழுந்தார். அறையின் இரும்புக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு, 'எழுத்தாளரே, உங்கள் புத்தகத்தைப் படித்தேன். கதைகள் அனைத்தும் வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றன. பக்தி பரவசமாக உள்ளன. 'ஆகாமல் போன அரிசி, காணாமல் போன கால் ரூபாய்' என்ற கதைகள் என்னைச் சுண்டி இழுத்தன. நீங்கள் ஒரு கம்யூனிஸ்ட் ஆக இருப்பதில் எனக்குக் கொள்ளை மகிழ்ச்சி..

தோழரே, கதைகள் வாழ்க்கையை படம்பிடித்துக் காட்டினால் மட்டும் போதாது: யதார்த்தம் மட்டும் காணாது. வாழ்வு தழைக்க வழிகாட்டுவதாயும் இருக்க வேண்டும். பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும். நீங்கள் பைபிளோட, மார்க்ஸியமும் கற்று எழுதும்போது உங்கள் எழுத்துக்களில் வலு பிறக்கும். உழைக்கும் வர்க்கத்திற்கும், ஏழை எளிய மக்களுக்கும் பயனுள்ள கதைகளாய் அமையும். வாத்தியார் ஜேக்கப் அவர்களே, செய்வீர்களா? என்று உள்ளம் பொங்கி சிரித்தவாறு பாலு கேட்டார்.

வாத்தியார் அழுகையோடும் வீரத்தோடும் பேசினார்.

'தோழர் பாலு, உங்கள் பேரால் சபதம் ஏற்கிறேன். என் சிந்தனையும், திறமையும் எழுத்து வன்மையும் அனைத்துத் தூரப்பான மக்களுக்கே. என் எழுத்துக்கள் உழைக்கும் மக்களுக்கே சொந்தம்' என்று கைமுஷ்டி தூக்கி வாக்களித்தார்.

பாலுவின் பேட்டியால் என் சிறைத்துன்பங்கள் யாவும் ஒழிந்தன போல் இருந்தன. அடுத்து பேட்டி காண வந்த போலிஸ் நண்பர்கள் கதறி அழுதார்கள். வீறுகொண்ட ஏறுபோல் குதித்தார் பாலு.

'என் நண்பர்களான ரிசர்வ் போலிசுக்கு ஒரு வார்த்தை ; எனது தூக்கு குறித்து நீங்கள் யாவரும் துயரப்படுவீர்கள் என்று எனக்குத் தெரியும். சகோதர பி.சிக்களே* உங்களுடைய கோரிக்கைகளுக்காக தைரியமாகப் போராடினேன். வெற்றி பலவும் பெற்றேன். என் மீது நீங்கள் கங்கு கரையற்ற அன்பு கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது இதுதான். தொழிலாளி வர்க்கத்தின் தலைவர்கள் சமுத்திரம் போல் மக்களைத் திரட்டிக் கொண்டு வருகிற காலத்தில் துப்பாக்கியின் போல்ட்டை (POLT) கழற்றி அந்தத் தலைவர்களிடம் கொடுத்துவிடுங்கள். மக்களிடம் கண்ணியமாக நடந்து கொள்ளுங்கள். மக்களை நேசியுங்கள். மக்களைத் தாயாகவும் தகப்பனாகவும் கருதுங்கள். தொழிலாளி வர்க்கத்திற்குப் பக்க பலமாக நில்லுங்கள். மக்களைக் கொல்லாதீர்கள்' என்றார்.

'இந்த அரசு பாலுவைத் தூக்கில் போடும் ரகசியத்தைப் புரிந்து கொண்டேன். போலிசுக்கு இப்படி உபதேசம் செய்தால் நாடு உருப்பட்டுவிடுமே. நாட்டை உருப்படாமல் செய்வதுதானே முதலாளித்துவ அரசின் வேலை. துப்பாக்கியின் போல்ட்டைக் கழற்றி மக்கள் தலைவர்களிடம் ஒப்படைத்துவிட்டால் உலக சமாதானம் உடனே வந்துவிடுமே' என்று உள் மனதில் சிந்தித்துக் கொண்டிருந்த வாத்தியாரைப் பார்த்து தோழர் மாணிக்கம் 'போவோம் வாருங்கள்' என்றார்.

பேட்டி காணும் கூட்டம் வருவதும் போவதுமாக இருந்தது. வந்தவர்கள் வீரவணக்கம் செய்வதும், போர் முழக்கப் பேச்சைக் கேட்பதும் ஓர் அதிர்ச்சியான காட்சியாகும். நாங்கள் ரிமாண்ட் பிளாக்கை நோக்கி நடந்தோம்.

பாலு இருந்த தூக்குக் கைதிகளுக்கான கொட்டடியின் அறை பூட்டப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் சிமிட்டியினால் ஆன வெராண்டா முழுவதும் குறுக்கும் நெடுக்குமாக பின்னப்பட்ட கம்பி வேலி போடப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் இருந்துதான் உறவினர்களும், நண்பர்களும், கட்சித் தோழர்களும் பேசவேண்டும். கூட்டம் கூட்டமாக, குழு குழுவாக, அணி அணியாக, தனித் தனியாக வந்து பேட்டி காண்கிறார்கள்.

பாலுவைத் தூக்கில் சாகடிப்பதற்குப் பிராயச்சித்தமாக சிறை நிர்வாகம் சற்று தாராளமாக நடந்து கொண்டது.

பேட்டி காண வருவோரைக் கண்டவுடன் பாலு சிங்கம்போல் குதித்து எழும்புகிறார். அழுகிறவர்களை வீறுகொண்டு எழச் செய்கிறார். கண்ணீர் வடிக்கிறவர்கள் அவர் சொல்வதைக் கருத்தோடு கேட்டு சிந்திக்கிறார்கள். அவரது ஆடை சாதாரண கைதிகளுக்குக் கொடுக்கப்படும் நூலாடையான முரட்டு கால்சட்டைதான். அதை மட்டுமே அணிந்திருக்கிறார். மேல் சட்டையை அணியவில்லை.

நல்லசிவப்பு நிறம். வயது 30. அழகான உருண்டை வதனம். கம்பீரமான தோற்றம். பிரகாசமான கண்கள். அந்தக் கண்களில் கருணையின் ஆனந்தம் களிநடனம் புரிகின்றன. தலை நன்கு சீவிவிடப்பட்டது போன்ற தோற்றம்.

* போலிஸ் கான்ஸ்டபிள்

குறிப்பு : இந்த அதிகாரங்களில் வரும் பாலுவின் பேச்சுக்கள் யாவும் தமிழ் மகாண ஆர்கனைசிங் கமிற்றி' அறிக்கையிலிருந்து அப்படியே எடுத்ததாகும்.

நாகரீகம் மிகுந்த, பண்பாடு மிக்க, ஒழுக்கம் நிறைந்த ஒரு வாலிபனுக்கு உரிய அம்சங்கள் அனைத்தும் தோழர் பாலுவிடம் இருந்தன.

அவர் தம்மைப் பார்க்க வருகிறவர்களைப் பார்த்து, 'எல்லோரும் வாங்கோ' என்று அன்புடன் வரவேற்று உடனே பேச ஆரம்பித்துவிடுகிறார். பாலுவைப் பார்க்கப் போகும் போது தண்டனைக் கைதிகள் சிலரைப் பார்த்த வாத்தியார் பிரமித்து நின்றார். தலையை நன்கு மொட்டைபோட்டு இருந்தார்கள். அப்பொழுது வாத்தியாருக்கு பைபிளில் படித்தது நினைவிற்கு வந்தது. 'சிம்சோனின் மகா பலம் அவனது தலை மயிரில் இருந்தது. தலை மயிரைச் சிரைத்தவுடன் பலமிழந்து சிறைச்சாலையில் மாவரைத்தான்'.

அதனால்தான் சிறைகளில் தண்டனைக் கைதிகளுக்கு மொட்டை போடுகிறார்கள் போலும். அவர்களது வீரியத்தை சிறை பறித்துக் கொள்கிறது.

ரிமாண்ட் பிளாக் அறையினுள் நுழையவும், குழவிக் கூட்டம் போல் எண்ணங்களின் அலைகள் திரண்டு வந்து வாத்தியாரின் மூளையில் கொட்டின. எழுபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 1889ல் குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் காந்தி, பட்டேல் போன்றவர்கள் இருந்த சபர்மதி சிறையில் இருப்பது போன்ற மகிழ்ச்சி வாத்தியாருக்கு ஏற்பட்டது. அவரின் நரம்புகள் முறுக்கேறியிருந்தன.

'எல்லா உயிர்களிலும் மகோன்னதமானது மானுடப்படைப்பு, எல்லாக் கலைகளிலும் மேலானது வாழ்க்கைக் கலை. இந்த இரண்டையும் பாவிகள் பாலுவிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்களே' என்று வாய்விட்டுக் கதறினார் வாத்தியார்.

20

சிறை மரண மௌனத்தில் ஆழ்ந்து கிடந்தது. நேற்று பிக்பாக்கெட் கேஸில் உள்ளே வந்திருந்த சாதாரண கைதியிலிருந்து, தூக்குத் தண்டனை கைதிகள் வரை ஒரே சோகம். சிறையில் உயர் அதிகாரியிலிருந்து, காணிக்கை வார்டர் உட்பட அனைவரும் துக்கம் மேலிட்டனர்.

சிறையின் முகமே சோகமாய் இருந்தது. ஆனால் தோழர் பாலு நாள் முழுவதும் ஆயிரக்கணக்கான மக்களைச் சந்தித்து வீர கர்ஜனை புரிந்து கொண்டிருந்தார். இது அவரால் எப்படி முடிகிறது? இரவில் அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் கடிதம் எழுதுகிறார்.

மார்க்ஸீய சித்தாந்த போதம், கட்சியின் மீதுள்ள ஆழமான விசுவாசம், கட்சிக் கொடியைக் கீழே போட்டுவிடாத வைராக்கிய பிடிவாதம், மனுக்குலம் மீதுள்ள தீராத நம்பிக்கை, மனித நேயத்தில் அவர் கொண்டுள்ள அன்பின்

ஆழம் - இவைகளே அவரைப் பிடரி சிலிர்த்து நிற்கும் சிங்கமென நிமிர்ந்து நிற்கச் செய்தது.

லாக்கப்புக்குள் புகுமுன் தோழர்களில் சிலர் கூடினர். கடந்த காலத்தில் கையாண்ட அதிதீவிர பலாத்காரப் போக்கினால் ஒரு உயிரைப் பறிகொடுத்திருக்கிறோமே என்ற ஆதங்கமும் - ஆயினும் இவர் எந்தப் பழி பாவமும் செய்யவில்லையே என்ற ஆக்ரோஷமும் அனைவர் முகத்திலும் வழிந்தது.

இது உட்கட்சி விவகாரம். ஆனால் தோழர் மாணிக்கம் பகிரங்கமாக வாய்விட்டார்.

'கடந்த காலத்தில் மக்கள் நலன் கருதி சில தவறுகள் செய்திருக்கிறோம். அந்த தவறுகளை மக்களிடம் பகிரங்கமாக ஒப்புக் கொள்வதன் மூலம் புதிய தவறுகளையும் குற்றங்களையும் தவிர்க்க முடியும்' என்றார்.

'புரட்சியானது தனக்குச் சொந்தமானவைகளில் சிக்கித் தவிக்கிறது' என்றார் மீனாட்சிநாதன்.

'இதில் உட்பொருள் நிறைய இருக்கிறது' என்றார் செண்பகம்.

'சொந்த கோபதாபங்களுக்கு ஏற்ப கட்சி கொச்சைப்படுத்தப்பட்டது' என்றார் மாயாண்டி.

'நாம்தான் மக்களிடமிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறோம், மக்கள் நம்மை விட்டு துண்டிக்கப்படவில்லை. மாறாக நேசிக்கிறார்கள்' என்றார் தோழர் நல்லகண்ணு.

மாலை மணி ஆறு. வார்டர்கள் தங்கள் கொத்துச் சாவிகளோடு வந்தார்கள். அவர்கள் யாரும் தோழர்களை அறைகளுக்குள் போகும்படி சொல்லவில்லை. எல்லா அறைகளிலும் பாலு பற்றிய செய்திகளே பரிமாற்றம் பெற்றன.

எட்டாம் எண் அறையினுள் அடைந்திருந்த ஐந்து தோழர்களும் மாயாண்டி பாரதியைச் சுற்றி அமர்ந்தார்கள். பாரதி கவலை தோய்ந்த குரலில்பேசினார்.

'கவர்னர், தோழர் பாலுவின் கருணை மனுவை நிராகரித்துவிட்டார் என்ற செய்தி காலையே தெரிந்து விட்டது. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று ஜில்லாக்களையும் சேர்ந்த 150 கம்யூனிஸ்ட்களுக்கும் தெரிந்துவிட்டது.

'நாம் நேசித்த பாலுவுக்குத் தூக்கு. அதுவும் இன்னும் இரண்டு நாட்களில். நாடு நகரங்களுக்குத் தெரிந்து மக்களைத் திரட்ட அவகாசம் கொடுத்துவிட்டால் மதுரை சிறையை உடைத்து நொறுக்கிவிடுவார்கள் என்று பயந்த அரசு செய்தியை இருட்டடிப்புச் செய்து அள்ளித் தெளித்த அவசர கோலமாக தூக்கிலிட தீர்மானித்துவிட்டது.

'கடந்த எட்டு மாதங்களாக தனி அறையில் பூட்டப்பட்டுக் கிடந்த பாலுவுக்கு வானவெளியைப் பார்க்க முடியாது. காற்று அவரிடம் நெருங்காது. இப்படி இரவும் பகலுமாக தனிக்கொட்டடியில் பூட்டப்பட்டுக் கிடந்த பாலுவுக்குத் 'தூக்குத் தண்டனை' என்றவுடன் சிறையிலுள்ள அனைத்து கைதிகளுக்குமே ஆத்திரம் பொங்கியுள்ளது. மாற்றார் நுழைய முடியாத மதுரை மத்திய

சிறைக்குள் பத்துப் பத்து பேராக பாலுவைப் பார்த்துப் போக அனுமதித்தது. சிறை வரலாற்றில் ஆச்சரியமானது. ஆயினும் இந்தத் தூக்கு அநியாயமானது. மக்களது கோரிக்கைகளை உதாசீனம் செய்துள்ளது என்று வார்டர் முதல் மேலாளர் வரை உணர்ந்திருக்கிறார்கள்.

'காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கம்யூனிஸ்ட்டுகளைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். தொழிலாளர்களையும்-விவசாயிகளையும் அடித்துக் கொன்றிருக்கிறார்கள். ஆனால் தூக்கில் போட்டுக் கொல்லும் சம்பவம் இதுவரை நடக்கவில்லை. ஜனாதிபதி நினைத்தால் நாளையும் தூக்குத் தண்டனையை ரத்து செய்யலாம் என்று பேசி முடித்து பாரதி மேலும் சொன்னார். இங்குள்ள மூத்த தோழர்களுக்குக் கிடையாத பெரும் பேறு நமது வாத்தியார் தோழருக்குக் கிடைத்துள்ளது. பாலுவின் ஆசியைப் பெற்றுள்ளார். அவர் இப்போது பாலுவிடம் பேசிய செய்தியைச் சொன்னார்.

நடந்த நிகழ்வுகளைச் சொல்லும்போது வாத்தியாரின் குரல் கம்மியது. நரம்புகள் தெறித்து நின்றன.

'பாலுவின் ஆசீர்வாதம் கிடைத்ததைப் பெரும் பெருமையாகக் கருதுகிறேன். எனது 17 வயதில் கன்னிப் படைப்பாகப் படைத்த சிறுகதைத் தொகுப்பை பாலு படித்துப் பாராட்டினார் என்பது என் சிந்தைக்கு எட்டாத விந்தையாக உள்ளது. அந்நூல் சிறை நூலகத்திற்கு எப்படி வந்தது என்பது ஆச்சரியமான ஒன்று என்று சொல்லி முடித்தார் வாத்தியார்.

'நாளை நம் தோழர்கள் பாலுவை பார்க்கப் போகிறோம் என்றார் பாரதி'.

டவர் க்ளாக் ஒவ்வொரு' மணி நேரமும் ஒலித்தது. 'தூக்குத் தண்டனைக்கு நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை ஒவ்வொரு மணித்துளியும் நமக்கு எச்சரிக்கிறது என்ற பாரதியிடம், 'வீணாகும் ஒவ்வொரு மணித்துளிக்கும் இந்த அரசு நமக்கு கணக்கு கொடுக்க வேண்டும்' என்றார் வாத்தியார்.

போத்தையா என்ற கைதி எடுத்துக்கட்டி பாடிய பாடலைப் பாடினார்.

> **'எழுந்திரடா, எழுந்திரடா ஏழ்மை நிறை தோழா**
> **எடுத்திடடா கொடுவாளை தொடுத்திடடா இன்றே**
> **எழுந்திடடா.....'**

பாடல் ஓங்காரக் குரலில் ஒலித்தது. சிறை முழுவதும் எதிரொலித்தது.

எடுத்திடடா கொடுவாளை.... என்ற வரியைப் பாட வேண்டாமென்று முக்கிய தோழர்களின் உத்தரவு பிறந்தது. எனவே அடுத்த இறுதி அடிகளைப் பாடினார்.

> 'புறப்படடா புதுமைமிகு புதுவாழ்வு வாழ!
> பொதுஉடைமை ஆட்சியிலே உரிமையுடன் சாக!
> வீண் பொழுது போக்காதே, வீரர்களை கூட்டு'

என்ற வரிகளை உணர்ச்சி ததும்பப் பாடினார்.

போத்தையா என்ற அந்தக் கைதி 300 வருட பழைமையான சிவன் கோவிலிலுள்ள தங்கக் கலசத்தில் இருந்த தங்கத் தகடுகளைத் தேவையான அளவு சுரண்டி பணமாக்கி அங்கவீனமாய் இருந்த தன் தம்பிக்கு ஒரு கடை வைத்துக் கொடுத்து திருமணமும் நடத்தி வைத்தார். மூன்று மாதங்கள்

கழிந்த பிறகே அது தெரிய வந்தது. சிறையில் சந்தோஷமாக இருக்கிறார். தவறாது நன்றியோடு சிவனை வழிபடுகிறார்.

அவர் தங்கள் கிராமத்தில் நடந்த ஒரு காரியத்தைச் சொன்னார்.

'நாகம்மா நல்ல அழகு. ஒழுக்கமான பிள்ளை. அவளை முனியன் என்ற அதே ஊர் இளைஞனுக்குப் பேசி முடித்திருந்தார்கள். அவனும் கடினமான உழைப்பாளி. வைரம் பாய்ந்த உடற்கட்டு.

நாகம்மா தன் வீட்டு சோளத்தட்டை படப்பில் நாற்று பிடுங்கிக் கொண்டிருக்கும்போது தன் முன்னால் கிடந்த ஒரு நாகப் பாம்பைக் கண்டாள். தான் அசைந்தாலும், நகண்டாலும் பாம்பு தீண்டிவிடும் என்று அறிந்தாள். மிகுந்த துணிச்சலோடு அதன் தலையில் சப்பென்று மிதித்துக் கொண்டாள். பாம்பு நகள முடியாதவாறு அழுத்தி மிதித்தாள். அது அவள் இடுப்பைச் சுற்றியது. தற்செயலாக அங்கு வந்த முனியன் தன் இடுப்பில் வைத்திருந்த சூரிக் கத்தியை உருவி அதன் வாலிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வெட்டினான். இறுதியில் கால்மிதி பட்ட பாகம் வரை வெட்டிவிட்டு கத்தியைக் கையில் பிடித்துக் காலைத் தூக்கி ஓடவும் முனியனின் வலது காலை பாம்பு கவ்விக் கொண்டது. நாகம்மா ஓடிப்போய் தீ இடுக்கி எடுத்துக் கொண்டு வந்து பாம்பின் தலையை இழுத்தாள் முடியவில்லை. பின்பு சோலையாசாரி வந்து குறடு வைத்துப் பிடித்து இழுத்தார். அதற்குள் முனியனுக்கு விஷம் தலைக்கேறி கீழே விழுந்து இறந்தான்.

நாகம்மா வெள்ளைச்சேலை கட்டி கைம்மை விரதம் பூண்டாள். அவ்வளவு கற்புள்ள ஊர் எங்கள் ஊர் என்றான் போத்தையா.

நடுநிசி. யாவரும் வலுக்கட்டாயமாகத் தூங்க முயன்றார்கள்.

21

அன்று 21-2-1951

நாளை பாலுவுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்.

ஆ.... நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அந்த அழகிய, உறுதியான, வட்ட முகத்தோற்றம் ஒவ்வொருவர் கண் முன்பும் நின்றது. ஆனால் பாலு தமக்குத் தூக்குத் தண்டனை என்பதையே மறந்துவிட்டார். பேட்டி காணவரும் கூட்டம் கூட்டமான மக்களை ஊக்கமூட்டி, உற்சாகமூட்டி உயரிய கருத்துக்களைச் சங்கநாதம் போன்று முழங்கிக் கொண்டிருந்தார்.

மரத்தில் மரிப்பது சாபம் என்று திருமறை கூறுகிறது. மனுமக்களின் சாபத்தை ஏற்று திருமைந்தன் சிலுவை மரத்தில் மரித்தார்.

அந்தத் தியாகத்தின் முன் மனுமக்களை ஒப்பிடமுடியாது.

பாலு கட்சியின் பலாத்கார சாபத்தை ஏற்று, வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு நிரபராதியான அவர் தூக்குமரத்தில் தொங்கப் போகிறார்.

அமெரிக்காவில் ஒரு கொலைக் குற்றவாளி தூக்கில் போடப்பட்டான். பிணத்தை வெளியே எடுத்தபிறகு பார்த்தால் உயிர் இருந்தது. பிழைத்துவிட்டான். இரண்டாம் முறை தூக்கில் போடுவதற்குச் சட்டத்தில் இடமில்லை. ஆனால் குற்றவாளி ஊமையாகிவிட்டான். கழுத்தில் கயிறு இறுக்கினபடியால் பேசமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. அவன் விடுதலை செய்யப்பட்டான்*.

'ஐயோ... ஆண்டவா! அப்படி ஒரு அதிசயம் பாலுவின் வாழ்வில் நாளை நடக்கக் கூடாதா?' வாத்தியார் ஏங்கினார்.

தூக்கிலிடும் கைதியின் எடையைப் பார்க்கிலும் ஒன்றரை மடங்கு எடையைத் தாங்கக்கூடிய மணிலா தூக்குக் கயிறு வந்துவிட்டது.

காலை மணி பத்து.

சிறை அதிகாரியிடமிருந்து அனுமதி கிடைத்தது. ரிமாண்ட் பிளாக்கிலுள்ள தோழர்கள் பாலுவிற்கு இறுதி வணக்கம் செலுத்தப் போகிறார்கள்.

ஒவ்வொருவரின் உடலும் நடுங்கியது.

கால்கள் பின்னலாடின

பாலுவின் முன் நின்றோம்.

'சக தோழர்களே, வாங்கோ' என்றவர் கர்ஜனையைத் தொடங்கினார்.

'தூக்கிலிட கவர்னர் ஆர்டரும் வந்துவிட்டது'. இந்த சர்க்கார் என்னை முட்டாள்தனமாக தூக்கிலிடுகிறது. ஒரு பாலுவைத் தூக்கில் போட்டுவிட்டால் தொழிலாளி வர்க்கமும் கம்யூனிசமும் அழிந்து போகுமென்று அறிவில்லாமல் நினைக்கிறது. என் உயிர் ஐந்து நிமிடங்களுக்குள் பிரிந்துபோகும். அதனால் உழைக்கும் கூட்டம் அழிந்துவிடுமா? பாடுபடும் பாட்டாளியினம் பாழும் குழிக்குள் மாய்ந்துவிடுமா? (சிரிக்கிறார்). அரசு கனவு காண்கிறது.

தோழர்களே! நண்பர்களே! நான் மீண்டும மீண்டும் உங்களுக்குச் சொல்கிறேன்.

நான் நிரபராதி. கொலையில் சம்பந்தப்படாதவன். நான் ஏழை எளிய, சக கான்ஸ்டபிள்களின் குறைகளைப் போக்குவதற்காக - மனிதர்களாக நடத்தும்படி போராடினேன். வெள்ளை சார்ஜெண்ட்டின் இனவெறியை அடக்கினேன். அதற்காகத்தான் என்னைப் பழிவாங்க வேண்டுமென்று கொலை கேஸில் சம்பந்தப்படுத்தி தூக்கில் போடுகிறார்கள்.

ஒரே அழுகுரல். பாலுவின் முன்நின்றோர் யாவரும் கதறிக் கதறி அழுதார்கள். துக்கம் தொண்டையை அடைத்தது. ஆனால் பாலுவோ சிங்க ஏறு என சிறைக்கம்பியைப் பிடித்துக் கொண்டு, 'அழாதீங்க, இந்த அரசைப் பார்த்து சிரியுங்க, உங்க சிரிப்பு அரசை எரிக்கும்' என்றார்.

கூட்டம் அலையலையாக வந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தினுள்ளும் வாத்தியாரை அடையாளம் கண்டு ஏறிட்டுப் பார்த்து, 'வாத்தியார் தோழரே! நான் சொல்லியதை செயல்படுத்துங்கள்' என்றார்.

* இந்நிகழ்ச்சிக்கு ஆதாரம் 1895 நவம்பர் 'நற்போதக' மாத இதழ்.

பாலுவின் முன் நிற்கும்போது சில நிமிடநேரம் உணர்வு முழுவதையும் ஒன்று திரட்டி கூர்மையாக அவரை நோக்கினால், மனித இதயம் படைத்த யாரையும் உருக்கி நொறுக்கிவிடும் என்பது திண்ணம்.

சிறைக்கூடம் இரவு முழுவதும் கூக்குரலின் கூடமாயிருந்தது.

'பாலுவைப் பார்க்க இவ்வளவு தாராளமாக விடாவிட்டால் மதுரை சிறையே சின்னாபின்னமாகிவிடும் என்று பயந்த அரசு பேட்டி காண வந்த மக்களைத் தாராளமாக அனுப்பியது. மலபார் போலீஸ்களைக் கொண்டுவந்து பாதுகாப்புக்கு நிறுத்தியிருந்தது. எப்படியாவது தூக்குத் தண்டனையை நிறைவேற்றிவிட வேண்டும். இது ஒன்றே அரசின் குறிக்கோளாயிருந்தது. தூக்கிலிடும் இடத்தைச் சுற்றி மாற்று மாவட்ட போலீஸ்களை நிறுத்தியிருந்தது. கோட்டை மதில்களைச் சுற்றி துப்பாக்கி ஏந்திய வடமாநிலப் போலீஸார் ரோந்து வந்தனர்.

'நாளை காலை மூன்று மணியிலிருந்து இருபத்திரெண்டாம் தேதி முடிய இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று தோழர்கள் இருக்கும் அனைத்து அறைகளுக்கும் செய்தி சென்றது. எட்டாம் எண் அறையிலுள்ள ஐந்து தோழர்களும் இரண்டு கிரிமினல் கைதிகளுமாக ஏழு பேரும் வட்டமாகச் சூழ்ந்திருந்தார்கள். கிரிமினல் கைதிகள் இருக்கும் அனைத்து அறைகளுக்கும் இரண்டிரண்டு கம்யூனிஸ்டு தோழர்கள் இரகசியமாக ஊடுருவியிருந்தார்கள்.

'இன்று முழுவதும் தூங்கக்கூடாது பாரதி ' என்றார் போத்தையா. அவர் கன்னத்தை வருடினார் மாயாண்டி பாரதி.

பின்பு பாரதி பேசினார்.

'அன்னை உயிரினுக்கே இன்று
ஆபத்து வந்ததடா
பின்னை நமக்குயிர் ஏன் - ரண
பேரிகை கொட்டிடுவோம்'

என்ற சுத்தானந்த பாரதியின் பாட்டை ஆவேசமாகப் பாடினார். எந்த இலட்சியத்திற்காக லஜபதி மாண்டாரோ, திலகர் போராடினாரோ, யதீந்திரர் உயிர் நீத்தாரோ, தேசபக்த இளைஞர்கள் அந்தமான் தீவில் கண்ணீர் சிந்தினார்களோ, பகத்சிங்கும் வாஞ்சிநாதனும் சிதம்பரனாரும் சிவாவும், பாரதியும், திருப்பூர் குமரனும், பம்பாய் பாபு கனுவும் இன்னுயிர் ஈந்தனரோ, காந்தி மகான் முதல் கலங்காத காளையர் வரை பெரும்பாடுபட்டனரோ, அந்த சுதந்திர இலட்சியம் - அடைந்த சுதந்திரம் இன்று பழுதுபட்டிருக்கிறது. மறுபரிசீலனை செய்து மாற்றியமைக்க வேண்டியுள்ளது. அதுதான் இன்றைய நம்பணி.'

'காமராஜரோடும் முத்துஇராமலிங்கத் தேவரோடும் முன்னாள் ஜனாதிபதி சஞ்சீவி ரெட்டியோடும், ஜீவா, ராமமூர்த்தி, பாலதண்டாயுதம் இவர்களோடெல்லாம் சிறையிலிருந்த நான், பாலு தூக்கிலிடப்படும் போதும் சிறையிலிருக்கிறேன் என்று சொல்லிக் கொள்வதில் சிறுமையடைகிறேன், ஏனெனில் நானும் 'தியாகி' யாகியிருந்தால் பெருமை கொண்டிருப்பேன்.

'அருமைத் தோழர்களே! நேற்று இரவு முழுவதும் பாலு தூங்கவேயில்லை என்று சிறையதிகாரி சொல்கிறார். அனைத்துத் தொழிற்சங்கத்

தலைவர்களுக்கும், மதுரை பஞ்சாலைத் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், சட்ட உதவி கமிட்டியாருக்கும், உலகத் தொழிற்சங்கத் தலைவர் டாங்கேக்கும் மற்றும் நம்பியார், சர்க்கரைச் செட்டியார், ஏ.கே.ஜி., எம்.ஆர்.வி., வக்கீல் சண்முகம், வழக்கறிஞர் என்.டி.வானமாமலை இன்னும் பலருக்கும் கடிதங்கள் எழுதினார்.

'அவைகளில் எல்லாம் இரு விஷயங்களை வலியுறுத்தியுள்ளார்.

தொழிற்சங்கத் தலைவர்கள் பொதுக் கோரிக்கைகளுக்காக ஒற்றுமையாக இருந்து போராட வேண்டும்.

நான் நிரபராதி இந்தக் கொலை வழக்கில் எனக்குச் சம்பந்தம் கிடையாது.

என்ற இரு காரியங்களைத் திட்டத் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.

நகைச்சுவைப் பேச்சாளரும் எழுத்தாளருமான மாயாண்டிபாரதி, நகைமுகம் காட்டாமல் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகப் பேசினார்.

பின்பு தொடர்ந்து நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகளைக் கூறினார். சிறை நிர்வாகம் தோழர்களை நம்பி இன்றும் நாளையும் சிறையை ஒப்படைத்திருந்தது. ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலை நாட்டுவது நமது கடமை' என்று முடித்தார் பாரதி.

சிறையில் அறைகள் அமைதலாயின.

தங்கள் வாழ்நாளில் இப்படி நடந்ததில்லை என அனைத்து வார்டர்களும் சொன்னார்கள். பேட்டி கண்டவர்களிடம் பாலு சொன்ன உயில் போன்ற உயிரான மொழிகளை ஒன்றுவிடாமல் பதிவு செய்தனர் தலைவர்கள். மாயாண்டி பாரதி அவைகளைத் தொகுத்து மாகாண கமிட்டிக்கு அனுப்பிக் கொண்டேயிருந்தார்.

எல்லாம் சில வார்டர்களின் இரகசியத் தர்மப்பணியே.

22

பதினோராம் மணி வேளை தாண்டி நடுநிசியாயிருந்தது. 'ஆ... பாலுவைப் பலிகொடுக்கப் போகும் 22 ம் தேதி பிறந்துவிட்டது. ஐயகோ... ஆண்டவா... அலறித் துடித்து எழுந்தார் வாத்தியார்'.

கட்சித் தலைவர்கள் இட்ட கட்டளையை யாவரும் கடைபிடித்தனர். அறைகள் முழுவதும் அமைதியான அழுகுரல்கள், வீரசபதங்கள் ஏற்றனர். வெஞ்சினங்கள் கூறினர். விசாரணைக் கைதிகளான தொளாயிரம் கிரிமினல் கைதிகளும் கம்யூனிஸ்ட் தோழர்கள் போலவே நடந்து கொண்டதுதான் பெருத்த ஆச்சரியம். சிறை வரலாற்றிலேயே நடவாத ஒரு நிகழ்வு.

'ஏ' செல், தூக்குக் கொட்டடியின் அருகில் இருக்கிறது. அதில் கூத்தக்குடி சண்முகம், எம்.வி.சுந்தரம், மதுரை வி.கருப்பையா போன்ற முக்கிய தோழர்கள்

அடைபட்டிருந்தார்கள். அப்பொழுது அதிகாலை 2 மணி. அதுவரை எழுதவேண்டிய கடிதங்களையெல்லாம் எழுதி முடித்துவிட்டு தோழர் பாலு எழுந்து உரத்தக் குரலில் சொன்னார்.

'கடைசி முறையாகச் சொல்கிறேன். ஒவ்வொருவரும் உலக சமாதானத்திற்காகவும், பாட்டாளி மக்களின் நல்வாழ்விற்காகவும் பாடுபட வேண்டும் என்பதே என் இறுதி வேண்டுகோள். அதை நிறைவேற்றுங்கள்' என்று தன் சக்தி முழுவதையும் திரட்டி தோழர்களை அறைகூவினார்.

எல்லோர் உடலும் சிலிர்த்து நின்றது.

மணி எவ்வளவு விரைவாக ஓடுகிறது. 22.2.1951 அதிகாலை மணி 3.30. செங்கொடிப் பாடல்கள் புரட்சிப் பாடல்கள் ஒவ்வொரு அறைகளிலிருந்தும் புறப்பட்டுக் கிளம்பின. ஒரு பிளாக் பாடி முடியவும், அடுத்த பிளாக் பாடும்.

'பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் பதறுகின்ற மனிதர்காள்
பாரில் கடையரே எழுங்கள் வீறுகொண்ட தோழர்காள்'

என்ற வரிகள் வீறுகொண்டு எழுந்தன.

அடுத்த பிளாக் உடனே,

'காடு வெட்டி மலையுடைத்து கட்டிடங்கள் எழுப்புவோம்
கவலையற்ற போக வாழ்வை சகலருக்குண்டாக்குவோம்'

என்ற போர் முழக்கப்பாடல், வீர கெம்பீரமாக முழங்கியது.

அதிகாலை மணி நான்கு. அனைத்துக் குரல்களும் அடங்கின. மரண அமைதி நிலவியது. மணி நான்காகியதும் பாலு பாட்டுப்பாடும்படி அவர்கள் கேட்டிருந்தார்கள். இம்மட்டாக சக கைதிகளின் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த பாலு தம் இருகரங்களையும் இரும்புக் கம்பிகளைப் பிடித்தவாறு சிம்மக் குரலில் பாடினார்.

'செங்கொடி ஏந்தி வாரீர்
திரண்டு ஒன்றாய்'

என்ற பாடல் தெளிவான குரலில் ரீங்காரித்தது.

குமட்டும் நாற்றம் பிடித்த அறைகளுக்குள் கிடக்கும் கைதிகள் பாலுவின் குரலை செவிமடுத்துக் கேட்டார்கள். அமைதியான அந்த அதிகாலை வேளையில் சிறை முழுவதும் பாலுவின் இனிய குரல் எதிரொலித்தது.

இப்பொழுது அதிகாலை மணி நான்கு, பதினைந்து.

தூக்குக் கொட்டடிக்கு அதிகாரிகள் ஒன்றன்பின் ஒன்றாய் - பூட் கால்களின் ஓசையில்லாமல் நடுக்கத்தோடு வருகின்றனர். பாவம், அவர்கள் அரசு ஆணைக்குக் கீழ்ப்படிய வேண்டிய அதிகாரிகள்தானே. ஆயினும் குற்ற உணர்வோடு மெதுவாகக் கதவைத் திறக்கிறார்கள்.

ஆயத்தமாக எழுந்துநின்ற பாலு வாங்கோ, என்கின்றார். நாதாங்கியின் சத்தம் கணீரென்று கேட்பதை அவர்களால் தடுக்க முடியவில்லை. அவர்களுக்கு வேர்வை வியர்த்துக் கால்வழியே வழிகிறது. அது அவர்களுடைய உணர்வுகளின் இரத்த வியர்வை என்று கூடச் சொல்லலாம்.

பாலுவின் கரங்களில் விலங்குகள் பூட்டப்படுகின்றன. புயங்கள் கம்பிகளால் இறுக்கப்படுகின்றன. கண்டம் செல்லை விட்டுக் கீழிறங்கும்போது, 'புரட்சி ஓங்குக, கம்யூனிஸம் சிந்தாபாத்' என்று உற்சாகமாக கோஷம் போடுகிறார். 'தூக்கில் மடிவது என்னோடு நிற்கட்டும்' என்று உரத்த குரலில் உயில் எழுதுகின்றார்.

இரவு முழுவதும் கண் விழித்திருந்த 'ஏ' செல் தோழர்கள் தங்கள் சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி,

'காம்ரேட் பாலு ஜிந்தாபாத்
கம்யூனிஸ்ட் பார்டி ஜிந்தாபாத்'
'தொழிலாளி வர்க்கத்திற்கு ஜே
செங்கொடிக்கு ஜே'
'உலக சமாதானம் வாழ்க'

என்ற கோஷங்கள் ஜெயிலை அதிர வைத்தன. அதைத் தொடர்ந்து ஒன்பதாம் பிளாக், ரிமாண்ட் பிளாக், தண்டனை பிளாக் அனைவரும் இடியென முழங்கினர்.

தோழர் பாலுவை அதிகாரிகள் தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்கிறார்கள். போகும் வழியில் ராமனாதபுரம் சதிவழக்குத் தோழர்களான பேராசிரியர் எம்.ஜி.நாயரும் ஆவுடையப்பனும் தோழர் வேலாயுதமும் லாக்கப்பில் இருந்தார்கள்.

அவர்கள் 'பாலு வாழ்க!' என்று முழங்கினார்கள்.

அந்த இடத்திற்கு நேராக பாலு சற்று நின்று 'பாலு வாழ்க' என்று சொல்லாதீர்கள், 'புரட்சி ஓங்குக! தொழிலாளி வர்க்கம் ஓங்குக' என்று சொல்லுங்கள் என்று தெளிவாகச் சொன்னார். மறுநிமிடம் அவர் சொன்னபடியே உரத்தக் குரலில் கோஷமிட்டனர்.

பாலு போகும்போதே 'புரட்சி வாழ்க, புரட்சி வாழ்க' என்று முழங்கிக் கொண்டே சென்றார்.

தூக்கு மேடை ஏறியாகிவிட்டது. ஆயினும் 'புரட்சி ஓங்குக' என்னும் சுலோகத்தை விடவில்லை. ஆரம்பத்தில் என்ன உற்சாகத்தில் கோஷமிட்டாரோ, அதே உற்சாகத்தில் இறுதிநேரம்வரை கோஷமிட்டார். முகத்தில் மகிழ்ச்சி கொஞ்சம்கூட மாறாமல் பளிச்சிட்டது. நிலவொளியில் முகம் பிரகாசித்தது. முகத்தைக் கறுப்புத் துணியால் மூடி மறைத்தனர்.

பாலு, தூக்கு மேடையில் நின்றார். அவர் வாய் 'புரட்சி ஓங்குக' என்று சொல்லிக் கொண்டிருந்தது. சிறையில் நான்கு சுவர்களுக்கு அப்பாலிருந்தும் 'காம்ரேட் பாலு ஜிந்தாபாத்' என்ற முழக்கம் விண்ணையும் மண்ணையும் துளைத்தது.

சிறை அதிர்ந்தது.

தூக்கு மேடையில் ஏறும்போதும் பாலுவின் இறுதிப்பேச்சு 'உலகப் பொதுஉடைமை ஓங்குக' என்பதுதான்.

'செங்கொடி என்றதுமே எனக்கோர் இன்பம் பிறக்குதம்மா' என்ற இறுதிப்பாடல் இன்பகானமாய் ஒலித்தது.

அமைதி.... அமைதி.... அமைதி...

பாலுவின் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டது. பாலுவைத் தாங்கி நின்ற பலகையின் விசை உருவி விடப்பட்டது. பாலுவின் உடல் அப்படியே கீழே இறங்கியது.

படக்.... உயிர் போனது.

உடல் தொங்குகிறது.

வார்டர்கள், அதிகாரிகள், நீதிபதிகள், மருத்துவர்கள் அனைவரும் அழுகிறார்கள்.

வெளியே பொதுமக்கள் அண்டம் அதிர இடியென முழங்கி கதறிக் கதறி கோஷமிடுகின்றனர்.

வானமளாவிய சிறைக்கோட்டத்தின் மதிற்சுவர்கள் பாலு, பாலு என்று எதிரொலிக்கின்றன.

பாலு தியாகியானார்.

இரத்தச் சாட்சியாக மரித்தார்.

22.2.1951, அதிகாலை ஆறுமணி. தோழர்கள் கறுப்புக்கொடி தாங்கி, தலை கவிழ்ந்து சிறைக்குள் ஊர்வலம் வந்தார்கள்.

ஊர்வலத்தை முடிக்கும்பொழுது, தோழர் மாணிக்கம் சொல்லச் சொல்ல மறுமொழி செய்து சபதமேற்றார்கள்.

'தோழர் பாலு,

உன் அடிச்சுவட்டைப் பின்பற்றி நீ விட்டுச் சென்ற மகத்தான பணியை நிறைவேற்ற எங்கள் இறுதி மூச்சுவரை போராடுவோம். உன் இரத்தம் தோய்ந்த செங்கொடியை மாசுறாது காப்போம் என்று முஷ்டி உயர்த்தி சபதமேற்றார்கள்.

காலை ஆறுமணிமுதல் மாலை ஆறுமணி வரை உண்ணா நோன்பிருந்தார்கள். துக்கத்தில் தோய்ந்து உண்ணா நோன்பிருந்த அதிகாரிகளும் வார்டர்களும் கிரிமினல் கைதிகளும் பலர் உண்டு.

சாவின் முகத்தில் சிறைச்சாலை அழுது வழிந்தவாறு இருந்தது. மதுரைத் தெருக்களிலெல்லாம் முத்துக்கள் சிந்திக் கிடந்தன, என்று பழங்காலத் தமிழ்ப்பாடல்கள் கூறுகின்றன. அந்த வளம் கொழிக்கும் வீதிவழியே இன்று தியாகி பாலுவின் இரத்தத் துளிகள் சிந்திக் கிடக்கின்றன. போலீஸ்காரர்களின் முரட்டு பூட்ஸ் தடங்கள் பதிந்து கிடக்கின்றன.

கண்ணகியின் காலடிபட்ட மதுரை மாநகரே! மீண்டும் உன் செங்கோல் வளைந்ததோ? உன் கொற்றம் சிதைந்ததோ?

23

சிறைக்கதவுகள் அடைபடுமுன் சில மணித்துளிகள் சுதந்திரமாகப் பேசும் தருணம் கிட்டும். கிரிமினல் கைதிகளோடு பழகும் வாய்ப்பும் அப்பொழுதான் கிடைக்கும்.

'என்ன இருந்தாலும் இது கொடிய பாவம்' என்றார் வாத்தியார் பக்கமாக வந்த ஒரு கைதி.

'நீங்க என்ன கேஸ், உங்க பேர் என்ன?'

'என் பேர் செந்தூர், முத்துக் கோனார்னு ஒருவர் எங்க ஊர்ல் வந்து சலுகை விலையில் சாமான்கள்' என்று சொல்லி கொள்ளை மலிவில் வீட்டு உபயோகப் பொருட்களை அள்ளிக் கொடுத்தார். மீதிப்பேருக்கு ஒருவாரம் கழித்துத் தருவதாகப் பணம் வசூலித்தான். லட்சக்கணக்கில் சேர்ந்து போச்சி. ஆள் தலைமறைவு ஆயிட்டான். மூன்று மாதங்கள் கழிந்தது.

தச்சநல்லூர் பக்கம் பார்த்துக் கொண்டேன். உடுத்த வேட்டியோடு பிடிச்சிக்கிட்டேன். நாலு சாத்து சாத்தினேன். உடனே போலீஸ்ல ரிப்போர்ட் பண்ணினான். போலீஸ்களுக்கு பணத்தை இறைத்தான். 'கொலைமுயற்சி' என்று பொய்கேஸ் போட்டிருக்கு' என்றார்.

'சரி, 'கொடிய பாவம்னு' சொன்னீங்களே, பாவம்ன்னா என்ன?'

'தவறுன்னு தெரிஞ்சபிறகும் செய்றது பாவம், பாலுவை தூக்கில் போட்டது அநியாயப் பாவம்'.

பாவத்திற்கு அவர் கொடுத்த விளக்கம் வாத்தியாருக்குப் பிடித்தது. அதற்குள் பக்கத்தில் நின்ற போத்தையா என்ற கைதி 'இவன்க செக்கு விழுங்கிகள்' என்றார்.

அதெப்படி என்றார் வாத்தியார்.

'ஏசு மீது எந்தத் தப்பும் கிடையாது என்று ரோமை நாட்டு அதிபதி பிலாத்துக்கு நல்லா தெரிஞ்சிது. ஆனாலும் பதவியைக் காத்துக் கொள்ள 'இந்தப் பாவமும் பழியும் என்மீது இல்லை' என்று தண்ணீரில் கையைக் கழுவி சிலுவையில் அடிக்க ஒப்புக் கொடுத்தார். இதைத்தான் பாளை கவிஞர் எச்.எ. கிருஷ்ணபிள்ளை தம் இரட்சண்ய யாத்திரிக காப்பியத்தில் 'செக்கு விழுங்கிகள்' என்கிறார். செக்குன்னா தோழருக்கு தெரியுமோ... எண்ணெய் பிழியும் கல் செக்கு ; ஆயிரம் பேர் சேர்ந்தாலும் அசைக்க முடியாது' என்றார்.

வாத்தியார் விழுந்து விழுந்து சிரித்தார்.

அதற்குள் அடுத்த கைதி 'வெள்ளைக்காரங்க மலைவிழுங்கி மகா தேவர்கள் என்றால் நம்ப ஆள்க செக்கு விழுங்கிய தேசத் தலைவர்கள்' என்றார்.

'சிறைச்சாலை ஒரு மௌனமான பல்கலைக்கழகம்' என்று சொல்லவும் வார்டர்கள் வந்து கைதிகளை விரட்டினார்கள்.

இவ்வாறாக கைதிகள் பலர் தோழர்களிடம் வந்து 'துக்கம்' விசாரித்தார்கள்.

மாலை மணி ஆறு முப்பது.

சிறைக் கதவுகள் அடைபட்டன.

அருமையான உயிரைப் பறி கொடுத்த 'இழவு வீடு' போன்று சிறை தோற்றமளித்தது.

கைதிகளும் தோழர்களுமாக மாயாண்டி பாரதியைச் சுற்றி வட்டமாக அமர்ந்தார்கள்.

வாத்தியார் உணர்ச்சியால் உந்தப்பட்டு ஒரு பாட்டைப் பாடினார்.

'உலகம் எதிர்த்துனக்கு மலைவு செய்தாலும்
உறுதி விட்டயராதே நெறி தவறாதே
மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்
மருள விழாதே, நல் அருளை விடாதே'

அவருக்குப் பாட்டு வராவிட்டாலும் இந்தப் பாடலில் ஒருவித சோகமும், சவாலும் கலந்திருந்தது. முட்களால் குத்துண்ட குயில்பாடுவது போன்றிருந்தது. பாடி முடியவும் 'இது நம்ம வேதக்கோயில் பாட்டாச்சே' என்றார் சேவியர்.

'இது என்ன பாட்டுடா... எட்டயபுரம் பாரதி பாடிய
'அச்சமில்லை... அச்சமில்லை.... நச்சை வாயிலே கொணர்ந்து
நண்பரூட்டு போதினும்'
அச்சமில்லை, அச்சமில்லை'
என்ற பாடலின் சாயல் இருக்கிறதே' என்றார் மாயாண்டிபாரதி.

வாத்தியார் சொன்னார்.

'மகாகவி பாரதி பாடியதற்கும் அரை நூற்றாண்டிற்கும் முன்னாலுள்ள நெய்யூர் புலவர் ஜான் பால்மர் பாடியது'.

சிறைபாரதி மூக்கில் விரலை வைத்தார்.

'முதலையின் முதுகுத்தோலை எந்த ஆயுதத்தாலும் துளைக்க முடியாதாம். அதுபோல முட்டாள் அரசுக்கு எந்த உபதேசமும் காதில் ஏறாமல் பாலுவின் உயிரைப் பலி வாங்கிற்று' என்றார் செண்பகம்.

'அரிய பெரிய புரட்சிப் போதனைகளைப் போதிக்கும் நாட்களாக இந்த இரு தினங்களும் விளங்கின. வாழ்நாள் முழுவதும் கிடைத்த புரட்சி அனுபவமும், புத்தி தீட்சண்யமும், நல்லொழுக்கமும் நல்லெண்ணமும் பாலுவின் முகத்தில் பிரகாசித்தன" என்றார் சீனிவாசன். அவர் கண்கள் கலங்கிச் சிவந்து போயிருந்தன.

வேலாயுதத்தின் தனி அறைப்பக்கம் சென்றிருந்த ஏழாம் நம்பர் வார்டர் வந்து அவர் பேசியதை அப்படியே நடித்துக் காட்டினார். 'ரொம்ப அபூர்வமாப் பேசுற அவர் இன்று என்னைக் கூப்பிட்டு ஆக்ரோசத்தோடு பேசினார்'.

'அநியாயப் பாவிப்பசங்க விளங்கவே மாட்டாங்க. பால் போன்ற உள்ளம்

கொண்ட பாலு, 'நான் நிரபராதி, கொலையில் சம்பந்தப்படாதவன் என்று இறுதி வேளைவரை வாக்குமூலம் கூறி இருக்கிறார். மரண உயில் போன்று உள்ளம் திறந்து பேசி இருக்கிறார். உலகத் தலைவர்களுக்கெல்லாம் எழுதி இருக்கிறார். அப்படி இருக்க தூக்குல மாட்டிக் கொல்லணும்னா இது பழி தீர்க்கிற வேலைதான....' என்று கூறி துண்டை உதறி நெஞ்சு வலி தாங்காமல் படுத்துக் கொண்டார். சற்று கழித்து வந்து உற்றுப்பார்த்தேன். ஒரு மூலையில் இருந்து இறுமிக் கொண்டிருந்தார், பாவம் அவர் எங்கே பிழைக்கப் போறார்.... போலீஸ்காரங்க மத்தியில நாட்டுப்பற்றும், மனிதப்பாசமும் கொஞ்சம் வளர்ந்து வரும்போது **'போலீஸ் பாலுவை'** கொன்னுப்புட்டாங்க, வீட்டின் மேல் முளைத்த செடியைப் போல வர்க்க உணர்வு வளருமுன் செடிவாடிப் போயிற்று...." என்று அழுது கொண்டே சொன்னார் அந்த வார்டர்.

'நாம் பாலுவை பார்க்கப் போகும்போது இறுதி வேளையில் அவர் சொன்னது. என் உள்ளத்தில் சித்திரம்போலப் பதிஞ்சிட்டு' என்றார் சேவியர். அவர் பேசிய மாதிரியே அப்படியே பேசிக்காட்டினார்.

' என் அருமைத் தலைவர்களே, தோழர்களே வாங்கோ, பாலுசாமிக்கும், பவநகர் மகாராஜாவுக்கும் உள்ள பிரச்சினை அல்ல. இது ஒரு வர்க்கப் போர். சுரண்டலற்ற சுதந்திரப் போர். இதில் ஜெயிக்கப்போவது தொழிலாளர் கூட்டம்தான். முதலாளித்துவ அரசுகளுக்கு இப்பொழுது என்ன கதி ஏற்பட்டு வருகிறதென்று சரித்திரம் பேசுகிறது.

'வடகொரியாவில் போய் புகுந்து கமலை மாடுபோல் முன்னும் பின்னும் இழுபட்டுக் கொண்டு நாசமாகிறார்கள், அமெரிக்க யுத்த வெறியர்கள். கொரியா சின்ன நாடாக இருந்தாலும், மக்கள் தொகையும் சிறிதளவே இருந்தாலும் அந்தச் சிப்பாய்கள் ஜெயிக்கிறார்கள். காரணம், அவர்கள் மார்க்சியம் படித்தவர்கள்; மக்களைப் புரிந்தவர்கள், சமூக வளர்ச்சியை விஞ்ஞான பூர்வமாகத் தெரிந்தவர்கள்".

'நாக்கினால் உதடுகளை நனைத்துக் கொண்டிருந்த பாரதி அனைத்தையும் உன்னிப்பாகக் கவனித்துவிட்டுப் பேசினார்'.

'பாலு, பலரிடமும் பேசிய பல அபூர்வமான செய்திகள் நமக்கு இன்னும் பூரணமாகக் கிடைக்கவில்லை. ஒரு முக்கியமான செய்தியை இதுவரை யாரும் சொல்லவில்லை.

மதுரையிலுள்ள மக்கள் தலைவர்கள் சிலர் ஒரு குழுவாகக் கூடி வந்து பார்த்தார்கள். அவர்களில் ஒருவர் இப்படிச் சொன்னார்.

"பாலு, சமாதானத்தை முன் வைத்து வெளியே இயக்கம் தீவிரமாக நடக்கிறது. கட்சியும் தன்னைத் திருத்திக் கொள்கிறது என்றபோது அடல் ஏறு என பாலு அங்கும் இங்கும் நடந்தார். பின்பு புன்னகை பூத்த முகத்துடன் சொன்னார்.

'தலைவர்கள் விவாதித்து ஒரு குண்டு செய்யட்டும், அக்குண்டை தொழிலாளர் முன் கொண்டு வைக்கட்டும். அவர்கள் தங்கள் அனுபவத்திற்கு உகந்த ஒரு குண்டை சொல்வார்கள். பிறகு கூட்டு முடிவில் ஒரு புதுக்குண்டை செய்வார்கள். மீண்டும் கூடிக்கலந்து இன்னொன்றை வடிவமைப்பார்கள். மக்கள் விரோதிகள் மீது அதை பிரயோகியுங்கள். கட்டாயம் வெற்றி கிட்டும்.

கட்சிக் கொள்கையைக் குண்டு என்று உருவகப்படுத்திப் பேசியதைப் பாரதி வியந்து வியந்து கூறினார்.

'கடைசியா நா ஒண்ணு சொல்றேன்' என்றவாறு வாத்தியார் தொடந்தார்.

'ஒண்ணென்ன இரண்டு சொல்லு' என்றார் பாரதி.

'செக்நாட்டு கம்யூனிஸ்ட் ஜீலியஸ் பூசிக்கிற்கு 1943 ஆகஸ்ட் 25ஆம் தேதி பெர்லினில் கூடிய நாஜி கோர்ட் மரண தண்டனை விதித்தது. அதன்பின்பு 14 நாட்கள் கழித்து 1943 செப்டம்பர் எட்டாம் நாளில் பெர்லினில் தூக்கிலிடப்பட்டார்.

அவர் பான் கிராப்ட்ஸ் சிறையிலிருந்து துண்டுத் தாள்களில் எழுதிய குறிப்புகளை நம்பிக்கையான காவலாளிகளிடம் கொடுத்து வைத்தார். அந்தக் காவலாளி அவ்வப்போது தனக்கு நம்பிக்கையான வேறு சிலரிடமும் கொடுத்து வைத்தார்.

1945 ஏப்ரலில் ஹிட்லர் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டது. கைதிகள் சிலர் தெய்வச் செயலால் விடுதலையாயினர். அப்படி விடுவிக்கப்பட்டவர்களில் ஒரு பெண் கைதி ஜுலியஸ் பூசிக்கின் மனைவி. அவர் தம் பிறந்த நாட்டிற்குத் திரும்பி தன் கணவனைத் தேடி அலையும்போது,

செக் காவலாளி மூலம் தம் கணவர் எழுதிய குறிப்புகளைக் குறித்து அறிந்தார். அனைத்தையும் ஒன்றுவிடாமல் திரட்டி 'தூக்கு மேடைக் குறிப்பு' என்ற நூலினை வெளியிட்டார்.

பூசிக்கின் கடைசிக் குறிப்பான எட்டாவது அதிகாரம் 1943 ஜூன் ஒன்பதாம் தேதி எழுதப்பட்டது. அதோடு முடிந்தது. அதன் பின்னர் எழுத முடியாத இடத்திற்குச் கொண்டு செல்லப்பட்டார். பின்பு மூன்று மாதங்கள் கழித்து இரகசியமாகத் தூக்கிலிடப்பட்டார்.

அந்த மூன்று மாதங்களில் அவர் எழுதிய ஏதும் கிடைக்கவில்லை.

புனிதமான புரட்சியாளர் பலரின் இலக்கியப் படைப்புகள் பூச்சிகளுக்கும் புழுக்களுக்கும் இரையாயினவோ?

எனவே அது ஒரு முழுமையான தூக்கு மேடைக் குறிப்பு நூல் அல்ல.

ஆனால் பாலு தூக்கு மேடைவரை தம் இறுதி மூச்சு வரை எழுதியும் பேசியும் பாடியும் இருக்கிறார். தூக்கு மேடையில் நின்று கோஷமிட்டதும் நம் காதுகளில் தொனித்தது. எனவே பாலுவின் கடைசி வரையுள்ள செய்திகளைத் தொகுத்தால் அது ஒரு முழுமையான தூக்குமேடை நூலாகும். இதனை கட்சி செய்யுமா?' என்று கேட்டார் வாத்தியார்.

வேதனையிலிருந்த பாரதி "அதை நீயே செய்' என்றார்.

'நான் மரண வாயிலில் நிற்கிறேன். மேலும் எல்லாக் குறிப்புகளும் எனக்குத் தெரியாதே' என்றார்.

'உனக்கு எல்லாம் தெரியும். உனக்குத்தான் பாலுவின் ஆசியும் கிடைச்சிருக்கு' என்றார்.

'சதி வழக்குச் சரிதையை எழுதுவது நம்ம வாத்தியார் வேலைதான்' என்று நறுக்காகச் சொன்னார் செண்பகம்.

வாத்தியார் நிலை குலைந்து நின்றார்.

குறிப்புகள் :

1. அந்த நிகழ்விற்குப் பிறகு 50 ஆண்டுகள் கழித்து பாலுவின் தூக்கு மேடைச் செய்திகளை இந்த நூலில் கொண்டு வருவது இறை அருளே.

2. வாத்தியாரும், மாயாண்டி பாரதியும் 'நீ' என்று ஒருமையிலும், 'நீங்கள்' என்று பன்மையிலும் பேசிப்பழகுவது வழக்கம்.

24

சிமாண்ட் பிளாக்கினுள் பல அறைகளில் பிரிந்து கிடந்த தோழர்கள் ஒன்பதாம் அறையினுள் ஒன்று சேரும் புண்ணியம் பெற்றனர். வழக்குகளை ஆய்வு செய்வதற்கென்று எட்டாம் அறை தரப்பட்டது. அதில் சட்டம் தெரிந்த தோழர்களும், முக்கிய தோழர்களும் இருந்தார்கள். மாயாண்டி பாரதி மட்டும் எட்டிலும், ஒன்பதிலுமாக இருந்து கொள்வார். அவருக்கு ஆடல் பாடல், கைதிகளோடு அளவளாவுதல், கடிதங்கள் எழுதல் ரொம்பப் பிரியம்.

வயிற்றுப் புண்ணால் மணி, அழகுமுத்து, இஸ்மாயில் அவதியுற்றார்கள். கோமதியும் ரெட்டியாரும் ஆஸ்த்மாவால் கஷ்டப்பட்டார்கள். ராமசாமியும், வாத்தியாரும் பல்வலியால் வேதனையுற்றார்கள். பொன்னுக்கு மண்டையடி, மலச்சிக்கல், மூலவியாதி, பார்வைக் கோளாறால் பாதிக்கப்பட்ட சிவனார், காது கெட்டுவிட்ட யாக்கோபு பிள்ளை. இரத்தம் கெட்டு மேலெல்லாம் கட்டி, கட்டியாக விழுந்து அவதியுற்ற கழுகுமலை அழகிரி - இப்படி இன்னும் எத்தனை, எத்தனை...?

கதர்குல்லா ரவுலட் சட்டம் தந்த விதவிதமான விருதுகளே இவ்வியாதிகள்.

அன்னை மீனாட்சி வாழ் ஆலவாய்க் கூடலே! சிந்து நதி தீரத்தில் மகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய நகரங்கள் இருந்த புராதன காலத்திலேயே நீ தோன்றி இருக்கிறாயாமே. உன் புகழுக்குக் களங்கம் விளைவிக்கிறார்களே, இது நியாயமா?

தோழர் மாரி - மணவாளனைச் சுட்டு வீழ்த்திய மதுரை போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ஜனாதிபதி வீரப்பதக்கம் வழங்கினாராமே*. உன் சிறப்பிற்குச் சிறுமை தரும் இச்செயல் கண்டும் சும்மாவா இருந்தாய்? இதே மதுரையில் அன்று நீதி தடம்புரண்டபோது கண்ணகி, காளியாக மாறினாளே, பாண்டியனின் வாயில்காப்போனிடம் வந்து,

'அறிவுறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே...'

என்று வாயில் காவலனைக் கேட்டாளே, அதே கேள்வியை மதுரை நகர் மக்கள் வந்து கேட்டு தங்கள் தலைவர்களை மீட்டுச் செல்ல ரொம்ப நேரமா பிடிக்கும்? புரட்சி வெடித்தால் புன்மை இருள் நொடிப் பொழுதில் புதைந்து மாயாதா?

இவ்வாறு கனா உலகில் உலாவிக் கொண்டிருந்த வாத்தியாரிடம் ஒரு

* 23.12.1951 ஜனசக்தி

கைதி வந்து "நல்லசிவனைப் பார்க்க வேண்டும்*, அவர் என் உறவினர்' என்றார். நல்லசிவனிடம் சென்ற அவர் 'தோழரே, எனது ஆயுள்தண்டனை 11 வருடம், இன்றோடு முடிகிறது. நீங்க இங்க இருக்கிறதை நேற்றுதான் அறிந்தேன். சொல்லிட்டுப் போக வந்தேன்' என்றார்.

நல்லசிவன் நன்றாகச் சிரித்தார். பின்பு சொன்னார்.

'உன் மனைவிக்கு இன்றோடு ஆயுள் தண்டனை முடிகிறது. உனக்கு வீட்டில் ஆயுள் தண்டனை ஆரம்பமாகிறது, சொல்லிவிட்டுப் போய்விடும். திரும்ப வரவேண்டாம்' என்றார்.

வாத்தியாரும் சிவனும் சிரித்து மகிழ்ந்தனர். குடித்து வெறித்து திருமணமான மறுநாளே தகப்பனைக் கொலை செய்துவிட்டு ஆயுள் தண்டனை அனுபவித்து வீட்டிற்குப் போகும் அவர் அர்த்தம் புரிந்தோ புரியாமலோ அவரும் சிரித்தார்.

நகைச்சுவையாகப் பேசும் நல்லசிவம் அவருக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லி அனுப்பினார்.

கைதிகளில்தான் எத்தனை ரகங்கள்? ஒருவன் விஷச் சாராயத்தை அருந்திவிட்டு தாயையும், தகப்பனையும் வெட்டிக் கொன்றான். அவன் சிறையில் வந்து 'நான் அனாதை, நான் அனாதை' என்று அலறித் துடித்தான். 'போதிமரம் புத்தரை உருவாக்கவில்லை, போதி மரத்தடியில் புத்தர் தம்மை உருவாக்கிக் கொண்டார். இந்தக் குடி வெறியனும் சிறையிலாவது தன்னை உருவாக்கிக் கொள்ள வேண்டும்' என்று வாத்தியார் முணுமுணுத்தார்.

வாத்தியார் ஒரு நல்ல கலைஞர்.

அடிதண்டாக்களின் கடக் கடக் ஒலியிலும், சிறைக்கம்பிகள் ஒவ்வொன்றையும் தட்டிப் பார்த்துப் பரிசோதிக்கும் 'கிண், கிண்' ஓசையிலும், வார்டர்களின் சாவிக்கொத்துகள் எழுப்பும் "ஜல்க் ஜல்க்கிலும்" மனதைப் பறி கொடுத்து நின்றார்.

"காட்டுக்குள் மிருகங்களுக்குச் சிறைச்சாலை கிடையாது. நாட்டுக்குள் மனிதர்களுக்கு மட்டும் ஏன்?' என்று மனதிற்குள் கேட்டுப் பார்த்த வாத்தியார் வாய்விட்டுச் சிரித்தார். குற்றவாளிகளை நாடு கடத்த ஆங்கிலேயர்கள் ஏற்படுத்திய அந்தமான் சிறையை நினைந்து வெட்கினார்.

அப்பொழுது அறைகளைப் பூட்ட வந்த வார்டர் சொன்னார்.

"தோழர்களே, இனி நீங்கள் வயிற்று வலியால் மாண்டாலும், வாய்வுக் குத்தில் செத்தாலும் நாளை காலை ஆறு மணிக்குத்தான் வெளியே எடுப்போம்' என்று சிறையின் கொடுமைகளை நறுக்காகச் சொல்லிச் சென்றார்.

தோழர்களை அன்புப் பெற்றோர்களிடமிருந்தும், அருமையான மக்களிடமிருந்து மட்டுமா பிரித்திருக்கிறார்கள்? இல்லை.... நிலவு பொழியும் சந்திரனிடமிருந்தும், தேன் சொட்டும் மலர்களிடமிருந்தும், இசைக்கும்

---

* நல்லசிவன் சதிவழக்கின் நுக்கங்களை நன்கு அறிந்தவர். விடுதலைக்குப் பிறகு இடது கம்யூனிஸ்ட் மாநிலச் செயலராக விளங்கியவர். வாத்தியார் இரண்டாம் பாகம் நூலை சீக்கிரம் எழுதி முடிக்குமாறு பலமுறை கூறினார். சமீபத்தில் காலமானார்.

பறவைகளிடமிருந்தும்.... இன்னும் எத்தனையோ வனப்புகளிடமிருந்தும் துண்டித்திருக்கிறார்கள்.

அதோ... திருமணமான ஒரு சில தினங்களில் கைது செய்யப்பட்ட சேவியர், குருசாமி, வத்ராஇருப்பு ராமச்சந்திரன் ஆகிய தோழர்கள் கண்மூடித் தூங்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இளம் மனைவியுடன் இன்புற்றிருக்க வேண்டிய தேன்நிலவில், மூத்திரக் கலயங்களுக்கும், மலச்சட்டிகளுக்கும் மத்தியில் மூச்சு விடுகிறார்கள்.

"சோதரர் தம்மைத் துரோகிகள் அழிப்பதை சகிக்காது மாதரார் நலத்தில் மகிழ்வதை மறந்து இந்தக் கொடுமையான வெஞ்சிறையில் வாடுகிறார்களோ?

'தோழர்களே, நீங்கள் மில்ட்டனைவிடவா குருடாகிவிட்டீர்கள்? அவர் குருட்டு நிலையிலும் "மீண்ட சொர்க்கம்' என்னும் இலக்கியம் படைத்தார். சீக்கிரமே விழித்தெழுங்கள், நாம் ஊர்கள் தோறும் சென்று மக்கள் சுகித்து வாழும் பொதுஉடைமைப் பூங்காக்களைப் படைப்போம். பூமியிலேயே சொர்க்கம் காண்போம்.

நல்ல சிவன், அனந்த கிருஷ்ணன், மீனாட்சிநாதன் மற்றும் பலரும் அழுக்குப் படிந்த சாக்குப் பாயில் உருளுகிறார்கள். பத்தமடைத் தொழிலாளர்கள் உங்களுக்கு பட்டுப்பாயை நெய்து தரக் காத்திருக்கிறார்களே! அவர்களின் நல்வாழ்விற்காக நீவீர் சணல் பாயில் படுத்துத் துக்கம் துடைக்கிறீர்களோ?

ஐ.மா.பா. எனப்பட்ட ஐ.மாயாண்டிபாரதி கையினால் உடலை மூடி, கால்களை முடக்கிக் கொண்டு பெட்டிக்குள் அடைபட்டுக் கிடக்கும் பாம்பெனச் சுருண்டு கிடக்கிறார். அதைப்பார்த்த வாத்தியாருக்குப் பெருமூச்சு எழுந்தது.

சோழநாட்டிலுள்ள சத்தி முத்துப் புலவர் மதுரைக்குப் பிழைக்க வந்த இடத்தில் பிழைப்பு கிட்டாது ஒரு பாழடைந்த மண்டபத்தில் வாடைக்குக் காலை முடக்கிக் கிடக்கும்போது ஆங்கு வந்த செங்கால்நாரையிடம் தூது சொன்னாரே அந்தப்பாடல் நினைவிற்கு வந்தது.

"எம்கோன் மாறன் வழுதி கூடலில்*
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பு என உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே"

தம் வாழ்கையில் ஒரே ஒரு பாடலை மட்டும் பாடிச் சென்ற இப்புலவர் சிறைவாழ் கைதிகளுக்காகவே இவ்விலக்கியம் படைத்துச் சென்றார் போலும்.

வாத்தியார் கனவு உலகில் அல்ல நனவு உலகில் நடந்தார். "என்

* **அக்காலம் மதுரை மாநகருக்கு கூடல்நகர் என்றே பேர் இருந்தது.**

இளமையின் வேர்களை சிறை தின்றுவிடுமோ?" என்று வருந்திய வாத்தியார் தூக்கம் வராமல் பாரதி பாடல்களைப் பாராயணம் பண்ணலானார். "கரும்புத் தோட்டத்திலே...' என்று கல்லும் கரையுமாறு கவி பாரதி பாடி இருக்கிறாரே அந்தப் பாடலை மாற்றிப்பாடி மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தார்.

"மண்ணிற் கலந்திடுமோ - பாண்டி
மாமதுரைக்கு நடுவினிலே அங்கோர்
கண்ணற்ற வெஞ்சிறையினிலே
கண்மணியாம் தோழர்கள் புழுங்குகின்றார்'

வாத்தியார் எழுந்துநின்று இரும்புக் கம்பிகளைப் பிடித்தவாறு வெளியே நோக்கினார். பெருச்சாளி ஒன்று சாக்கடை வழியே வெளிஉலகம் செல்கிறது. அதைப் பார்த்துப் பொறாமை கொண்ட வாத்தியார் "பெருச்சாளிக்குக் கிடைத்த பேறு எனக்குக் கிட்டுமா?' என்று கேட்டு நெடுநோக்கு நோக்கினார்.

"வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கின
வாடிய இலைகள் காய்ந்து உதிர்ந்தன
கீரைத்தண்டுகள் கிழடாயின
கிழட்டு வார்டர்கள் பென்ஷன் பெற்றுப் போயினர்
ஆனால், நான்மாடக்கூடல் நகரின் மத்தியில்
வன் கொடுமைச் சிறைக்குள் வதியும் தோழர்களின்
வாழ்வில் மட்டும் மாறுதலே இல்லையா?

ஒரே மாதிரியான சோளக்களி
ஒரே மாதிரியான கீரைத்தண்டு
ஒரே மாதிரியான வயிற்றுவலி

அதனால் உள்ளத்தின் உணர்வுகளிலும், மூளையின் உறுப்புகளிலும் பலருக்குப் பாதிப்புகள் ஏற்பட்டன.

'இன்னும் விடிய எவ்வளவு நேரமிருக்கு' என்று கேட்ட வேலையாவிற்கு வாத்தியார் பதில் சொல்லாமல்,

'சூரியன் ராகு-கேது என்ற பாம்புகளுக்கு

இரையாகிவிட்டானோ?

சூரியத்தேரை இழுத்துச் சென்ற குதிரைகள் உருவிக்

கொண்டு ஓடிப்போய் சூரியனை தனியே விட்டுவிட்டனவோ?

என்ற கற்பனைக் கதைகளின் நயம் கண்டு ரசித்தார்.

'எப்பொழுது வருவார்' என்று காதலனுக்காகக் காத்துக் தவிக்கும் காதலி,

"எத்தால் விடியும் இரா' என்று கேட்பதுபோல வாத்தியாரும் மனதிற்குள் கேட்கும் போது

'எப்பொழுது விடியும் வாத்தியாரே' என்று வேலையா மீண்டும் கேட்டார்.

25

தியாகி பாலுவின் நினைவுகள் நெஞ்சைவிட்டு நீங்க மறுத்தன. அவர் மார்பை நிமிர்த்திப் பேசியதைக் கனவுகண்டு விழித்த வாத்தியார், மீண்டும் பாலுவின் நினைவுகளுக்குள் மூழ்கினார்.

மதுரை மில் தொழிலாளர்கள் பத்துப் பேர் பாலுவைப் பார்த்து மிகுந்த துக்கத்தோடு வீரவணக்கம் செலுத்துகிறார்கள். ஆனால் பாலு ஒரு ஜல்லிக்காளை போல துள்ளி எழுந்து கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வீரமுழக்கமிடுகிறார்.

'தொழிலாளத் தோழர்களே, பயம் வேண்டாம். 33 ரகக் குண்டெல்லாம் துரு பிடித்துப் போகும். நீங்கள் பயப்படுகிறவரை மட்டுமே அந்தக் குண்டுகளுக்குச் சக்தி உண்டு.

'நான் சொன்னதைக் கேட்டு சங்க வேலைகளில் ஈடுபட்டதால் 50 பேர் மதுரை மில்லில் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். அவ்வீரர்கள் ஆயிரம் கருங்காலிகளை விரட்டியடிக்கும் ஆற்றல் படைத்தவர்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைச் சொல்லுங்கள்.

'விவசாயிகள் தைரியம் உள்ளவர்கள். என் அப்பா ஒரு விவசாயி, ரொம்ப தைரியசாலி. தெலிங்கானாவில் இந்த சர்க்காரை ஓடஓட விரட்டியடித்தவர்கள் விவசாயிகளே'.

பாலு பேசிய இந்த வார்த்தைகள் இன்னும் பசுமையாகக் காதுகளில் ஒலித்தன.

ஒன்பதாம் பிளாக்கின் ஒரு மூலையில் அழகுமுத்து, கண்ணுப்பிள்ளை, பரதேசியா பிள்ளை மற்றும் பொதுக்கல்வி குறைவாய் உள்ளவர்களை வாத்தியார் தம் மாணவர்களாக சேர்த்து வைத்துக் கொண்டு பொது அறிவுப் பாடம் நடத்தினார். பத்துப் பேருக்கு மேல் கூடிவிட்டார்கள். ஜெயில் அதிகாரியின் அனுமதி ஏற்கனவே கிடைத்திருந்தது.

'தோழர் வாத்தியார், மணியாச்சியில் வாஞ்சிநாதன், ஆஷ் என்ற ஆங்கிலக் கலெக்டரை துப்பாக்கியால் சுட்டது சரியா? வாஞ்சிநாதன் தற்கொலை செய்து கொண்டது கோழைத்தனம் இல்லையா? நாம் அவர்களைத் தேசபக்தச் செம்மல்கள் என்று அழைக்கிறோமே?' என்று கேட்டார் பரதேசியாப் பிள்ளை.

எடுத்த எடுப்பிலேயே தமிழ்ப்பாட வேளை தடம்புரளுகிறதே என்று கவலை கொண்டார் வாத்தியார். ஆனாலும் இதுபோன்ற கேள்விகளை இடது சாரிகள் தரப்பிலிருந்து இதுவரை யாரும் கேட்டதில்லை. வாத்தியார் சிந்தித்தார். முதலில் வரலாற்றை விளக்கினார்.

'1911 ஜூன் 17, நெல்லை கலெக்டர் ஆஷை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். குறி தவறாமல் சுட்டார் என்பது முக்கியமான குறிப்பு. சுட்டுவிட்டு வாஞ்சிநாதன் ஓட்டமாக ஓடிச் சென்று ஒரு கழிவறையினுள் புகுந்து தன்னையே சுட்டுக் கொன்றார். அதாவது தற்கொலை செய்து கொண்டார்.

பல இடங்களில் பொதுமக்களின் கொந்தளிப்புகள் எழுந்தன. ஆத்திரம் கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியம் 1919 ஏப்ரலில் 'ரௌலட் சட்டம்' கொண்டு வந்தது. அதாவது சந்தேகிக்கும் ஒரு நபரை காரணமின்றி கைது செய்து, விசாரணையில்லாமலேயே சிறையில் அடைக்கலாம். இதனை எதிர்த்து 1919 ஏப்ரல் 13ஆம் நாளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில் கூடினர். 'டயர்' என்ற ஆங்கில மிலிட்டரி கமாண்டர் ஆயிரக்கணக்கான மக்களைச் சுட்டுக் கொன்றார். உலக சரித்திரத்தில் கழுவ முடியாத ஒரு கறைபிடித்த நாளாகிவிட்டது.

இதைக்கண்ட காந்தி பலாத்காரத்தை வெறுத்து, சத்தியாகிரகத்தை அறிமுகம் செய்தார். பின்பு 1942 ஆகஸ்ட் எட்டில், 'செய் அல்லது செத்து மடி' என்ற கோஷத்தைக் கொடுத்தார். இதே சந்தர்ப்பத்தில் குலசேகரப் பட்டிணத்தில் 'லோன்' துரை என்ற வெள்ளையனை வெட்டிக் கொன்றார்கள். அவர் சால்ட் இன்ஸ்பெக்டராகப் பணிபுரிந்தார். ஆஷ் மரணத்திற்குப் பிறகு இதுவும் நடந்ததால் பெரும் பரபரப்பு உண்டாயிற்று. லோன் துரை கொலைவழக்கில் காசிராஜன், ராஜகோபாலன் ஆகியோர் முக்கிய குற்றவாளிகள். ராஜாஜியின் முயற்சியால் தூக்குத் தண்டனை ரத்துச் செய்யப்பட்டு, ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. பின்பு அதுவும் குறைந்தது. சில ஆண்டுகளில் வெளியே வந்துவிட்டார்கள்.

'நான் நிரபராதி. கொலைக்குற்றத்தைச் செய்யவில்லை' என்று கடைசி வாக்குமூலம் கொடுத்து பாலு பலருக்கும் கடிதம் எழுதியுள்ளார். அகில உலகத் தொழிற்சங்கத் தலைவர் டாங்கேக்கும் இன்னும் பலருக்கும் எழுதியுள்ளார். மக்கள் ஜனாதிபதியிடம் முட்டி மோதி தண்டனையை ரத்துச் செய்திருக்க வேண்டாமா?'

இப்படி பேசிக் கொண்டே போகும்போது, 'என் கேள்விக்கு விடை வேண்டும்' என்றார் பரதேசியாப் பிள்ளை.

கொலை செய்தது தவறுதான். ஆனால் தேசபக்தியில் நடந்த கொலை. விளக்கேற்றும் போது விட்டில் பூச்சிகள் சில சாகத்தானே செய்யும். இந்த நாட்டில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்ட போது நடந்த வேண்டாத நிகழ்வுகள் இவை.

எனினும் வெள்ளையர்களை வெறுப்புணர்வோடு வெட்டிக் கொல்ல நினைப்பது தவறு என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை கூறுகிறேன்.

கேரள மார்த்தாண்டம் மக்களின் குலதெய்வமாக ஒரு வெள்ளையர் கருதப்படுகிறார். அவர் பெயர் 'ஸ்பென்சர் கேச்'.

1924ஆம் ஆண்டு. சுதந்திரத்திற்கான உச்சகட்ட போர் நடந்து கொண்டிருந்த காலம். மகாகவி பாரதியின் பாடல்கள் தமிழ் மக்களுக்கு சுதந்திர தாகத்தை தட்டி எழுப்பின. வெள்ளையனைப் பார்த்தால் வெட்டு

என்று எங்கு பார்த்தாலும் சொல்லிக் கொண்டிருந்த நாட்களில் 'ஸ்பென்ஷர் கேச் மார்த்தாண்டம் ஒய்.எம்.சி.ஏ. இளைஞர் இயக்கச் செயலாளராக இருந்தார்'. அவருக்கு ஒரு பெரும் கவலை எழுந்தது. இந்த நாட்டில் நீர்வளம், நிலவளம் எல்லாம் இருக்கிறது. பின் ஏன் இந்த மக்கள் இப்படி மெலிந்து நலிந்து எலும்பும் தோலுமாய் இருக்கிறார்கள் என்று கவலையோடு தனக்குள் கேட்டுக் கொண்டார். இப்படியே பல நாட்கள் கேட்டுக் கொண்டிருந்தார். எல்லா மக்களும் சத்துணவு சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டார். தீவிரமாக செயலில் இறங்கினார். தேனீ வளர்த்தல், கோழி வளர்த்தல், ஆடு, மாடு வளர்த்தல் என்பதை குடிசைத் தொழிலாக்கினார். எல்லா மக்களுக்கும் சொந்த காசை லோனாகக் கொடுத்தார். ஏழை மக்களுக்கு இன்னும் அதிக உதவித்ளைச் செய்தார். மரச் சோலைகள் தேன் கூடுகளுக்கு தோள் கொடுத்தன. இன்றும் மார்த்தாண்டம் தேன்தான் சுத்தமானது. மக்கள் பால், மோர், முட்டை, நெய், தேன் என்று வளமாகச் சாப்பிட்டனர்.

கேரள மக்களின் வனப்புக்கும், செழிப்புக்கும் காரணம் இவைகளே.

இதுதான் மக்கள் நேய பாசம் என்பது. இப்படிப் பல வெள்ளையர்களை நான் அறிவேன். இவர்களை வெட்டலாமா? என்று கேட்ட வாத்தியார் ஒரு பெருமூச்சுவிட்டார்.

இதுபோன்ற மதஉணர்வுகள் வெறிஉணர்வுகளாகக்கூடாது.

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல்

வேறொன்றறியேன் பராபரமே' போன்ற தாயுமானவர் பாடல்களை கிறிஸ்தவக் கோயில்களில் பாடவேண்டும். தாவீதரசனின் சங்கீதங்களை இந்து மக்கள் திருவாசகத்தோடு இணைத்து தங்கள் கோயில்களில் பாடவேண்டும்.

பைபிளில் பொதுவுடைமை என்ற அமைப்பை இயேசுவின் அடியார்கள் முதல் நூற்றாண்டில் உண்டு பண்ணுகிறார்கள். அது வெற்றிகரமாக செயல்பட்டது. ஒருவருக்கும் ஒன்றும் குறைவில்லாமல் இருந்தது. நாளடைவில் தோல்வி ஏற்பட்டது. காரணம் பொய்யும் புரட்டும் தோன்றின. அப்படித்தான் சுயநலமும், உழைப்பின்மையும், ஊதாரித்தனமும் ஊற்றெடுத்தால் சோவியத்தும் அழியலாம், யார்கண்டது?

எந்தப் புதிதும் சிறப்பானதாகவேயிருக்கும்.

தோழர் விசுவநாததாஸ் பற்றி தோழர் வேலாயுதம் அடிக்கடி சொல்வார். பாரதிக்கு அடுத்தபடியாக சுதந்திர தாகத்தை ஏற்படுத்தியவர் விசுவநாததாஸ்தான். அவரைப்பற்றி சொல்வாரேயில்லை. போத்தையா குறுக்கிட்டு 'விசுவநாததாஸ் பற்றி நான் கேள்விப்படவேயில்லையே, கொஞ்சம் விரிவாய்ச் சொல்லுங்கள்' என்றார்.

விசுவநாததாஸ் குரல் வளம் மிக்க பாடகர், சிறந்த நாடக நடிகர். விடுதலை விரும்பி. இவரது நாடகத்திறனும், பாட்டு வரமும், கிராம மக்களிடையே விடுதலை உணர்வைச் சுண்டிஇழுத்தன. அவரது பாட்டின் ஆதிக்கம் பாஞ்சாலங்குறிச்சி மக்களை பரவசப்படுத்தியது. என் தந்தை இவரது நாடகத்தை, மாட்டு வண்டி கட்டிப் போய்ப்பார்த்து வருவது

வழக்கம். நான் பிறந்த ஊரில் தங்கமணி அண்ணன், விசுவநாததாஸ் பாடல்களை உணர்ச்சி தெறிக்கப் பாடுவார். சிறுவயதிலேயே தேசப்பற்று ஏற்பட அவைகள் அடித்தளமாய் இருந்தன.

கொக்கு பறக்குதடி பாப்பா நீயும்
கோபமின்றிக் கூப்பிடடி பாப்பா - கொக்கு
வர்த்தகம் செய்ய வந்த கொக்கு நமது
வாழ்வைக் கெடுக்க வந்த கொக்கு
அக்கரைச் சீமை விட்டு வந்து கொள்ளை
அடித்துக் கொழுக்குதடி பாப்பா!

வெள்ளையர்களை கொக்காக உருவகம் செய்து பாப்பாக்களுக்கு பாடிய இப்பாடல் கவிபாரதியின் பாடல்களுக்கு இணையானது.

ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று!

என்று கவி பாரதி சுதந்திரத்திற்கு முன்பே பாடி மகிழ்ந்தது போல விசுவனாதரும்,

ஆடு ராட்டே மகிழ்ந்தாடு ராட்டே - சுய
ஆட்சியைக் கண்டோமென்று ஆடு ராட்டே!

என்று பாடினார். என் வாலிப வயதில் இந்தப் பாட்டைக் கேட்டுவிட்டு பக்கத்து ஊரிலுள்ள தேசபக்தரான அழகிரிசாமி நாயுடுவிடம் போய், பெட்டிராட்டு ஒன்றை வாங்கிவந்து நூல் நூற்றேன்.

'கதர் கப்பல் கொடி தோணுதே'

இந்தப் பாட்டைப் பாடும்போது தொண்டை விம்மிப் புடைக்குமாம்.

வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சியால் கிராமப் பொருளாதாரம் சீரழிந்ததைக் குறித்து இப்படிப் பாடுவார் :

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டானாம் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விற்கச்சொல்லி
காயிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்
வெள்ளைக்காரன் பணம் சின்னப்பணம் அது
வேடிக்கை செய்யுதாம் வெள்ளிப்பணம்.
வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்பட்ட - நீ
வேஷம் குலைந்தாயே வீராயி!

இந்தப் பாட்டைப் பாடும்போது மக்களின் சிரிப்பொலியும், அழுகைஒலியும் கலந்து எழுமாம். இதுபோன்ற அவரது தேசபக்தப் பாடல்களால் குடும்பம் அடைந்த படுபாதகச் செயல்களுக்கு அளவேயில்லை. ஆனாலும் கொள்கை மாறாமல் இறுதி மூச்சுவரை உயிரைக் காணிக்கையாக்கினார்.

சென்னையில் வள்ளி திருமணம் நாடகத்தில் அழகிய முருகனாக மயில் வாகனத்தில் விசுவநாததாஸ் அமர்ந்து "மாயப் பிரபஞ்சத்திலே..." என்ற பாடலைப் பக்தி பரவசத்தில் பாடிக்கொண்டிருக்கும்போதே மூச்சுத்

திணறி உயிர் நீத்தார். அதே மயில்வாகனத்தில் அவரது இறுதிப் பயணம் தொடர்ந்தது. சென்னை போக்குவரத்து ஒரு மணி நேரம் ஸ்தம்பித்து நின்றதாம்.

1886 ஜூன் 16இல் சிவகாசியில் பிறந்த தாஸ் 31.12.1940இல் இறந்தார். குரல்தான் அவருக்குச் சொந்தம். பாடலை எழுதியது பிறிதொரு தேசபக்தர்.

வீரத்தியாகி பாலுவை நம் மனக்கண் முன் கண்ட இந்நாட்களில் வீரத்தியாகி விசுவநாததாஸையும் நாம் நினைவுகூர வேண்டும்'.

இப்படியாக வாத்தியாரின் தமிழ் வகுப்பு பல செய்திகளை கற்றுக் கொள்ளும் பல்கலையாக முடிந்தது.

சிறைச்சாலைச் சங்கு ஊதியது. அது மதிய உணவுக்கான அழைப்பு. இவ்வேளையில் எங்களுக்கோர் நல்ல செய்தி கிடைத்தது. சதி வழக்கை நெல்லையில் விசாரிக்கப்போகிறார்களாம். நாளை காலை நாங்கள் யாவரும் திருநெல்வேலி - கொக்கிரகுளம் செல்ல வேண்டும்.

26

கடலில் அழுத்தம் எழுகிறபொழுது புயல் மையம் கொள்கிறது. சமுதாயத்தில் கேடுபாடுகள் நிறையும்பொழுது புரட்சி வெடிக்கிறது. சிறையிலும் அப்படித்தான்.

பிரபுக்கள் கோடீஸ்வரர்களைப் பிறப்பித்தார்கள். கோடீஸ்வரன் கோமணாண்டிகளைப் பிறப்பித்தான். கோமணாண்டிகள் போராட்டங்களைப் பிறப்பித்தார்கள். போராட்டங்கள் நீதி நியாயங்களை நிலைநாட்டின.

தோழர்கள் வெளியே மக்களுக்காகப் போராடினார்கள். சிறைக்குள்ளும் சிறைவாழ் மக்களுக்காக வாதாடினார்கள். கைதிகளின் ரேஷனை திருடவிடாமல் தடுத்தார்கள். சிறையின் அநியாயங்களை எதிர்த்தார்கள்.

சேலம் மத்திய சிறையில் கைதிகளின் உணவைத் திருடி சிறைப் பெருச்சாளிகள் சிலர் கொழுத்தனர். ரேஷன் எண்ணெயைக் கொடாமல் கைதிகளின் தலையை மொட்டையடித்தனர். உடல் நனையக்கூட குளிக்கத் தண்ணீர் கொடுப்பதில்லை. கிரிமினல் கைதிகள் சாக்கடைப் புழுவிலும் கேடாக நெளிந்தார்கள். யாராவது நியாயம் பேசினால் தனி அறையில் போட்டு அடித்தார்கள். அரசியல் கைதிகள் மீது அடக்கு முறைகளை அள்ளி வீசினார்கள். கொடுமை உச்சகட்டமானபோது அங்குள்ள கம்யூனிஸ்ட் கைதிகள் குமுறினர். நியாயமான போராட்டத்திற்கு அநியாயமாகத் துப்பாக்கிகளை தூக்கினார்கள்.

மூன்று மொழிக்காரர்களாக 350 பொதுமைக் கைதிகள் சேலம் சிறையில்இருந்தார்கள். 1950 பிப்ரவரி 11ஆம் தேதி கோரிக்கைகளைச் சொல்லி உரிமைப் போராட்டத்தில் இறங்கியபோது சிறை நிர்வாகம் ஈவு இரக்கமின்றி 22 பேர்களை துள்ளத்துடிக்கச் சுட்டுக் கொன்றது. கம்யூனிஸ்ட்கள் நிராயுதாபாணிகளாக நின்று போராடினர். சிறை முழுவதும் இரத்த ஆறு ஓடியது. கூட்டுக்குள் வைத்து கோழிக் குஞ்சுகளை குரல்வளையை நெரித்துக் கொல்வதுபோல் கொன்றார்கள். இது போன்று கொடுமை இதுவரை உலகில் வேறு எந்தச் சிறையிலும் நடந்ததில்லை.

அதன் பிறகுதான் சிறைகளில் சிறுசிறு சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. சிறைவாழ் கைதிகளின் நல்வாழ்விற்காக மக்களின் தலைவர்கள் 22 பேர் உயிர்த்தியாகம் செய்தார்கள்.

ஜீவநதி பாயும் பொருனைக் கரையில்தான் கொக்கிரகுளம் சிறை உளளது. ஆனால் 'கால்' கழுவத் தண்ணீர் கிடையாது. முகம் கழுவத் தண்ணீர் கேட்டால் முட்டுக்கு முட்டு அடி.

'அச்சடிச்ச சோறு, அரை ஆழாக்கு நீர் மோர், அஞ்சாறு வேர்க்கடலை' இவைகளே சில கைதிகளுக்கு சொர்க்கமாயிருந்தது. ஏனெனில் அது கூடக் கிடையாமல் தவித்த கூலி விவசாயிகள், கொத்தடிமைகளாக வாழ்ந்த பாவப்பட்ட மக்கள், அவர்கள் புழு பூச்சியிலும் படு கேவலமாக சிறை வாழ்வில் ஒன்றிப் போனார்கள்.

அன்று சிறையில் ரிமாண்ட் பிளாக்கில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது. பாளையங்கோட்டையில் சிறந்த வழக்கறிஞர்களாக விளங்கிய என்.டி.வானுமாமலை, என்.சண்முகம் இருவரையும் கம்யூனிஸ்ட் கைதியாகப் பிடித்துக் கொண்டு வந்தார்கள்.

'இவங்களை வெளியே விட்டால் வாதாடி சதி வழக்கை உடைத்துவிடுவார்கள்' என்று பயந்து உள்ளே பிடித்துப் போட்டுட்டானுவ பாவிக' என்று முரசு கொட்டினார் மாயாண்டி பாரதி.

நூற்றுக்கு மேற்பட்டோர் மீது 'நெல்லை கம்யூனிஸ்ட் சதி வழக்கு' தொடர முதல் தகவல் அறிக்கை தயாராயிற்று.

கொலை, கொள்ளை, குண்டுவெடிப்பு, தண்டவாளப் பெயர்ப்பு என்று பல வழக்குகளைப் புனைந்துள்ளார்கள். சதி நிரூபிக்கப்பட்டால் பல தோழர்களுக்கு தூக்குத்தண்டனையும், ஜென்ம தண்டனையும் கிடைக்கும் என்று வக்கீல் தோழர்கள் தெளிவாகச் சொன்னார்கள்.

இரு லாயர்கள், தோழர்கள் நல்லசிவன், மாணிக்கம், நல்லகண்ணு ஆகியோர் ஓர் அறையில் அமர்ந்து வழக்குகளைப் பரிசீலனை செய்ய அனுமதி கேட்டார்கள். நிர்வாகம் மறுத்தது. சட்டத்தைக் காட்டி உரிமையை பிடுங்கி வாங்கினார்கள். இரு பிரபல வழக்கறிஞர்கள் 'உள்ளே' வந்ததினால் சிறைநிர்வாகம் மிரண்டது.

தினத்தாள் ஒன்று தோழர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதனைப் பார்த்த செண்பகம் 'ஐ... பேப்பர் கருப்பு மையில் குளிச்சிருக்கு' என்றார்.

தொழிலாளர்களின் வெற்றிகள், விவசாய எழுச்சிகள், மாஸ்கோ

செய்திகள், வீரம் செறிந்த தெலிங்கானாப் போராட்டங்கள், சீன விடுதலைச் செய்திகள் போன்ற சமுதாய மாற்றச் செய்திகளை கருப்பு மையால் அடித்து கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற செய்திகளை மட்டும் விட்டு வைத்திருந்தார்கள்.

கள்ள வழியினில் கருப்பு மை தடவாத ஒரு பேப்பர் வந்திருந்தது. எல்லா செல்களிலும் உள்ள தோழர்கள் பரந்து பரந்து படித்து முடித்தார்கள். 'உலகெங்கம் உழைப்பாளிகள் கை ஓங்கி இருக்கிறது' என்றார் வாத்தியார்.

போலீஸ் சித்தரவதை காரணமாக தோழர்களுக்குப் பலப்பல சுகக்கேடுகள்.

மாணிக்கத்திற்கு வயிற்றுவலி, வேல்சாமித்தேவரின் பல் உடைந்து ஆடியது. வாத்தியாருக்குப் பல்வலி மட்டுமல்ல, இரு கரண்டைக் கால்களிலும் ரூலரை உருட்டி இம்சித்ததில் கால்வலி கடுமையாக இருந்தது. டி.ஜி.சுப்ரமணியத்திற்கு வயிற்றுப் போக்கு...

வியாதியாளர்களை மருத்துவமனைக்கு கூட்டிச் செல்ல வேண்டும் என்று வக்கீல் வாதாடினார். வெளி மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்ல முடியாது என்று கூறிய சிறை அதிகாரி அரசு மருத்துவரை சிறைக்கு வரவழைத்தார்.

மாயாண்டிபாரதி ஓதத்தால் வேதனைப்பட்டார். டாக்டர் சொன்னார்.

'உலக மகாவீரர்களில் ஒருவர் ஜூலியஸ் சீசர், அகில உலகையும் நடுங்கச் செய்தவர் ஹிட்லர். இருவருக்குமே காக்கா வலிப்பு நோய் இருந்தது. அவர்கள் இந்தக் கொடிய நோயை வைத்துக் கொண்டே தங்கள் இலட்சியத்தில் உறுதியாக நின்று வெற்றி கண்டார்கள்" என்றார்.

டாக்டரின் கூற்று வக்கீல் வானுமாமலைக்கு எட்டியது. அவர் ஓடோடிவந்து "டாக்டர் ஸார், பாதிரியாராகப் பிரசங்கம் பண்ண வந்தீரா, இல்ல மருத்துவரா மருந்து கொடுக்க வந்தீரா?" என்று கேட்டார்.

டாக்டருக்கு உதறல் எடுத்தது.

கிரிமினல் கைதிகளாக உள்ள ஒரு அறைக்கு டாக்டர் செல்லும்போது, ஒரு கைதி "கையில் ஆணி குத்தி அது புண்ணாயிற்று, ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும்" என்றான்.

கிரிமினல் கைதிதானே என்ற அலட்சியத்தில் ஆணி குத்தினதற்கெல்லாம் ஆஸ்பத்திரி போவாங்களா?" என்று ஏளனமாக கேட்டார். கைதிகளோடு கைதியாக நின்றிருந்த வேல்சாமித்தேவர் ஒரு பிடி பிடித்தார்.

"ஏம்பா, ஒரு ஆணி ஒரு லாடத்தைக் காக்கும், ஒரு லாடம் ஒரு குதிரையக் காக்கும், ஒரு குதிரை ஒரு வீரனைக் காக்கும். ஒரு வீரன் ஒரு நாட்டைக் காப்பான். நாங்கள் நாட்டைக் காக்கும் வீரர்கள், முட்டைக் குள்ளிருந்து கூவின கோழிக்குஞ்சுகள், வைக்கோலைக் கொண்டு நெருப்பை அணைக்கப் பாக்கியா? உன் வேலையை ஒழுங்காகச்செய்" என்று விளாசினார்.

தேவரை கைதிகளைவிட்டு அடிக்கும்படி கண்ணைக்காட்டினார். அதற்குள் சண்முகம் வக்கீல் வந்து, "நீ டாக்டரா அரசாங்க ஏஜெண்டா?" என்று கேட்டார்.

மருத்துவர் யாருக்கும் மருந்து கொடாமலே ஓடிவிட்டார்.

27

சிறை நிர்வாகத்தில் பெருமாற்றங்கள் நேர்ந்தன. ஹெட் வார்டர் தானியேல் நாடார் ஓய்வு பெற்றுவிட்டார். அவருக்குப் பதில் வார்டராக ஆவுடையப்பன் வந்தார். ஹெட்வார்டர் பதவி எடுபட்டுவிட்டது. ஜெய்லர் தாசனுக்குப் பதில் சங்கரலிங்கம் பிள்ளை பொறுப்பேற்றார்.

சீஃப் வார்டர் கொண்டல்ராவின் கைவரிசை பலித்தது. அவர் மொட்டை மனு மன்னர். ஜெய்லருக்கு விரோதமாக அவர் எழுதிய மொட்டை மனுவினால்தான் நல்ல மனுஷனான தாசனுக்கு மாறுதல் ஏற்பட்டது.

ஊருக்கு இரண்டு 'மொட்டை' எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பல குடிகளைக் கெடுத்தால்தான் தூக்கம் வரும்.

"எங்க ஊர்ல பிரின்சுன்னு ஒரு பயல் கெடக்கான். ஜான் வாத்தியாருக்கு தேசிய விருது கிடைப்பதை இந்தப் பயல் 'மொட்டை' எழுதிக் கெடுத்துவிட்டான். சிலோன்ல உள்ள சிலுவை முத்து நாடாருக்கு அவர் மனைவியை பற்றி கெடுத்து எழுதி ஒரு குடும்பத்தையே குலைச்சிட்டான். ஜெய்ல்குள்ள கிடக்கவேண்டிய பயல் வெளியே திரியுறான்' என்று சொன்ன வாத்தியார் ரொம்ப அலுத்துக்கொண்டார்.

ஜெய்லர்தாசனை, மாற்றியது தோழர்களுக்கு மிகுந்த வருத்தம். 'யார் வந்தாலென்ன, நீதிக்குப் போராடுவோம்' என்று வக்கீல் சண்முகம் சொல்லி தோழர்களின் குமுறல்களை தணித்தார்.

வக்கீல் குமாஸ்தா பிச்சையாபிள்ளை, தொழிற்சங்கத்தோழர் நல்லசிவன், தோழர் மாணிக்கம், வக்கீல்கள் ஆகியோர் பத்தாம் எண் அறையிலிருந்து, தோழர்கள் மீது சாட்டியுள்ள குற்றங்களை அலசி ஆராய்வதில் உன்னிப்பாயிருந்தார்கள். அரசு தரப்பு போலீசாரின் முதல் தகவல் அறிக்கையில் கண்டபடி தோழர்களின் குற்றப்பிரிவுகளை அக்கு அக்காக ஆய்ந்தார்கள். வக்கீல்கள் உள்ளே இருந்தது, வழக்குகளின் ஓட்டைகளைக் கண்டுபிடிக்க வாய்ப்பாயிருந்தது.

வக்கீல் தோழர்கள் சிறையிலுள்ள அனைத்துக் காம்ரேட்களோடு பழகவும், அவர்கள் செய்த கட்சிப் பணிகளைத் தெரிந்து கொள்ளவும் சந்தர்ப்பம் கிட்டியது.

பகலில் ஒன்பதாம் எண் அறையில் வாத்தியார், மாயாண்டிபாரதி, நல்லகண், முத்து-மோகன் மற்றும் கிரிமினல் சோதரர்கள் இருந்தார்கள்.

பாரதி நான்கு கைதிகளுக்கு இரகசிய அரசியல் வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். வாத்தியார், சில குறிப்பிட்ட நண்பர்களுக்கு தமிழ்ப்பாடம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். நல்லகண் தம் விவசாய அனுபவக் கதைகளை செதுக்கிக் கொண்டிருந்தார்.

வாத்தியாருக்கு ஒரு சந்தேகம் வந்தது. பாரதியிடம் வந்து, "பரிணாம வாதம் என்றால் என்ன பாரதி?'' என்று கேட்டார். அதற்கு அவர் "வாத்தியாருக்குத் தெரியும்தானே?'" என்றார். "தெரியும் பாரதி, நம் முத்து மோகனுக்கு விளங்கும்படியாச் சொல்லணும்'' என்றார்.

பாரதி பேசினார்.

"கோடா கோடி ஆண்டுகளுக்கு முன்பு இந்த உலகம் நீரும், நெருப்பும் சூழ்ந்த ஒரு வெட்டவெளி, பின்பு சூரியக் கதிர்களின் சக்தியால். நதிக்கரையில் - சில மூலக்கூறுகளின் உதவியால் 'செல்' உருவானது (நம்ம ஜெயிலிலுள்ள 'செல்கள்' அல்ல). பலப் பல கோடி 'செல்கள்' தோன்றின. உயிரினப் பண்புகள் உருவாயின. புல்லாகிப், பூண்டாகி, புழுவாகி, மனிதனாகி...

'மேகம் திரண்டால் மழை பொழிவது போல் எல்லாம் எதேச்சையாக தானாக நிகழ்ந்தன...' என்று வலக்கை முஷ்டி உயர்த்திச் சொல்லும்... போது வாத்தியார் குறுக்கிட்டார்.

'அது சரி பாரதி. இந்த பரிணாமத்தினால் மரணமில்லாத ஒரு வாழ்வை ஏன் தர முடியவில்லை?'

பாரதி விழுந்து விழுந்து சிரித்தார்.

'நம்ம வாத்தியார் பாதிரியாராகப் போக வேண்டியவர், பாவம் இங்கவந்து கிடக்கிறார். இப்ப, கயிறுவேற தலைக்குமேலே தொங்குது' என்று பாரதி செல்லமாகச் சொல்லி வாத்தியாரின் கன்னத்தைக் கிள்ளினார்.

'அது கிடக்கட்டும் பாரதி' என்று சொல்லிய வாத்தியார் தம் சிறை மாணவர்களிடம் சென்றார்.

'கம்யூனிஸ்ட்கள் ஆட்சிக்கு வந்தால் அது பொற்காலம்' என்று உங்க தோழர் செண்பகம் சொன்னார். சங்க காலத்தைத்தான் பொற்காலம் என்பார்கள். மீண்டும் அப்படி ஒரு காலம்வரமுடியுமா?' என்று முத்து கேட்டான். வாத்தியார் பதில் சொன்னார்.

'சங்க காலம் பொற்காலம் என்று பொதுவாகச் சொல்வது பொய் மன்னர்களுக்கும், குட்டி ஜமீன்களுக்கும்தான் பொற்காலம். சாதாரண மக்களுக்கு அல்ல.

எயினர் என்ற ஒரு இனக்குழுவினர் எறும்புப் புற்றைக்கிளறி, புழுதியை அளைந்து எறும்புகள் சேகரித்து வைத்துள்ள புல்லரிசியை வாரி அள்ளி மூளிப்பானையில் போட்டு சமைத்து கருவாட்டுக் குழம்புடன் உண்பதை பெரும்பாணாற்றுப்படை* கூறுகிறது'.

* பெரும்பாணாற்றுப்படை பாடல்கள் 91முதல் 100வரை.

பெருஞ்சித்திரனார் என்ற கவிஞனின் மனைவி குப்பைக் கீரையை உப்பில்லாமல் வேகவைத்து உண்பதை புறநானூற்றுப் பாடல் வரிகள்* கூறுகின்றன. இப்படி எத்தனை சொல்லலாம்.

கிரிமினல் கைதிகள் பலர் செங்கொடியைக் காத்துக்கொள்ளும் பொதுமைத் தோழர்களாக வளர்ந்தார்கள்.

ஆர்வத்தோடு வாய்பிளந்து கேட்டுக் கொண்டிருந்த மோகனை, 'திறந்த வாய்க்குள் ஈபுகுந்துவிடும், வாயைமூடு' என்றார் பாரதி. செண்பகம் உள்ளே நுழைந்து அழுக்குத் துண்டை உதறியவாறு, 'தோளை உயர்த்து, உடர் முகம் தூக்கு'.

'மீசையை முறுக்கி மேலே ஏற்று' என்று அபிநயத்தோடு பாடினார்.

'இத எங்கடா படிச்சா, நல்லாருக்கே' என்றார் பாரதி.

நான் சின்னப் பையன்ல பாண்டிச்சேரியில் இருந்தேன்.

பாரதிதாசன் வாலிபப்பையனா இருக்கும்போது இப்படி அடிக்கடி சொலவாராம். அது என் உள்ளத்தில் ஆழமாகப் பதிஞ்சிட்டு.

என்னை முறுக்கேற்ற நினைக்கும்போதெல்லாம் நான் இந்த வரிகளைச் சொல்வேன்.

'மீசையை முறுக்கி மேலே ஏற்று ; ஆசையை வெறுத்து இலட்சியம் போற்று' என்று பாடி ஒரு குதி குதித்தார் செண்பகம்.

28

அமெரிக்கா ஜப்பானில் அணுக்குண்டு வீசி இரண்டாம் உலக மகாயுத்தத்தை கொடிய முன் உதாரணத்துடன் முடிவுக்குக் கொண்டு வந்த நாள். 1945 ஆகஸ்ட் ஒன்பதாம் நாள்.

ஹிரோசிமாவில் இலட்சத்திற்கும் மேறப்பட்டவர்கள் கொல்லப் பட்டார்கள். அதைத் தொடர்ந்து துறைமுக நகரான நாகசாகியில் அணுக்குண்டு வீசி 74 ஆயிரம் பேரைக் கொன்றார்கள்.

இந்தக் கொடுமையைக் கண்டித்து ஐந்தாம் ஆண்டின் நினைவாக இன்று காலையும், மதியமும் எங்கள் தோழர்கள் உண்ணா நோன்பிருக்கிறார்கள். சிறையில் அவரவர் அறை முன்பு, அமைதலோடு இருப்பார்கள் என்ற அறிவிப்பினை சிறை நிர்வாகத்திற்குக் கொடுத்தார்கள்.

சிறை மேலதிகாரி வந்து, 'உங்கள் கண்டனத்தை அரசுக்கு தெரிவிக்கிறோம். நீங்கள் சாப்பிடுங்கள்' என்றார்.

'இது எங்கள் தோழர்களின் ஏகோபித்த முடிவு. மாற்றம் இல்லை. வைத்தாள் தார் பூசி வருகிறது. அதனையும் கண்டிக்கிறோம்' என்றார் —ஊர் மாணிக்கம்.

* புறநானூற்றுப் பாடல் 159

உண்ணாவிரதம் அமைதலாக நடந்தது. கைதிகள் சிலரும் சாப்பிட மறுத்தார்கள். அது பெரிய குழப்பமாகிவிடும் என்று பயந்த நல்லசிவன், அவர்களை தடுத்து சாப்பிட வைத்தார். அனைத்துக் கைதிகள் முகத்திலும் கவலை வழிந்தது. அவர்களும் சமூக ஜீவிகள்தானே.

நோன்பு நன்முறையில் முடிந்தது. அமெரிக்க அட்டூழியம் வெட்ட வெளிச்சமானது. திருச்சி பாப்பா உமாநாத் தன் தாயாருடன் சிறைத் தண்டனை அனுபவிக்கையில் உண்ணாநோன்பிருந்த போது மரித்ததை நினைவுபடுத்திப் பேசி தோழர் நல்லகண்ணு நோன்பை நிறுத்திவைத்தார்.

நெஞ்சை நிமிர்த்தி மீசையை முறுக்கியவாறு வந்த செண்பகத்தைப் பார்த்து, 'தடியெடுத்தவனெல்லாம் மகாத்மா ஆகிவிட முடியாது. மீசையை முறுக்கியவுடன் கவிஞராகிவிடமுடியாது' என்று வாத்தியார் கிண்டலாகச் சொன்னார்.

'தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாகிறமாதிரி நானும் ஏன் கவிஞனாகக் கூடாது' என்றார் செண்பகம்.

வார இதழில் வெளிவந்த ஒரு கவிதையை வாத்தியார் உணர்ச்சி பொங்கப் பாடினார் ;

"ஹிரோசிமா சீமை பத்தி எரிஞ்சிபோச்சுடா
எத்தனையோ புள்ளகுட்டி கரிஞ்சி போச்சுடா
ஊரே சிரிக்க மனுஷன் சேதி தெரிஞ்சிபோச்சுடா
இந்த உலகம் பித்தலாட்டம் என்று புரிஞ்சிபோச்சுடா''.

இப்படிப்பாடி ஒரு ஆட்டமே போட்டார் வாத்தியார்.

இவ்விதமாக அமெரிக்க அணுஆயுத எதிர்ப்பு அன்று சிறை முழுவதும் ஒலித்தது.

லாக்கப்புகள் முடிந்தன. அறைக்கதவை பிடித்தவாறு வெளிஉலகை நோக்கினார் வாத்தியார். வெளிஉலகம் தெரியவில்லை. கிரேக்க புராணத்திலுள்ள ஒரு கதை வாத்தியாரின் நினைவில் வந்தது.

பூமியின் மைந்தனான ஒரு ராட்சதன் தன் தாயான பூமியின் மீது கால் வைத்திருக்கும் வரை அவனை யாரும் கொல்ல முடியாது. பூமியில் இருந்து தூக்கிப் பிடித்து அந்தரத்தில் தொங்கவிட்டால்தான் அவனைக் கொல்ல முடியும்.

ஆம், வெளிஉலகில் இருந்து எங்களை பிரித்தால்தான் எங்களைக் கொல்லமுடியும் என்று அதிகார வர்க்கத்திற்கு நன்கு தெரிந்துவிட்டது. ஆனால் சிறை உலகிலும் கைதிகளாகிய மானுட சமூகம் உள்ளது என்பதை மறந்துவிட்டார்கள்.

'என்ன சிந்தனை' என்றார் வேலுச்சாமித் தேவர்.

வாத்தியார் தேவரின் பற்களை கூர்ந்து பார்த்தார். போலீஸ் அடியில் அனைத்துப் பற்களும் நொறுங்கிப் போயிருந்தன. வலது கால் பெரிதாக வீங்கியிருந்தது. இடது கால் வாதம். அவரை நினைத்து வாத்தியார் உள்ளுக்குள் அழுதார்.

ஆனால் தேவர் சிரித்துக் கொண்டு சொன்னார் :

'என்னைக் கைது செய்த போது ஒரு சில தஸ்தாவேஜுகள்

...ருந்தான் அகப்பட்டன. சி.ஐ.டி. சாமி முதலியார் அவைகளை படித்துப் பார்த்து ஒன்றும் விளங்காமல் திணறினார். என் வாயிலிருந்து ஒரு வார்த்தையைக் கூட வாங்கமுடியாதென்று கண்டுகொண்டார். என் மௌனத்தைத்தான் உடைக்க முடிந்ததே தவிர என்னிடமிருந்து ஒரு சொல்லைக்கூட வாங்க முடியவில்லை'.

அப்பொழுது போலீஸ் குற்றப்பிரிவு அதிகாரி சொன்னார் : 'இந்தப் பாஷைகளுடைய பரிபாஷையை புரிந்து கொள்ள ஒரு பல்கலைக்கழகம் தேவைப்படும்போல' என்று சொல்லி மண்டையை பிய்த்துக்கொண்டார். எனக்கு வேதனையினூடும் சிரிப்பு வந்தது.

'வாதன் என்றால் யாரப்பா?' என்று என்னைப் பார்த்து கேட்டார். சுவாமி வரதராஜப்பெருமாள் என்றேன். எனக்கு வட்டியும் முதலுமாகச் சேர்த்து அடி விழுந்தது.

'வாதன் என்பது தோழர் மாணிக்கத்தின் கட்சிப் பெயர் என்று நான் ஏன் சொல்ல வேண்டும்? குற்றங்களை கண்டுபிடிக்க அமெரிக்கா போய் ஏறுவந்தாயே... கண்டுபிடியேன்' என்று என் மனதிற்குள் உறுமிக் கொண்டேன் ; என்று சொல்லும்போது அவர் நெற்றியிலுள்ள ஒரு கருப்பு நிற அழகைக் கொடுத்தது. ஆனால் அவர் முகம் புலன்விசாரணையின் போது பட்ட அடியால்புடைத்துப் போயிருந்தது.

'நம்ம மாணிக்கம் அடிக்கடி 'தீனி.க்குத் தானி, தானிக்குத் தீனி' என்கிறாரே, அதில் ஏதாவது குறியீடு உள்ளதா' என்று கேட்டேன். அதற்குள் அங்கு வந்த மாணிக்கம் 'வேதனையை மறக்க அது ஒரு ஜாலி' என்றார்.

முத்துபாரதியைக் கேட்டான். 'அணுகுண்டை கண்டித்து இன்று பட்டினி கிடந்தீங்க. உங்க ரஷ்யாவும் அணுசக்தியை கண்டுபிடிப்பதில் தீவிரம் காட்டுதே...'

'அது அணுகுண்டு, இது அணுசக்தி' என்றார் பாரதி.

வாத்தியார் குறுக்கிட்டார், 'மனிதன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் வாழ்வை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு ஆதாயமென்ன?' என்று விவிலியம் கேட்கிறதே. ஒரு அணுகுண்டைவிட ஒரு மனிதன் எவ்வளவு விலையேறப்பெற்றவன்?' என்றார். 'இங்கு ஒரு வேதக்காரப்பயல் கெடக்கான்' என்று சொன்ன பாரதி, வாத்தியாரின் குத்திட்டு நின்ற தலைமுடியை அன்போடு கோதினார்.

'இல்ல பாரதி, நா ரொம்ப பாரத்தோடதான் சொல்றேன். அணுசக்தியாலுந்தா ஆபத்து உள்ளதே'. அணுக்கதிர்களால் நாட்டுக்கு ஆபத்து ஏற்படும். பிறக்கும் குழந்தைகள் ஊனமாகும். ரத்தப் புற்று நோய் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் கூறிவருகிறார்கள். கண்களை விற்று சித்திரம் வாங்கலாமா பாரதி?' என்று கேட்டார் வாத்தியார்.

பாரதி பதில் சொல்லுமுன் முத்து சொன்னார், 'லெனின் "சிலை வைத்து வீண் வழிபாடு கூடாது" என்றார், இன்று உலகில் லெனினுக்குத்தான் அதிகமான சிலை வடித்துள்ளார்கள். கடவுளைப் பற்றிய கவலை வேண்டாம் என்கிற பெரியாரை வருங்காலத்தில் கடவுளாகவே ஆக்கிவிடுவார்கள். பைசா நகரத்து கோபுரம் போல

கொள்கையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமா சாயக்கூடாது' என்றார்.

பயனுள்ள உரையாடல் என்று கருதிய தேவர் ஒரு போடு போட்டார்.

'கம்யூனிஸம் பழைய சித்தாந்தம். நவீன கால நோய்களுக்கு அது மருந்தாக அமையாவிட்டால் அது அழியும்' என்றார்.

'முட்டை உள்ளேயிருந்து உடைபட்டால் 'உசிர்' உண்டாகும். வெளியேயிருந்து உடைபட்டால் 'பிசிர் தட்டும்' அதாவது நாற்றம் அடிக்கும். நீங்கள் உழைக்கும் மக்களுக்காகப் போராடும் உயிர் உள்ள தோழர்கள். நாங்கள் வெளியே போனவுடன் உங்கள் இயக்கத்தில் இணைந்து பாடுபடுவோம்' என்று முத்தும் மோகனும் சொன்னார்கள்.

அனைவரும் கோழிக்குஞ்சுகள் போன்று முடங்கினார்கள். வாத்தியார் வழக்கம்போல் வாயிலின் இரும்புக்கம்பிகளை பிடித்துக் கொண்டு, **'உறக்கம் தெளிவோம், உற்சாகம் கொள்ளுவோம், உலகத்தின் இறுதிவரை'** என்ற ஒரு பக்திப் பாடலின் வரிகளைப் பாடினார். மற்றும் சிலரும் அப்பாடலை முணுமுணுத்தனர்.

பாரதி மட்டும் தம் மனதிற்குள் சிரித்தவாறு, 'நம்ம வாத்தியான், சரியான கிறிஸ்தவக் கம்யூனிஸ்ட்' என்ற பலத்த முத்திரை குத்தினார்.

இருட்டில் பாடல் அடுத்தடுத்த அறைகளுக்கும் இளையோடியது.

29

புதிய விடியல், புதியதோர் செய்தியைத் தாங்கி வந்தது. 'வக்கீல் தோழர்கள் இன்று விடுதலையாகிறார்கள்' கண்டனக் கணைகளுக்கு அரசு சற்று வளைந்தது. ஆனால் அவர்களின் விடுதலை யாரையும் மகிழ்ச்சியூட்டவில்லை.

"ஒரு மாதத்திற்குள் விடுதலையா? இன்னும் கொஞ்ச நாட்கள் இருந்தால் வழக்கின் வளைவு நெளிவுகளை நன்கு கண்டுபிடித்து விடுவார்களே' என்று தோழர்களுக்கு வருத்தம்.

"வழக்கறிஞர்கள் இருக்கும்போது கிரிமினல் கைதிகள் மீதுள்ள சிறையின் கொடுமை கொஞ்சம் குறைந்திருந்ததே' என்று மற்றக் கைதிகளின் ஆதங்கம்.

வாத்தியாரின் உள்ளத்தில் ஏதோ ஓர் அலைபுரண்டு எழுந்தது.

வக்கீல் சண்முகம் வாத்தியாரை தனியாக அழைத்துப் பேசினார்.

'வாத்தியார், உங்களுக்கு விடுதலை கிடைக்கும். ஜாமீன் கிடைக்கும் என்று எந்த நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள வேண்டாம். எல்லோர் விடுதலைக்காகவும் வாதாடுவோம். ஆனால் உங்கள் எழுத்தே உங்களை கொல்லுகிறது. ஒரு வக்கீலாக நான் சொல்கிறேன். அரசை கவிழ்க்கும் சதி உங்கள் பள்ளியில்தான் உருவானது என்பதை உங்கள் டைரி

தெளிவாகக் காட்டுகிறது. சதி நிரூபிக்கப்படுமானால் உங்களோடு சேர்ந்த சிலருக்கு மரண தண்டனை, அல்லது ஆயுள் தண்டனை. இதை ஏன் சொல்கிறேனென்றால் உங்கள் வயோதிபத் தந்தை, அன்புச் சகோதரன், மற்றும் உறவினர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஊட்டிவிடக்கூடாது என்பதற்காகவே சொல்கிறேன்" என்றார்.

வாத்தியாரைப் பொறுத்தவரையில் இது தெரிந்த பழைய செய்திதான்.

வாத்தியார் சிரித்தார்.

அவர் சிரிப்பில் சில சிந்தனைச் சிதறல்கள் வெடித்தன. சிறையின் உயர்ந்த மதிற்சுவரை உற்று நோக்கினார். "ஐயோ, எங்களை மக்களிடமிருந்து பிரிக்க இவ்வளவு பெரிய மதிற்சுவரா? இது வேண்டாம். மக்களோடு தொடர்பு கொள்ள பாலங்கட்டுங்கள்.

"சீனப் பெரும்சுவர் 1684 மைல் நீளத்தில் கிறிஸ்துவிற்கு முன்பு கைதிகளைக் கொண்டு கட்டியதாகும். உலகம் கண்டு வியக்கும் பெரும் சாதனையை கைதிகள் செய்துள்ளார்கள்.

"அந்த சாதனைச் சக்திகள் இன்று கை முடக்கிக் கிடக்கின்றனவே. மாதக்கணக்கில் கால்கள் முடங்கிக் கிடக்கும் ஆயிரக்கணக்கான விசாரணைக் கைதிகளின் கால்கள் கீரைத் தண்டுகள் போன்று குழலாடிக் கிடக்கின்றன என்று எண்ணி ஏக்கப் பெருமூச்சுவிட்டார்.

காலைக் கஞ்சிக்குத் தட்டுகளை ஏந்திக் கொண்டிருந்தோம். "கஞ்சியில் புழுக்கள் நெளிகின்றனவே" என்று முகம் சுளித்தார் சீனிவாசன். 'அதில்தான் உயிர்ச்சத்து உள்ளது' என்றார் நல்லகண்ணு.

சில நாட்கள் சென்றன.

நெல்லை மாவட்ட மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் 97 பேர்களை குற்றவாளிகளாக கொண்டு 'நெல்லை கம்யூனிஸ்ட் சதி வழக்கு' விசாரணைக்கு வருகிறது என்ற செய்தி வந்தது.

தோழர்களுக்குள் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது.

இருநூறுக்கு மேற்பட்ட நபர்களைப் பிடித்து, அடித்து, நொறுக்கி இறுதியாக 97 பேர் மீது வழக்குத் தொடுத்துள்ளார்கள்.

சர்க்கார் தரப்பு சாட்சிகள் 226 பேர். எதிரிகள் தரப்பு சாட்சிகள் எட்டுப் பேர் மட்டுமே. கோர்ட் தரப்பு சாட்சி ஒன்று, ஆக மொத்தம் 235 சாட்சிகள்.

அரசு தரப்பிலிருந்து ஆவணங்கள், கடிதங்கள் இப்படியாக எண்ணூறு சாட்சியப் பொருள்கள், காட்சிப் பொருள்களாக எழுபத்து மூன்று.

மண்டை ஓடு, உடம்பு ஓடு, கடப்பாரை, தடிகள், ரோலர் அச்சு, சாக்கு மூட்டை, சம்மட்டி, பேனாக் கத்தி, ஸ்டாலின் - லெனின் படங்கள், சூட்கேஸ், வேட்டி, சட்டை, நோட்டுக் என்று எழுபத்துமூன்று சாட்சியப் பொருள்களை தாக்கல் செய்தார்கள்.

குண்டுவீச்சு, ரயில் கவிழ்ப்பு, வழிப்பறி, கொலை முயற்சி, தந்திக் கம்பிகளை அறுத்தல், ரிவால்வர் வைத்திருத்தல், காங்கிரஸ் கூட்டங்களைக் கலைத்தல், சர்க்காரை தூக்கி எறிய சதி.. இப்படியாகப் பல வழக்குகளில், பல சட்டப்பிரிவுகளில் 97 தோழர்களை பின்னிவிட்டனர்.

விசாரணையைக் காண இளம் வக்கீல்கள், அனுதாபிகள், பொதுமக்கள் ஆவலோடு எதிர்நோக்கினர்.

மாபெரும் சதி வழக்கு அல்லவா? மிகப்பிரபலமான இரு வக்கீல்கள் நடத்தும் வழக்கு அல்லவா?

வழக்குகளை ஆய்வு செய்யும் - வழக்கறிஞர்களுக்கு உபயோகமாக இருக்கவும் சிறைக்குள் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அவர்கள் இரவும் பகலுமாக உழைத்து வழக்குகளை எதிர்கொள்ள எழுந்து நின்றார்கள்.

ஆனால், வாத்தியார் கேஸ் தனியானது. மரண தண்டனை நிச்சயமானது. எனவே அவர்களின் மூளையை இதில் செலவிடவில்லை.

எங்களுடைய பொழுதுகள் மிகச் சுறுசுறுப்பாகக் கழிந்தன. அந்தச் சுறுசுறுப்பில் சிறைக் கொடுமைகளை சற்று மறந்தோம்.

30

ஒ காக்கிரகுளம் சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட், 3.5.1951 காலை 11.30 மணி, நீதிபதி தம் இருக்கைக்கு வரும்போது கோர்ட் பியூன் "சைலன்ஸ்" என்று சப்தமிட்டார். யாவரும் எழுந்து நின்றார்கள்.

பின்பு வக்கீல் குமாஸ்தாக்களும், வக்கீல்களும் தங்கள் கருப்பு நிறக் கோட்டுகளோடும், கருப்பு அங்கிகளோடும் அமர்ந்தார்கள்.

பெஞ்ச் கிளார்க் அன்றைய வாய்தாவிற்கான குறிப்புகளைக் கூறினார். பின்பு அன்று விசாரிக்க வேண்டியவர்கள் பெயரைச் சொல்லவும் டபேதார் மூன்று குரல்கள் ஓங்கிக் கொடுத்தார்.

"பெருமாள், பெருமாள், பெருமாள்"

பெருமாள், வெங்கடசாமி, சின்னச்சாமி, பிரம்மநாயகம் நால்வரும் அப்ரூவர்களாகி காவல்துறையின் கைக்கூலிகளாகிவிட்டார்கள்.

போலீஸ் அடிக்குப் பயந்தும், சிக்கன் பிரியாணிக்கு ஆசைப்பட்டும் தாங்கள் பிடித்த செங்கொடியை கீழேபோட்டு மிதித்துத் துவைத்து விட்டார்கள்.

முதலில் பெருமாள் கூண்டிற்கு வந்தார். கம்யூனிஸ்ட் தரப்பு வழக்கறிஞர் வானுமாமலை ஆட்சேபணை தெரிவித்தார்.

'முதலில் அப்ரூவர்களை போலீசின் நெருக்குதல்கள் இல்லாத ஜெயிலுக்கு மாற்ற வேண்டும். திருவைகுண்டம், நாங்குனேரி போன்ற சிறு சிறைகளில் போலீஸ் ஆதிக்கம் அதிகமாக உள்ளன' என வாதிட்டார்கள்.

அரசு தரப்பு வக்கீல் பப்ளிக் பிராசிக்கூட்டர் பாலாஜிக்கும், என்.டி.வானமாமலைக்கும் பலத்த வாக்குவாதங்கள் எழுந்தன. பாலாஜி

"நீங்கள் வழக்கை நடத்தவிடாமல் காலதாமதம் செய்கிறீர்கள்' என்றார்.

உடனே வக்கீல் வானுமாமலை 'வழக்கை நடத்தும்படி துரிதப்படுத்தியதே நாங்கள்தாம், அப்படி இருக்க நாங்கள் காலதாமதப்படுத்துவதாகக் கூறுவது சண்டித்தனம்' என்றார்.

ஒரு சட்டப் பிரச்சனையில் ஐகோர்ட் பதிலைப் பெறுவதற்காக 17.5.51க்கு வாய்தா போடப்பட்டது.

"எங்கள் கேஸ்களைப் படிக்க சிறையில் உள்ள ஒரு அறைக்கு விளக்கு தர வேண்டும். கோர்ட்டில் எங்கள் தேழர்கள் அமர்ந்திருக்க பெஞ்ச் போட வேண்டும் என்று வக்கீல்கள் மூலம் வைத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் பட்டது.

வழக்கு மீண்டும் 25.5.51க்கு வாய்தா போடப்பட்டது.

அன்று அப்ரூவர் பெருமாள் தன் வாக்குமூலத்தை நான்கு நாட்களாக 40 பக்கங்களுக்கு ஒன்றுவிடாமல் ஒப்பித்தான்.

வக்கீல்களின் குறுக்கு விசாரணையில் பெருமாள் திணறினான்.

நாக்குக்கு எலும்புகள் கிடையாது. ஆனால் அந்த நாக்கு எத்தனைபேரின் எலும்புகளை நொறுக்குகின்றன.

12.6.1951 அன்று அப்ரூவர் வெங்கடசாமி தனது வாக்கு மூலத்தை பக்கம் பக்கமாகக் கொடுத்தான் - கம்யூனிஸ்ட் பொலிட்பீரோ உறுப்பினர் என்.கே.கிருஷ்ணனை சிரிப்பு நடிகர் என்.எஸ்.கிருஷ்ணன் என்று சொல்லி கோர்ட்டை சிரிக்க வைத்தான். அநியாயத்தை தண்ணீர் குடிப்பது போலக் குடித்தான். அவன் அணிந்திருந்த புஷ்கோட், பேன்ட் மிக விலை உயர்ந்தது. சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் வாங்கிக் கொடுத்தது என்று ஆலோசனைக் குழுவினர் வக்கீலிடம் சுட்டிக் காட்டினார்கள்.

'வாத்தியார் தம் பள்ளியில் இடம் தந்து இரகசியக் கூட்டம் நடத்த உதவி செய்தார். முதல்நாள் கம்பங் கஞ்சியும், மறுநாள் கோழிப் பிரியாணியும் கொடுத்தார். பண்ணையூர் பள்ளி பாலதண்டாயுதத்திற்கு மிகவும் பிடித்திருந்தது. கொலை, கொள்ளை திட்டங்களை அங்குதான் உருவாக்கினோம். அச்சு யந்திரத்தைக் காட்டிக் கொடுத்த ராமச்சந்திரனைக் கொலை செய்வோம் என்ற தீர்மானமும் அங்குதான் எடுக்கப்பட்டது என்று விலாவாரியாக விளாசினான்.

'தூத்துக்குடி ராமச்சந்திரனை வெட்டியது ஒரு புரட்சிகரமான செயல்தான். ஆனால் அவனை வெட்டிக் கொன்றுவிட்டு வந்திருக்க வேண்டும்' என்று பாலன் தன் தோழர்களிடம் சொன்னதாகக் கூறினான். இல்லாதது பொல்லாதது எல்லாம் இட்டுக்கட்டிச் சொன்னான். அவனுக்கு தினம் கோழி பிரியாணியும் சினிமா காட்சியும் கிடைத்தது.

அப்ரூவர்கள் போலீசின் ஒரு போலித்தனமான மாய்மாலத்திற்குள் மாட்டிக் கொண்டார்கள். நாக்கு ருசிக்கு அடிமையாகிவிட்டார்கள். அடிக்கு பயந்து போலீசின் எடுபிடிகளாகிவிட்டார்கள்.

அந்தோ... அவர்களின் முடிவு எத்தனை பரிதாபமானது.

அன்று இரவு சிறையில் ஒன்பதாம் எண் அறையில் பாரதி, வாத்தியார், செண்பகம், முத்து, மோகன் இன்னும் சிலரும் ஒன்று சேர்ந்திருந்தார்கள்.

இரு தினங்களுக்கு முன் பாரதி பொழுது போக்காக எழுதிய ஒரு கவிதை நாடகத்தை முத்தும் மோகனும் நடித்துக் காட்டினார்கள். மோகன் மார்பில் ஒரு துண்டைப் போட்டுக் கொண்டு பெண் பாத்திரமாக நடித்தான்.

நாடகம் பார்ப்போம்

கணவன் : போனேனேடி போனேனேடி குட்டி - போனேனேடி குட்டி
புதிய சீனா போனேனேடி

மனைவி : போயிவந்த சேதி தன்னை - மாமா - சேதி தன்னை மாமா
பொசுக்குன்னுதான் சொல்லிடுங்கோ

கணவன் : ஆனதொரு பெண்ணிருந்தும் உன்னை - பெண்ணிருந்தும்
உன்னை அழகாய்ப் பார்க்க முடியலையே - கண்ணே
அழகாய்ப் பார்க்க முடியலையே

மனைவி : வாக்கப்பட்ட நாள் முதலாய் மாமா - நாள் முதலாய் மாமா
வக்கில்லையே சோறுபோட - மாமா வக்கில்லையே
சோறுபோட

கணவன் : ஊம் அப்புறம்!

மனைவி : அப்புறமா? சொல்லுறேன், கேளு

(கும்மி மெட்டு)

கட்டின பொண்டாட்டியை விட்டுப்போட்டு நீயும்
காசிக்கு யாத்திரை போகலாமா?
பொண்டாட்டி செத்து மடிவாளே என்ற
புத்தி சிறிதும் உனக்கில்லையோ?
புள்ளை குட்டிகளை தெருவில் விட்டுவிட்டு
போயிட்டேயே மற்ற தேசத்துக்கு
புள்ளை குட்டிகளோடு தெருவில் திரிந்து நான்
புலம்புவதும் காதில் கேட்கலையோ

கணவன் : போனது போகட்டும் கண்மணியே - இனியாகிலும்
புத்தியுடன் இருப்போம்
ஆனது ஆகட்டும் என்று சொல்லி நாமும்
அங்கத்தினராவோம் சங்கத்திலே!

31

சதி வழக்கு விசாரணையின் இடைவேளையில் வேறு சின்னச் சின்ன கேஸ்கள் நடைபெறும். அவைகளில் சில சுவையாக இருக்கும்.

யானையைக் காட்டிப் பிச்சை எடுத்ததாக ஒரு வழக்கு. பூனையை அழவைத்து யாசகம் கேட்டதாக இன்னொரு வழக்கு. யானைத் திருடனை விடப் பூனைத் திருடனுக்கு அதிகத் தண்டனை. ஏனெனில் யானையை நடத்திக் கொண்டு போனான். பூனையை மறைத்துக் கொண்டு போனான்.

யானைப் பாகனைப் பார்த்து, 'அறிந்தறிந்து செய்த பாவத்தை' அழுது அழுதுதானே தொலைக்க வேண்டும்' என்று மனதிற்குள் கிசுகிசுத்தார் செண்பகம்.

வாத்தியாரைக் கூர்ந்து நோக்கிய பாரதி அவரது மூக்கை செல்லமாகத் தடவி விட்டுக்கொண்டு 'வாத்தியார், பயப்படாதே' என்றார். மேலும் சொன்னார்;

லாகூர் சதிவழக்கில் 1923ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசு தேசபக்தர் ஆசாத்திற்கு மரண தண்டனை விதித்தது. பின்பு ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. 1938ஆம் ஆண்டில் மகாத்மாவின் பொறுப்பில் விடுதலை பெற்றார். பின்பு காந்தியின் சகாவாக வார்தா ஆசிரமத்தில் இருந்தார். 1937இல் ஆரம்பமான தமிழக சட்டசபை நீதிக்கட்சியில் தொடங்கி நெடுக அநீதிக் கட்சியாக அனுமார் வால் போல்வளர்ந்து கொண்டே போகிறது. எனவே அநீதிகளைக் கண்டு பயப்படக்கூடாது. மக்கள் சக்தி அவைகளைத் தூள்தூளாக்கும் என்று ஆறுதலாகச் சொன்னார்.

'எனக்கு எந்த ஆறுதலும் தேவையில்லை. செய்யாத குற்றத்திற்காக தண்டனை அனுபவிக்கக்கூடாது. உண்மை வெல்லும்' என்றார் வாத்தியார்.

'டைரியில் எழுதியது உண்மைதானே?' என்று சற்று சூடாகக் கேட்டார் பாரதி.

'அதற்காகத் தண்டனை கிடைக்கட்டும். ஆயுள் தண்டனை வேண்டாம். மரண தண்டனையே தரட்டும்' என்றார். அப்பொழுது வாத்தியார் முகத்தில் அமைதியும் சாந்தமும் தவழ்ந்தது.

பாரதியின் கண்களில் நீர்த்துளிகள் பனித்தன.

அதோ அடுத்த ஒரு பெட்டிக்கேஸ் வருகிறது.

அங்கே நீதிபதியின் முன் நிற்கிறானே அவன் ஓர் அபூர்வமான கைதி. களவுத் தொழிலுக்கென்று கருவிகள் ஒன்றும் வைத்துக் கொள்ள மாட்டான். பூட்டுகள் எதையும் உடைக்காமல் புகைக்கூண்டு வழியாக ஏறி இறங்குவான். சந்து பொந்துகளுக்குள் நுழைந்து திருடுவதில் எட்டுக்கால் பூச்சி அவனிடம் பிச்சை எடுக்க வேண்டும்.

வேல் முருகன் என்பது அவன்பேர். அந்த ஸ்பைடர்மேன் 'சாட்சிக் கூண்டில் ஏறி நிற்பதைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது.

இந்த வழக்கிற்கு வக்கீல் வாய்தா கேட்டதால் நாகராஜ ஐயர் அடுத்த வழக்கை எடுத்தார்.

'புதியம்புத்தூர் சந்தையில் நீ ஆடு திருடிய வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் மூன்றுமாத சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கிறேன்'.

'சாமி ஒரு மணி நேரம் அவகாசம் தாங்க, ஓடிப்போய் ஆயிரம் ரூபாயை திருடிக் கொண்டுவந்து கட்டிவிடுகிறேன்'.

ஒரே சிரிப்பொலி. ஆனால் திருடன் தீர்க்க நோக்கில் திடமாக நின்றான். சதி வழக்கு தொடர்கிறது. அடுத்து வந்த போலீஸ் சாட்சி கூண்டில் ஏறவும் வாத்தியாருக்கு வியர்த்துக் கொட்டியது.

அவர் வாத்தியாரின் நண்பர் கொன்னையன் கந்தையா. பண்ணையூரில் வாத்தியாருக்கு வலது கையாக இருந்து நற்பணி புரிந்தவர் - பாதி ஆளாக உருக்குலைந்து இருக்கிறார். உறுதி குலையாத அவரை பத்து நாட்களாகப் போலீஸ் பாதுகாப்பில் வைத்து அடித்து மிதித்து இம்சித்து வருவது தெரியும்.

ஒருவர் சாட்சி கூண்டில் ஏறியவுடன் 'சத்தியமாச் சொல்றேன்' என்று சொல்ல வேண்டும். ஆனால் கந்தையா மேலெல்லாம் வேர்த்து விறுவிறுக்க பதறிப்பதறி கொன்னிக் கொன்னி, 'சத்தியமா நான் கந்தையாதான்' என்றார்.

கோர்ட்டில் சிரிப்பொலி எழுந்தது. வாத்தியாருக்கோ அடிவயிறு துடித்தது.

'எஜமான், என் புத்தியே தடுமாறிட்டு' என்றார். எதிரில் சி.ஐ.டி. போலீஸ்காரர்களின் கருட விழியைக் கண்டு நடுங்கி அரசு வக்கீலின் கேள்விகளுக்கு பிறகண்டவாறு சொன்னார்.

அவர் சொன்னதின் ரத்தினச் சுருக்கம் இங்கே உள்ளது.

அன்று 18.7.1951 புதன்கிழமை. எனக்கு நயினாபுரம் (பண்ணையூர்) தூத்துக்குடிக்கு வடக்கே ஆறு மைலில் உள்ளது. அந்த ஊர் ஆரம்பப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆர்.எஸ்.ஜேக்கப். அவருடைய நண்பர்கள் அவரை 'வாத்தியார்' என்றே அழைப்பார்கள். குறுக்குச் சாலை சுப்பாரெட்டியார் வாத்தியாரைப் பார்க்க வருவார். ஒண்ணே முக்கால் வருடத்திற்கு முன்பு ஐப்பசி மாதம் ஒருநாள் இரவு 11 மணிக்கு என்வீட்டை வந்து தட்டினார்.

'பள்ளிக்கு ஆறுபேர் வந்திருக்காங்க. சாப்பாடு கொடுக்கணும்' என்றார். 'சாப்பாடு இல்ல, கம்பங்கஞ்சி இருக்கு' என்றேன். பின்பு அவர் அதை வாங்கிக் கொண்டு போய்விட்டார். அரைமணி நேரம் கழித்து செம்பை வாங்கிட்டு வரணும்னு போனேன். பெட்ருமாஸ் வெளிச்சத்தில் ஆறுபேர் பேசிக் கொண்டிருந்தார்கள். ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். அவர்களில் சுப்பா ரெட்டியார், வாத்தியார் இவ்விருவர் மட்டும் எனக்குத் தெரியும்.

'ஒருவர் மூக்கு நீண்டு இருக்கும், மற்றவரின் தலைமயிர் சுருள் சுருளா இருக்கும். ஒருவர் கண்ணாடி போட்டு வளர்ந்த ஆள். செவப்பா இருப்பார். 'கட்சிக்கு துரோகம் பண்ணினவனை காலி பண்ணிவிடணும்' என்று அவர் சொன்னார். கதவுக்குப் பக்கத்தில் வந்து, 'வாத்தியாரே, செம்பைக் கொடும்' என்று கேட்டேன். 'வெளியே நில்லும் செம்பைக் கொண்டுவந்து தருவேன்' என்றார். பின்பு செம்பை வாங்கிக் கொண்டு போய்விட்டேன்'.

'வாத்தியார் கையில் ஒரு டைரி உண்டு. அது திருநெல்வேலி திருச்சபைப் பஞ்சாங்கம். பள்ளியில் அவர் கையெழுத்தைப் பார்த்திருக்கிறேன்'. (டைரியை காட்டியபோது இது அவருடைய டைரிதான் என்று சொன்னார்).

அரசு வக்கீல் ஏ.பி.பி. கிருஷ்ணசாமி ஐயர் உட்காரவும், வக்கீல் என்.டி.வானுமாமலை குறுக்கு விசாரணை செய்தார்.

'என்னை போலிசார் ஆறுமாதங்கள் கழித்துத்தான் விசாரித்தார்கள். சம்பவம் நடந்த அன்று நான் செம்பை வாங்கப் போனதினால்தான் அந்த ஆள்களை எனக்குத் தெரியும். அன்று நிலவு நாள். வெளிச்சமாக இருந்தது. டைரிக்குள் என்ன எழுதி இருக்குன்னு தெரியாது. அவர் பள்ளியில் இருக்கும்போது டைரி எழுதுவதைப் பார்த்திருக்கிறேன். எனக்கு வயது 21. உழுது பயிரிடுவது எனது தொழில். 1948இல் எங்க கிராம காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்தேன். சி.ஐ.டி. போலீஸ்காரர்கள் தூண்டுதலின் பேரில் பொய்சாட்சி சொல்லவில்லை என்றார்.

சிறப்பு இரகசியப் போலீசார் மகிழ்ந்து கனைத்தார்கள்.

'கொன்னையன் எங்கே கோட்டை விட்டுருவானோன்னு பயந்தேன்' என்றார் ஏட்டு நடராஜபிள்ளை.

'வாத்தியான் செத்தான் ; கழுத்தில கயிறு இறுகிட்டு' என்றார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

மற்றும் சாட்சிகளாக சொக்காண்டி ரெட்டியார். வையப்ப ரெட்டியார் யாவரும் இதே புராணம் பாடினர்.

பயங்கரப் போலீஸ் பாராவுடன் கோர்ட்டிலிருந்து கொக்கிரகுளம் சிறைக்கு நடந்து சென்றனர்.

'இந்த ஏழை கூப்பிட்டான், கடவுள் கேட்டார்' என்ற தாவீதரசனின் சங்கீதம் வாத்தியார் முகத்தில் வந்து மோதியது.

தாம் சிறையின் அறைக்குள் செல்லவும் இந்த வசனத்தை நினைத்து சிரித்தார்.

'சிரிப்பு என்ன வாழுது? வெளியேயுள்ள கட்சித் தோழர்கள் கந்தையாவை வசப்படுத்தி இருக்க வேண்டும். விட்டுவிட்டார்களே என்று குறைவுபட்டார் சீனிவாசன்.

'வாத்தியார் அந்த இரகசியக் கூட்டத்தினுள் இருந்தார்' என்ற பொய்யான செயலை போலீசார் பொய்ச்சாட்சி கொண்டு நிருபித்துள்ளார்கள். இனி சிரிக்க வேண்டியதுதானே' என்று சொன்ன வாத்தியார்' 'ஆனால் நான் சிரித்தது வேறு காரியம்' என்றார்.

அதென்ன காரியம் என்று ஆர்வத்தோடு கேட்டார் செண்பகம்.

வாத்தியார் வாய் திறந்தார்.

'எங்க ஊர்ல இலங்காமணியர் என்ற முதுபெரும் தாத்தா இருந்தார். அவர் முதன் முதலில் சினிமா பார்த்துட்டு வேதக் கோயில் மண்டபத்தில் வந்து கதை அளந்தார்.

'சினிமான்னா என்னமோன்னு நினைச்சேன். ஒண்ணுமில்லடா. நம்ம கண் முன்னால ஆள்க உயிரோட இருக்கிறமாதிரி இருக்கும். ஆனா இருக்காது. பொம்பளைய ஒரு அந்நிய ஆம்பளை தொட்றானேன்னு ஆத்திரம் வரும்.

ஆனா ஒண்ணுமில்லை, வெறும் திரைதானே. செத்துப்போன

கண்ணுக்குட்டி மாதிரி புல்லால் செய்து பசுமாட்டு முன்னால நிறுத்தி பாலைக் கறக்கிறானே அப்படியே சினிமாக்காரன் நம்மட்ட காசக் கறக்கிறான்.

ஆனா ஒண்ணுடா... கடவுள நான் படத்துல உயிரோட பார்த்தேன். அப்படியே என் மேலெல்லாம் புல்லரித்தது என்றார். அவர் வாயிலிருந்து நீர் ஒழுகியது.

'நானும் கடவுள் உயிரோடிருக்கிறார் என்று கண்டுகொண்டேன்' என்றார் வாத்தியார்.

32

அன்று இரவு தோழர்கள் இருந்த அறை கலகலப்பாயிருந்தது.

வீட்ல சோத்துக்கில்ல
விளக்குக்கு எண்ணெயில்ல
மாட்டுக்கு வைக்கோலில்ல
மானங்கெட்ட வாழ்கையிது!

அம்பை விவசாயத் தோழர் அழகுமுத்து அனுபவித்துப் பாடினார்.

தேசபக்தர், தச்சநல்லூர் மாணிக்கம் பிள்ளை.

"ஆடுராட்டே சுழன்று
ஆடுராட்டே
சுழன்று சுழன்று ஆடுராட்டே
சுயராச்சியம்
செத்துப்போனதென்று
ஆடுராட்டே, ஆடுராட்டே...."

என்று ஆடிக்கொண்டே பாடினார்.

'நீ ஒரு வேதப்பாட்டை பாடு' என்று பாரதி வாத்தியாரை எழுப்பிவிட்டார்.

1812இல் குமரி மாவட்டத்து மைலாடியில் பிறந்த கவிஞர் ஜான்பால்மர் பாடிய கீர்த்தனை பாடலைப் பாட வேண்டும் போலிருந்தது வாத்தியாருக்கு.

'உலகம் எதிர்த்துனக்கு
மலைவு செய்தாலும்
உறுதி விட்டயராதே, நெறி தவறாதே'

என்ற பாடலை கைமுஷ்டி காட்டி வீரத்தோடு பாடிய வாத்தியார் மீண்டும் பேசினார்.

ஆர்.எஸ்.ஜேக்கப்

'நச்சை வாயிலே கொணர்ந்து
நண்பரூட்டு போதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை,
அச்சமென்பதில்லையே'

என்று பாடிய பாரதிக்கும் பல ஆண்டுகளுக்கு முன்பே பாடியவர் ஜான் பால்மர். பாரதியின் அச்சமில்லை, அச்சமில்லை என்ற பாடலுக்கு அடியெடுத்துக் கொடுத்தவர் ஜான் பால்மர் என்று சொன்னபோது எல்லகண்ணும் புன்னகை பூத்து நின்றார்.

கொடிய கொசுக்கடியின் மத்தியிலும், மூட்டைக் கடிகளினூடும் தோழர்கள் கண்ணயர்ந்து தூங்க ஆரம்பித்தனர்.

வாத்தியாரின் கைவிரல்கள் அறையின் இரும்புக் கம்பிகளைப் பற்றி இருந்தன. அவரின் எண்ணங்களோ உயரே உயரே பறந்து திரிந்தன.

கோர்ட்டில் கந்தையாவைப் பார்த்தபோது பண்ணையார், முத்தம்மா நினைவு வந்தது. முத்தம்மா கட்சி வளர்ச்சிக்கும், ஊர் முன்னேற்றத்திற்கும் பாடுபட்ட வீராங்கனை ஆவார்.

அவளை கந்தையாவிற்கு மணமுடித்து விட அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடித்திருந்தபோது வாத்தியார் கைதானார். அவர் மீது சதி வழக்கைக் கொழுவினர். முத்தம்மாள் முதலாளியின் பலிகிடா ஆனாள். கந்தையா போலீசிற்குப் `பலிகிடா ஆகிக் கொண்டிக்கிறார்.

இருவரையும் நினைத்தபோது வாத்தியாரின் கண்களில் நீர் நிரம்பியது. ஊர் நினைவுகள் பசுமையாக எழுந்தன.

அடிபட்ட பாம்பு காற்றைக் குடித்து உயிர் பெறுவது போல இவ்விதமான நினைவுகளால் வாத்தியாருக்குப் புது உயிர் பிறந்தது.

'நமக்கிருக்கிற உபத்திரவங்களை நினைத்துப் புலம்புவதைவிட இல்லாத உபத்திரவங்களை எண்ணி நன்றி செலுத்த வேண்டும். அதில் ஒரு தனி மகிழ்ச்சியே ஏற்படுகிறது என்று அவரது ஆன்ம சிந்தனை அங்கீகரித்தது.

வாத்தியாருக்கு டைரி எழுதும் பழக்கம் சிறுவயதிலிருந்தே இருந்தது. இருக்கிறது. அன்றாடம் டைரி எழுதுவது அவரோடு கூடப்பிறந்த கூட்டாளி மாதிரி. டைரி என்றால் உண்மை, இரகசியம் என்பது அவரது கோட்பாடு.

என் டைரியை வேறு யாராவது படிக்க முடியுமா என்ன? அப்படி ஒரு மடத்தனம் நடக்குமா என்ன? என்று அடிக்கடி ஆங்காரத்தோடு கேட்டுக் கொள்வார்.

1945 முதல் திருச்சபைப் பஞ்சாங்கம் என்னும் டைரியை உபயோகித்து வந்தார். அது மிஷன் பள்ளி ஆசிரியர்களுக்குக் கட்டாயமாகக் கிடைக்கும்.

ஒரு முறை டைரியைப் படிக்க அவரது தங்கை மூக்கை நீட்டினாள். அவளுக்கு அடிகொடுத்து, 'மூதி மற்றவங்க டைரியைப் படிக்கக் கூடாது. இந்த சிறு நாகரீகம் கூட உனக்குத் தெரியாதா?' என்று உபதேசித்தார்.

டைரியின் வாசகங்கள் சில கண்முன் வந்து நின்றன.

'பண்ணையூர் மக்களின் நல்வாழ்விற்காக என் உயிரையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன். அவர்களின் அடிமைத்தனம் நீங்க என்னையே அர்ப்பணிக்கிறேன்'.

'என் தங்கை வாயாடி அல்ல. நியாயத்தை நிமிர்ந்து நின்று கேட்பாள், யாருக்கும் பயப்படமாட்டாள். கடவுளே அவளுக்கு நல்ல மாப்பிள்ளையை தாரும்'.

'முன்னூறு வீடுகள் உள்ள பக்கத்துக் காயலூரணி கிராமத்தில்ஒரு நல்ல பள்ளி இல்லை. என் சொந்தக் காசைச் செலவு செய்து அங்கு ஒரு பள்ளியை கொண்டுவர முயற்சிப்பேன்'.

'பள்ளி முடிந்து வீட்டிற்குப் போகும்போது மீனாட்சி ஜன்னல் இடுக்கு வழியே என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள். பதிலுக்குச் சிரிக்க எனக்குத் துணிவேது? நேரமேது? புயல் புகுந்துவிடாதபடி, புன்மை இருளுக்குள் வீழ்ந்துவிடாதபடி இறைவா என்னைக் காத்தருள்க. நான் வேறு பாதை வழியாக வீடு செல்ல வழிநடத்துக!'

'இது போன்று இன்னும் பல செய்திகளையும் எழுதி இருந்தேன். ஐயகோ... என் தங்கையே பார்க்க விரும்பாத என் டைரியை இன்று காவல்துறை காவாலிகள் படிக்கிறார்கள்.

வாத்தியாருக்கு அழ வேண்டும் போலிருந்தது. வேதனைகளிலிருந்து விடுபட முயன்றார்.

இன்னும் தூங்காது விழித்திருந்த ஒரு கைதியுடன் பேச விழைந்தார்.

'நண்பரே, நீங்கள் யார்?'

'நான் ஒரு அச்சுத் தொழிலாளி'

'விவிலிய நூல்தான் முதன் முதலில் உலோக எழுத்துக்களில் அச்சிடப்பட்டது. அதற்குமுன்பு ஆட்டுத் தோலில் அச்சிட்டனர். ஒரு வேதப் புத்தகத்திற்கு 300 ஆட்டுத் தோல்கள் தேவைப்படுமாம். அச்சி எழுத்து என்பது எவ்வளவு விலையேறப்பெற்றது?' என்று கூறவும், அச்சுத் தொழிலாளி 'நான் முதன் முதலில் ஆடுதான் திருடினேன்' என்று பெருமையோடு சொன்னான்.

'எதற்காக ஆடு திருடினாய்?'

'இந்த உலகில் அச்செழுத்து ஒன்றுதான் மிக மலிவு. ஒரு குப்பைத் தொட்டிக்குள் ஒரு மூட்டைக் கழிவு தாள்களை அள்ளலாம். அதைப் போலவே அச்சுத் தொழிலாளியின் கூலியும் மிக மிக மலிவு. 22 வருடங்களாகப் பனையூரில் ஒரு அச்சுக் கூடத்தில் வேலை செய்தேன். தினக்கூலி இரண்டு ரூபாய். ஞாயிற்றுக்கிழமை சம்பளம் கிடையாது. பிழைக்க முடியாதுன்னு பார்த்தேன். ஆடு திருட ஆரம்பித்தேன்.

'பிறகு என்ன ஆச்சி?'

'நல்லா ஆட்டுக்கறியும் சாப்பிட்டேன். கைச் செலவுக்கும் காசு கிடைத்தது. பிறகு எனக்குப் பேராசை வந்திட்டு, மாடு திருடினேன். மாட்டிக் கொண்டேன்'.

வாத்தியார் அவனை அன்போடு நோக்கினார். 'அரசியலின் பேரால்

நடக்கும் வன்முறைகளையும் - தனி நபர்களின் அதி தீவிர வெறிச் செயல்களையும் கண்டு மனம் விண்டு போன வாத்தியார் அவரது உள்ளமாகிய டைரியில் இப்படி எழுதினார்.

'மூன்றாவது உலக யுத்தம் இன்னும் மூளாமல் தப்பித்துக் கொண்டோம் என்று நாம் பெருமை கொள்ள முடியாது. தீவிரவாதச் செயல்களும்-வன்முறைச் செயல்களும் சிறுசிறு யுத்தங்களாக நாடு முழுவதும் பரவியுள்ளதை யாராலும் மறுக்க முடியாது' என்று கூறி சற்று கண்ணயர உட்கார்ந்தார். அவர் உள்ளத்தின் அடி ஆழத்திலிருந்து ஓர் அலை எழுந்தது. அது ஒரு கனத்த குரலாக வெடித்தது-

'உண்மை தன்னந்தனியாகவே வெல்கிறது. பொய்க்குத்தான் துணை தேவை'.

33

விசாரணைக் கைதிகள் 97 பேர்களையும் விலாவாரியாக எழுதினால் அதுவே ஒரு பெரிய புராணமாகிவிடும். 235 சாட்சிகளின் தடுமாற்றங்கள், தாறுமாறுகள் இவைகளைச் சுருக்கியேனும் எழுதப் புகுந்தால் அதுவும் ஒரு கிரந்தமாகிவிடும். எனவே கீழ்கோர்ட் விவகாரங்களை இத்துடன் முடிவுக்குக் கொண்டுவருவோம்.

குற்றவாளிகள் 97 பேர்களில் 30 பேர் குற்றமற்றவர்கள் என்று விடுதலை ஆனார்கள். நிரபராதிகளான அவர்கள் 18 மாதங்கள் பல சிறைகளில் அநியாயமாகக் கொடிய தண்டனைகளை அனுபவித்தார்கள்.

பாலதண்டாயுதம், மீனாட்சிநாதன், பயில்வான் அருணாசலம் ஆகியோர் மீதுள்ள சதிவழக்கு பாலன் இன்னும் அகப்படாதபடியால் அந்த வழக்கு கிடப்பில் கிடக்கிறது.

மீதமான 67 பேர்களைக் கொண்ட ஒரு பெரிய சதி வழக்கைத் தொடுத்தார்கள். அவர்களில் முதல் குற்றவாளி தூத்துக்குடி பொன்னு.

'நெல்லை மாவட்ட கம்யூனிஸ்ட் சதி வழக்கு' என்பது பேராகும்.

34 வயதுள்ள பொன்னு தூத்துக்குடி புதுமனையைச் சேர்ந்தவர். ஹார்வி மில்லில் ஸ்பின்னிங் தொழிலாளி. 1930 முதலே காங்கிரஸ் அனுதாபி. 1942 ஆகஸ்ட் சுதந்திரப் போராட்டங்களில் தீவிரப் பங்கேற்றார். 1944 முதல்1947 வரை இந்திர குல வேளாளர் சங்கத்தை ஏற்படுத்தி அதன் தலைவராக செயல்பட்டார். 1948இல் உப்புத் தொழிலாளர் சங்கத்தில் உதவிச் செயலர் ஆனார்.

1949 ஜனவரியில் உப்புத் தொழிலாளர் மத்தியில் முழுநேர ஊழியராக வேலை செய்வதற்காக மில் வேலையை ராஜினாமா செய்தார். தொழிலாளர்களை திரட்டினார். 1949 நவம்பர் முதல் கம்யூனிஸ்ட் கட்சியில் தீவிரமாக ஈடுபட்டார்.

கொலை முயற்சி, முத்தையாபுரம் கொள்ளை, ரயில்வே பொருள்களை கொள்ளையடித்தல், ரிவால்வர் வைத்திருத்தல், சட்ட விரோதமாக அச்சியந்திரம் வைத்து இயக்கியது.... இப்படியாக பல குற்றங்களைச் சாட்டி சதி வழக்கில் முதல் எதிரியாக்கினர்.

இவரை கைது செய்தபோது முதுகுச் சதை பிய்ந்து போகும் வரை தடியாலும் பிரம்பாலும் அடித்தார்கள். இரு புயங்களிலும் தீ வைத்துப் பொசுக்கினார்கள். காரி உமிழ்ந்தும், மூத்திரம் பெய்தும் அவமானப்படுத்தினார்கள்.

13 மாதச் சிறைவாழ்வில் சிகிச்சை இல்லாமல் நெஞ்சுவலி, மலச்சிக்கல், குடல் கோளாறு, மூலநோய், கண்பார்வை மங்கல் இப்படிப்பல நோய்கள் அவர் உடலோடு ஒட்டிக் கொண்டன.

அவரது மனைவியும், ஒரு குழந்தையும் வயோதிபத் தந்தையும் நடுத்தெருவில் நின்றார்கள்.

அவரது அனைத்துச் செயல்களிலும் 'மனிதம்' என்னும் மாண்பு நிறைந்திருந்தது. நொம்பலப்பட்ட மக்களுக்காகப் பம்பரமாகச் சுழன்று பாடுபட்டார்.

பொன்னு, தூத்துக்குடி தந்த முத்து, பாட்டாளி மக்களின் சொத்து.

அன்று 1951 ஆகஸ்ட் 15. நான்காவது சுதந்திர நாளில் பொன்னு மற்றும் தோழர்கள் பட்டபாடுகளை நினைத்துப் பார்த்த வாத்தியாருக்கு நெஞ்சு முட்டி அழுகை பீறிட்டது.

முதல் சுதந்திர தினத்தில் பண்ணையூரில் 77 மாடுகள் பூட்டி ஊர்வலம் வந்தோம். மூன்று நாட்கள் விழா எடுத்தோம். சுதந்திரம் வந்தவுடன் சுபிட்சம் பெருகும். அடிமை விலங்கு உடையும் என்று பல ஆண்டுகளாகப் பிரசங்கித்தும் எழுதியும் வந்திருந்தேன்.

ஆனால் இன்று...

'சுதந்திர தேவியே, நீ இறந்தே போனாய், அல்லது தூங்கி விட்டாயோ? தூங்கி இருந்தால் கண்விழித்த போது கதறி அழுதிருப்பாயே... நீ நிச்சயமாக செத்தே போனாய்'.

அன்றைய நாட்குறிப்பில் இப்படி எழுதினார். எழுத டைரி ஏது?

மூளையில் பதிவு செய்து கொண்டார்.

அன்று மாலை லாக்கப்புகள் அடைபடுமுன் வாத்தியார் ஒன்பதாம் அறைக்குள் போய் அமர்ந்து கொண்டார்.

மனிதனின் தனிமையே அவன் பெறும் உன்னத மேன்மைகளுக்கெல்லாம் அடிப்படை என்று யாரோ சொன்னது நினைவிற்கு வந்தது.

அங்கு வந்த பாரதி, "என்ன கவலை, ஏன் தனிமை?" என்றார்.

''ராணி மங்கம்மா காலத்தில் சத்திரக்குளம், சாவடிக்குளம்,

காலநடைக்குளம், காவல்குளம், தர்மக்குளம், ஊருணிக்குளம் என்று பல குளங்களை வெட்டினாள். இப்போ காலை வெட்டு, கையை வெட்டு, தலையை வெட்டு, கழுத்தை வெட்டு, அடையாளம் தெரியாமல் முகத்தை வெட்டு... இவைகள்தாம் இன்றைய சாதனைகள் - எந்தக் கட்சியானாலும் சரி, அழிவு வேலை கூடாது, இருக்குமானால் அது அழியும்' என்றார் வாத்தியார்.

பாரதியும், வாத்தியாரும் எப்பொழுதும் மனம் விட்டுப் பேசிக் கொள்வார்கள்.

"தூத்துக்குடி ராமச்சந்திரனை வெட்டியது பற்றி சொல்றியா? என்று பாரதி உதட்டைப் பிதுக்கியவாறு கேட்டார்.

'அதுவேறு கதை. நல்ல கனி கொடாத மரமெல்லாம் தானாக வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்'.

'முதலாளி - தொழிலாளி, எஜமான், ஏவலாளி, விவசாயி, நிலப்பிரபு, விஞ்ஞானி, மெய்ஞானி, அறிவு ஜீவி, அற்ப ஜீவி, கிறித்தவம் - கம்யூனிசம், காந்தீயம் - சோஷலிசம் அனைத்தும் ஒன்றிணைந்த புதிய ஒரு மானுடம் தோன்ற வேண்டும். அதுதான் 'மனிதியம்' என்பது.

'அப்பொழுதுதான்....

ஒரே உலகம்
ஒரே இனம்
ஒரே குடியுரிமை
ஒரே நாணயம்

என்ற பரந்த நிலைக்கு நடைபோட முடியும்'.

'மகள் ஆபாச நடனமாட பெற்ற தாயே கட்டாயப்படுத்தியதால் 17வயது மகள் தற்கொலை செய்து கொண்டதாக செய்தி வந்துள்ளது. சுரண்டல் நாகரீகம் இப்படித்தான் போய் முடியும். ஆயினும் அந்தப் 17 வயதுப் பெண்ணைப் பாதுகாத்திருக்க வேண்டும். அதுதான் மனிதியம்' என்று பிரசங்கித்தார் வாத்தியார்.

அன்று இரவு வாத்தியார் தூக்கத்தில் புலம்பியதாக செண்பம் சொல்லிச் சொல்லிச் சிரித்தார்.

'பாரதநாடு பழம்பெரும் நாடு நீரதன் புதல்வர், இந்நினைவகற்றாதீர்' என்று பாரதி பாடினார். இன்று நாடு முழுவதும் ஊருக்கு ஒரு கூலி மாறுபடுகிறது.

'சோறு போட்டான் விவசாயி
கூறு போட்டான் முதலாளி'

உபரி நிலங்களைக் கைப்பற்றி நிலமில்லாத விவசாயிகளைக் கூட்டி ஆங்காங்கு கூட்டுப் பண்ணைகளை நிறுவு. தோல்வியடைந்தால் அறுவை சிகிச்சையோடு மறுபரிசீலனை செய்.

நீரதன் புதல்வர், இந்நினைவு அகற்றாதீர்' என்று தெளிவாய் புலம்பினியே என்ற பாரதியிடம் 'இது புலம்பல் அல்ல, உண்மை' என்றார் வாத்தியார்.

லாக்கப்புகளைத் திறந்தது சொர்க்க வாசல் திறந்தது போலிருந்தது-

34

கொக்கிரக்குளம் சிறை புதியதோர் திருப்பத்தை ஏற்படுத்தியது.

பாரதி துக்கமுகத்தோடு வந்தார். அவர் சொன்னார், "வாத்தியாரை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. மரண தண்டனை அல்லது ஜென்மம் கிடைக்கும் என்று நல்லசிவன் சொல்கிறார். 'இன்று இரவு எம் பள்ளியில் கம்யூனிஸ்ட் இரகசியக் கூட்டம் நடந்தது' என்று பட்டவர்த் தனமாக எழுதி இருக்கிறார். அதைத் தொடர்ந்த மறுதினங்களில் மீளவிட்டான் குட்ஸ் ரயில் கவிழ்ப்பு, முத்தையாபுரம் கொள்ளை, தூத்துக்குடியில் கொலை முயற்சி' என்று பல குற்றங்கள் நடந்துள்ளன. 'சதி' வாத்தியாரின் பள்ளியிலிருந்துதான் உருவாகி இருக்கிறது என்று இரகசியக் காவல்துறை கணிக்கிறது. சதி 'புரூப்' ஆகிவிட்டால் மரணதண்டனையே.... ஆனால் பாவம் வாத்தியார் ஒரு தீங்கும் செய்யாதவர்'.

'பாரதி, மரணவாயிலில் நான் நிற்கிறேன், கொஞ்சமும் கவலைப்படவில்லை, சத்தியம் என்னை விடுதலையாக்கும்' என்று வாத்தியார் தெளிந்தபுத்தியோடு சொன்னார். ஏழெட்டு தோழர்களும், நண்பர்களுமாக நின்று கொண்டிருந்தார்கள்.

வாத்தியாரை கூர்ந்து நோக்கிய பாரதி மடை திறந்துவிட்டாற் போன்று பொழிய ஆரம்பித்தார்.

'சதி வழக்குகள் என்பது நமக்குப் புதிதல்ல, விடுதலை இயக்க வரலாற்றில் கம்யூனிஸ்ட்கள் மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், தேச பக்த அரசும் பல சதி வழக்குகளை தொடுத்தன.

'மீரத் சதி வழக்கு (1924), இரண்டாவது மீரத்சதி வழக்கு (1929-33), சைமன் கமிஷனை எதிர்த்ததற்காக 1939ல் ராமமூர்த்தி, உமாநாத் ஆகியோர் மீது சென்னை சதிவழக்கு, 1940, 41ல் நெல்லைச் சதிவழக்கு, அதே ஆண்டில் கோவைச் சதிவழக்கு, 1946, 47ல் மதுரை சதி வழக்கு, இப்பொழுது நெல்லை கம்யூனிஸ்ட் சதிவழக்கு... கடைசியில் எல்லாம் புஸ்ஸூன்னு போயிடும்.. பட்டபாடுகளும் கெட்டுப்போன உடலும்தான் மிச்சம்...'

வாத்தியார் குறுக்கிட்டார்.

'நிரபராதியான ஒரு பாலுவை காப்பாற்ற முடியாமல் போச்சே'.

அமைதி நிலவியது.

கொக்கிரகுளம் சிறையில் வேலாயுதம் போன்ற காச நோயாளிகட்கு மருத்துவ வசதி இல்லை. தோழர்களோடு சேர்ந்தே தங்கினார்.

சிறையிலுள்ள பத்துத் தென்னைகளும், இரண்டு வாதாமரங்களும், மாதுளை - எலுமிச்சை செடிகளும் வேலாயுதம் மீது இரக்கம் கொண்டு சுத்தமான காற்றுவீசின. அதுவும்கூட கைதிகளின் பெருமூச்சில் கலந்து உஷ்ணக் காற்றாகிச் சுட்டது.

ஒரு கிரிமினல் கைதி இரவுமுழுவதும் லாக்கப்பினுள் பேச்சு மூச்சின்றிக் கிடந்தார். போலீஸ் சித்திரவதையின் காரணமான நெஞ்சுவலியில் கூப்பாடு போட்டு அலறினார். தோழர்கள் முறையிட்டனர்.

காலையில் டாக்டர் வந்தார். மருத்துவமனைக்கு அனுப்பாமல் கண் துடைப்பிற்கு ஏதோ கொடுத்துவிட்டு ஜெய்லர் குறிப்பறிந்து ஓடிவிட்டார்.

லாக்கப்பினுள் ஓர் உள்ளம் குற்றுயிராய் துடிக்கிறது, ஜெயில் அதிகாரி வெளியே நின்று கனைத்துக் கொண்டிருந்தார். ஆத்திரம் கொண்ட சில தோழர்கள் கூடினர். சிறை நிர்வாகத்தின் ஊழல்களை புட்டுக் காட்டினர். அதற்கு ஜெயில் அதிகாரி 'கிரிமினல் கைதிகள் காரியத்தில் நீங்கள் பிரவேசிக்கக் கூடாது' என்றார். உடனே வேலையா 'அவர்கள்தாம் எங்கள் பொதுமக்கள்' என்றார்.

சிறை அதிகாரி நழுவிவிட்டார்.

செஷன்ஸ் சிறப்புக் கோர்ட்டில் வழக்குகள் விசாரணைக்கு வந்தன. வேலாயுதம் எசக்கி ஆசாரியிடம் எப்போதும் கேலிபேசி மகிழ்வார். எசக்கி, சங்கை மில்லில் ஸ்பின்னிங் தொழிலாளியாக வேலை செய்த மன்னார் கோவில் தோழர். கொடிய அடக்குமுறை காலத்திலும் செங்கொடியை கீழேபோடாது பாதுகாத்த இரும்பு மனிதர். அவர் மீது வேலாயுதத்திற்கு அளவு கடந்த பாசம். இரு உருக்கு உள்ளங்கள் ஒன்றுபடுவதில் ஆச்சரியமில்லை.

வழக்குகள் விசாரணைக்கு வந்துவிட்டமையால் சிற்சில சலுகைகள் கிடைத்தன. இரவு லாக்கப் ஆனது.

அன்றைய தினமணி பத்திரிகையைப் பாரதி படிக்க தோழர்கள் சுற்றி உட்கார்ந்து கேட்டார்கள். பாதிக்கு மேலான செய்திகளில் கரி பூசி படிக்க முடியாதபடி மறைத்திருந்தார்கள். பாப்பாரப்பட்டியில் பட்டினியால் தற்கொலை, காமநாயக்கன் பட்டியில் கற்பழிப்பு என்பன போன்ற செய்திகள் தோழர்களின் கண்களில் பட்டுவிடக்கூடாதென்று தார்மை தடவி இருந்தார்கள். கம்யூனிஸ்ட்கள் சிறைக்குள் இருந்தாலும் பட்டினிச் சாவுகளைக் கண்டு சகிக்க மாட்டார்கள் என்பதில் எவ்வளவு அக்கரை.

நேரம் ஆக ஆக நானாவித நாற்றங்கள் மூக்கைத்துளைத்தன. அறையின் மூலையில் ஒரு சதுர டப்பா, தொட்டால் ஒட்டும்படியாக அதில் தார்பூசப்பட்டிருக்கிறது. அதையும் மீறி அதிலிருந்து மலநாற்றம் குமட்டியது. அதன் மீது தெளித்திருந்த லோஷன் வேறுவித நாற்றத்தை எழுப்பும். மூட்டைப் பூச்சிகளின் இரத்தவாடைவேறு. கீரைத்தண்டுகள் ஜீரணித்து பல குரல்களில் நாதமிசைத்து நாற்றமடிக்கும்.

கூடங்குளத்துத் தம்பி, கொக்கிரகுளத்தில் கோழி திருடிய குற்றத்தில் மூன்று மாதங்களாக முக்காட்டுக் கேஸில்* கிடக்கிறான். இடநெருக்கடி காரணமாக இன்று அவனை ஒன்பதாம் பிளாக்கினுள் தள்ளிவிட்டார்கள்.

வாத்தியார் விசாரணை செய்தார்.

'எனக்கு வீடு வாசல் கிடையாது. இரவு கடைகளை அடைத்தபிறகு கடைப் பலகையில் படுத்துக் கொள்வேன்.

அன்று குப்பைத் தொட்டி எச்சிலையிலே நன்கு வயிர் நிறைந்துவிட்டது.

'சீரட்டு சீரட்டு பெட்டி வேணுமா . உனக்கு

சின்னக்கடை, சின்னக்கடை ரொட்டி வேணுமா?'.

என்று உற்சாகத்தில் தெம்மாங்கு பாடினேன். அந்தப் பக்கமாக வந்த ஒருவர்' என்னடா பாட்டு?.. தேவாரம் பாடு உனக்குப் புகழாரம் கிடைக்கும்' என்று சொல்லிச் சென்றார்.

'தாவாரம் இல்லை, எனக்கு

தேவாரம் ஏதுக்கடி?' என்று இரைந்து பாடினேன்.

அவ்வளவுதான். போலீஸ் பிடித்து கோழிக்கேஸ் போட்டு உள்ளே தள்ளிவிட்டான். இப்போ படுக்க நல்ல தாவாரம் கிடைச்சிருக்கு' என்றான்.

'ஒவ்வொரு கைதியும் ஒரு கதைதான்' என்று வாத்தியார் வியந்து நின்றபோது செண்பகம் வாய்திறந்தார்.

'உண்மையான சுதந்திரம் பற்றி பகவத்திங் அழகாகச் சொன்னார்;

'பாலுக்கு அழும் குழந்தை
கல்விக்கு ஏங்கும் மாணவன்
பட்டினியால் வாடும் மக்கள்
வேலை இல்லாத இளைஞன்
நடைபாதையில் வீடற்ற ஏழைகள்'

இவர்கள் இல்லாத இந்தியாவே உண்மையான சுதந்திர இந்தியா என்றார். கைதித்தம்பி உருகி நின்றான், 'உன் பேர் என்ன?' என்று கேட்டபோது 'நடைபாதை நடராஜான்னு கூப்பிடுவாங்க' என்றான்.

கெட்டுப்போன பருப்பு செமியாமல் கெட்ட வாடை குமட்டியது. வேலையா தண்தண் என்று இறுமிக் கொண்டிருந்தார்.

'சோழ மன்னர்கள் ஆண்ட பொற்காலம் எப்போதான் வரப்போகுதோ?' என்று அழாக்குறையாகச் சொன்னார் அழகுமுத்து-

உடனே வாத்தியார் குறுக்கிட்டார்.

'சோழர்காலத்தில் சாதீயமும் அடிமைத்தனமும் அதிகமாக - அதிகாரபூர்வமாக இருந்ததாகச் சோழர் காலக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கம்பு, நெல், சோழம் முதலிய தானியங்களை உரலில் போட்டு குத்துவதற் கென்றே நிரந்தர அடிமைகள் பண்ணை வீடுகளில் இருந்திருக்கிறார்கள். எனவே சோழர் காலமும் கொடுங்காலமே.

---

* **முக்காட்டு கேஸ் : சந்தேகக் கேசின் மறுபதிப்பு, போலீசின் பொய் கேஸ் புகுப் ஆகாவிட்டாலும் இருவாரங்கள் தண்டிக்கலாம்.**

'நாம்தாம் நற்காலங்களையும், பொற்காலங்களையும் உருவாக்க வேண்டும்' என்றார் வாத்தியார்.

'பொற்காலம் காண உற்பத்தியைப் பெருக்குன்னு நம்ம பிரதமர் சொல்றார்' என்றார் அழகுமுத்து-

உடனே வாத்தியார் சொன்னார்.

'வெறும் பேச்சு சோறு போடுமா? தேங்காய் பட்டணத்தில் தேங்காய் திரி வெடிகுண்டு செய்றாங்களாம். பனைக்குளம் என்ற ஊரில் பனைகளை வெட்டி செங்கமாலுக்கு அனுப்புறாங்க, படிச்ச பயங்க பட்டணத்தில் வந்து லாட்டரி சீட்டு விற்றுப் பிழைக்கிறாங்க, பட்டிக்காட்டு விவசாயம் பாழாகிப் போச்சி. இது இப்படி இருக்க 'பொற்காலம்' என்பது கற்பனைதான்' என்றார் வாத்தியார்.

35

இரவுநேரம். பாரதி கடிதங்கள் எழுதிமுடியவும் வாத்தியார் வினவினார்.

கடவுள் பற்றி டார்வின் தத்துவம் என்ன?

பாரதி சொன்னார்.

'கடவுள் இல்லை என்பதற்கு டார்வின் ஆயிரக்கணக்கான நூற்களைப் படித்து ஆதாரங்களை தேடினார். இறுதியில் எண்ணூறு செயல்பாடுகளைக் குறிப்பிட்டு - இவைகள் மூலம் 'கடவுள் இல்லை' என்று யூகிக்கலாம் என்று எழுதி இருக்கிறார்'.

வாத்தியார் 'பளார்' என்று பதில் சொன்னார்.

'இல்லை என்று சொல்ல எண்ணூறு முறை யூகிப்பதை விட இருக்கிறார்' என்று ஒருமுறை நம்பினால் போதுமே'

பாரதி உட்கார்ந்தவாறு குதித்துக் குதித்துச் சிரித்தார்.

'கடிதம் யாருக்கு பாரதி?' செண்பகம் கேட்டார்.

'அக்கா சுடலிக்கு'

'படித்துக் காட்டு பாரதி' - வேலையா வேண்டினார்.

பாரதி வட்டச் சம்பளம் போட்டு இடது காலின்மேல் வலது காலைத் தூக்கி வைத்து எழுத ஆரம்பித்தால் கிடுகிடு என்று ஓடும் - கால்கள் தாம் அவருக்கு மேசை, நாற்காலி எல்லாம்.

யாவரும் சுற்றி அமர்ந்தனர். பாரதியின் கடிதம் என்றால் டமீல், டுமீல் என்று குண்டு மழை பொழியும். உடம்பை ஆட்டி, கையை குவித்து பாரதி படிக்கும்போது மகிழ்ச்சியாயிருக்கும்.

ஏழ்மையில் புரளும் அக்காளுக்கு என்ன எழுதுவார்? நீண்ட கடிதத்தின் ஒரு பகுதியை மட்டும் படித்தார்.

அன்புள்ள அக்காள் சுடலியம்மாளுக்கு தம்பி மாயாண்டி பாரதி மிகவும் வணக்கத்துடன் எழுதுவது.

அத்தான் சதையைப் பிழிந்து இரும்பைக் காய்ச்சி உயிர்வாழ வேண்டும். நீயோ பங்குனி சித்திரை கொடும் வெயிலில் மெழுகு போல் உருகி பருத்தி எடுத்து கூலி ஜீவனம் செய்ய வேண்டும். அதுகூடக் கிடைப்பது சுவர்க்க பதவி. இந்த நிலைக்கு நமது வாழ்க்கை நிலை குலைந்துவிட்டது. நமது குடும்பம் மட்டுமென்ன? நாட்டிலுள்ள மெஜாரிட்டி மக்களுடைய வாழ்வு இப்படித்தான். அன்று நம் மகாகவி பாரதியார்,

'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் - வெறும்

சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்' என்று பாடினார். நமது கஷ்டங்கள் தொலைய அந்நிய ஆட்சி அகல வேண்டும் என்றார். போர்க்கொடி உயர்த்தினோம், போர்முரசு கொட்டினோம்.

'ஏழையென்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில் இழிவுகொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே' என்ற ராணுவ கீதம் எட்டுத் திக்கிலும் கிடுகிடாய்த்தது. ஆளும் அரசு மூட்டையடிக்கிற கும்பல், வெள்ளையனும் மூட்டையடிக்கிறவன்.

'பாரதி மண்டபம் கட்டி, பாரதிவிழா கொண்டாடி, ஆடுவோமே பள்ளு பாடுவோமே என்று பாடி நம்மை ஏமாற்றிவிட்டார்கள். ஆனால் நம் கவி பாரதியின் கனவு நனவாகவில்லை. அவர் பிறந்த எட்டையபுரத்திலே பிறந்த நீ சோத்துக்குத் தவிக்கிறாய். கட்டக் கந்தல் துணிகூட இல்லாமல் கண்ணீர் வடிக்கிறாய். நீ பெற்றெடுத்த குழந்தைகளை ஆன இடத்தில் கட்டிக் கொடுக்கக்கூட விதியின்றி உன் மனம் நெருப்பாய் எரிகிறது....

'பாரதி, இந்தக்கடிதமும் மைதடவித்தான் போகும்' என்றார் செண்பகம்.

'நம்ம மாயாண்டி பாரதியின் முத்துமுத்தான எழுத்துக்களான கடிதங்களை ஒன்றுதிரட்டினால் பல ஆயிரங்கள் தேறும். அவைகளை நூலாக்கினால் அது ஒரு தேசிய இயக்க வரலாற்றின் கடித இலக்கியமாகத் திகழும். மார்க்சீய தத்துவ கட்டுரைகள்தாம் எத்தனை?' என்று சொல்லி ஆதங்கப்பட்டார் வாத்தியார்.

அன்று இரவு எங்களுக்குக் கிடைத்த புதிய விருந்து கந்தன், சொக்கன் என்ற இரு கைதிகளே.

'கந்தன், நீ தூங்கலையா?' வாத்தியார்.

'அவன் தினம் ஒரு வீட்ல திருடினால்தான் அவனுக்குத் தூக்கம் வரும்'. சொக்கன் சொன்னான்.

'சொக்கன் அம்மாவுக்குக் கருவாட்டு வியாபாரம். கருவாட்டுப் பெட்டியை மோரைக்குள்ள வச்சிட்டுப் படுத்தாத்தான் தூக்கம் வரும். எங்கம்மாவுக்கு பூயாவாரம். ஒருநாள் சொக்கனோட அம்மா எங்க வீட்டுக்கு வந்துச்சி. பூமணத்துல தூக்கமே வரல்ல... கருவாட்டுப் பெட்டிக்கு எங்க போறது?

எல்லாரும் சிறையை மறந்து சிரித்தோம்.

வேலாயுதம் ஒரு மூலையில் மூச்சுவிட முடியாமல் திணறிக் கொண்டிருந்தார். பாரதி கோழிக்குஞ்சுபோல சுருண்டுகிடந்தார்.

வேரில் பழுத்த பலாக்கள் - இங்கு
கோரிக்கையற்றுக் கிடக்கின்றனவோ - இல்லை
கூரியவாள்கள் உறையினுள் உறங்குகின்றன.

வாத்தியார் மட்டும் இரும்புக் கம்பிகளுக்கு வெளியேயிருந்த அரிக்கன் லைட்டை ஒட்டி இழுத்து வைத்துக் கொண்டு புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தார். ஆபூர்வமாகக் கிடைத்த சலுகைகளை பயன்படுத்திக் கொள்ள விரும்பினார். ஆனால் விளக்கொளியினால் வேலாயுதத்திற்கும், வேலையாவிற்கும் தூக்கம் வரவில்லை.

பாரதி எழுந்துவந்து, என்னடா பிச்சக்காரன் வாந்தி எடுத்தமாதிரி இங்க கொஞ்சமும், அங்க கொஞ்சமுமாப் படிக்கியே... பாவம், சென்னை கன்னிமாரா நூல்நிலையத்தில் இருக்க வேண்டியவன்... இங்க வந்து மாட்டிக்கிட்டு... என்று சொல்லி அரிக்கன் லைட்டின் திரியை சற்று குறைத்தார்.

கால் கரணையினால் கஷ்டப்படும் பீர் இஸ்மாயில் இன்னும் தூங்காதிருந்தார்.

எப்பொழுதும் நறுக்காகப் பேசும் வேலாயுதம் சொன்னார், 'பாரதி, பிச்சக்காரன் வாந்தி எடுத்தமாதிரின்னு சொன்னது சரியில்ல, அம்பட்டன்* சோத்துப் பெட்டி மாதிரின்னு சொல்லணும்' என்றார்.

'அதென்ன, விளங்கல்லியே' என்றார் பாரதி.

வேலாயுதம் தொடர்ந்தார்.

'எனக்கு அப்போ அரசியலே தெரியாது, பிரம்மதேசம் ஊரில்தான் சவரத் தொழில் செய்தேன். அந்த ஊரிலுள்ள எல்லா சாதியினருக்கும் முடிசிரைப்பேன். முகச்சவரம் பண்ணியபிறகு மூக்குமுடியை சுத்தம் செய்து, கண்புருவத்தை சரிசெய்து கை கால்களிலுள்ள நகங்களையும் வெட்டிவிடுவேன். கொடிய அடிமைத் தொழில், ராத்தரி வீடுவீடாகச் சென்று சோறு எடுக்கிற வழக்கமுண்டு. பிரம்மதேசத்து மக்கள் அம்பட்டனுக்கென்று புளித்த சோரை பத்திரமாக வைத்திருப்பார்கள். என் மனைவி சோறு எடுத்துவரும் பெட்டியை சோதித்தால் கேவலமா இருக்கும்.

"வேர்த்த சோறு, வெம்பின சோறு
குழஞ்ச சோறு, கூம்பின சோறு
நொந்தசோறு, நொசிந்ததோறு
பத்தின சோறு, பழைய சோறு
புளிச்ச சோறு, கழிச்ச சோறு

இப்படி கதம்பமா இருக்கும். நம்ம வாத்தியார் படிப்பும் அப்படி இருக்கு.

---

* முடிவெட்டும் தொழிலாளியை கிராமத்தில் அம்பட்டன், நாசுவன் என்பார்கள்.

நான் அப்போதெல்லாம் ரொம்ப கோபக்காரன், முரடன். மனைவியை அடிப்பேன். கட்சியில் சேர்ந்து மாணிக்கம் பிள்ளை, மீனாட்சிநாதன், மணி முதலிய தோழர்களிடம் பழகிய பிறகுதான் மனிதனானேன். முரட்டுக் குணம் தணிந்தது.

'இந்தக் கதம்பச் சோறு எத்தனை தோழர்களின் பசியைப் போக்குகிறது' என்று எண்ணி ஆத்திரத்தை அடக்கிவிடுவேன்.

இந்தக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த வார்டர் கடிகாரம் குத்த மறந்துவிட்டார்.

'புளிச்ச சோத்துக்கு வராத காசநோய் ஜெயிலின் சோளக்களிக்கு வந்துட்டே' என்று சொல்லும் போது வேலாயுதத்தின் குரல் கம்மியது.

36

விடிந்தால் 1952 மே தினம். சிறைக்குள் அந்தப் பெருநாளை எப்படிக் கொண்டாடுவதென்று தலைமைத் தோழர்களின் சிறைக்கமிட்டி முடிவு செய்திருந்தது. குதூகல நாள், ஆனால் குமட்டும் குகை வாழ்க்கை.

"வேலை செய்யக் கூலி உண்டு வீணர்களுக்கிங்கிடமில்லை

வேதம் ஓதி வயிர் வளர்க்கும் காதகர்க்கிங்கிடமில்லை"

என்ற போர் முழக்கப் பாடல் எல்லா அறைகளிலும்ஏககாலத்தில் ஒலித்தன. இவ்விதமாக மே தினம் பிறந்தது.

கொத்துச் சாவிகளுடன் வந்த வார்டர்கள் மெய்மறந்து நின்றனர். பாரதி வார்டர்களிடம் பேசினார்.

'எட்டுமணி நேரவேலை என்ற உரிமையைப் பெற

தொழிலாளர்கள் இரத்தம் சிந்திப் போராடிய நாள் மே தினம்'

ஜெய்லர் இடியுண்ட நாகம்போல அலுவலக அறையிலேயே உறைந்து கொண்டார்.

காலைக் கடன்களுக்காக லாக்கப்கள் திறவுண்டன.

மே தினம் வாழ்க என்று தோழர்களும், சில கைதிகளும் கூட ஒருவருக் கொருவர் வாழ்த்தி கைகுலுக்கிக் கொண்டனர்.

தெலிங்கானா போராட்டங்களை நசுக்குவதற்காகப் பயன்படுத்திய ஆயுதம் தாங்கிய சிறப்புப் போலீசாரும் கூட மே தின வரலாறுகளைத் தெரிந்து கொண்டனர்.

சிறைக் கைதிகள் அனைவருக்கும் பாரதியை ரொம்பப் பிடிக்கும்.

அரைமணிநேர அனுமதியுடன் காலைச் சாப்பாட்டிற்குப் பிறகு விருப்பமுள்ள பலரும் அப்படியே குழுமினர்.

'மேசரிதை எங்களுக்குத் தெரிந்துவிட்டது. பாரதியைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும்' என்று ஒரு கைதி எழுந்து வேண்டினார்.

பாரதி வாய்திறந்தார்.

'சிறைமகா ஜனங்களே,

என்போன்ற சிறைப்பறவைகளுக்கு நீங்கள்தானே என் ஜனக்கூட்டம். என் வாழ்வில் ஜெயில் தப்பினால் ரயில், ரயில் தப்பினால் ஜெயில். 1940க்குப் பிறகு 1952 இன்றுவரை 12 வருட காலத்தில் பத்து வருடங்களை சிறை விழுங்கிக் கொண்டது. இளமை துள்ளும் வளமை மிக்க நாட்களை சிறை கவ்விக் கொண்டது.

சிறையிலிருக்கும் போதுதான் என் தங்கைமார்களுக்குத் திருமணமாயிற்று. சிறையிலிருக்கும்போதுதான் என் இரு அண்ணன் மார்கள் இறந்தார்கள். சிறையிலிருக்கும்போதுதான் என்னைத் தன்னுயிராக நேசித்த என் தாய் இவ்வுலகை விட்டு மறைந்தாள்.

'இவ்வளவு துன்ப துயரங்களுக்கு மத்தியிலும் நான் மனம் தளராமல் உறுதியுடன் இருப்பது உங்கள் போன்றோரின் நல்வாழ்விற்காகத்தான். இன்னும் எவ்வளவு பெரிய தாக்கங்கள் வந்தாலும் எங்கள் தோழர்கள் அசையமாட்டார்கள். தொழிலாளி வர்க்கம் ஊட்டிய தத்துவ ஊட்டத்தினால்தான் இந்த தைரியம் எங்களுக்குக் கிடைத்தது.

'இப்பொழுது நண்பர்களாகிய நீங்களும், எங்கள் தோழர்களும் ஒரே சிறையில்தான் இருக்கிறோம். ஆனால் நீங்கள் அநியாயத்தையும், அழிபசியையும் தீர்க்க குறுக்கு வழிகளைக் கையாண்டு விட்டீர்கள். தனிமனித விருப்பு வெறுப்புகளுக்கும் இரையாகிவிட்டீர்கள். நாங்களோ உங்களைப் போன்று அவதியுறும் அனைத்து மக்களின் நல்வாழ்விற்காகவும் - மானுட மேம்பாட்டிற்காகவும் கட்டுப்பாடான ஓர் இயக்கத்தின் மூலம் ஒன்று திரண்டுள்ளோம்...'

மணி பன்னிரெண்டு. வார்டர்கள் விசில் ஊதினார்கள். கைதிகள் தங்கள் அறைகளுக்கு ஓடினார்கள்.

பெரும் போராட்டங்களுக்குப் பிறகு தோழர்கள் தங்கள் ரேஷனை தாங்களே சமைத்துக் கொள்ளும் உரிமை பெற்றனர். கீரைத் தண்டைக் குறைத்து, எண்ணெயை சிறிது கூட்டி உணவு மந்திரியான ரெட்டியார் சாப்பாட்டில் பெரும்புரட்சி செய்திருந்தார்.

வண்டிமை போன்று கருப்படித்த மேதின வாழத்து அட்டைகள் தோழர்களுக்கு வந்திருந்தன. சேமித்து வைத்திருந்த தோழர்களின் சொந்த எண்ணெயில் பரட்டை தலை கைதிகளையெல்லாம் பொறுக்கி எடுத்து எண்ணெய் தேய்த்துவிட்டார்கள்.

வழக்கறிஞர் கே.டி.கே.தங்கமணி அனுப்பி இருந்த இனிப்பு மிட்டாய்கள் கைதிகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன. தோழர்களின் சாப்பாட்டில் வார்டர் அனைவரும் பங்கு கொண்டனர்.

வயிறு நன்கு நிறைந்துவிட்ட சிறை வார்டர்களுக்கு அன்று ஒரே குஷி. சீக்கிரமாகக் கைதிகளை எண்ணி இரவுப்பாரா வார்டர்களிடம் ஒப்படைத்துவிட்டு சினிமாவுக்குக் கிளம்பினார்கள். அவர்களின் இன்பப் பொழுது போக்கிற்காக மாலை 5.30 மணிக்கே லாக்கப் செய்ய சம்மதித்தார்கள்.

எனவேதான் வார்டர் முத்துக்கிருஷ்ணன் அடிக்கடி சொல்வார்.

'கம்யூனிஸ்ட்கள் மிகவும் மனிதாபிமானம் படைத்தவர்கள். நியாயத்திற்காகப் போராடுபவர்கள். கட்டுப்பாடும் கடமை உணர்ச்சியும் உள்ளவர்கள்'.

மே தின நிகழ்ச்சிகளில் இன்னும் ஒன்று பாக்கி இருந்தது. அதாவது இரவு ஒவ்வொரு லாக்கப்பும் கலைக்கூடமாக விளங்க வேண்டும். ஒவ்வொரு அறைகளுக்குள்ளும் இரண்டிரண்டு தோழர்கள் புகுந்துவிட்டார்கள்.

முதலில் புதுமாடனின் புதுமை வில்லுப்பாட்டு அவர் அறையிலிருந்து ஆலாபித்தது.

'அம்மா சுதந்திர தேவி அம்மா

சிறைவாழ் பத்தினித்தாய் நீயம்மா.... தைதக்கா தை... தை...

சிவகிரித் தோழர் அழகிரி தாம் எடுத்துக்கட்டிய சுதந்திரப் போராட்டப் பாடல்களைப் பாடினார்.

நான்காம் எண் அறை எங்களின் லாக்கப். பாரதியின் கதகளி ஆட்டம் அசத்தியது.

மாணிக்கம்பிள்ளையும், வேலாயுதமும் ஓரங்கநாடகம் நடத்தினார்கள்.

மாணிக்கம்பிள்ளை வாகைக்குளத்து காங்கிரஸ் பிரமுகர் ராமலிங்கம் செட்டியார். வேலாயுதம் அவரது குடிமகன்.

வேலாயுதம், செட்டியாரிடம் கூலி கேட்டுக் குழைந்து நிற்கிறார். கட்கத்தில் துண்டை வைத்து சாட்சாத் சவரத் தொழிலாளியாகத் தத்ரூபக் காட்சி தருகிறார். அது மத்தியான வேளை. செட்டியார் கூலிப்பேச்சை மழுப்பத் திசை திருப்புகிறார்.

'ஆமடா, உங்க தலைவர் மீனாட்சி நாதன் தலைமறைவா இருக்காரே, எங்கடா சாப்பிடுவாரு?'

இந்நேரம் வேலாயுதத்தின் மருமகன் கோமு (இங்கு நடிப்பிற்கு புலிக்குட்டி சண்முகவேல்) அவசர அவசரமாகச் செட்டியார் வீட்டில் சோறு வாங்க வருகிறான்.

சோறு மீனாட்சி நாதனுக்குச் செல்கிறதென்று வேலாயுதத்திற்கு நன்கு தெரியும்.

'எல்லாம் முதலாளி தயவுதான்' என்று வேலாயுதம் நறுக்காகப் பேசிக் கொண்டே நழுவுகிறார்.

அற்புதமான நடிப்பு, பொருள் நிறைந்த நாடகம்.

சண்முகவேல் புலிவேடம் போட்டு ஆடினார். அழகுமுத்து வெறும் கைவரிசை காட்டி சிலம்பமாடினார்.

வாத்தியார் பாதிரியாராக நடித்தார். கிழிந்த ஒரு கம்பளி, கருப்புக் கயிறாக மாறியது.

'இறைவா, சிறை வாழ்விலும் எங்களை நிறைவு செய்யும்.
அற்புதமான விடுதலையை அருளும், ஆமென்'

என்று பிரார்த்தித்து பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

'இன்று நாம் ஆராய வேண்டிய வேதவசனம், விவிலிய நூலில் அப்போஸ்தலர் நடபடிகள் பன்னிரெண்டாம் அதிகாரம் ஆறாம் வசனத்தின் மத்திய பகுதி.

'பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக் கொண்டிருந்தார்'

கி.பி. 63ஆம் ஆண்டு - யேசுவின் முக்கிய சீடர்களில் ஒருவராகிய பேதுரு எருசலேம் பட்டணத்து மத்திய சிறையில் இருந்தார். அது முதலாம் நூற்றாண்டு.

'அனைவரும் சமம்,
அனைத்தும் பொது' என்ற அவரின் போதனை ரோமை அரசுக்குப் பிடிக்கவில்லை. கால் கைகளில் விலங்குமாட்டி சிறையில் தள்ளிவிட்டார்கள். ஆதிப் பொது உடைமை சபையை நிறுவியவர் அவரே. அந்த அமைப்பில் ஒருவருக்கும் ஒன்றும் குறைவில்லாதிருந்தது. ஒரு குட்டிப் பொதுஉடைமை ஒழுங்கை ஏற்படுத்தி கட்டிக் காத்தார். பகிர்ந்து கொடுத்து மகிழ்ந்து புசித்தார்கள் என்று வேதம் சொல்கிறது. ஒரு பெரிய மக்கள் கூட்டம் பேதுருவுக்குப் பின்னணியில் இருந்தார்கள். போராட்ட பிரார்த்தனைகளை ஏறெடுத்தார்கள்.

அன்று நடுநிசி. அவர் இருந்த அறையில் வெளிச்சம் பிரகாசித்தது. ஒருவர் வந்து பேதுருவை தட்டி எழுப்பி 'எழும்பி நட' என்றார். கை, கால் விலங்குகள் கழண்டு விழுந்தன. நடந்து சென்றார். இதுபோன்று மக்கள் சக்தி உங்களை விடுவிக்கும்' என்று பிரசங்கித்து முடித்தார்.

அறை முழுவதும் கரவொலி, சிரிப்பொலி. நடிப்பு இயற்கையாக இருந்தது.

கொள்ளைக் கேஸில் உள்ளே வந்திருந்த சொள்ளமுத்துக்கு உஜார் உண்டாகிவிட்டது. நாட்டுப்பாடலொன்றை உச்சதொனியில் பாடினான்.

'வண்டியடிச்சிப் பாத்தேன்
வயக்காட்டை உழுது பாத்தேன்
பெண்டுகளை மேச்சிப் பாத்தேன் - அன்னமே
பிழைப்பு ஒண்ணும் நடக்கலையே'

சமுதாயத்தின் ஏமாற்றங்களை அனுபவமாகப் பாடினான். ஒன்றிலும் பிழைப்பு நடக்கவில்லை. கடைசியில் களவு, கொள்ளைகளில் இறங்கினான். மாட்டிக் கொண்டான்.

சிறைகளின் அறைகளில் மயான அமைதி நிலவியது. 'அநியாயம் மிகுந்த நாட்டில் உத்தமர்கள் வாழும் இடம் சிறைச்சாலை ஒன்றுதான்' என்ற எண்ணத்தில் யாவரும் கண் மூடினரோ?..

அதிகாலை நான்கு மணிக்கு வாத்தியார் எழுந்து ஆங்கிலப் பயிற்சி செய்தார். இரு ஆங்கிலச் சிறுகதைகளை தமிழில் மொழிபெயர்த்தார். மௌனதியாகி என்ற மராட்டிக்கதை ஒன்றையும், ஓணம்பண்டிகை என்ற மலையாளக்கதை ஒன்றையும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்தார். அழுக்குப்படிந்த நாடக நோட்டீஸ்களில்தான் எழுதினார்*.

பின்பு பாரதி பாட்டொன்றில் கண்ணூன்றினார்.

'........ உண்மை சொல்வோர்க்கு எல்லாம்
எழுதறிய பெருங்கொடுமைச் சிறையுண்டு
தூக்குண்டே இறப்பதுண்டு சிவேரியிலே
ஆவிகெட முடிவதுண்டு'

தியாகி பாலுவை நினைந்து கவிபாரதி பாடியது போன்றிருந்தது.

'நோயும் நொடியும் நின் மெய்யடியார்க்கோ' என்று
பேயும் துயிலும் அவ்வேளையில் பொருமி இருமினார்.

சிறுபொழுது கழியவும் வேலாயுதம் எழுந்து ஏதோ சிந்தித்தவராய் குந்தி இருந்தர்.

வாத்தியார் பேசினார்.

'என்ன வேலாயுதம், பாப்பு அம்மா எழுதிய கடிதம் பற்றிய சிந்தனையா?'

'இல்லை, இரவில் நடந்த கலை நிகழ்ச்சி பற்றி?'

'பாரதியின் பிரம்மாதமான கதகளி ஆட்டம் பற்றித்தானே?'

'இல்லை, பாதிரியார் நடிப்பு பற்றி'

'கிண்டலா' என்று கேட்டு நகைக்கும்போது

'வாத்தியாரே, நான் ஒரு காலத்தில் கிறிஸ்தவனாகத் துடித்தேன்' என்றார்.

'ஆச்சரியமாயிருக்கே' என்று வாத்தியார் சொன்னபோது வேலாயுதம் துண்டை விரித்து பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்.

'அந்தக்காலம் நான் அம்பட்டனாயிருந்தாலும் யாருக்கும் அடிபணிய மாட்டேன். நிமிர்ந்து நிற்பேன். நல்லவர்களுக்கு என் தோலை செருப்பாக்கி ஊழியம் செய்வேன். என்னை மதியாதவர்கள் என்னிடம் தலையைக் கொடுத்தால் மதிப்புக்களை வெட்டுவது போன்று தலையைப் பதம் பார்ப்பேன். காலில் முள் தைத்தால் நான்தான் முள் எடுக்கணும். மோசமான பேர்வழிகள் முள் எடுக்க வந்தால் முள்ளை உள்ளே தள்ளி பின்பு குடைவேன் - அவர் அலறுவார். பின்பு நைசாக எடுத்துவிடுவேன். விரல்களில் நகம் வெட்டுவதும் நாங்கதான்.

'ஊரில் பல முறை அபராதம் கட்டி இருக்கிறேன். பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்திருக்கிறேன். ஊர் வெற்றிலை - பாக்கு வைத்து ஊர்ப் பெரியவர்கள் காலில் கும்பிட்டு விழுந்திருக்கிறேன்.

** எழுத்தாளர் சிதம்பர ரகுநாதனின் முகவுரையுடன் கூடிய வாத்தியார் ஆர்.எஸ்.ஜே சிறையில் மொழிபெயர்த்து ''மௌனதியாகி' என்ற தமிழாக்கச் சிறுகதை, நூல் 1958 ஆம் ஆண்டில் வெளியானது.*

'நாளடைவில் குடும்பப் பாசத்தை வெறுத்தேன். கொடுமைகளை சகிக்க மறுத்தேன். புளிச்ச சோற்றை எதிர்த்துப் போராட்டம் நடத்தினேன். உயர் சாதியினர் ஒன்றுகூடி என்னை ஒழிக்கப் பார்த்தனர்.

'உச்சங் குளத்துச் சாமியாரிடம் ஓடி நான் கிறிஸ்தவனாகிறேன்' என்றேன். அவர் நான் செய்யும் அடிமைத் தொழிலைக் கேட்டு அழுதே விட்டார். 'முதலில் அம்பையில் ஒரு 'பார்பர் ஷாப்' வை, நான் உதவி செய்கிறேன்' என்றார்.

'குடும்பம் குறுக்கே நின்று தடுத்தது. ஊரில் பலரும் தடுத்தார்கள். அன்று கிறிஸ்தவனாகி இருந்தால் என் நிலைமையே மாறியிருக்கும். வாத்தியாரின் பாதிரியார் நடிப்பைப் பார்த்தவுடன் பழைய நினைவு பளிச்சின்னு வந்திருச்சி'.

'பின்பு கள்ளுக்கடை மறியல், விதேசிதுணி எதிர்ப்பு. இப்படியாக தீவிர காங்கிரஸ்காரனானேன். சிங்கை மில்லில் வேலை பார்த்த பல தோழர்களின் நட்பு கிடைத்தது. தோழர் ராமையா எனக்கு அரசியல் கற்றுத் தந்தார்.

'சமுதாய மாற்றத்தினால் மட்டுமே சாதி, தீண்டாமை, அடிமைத்தனம், சுரண்டல் முதலிய காரியங்களை ஒழிக்க முடியும் என்று தெளிவாகச் சொன்னார். வாகைக்குளம் சேரிகளில் விவசாய சங்கம் வைத்தோம். என்னுடைய நியாயத் தன்மைக்கு கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே பாதுகாப்பு அளித்தது.

'ஏழையராயினி மண்ணிற் துஞ்சோம்
கூழைக்கும் பிடொரு நாளும் போடோம்' என்று என் சவரக்கத்தியின் பேரில் சபதம் செய்தேன். பின்புதான் நான் மனிதனானேன். என்னிடமிருந்த குடி, சூதாட்டம், மனைவியை அடித்தல், கட்டுக்கட்டாய் பீடிகுடித்தல் அனைத்தையும், நிறுத்தினேன். தோழர்களிடம் பழகிய பின்பு இனிய குடும்ப வாழ்க்கை நடத்தக் கற்றுக் கொண்டேன். கம்யூனிஸ்ட்டுகளுக்கு நான் ரொம்பக் கடன்பட்டுள்ளேன்.

'என் மனைவிக்கும் கட்சியின் மீது பற்றுவிழ முழு முதற் காரணம் இவைகளே' என்று வேலாயுதம் சொல்லி முடியவும் பொலுபொலுவென்று விடிந்தது. அதிகாலையில் துதிபாடும் குருவி ஒன்று, 'குக்கூ' என்று இனிய கீதம் இசைத்தது. வார்டர்கள் சாவிக் கொத்துகளோடு ஓடினார்கள். துர்நாற்றங்கள் துள்ளி எழுந்தன.

லாக்கப்பை திறக்கும்போது வாத்தியார் அவசரப்படுத்தினார். தூக்க மயக்கத்திலிருந்த வார்டர் தப்பான சாவியைப் போட்டுத் திறந்தார். ஒவ்வொரு சாவியாகப் போட்டார். ஒன்றும் திறக்கவில்லை.

முனகல்கள், முக்கல்கள் கிளம்பின.

கடைசிச் சாவி திறந்தது.

'ஆம், கடைசியில் ஒரு சாவி இருக்கிறது. அது கட்டாயம் எங்களை விடுவிக்கும்' என்று வாத்தியார் மனதிற்குள் சொல்லி மகிழ்ந்து கொண்டார்.

37

நெல்லை கம்யூனிஸ்ட் சதி வழக்கு இரு பிரிவுகள் ஆயின. தோழர் பாலதண்டாயுதம்தான் சதி வழக்கின் முதல் குற்றவாளி. அவரை இன்னும் பிடிக்க முடியாதபடியால் - பாலன், மீனாட்சிநாதன், பயில்வான் அருணாசலம் ஆகிய மூவரைக் கொண்ட சதிவழக்கை நிறுத்தி வைத்து மீதிப்பேர்களைக் கொண்டு இரண்டாம் சதி வழக்காக விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்கள். விசாரணை கொக்கிரகுளம் ஸ்பெஷல் கோர்ட்டில் நடைபெற்றது. மாமரங்கள் சூழப்பெற்ற தனியானதோர் இடத்தில் வழக்குகள் வேகமாக நகர்ந்தன.

முதல் சதிவழக்கைச் சேர்ந்த மீனாட்சிநாதனும், பயில்வானும் பிடிபட்டுவிட்டார்கள். பாலன் தலைமறைவை உளவுத்துறையால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனென்றால் அவர் தலை மறைந்திருக்கவில்லை. மக்களோடு இயங்கிக் கொண்டிருந்தார். மக்கள் பட்டினி கிடக்கும்போது, நிலச்சுவான்தார்களிடம் புதைந்து, புழுத்துப், புழுங்கிக் கிடந்த நவதானியங்களை வெளியே எடுக்கும்படி காவல்துறைக்கு இரகசியத் தகவல்கள் அனுப்பிக் கொண்டிருப்பதும் அவரே.

கொக்கிரகுளத்தில் வாத்தியார் மீனாட்சி நாதனைச் சந்தித்தது இருவருக்கும் பெரும்மகிழ்ச்சியைக் கொடுத்தது. இலக்கியத்தின் இணைபிரியாத நண்பர்களாயினர். சிறைக்கொடுமையை மறந்தோம்.

மீனாட்சிநாதனின் சொந்தஊர் திருவைகுண்டம். முன்னூறு ஆண்டுகளுக்கு முந்திய குமரகுருபரர் அவ்வூரில் பிறந்தவரே. ஐந்து பிராயம் வரை ஊமையாகவே இருந்தார். திருச்செந்தூர் சுவாமி அருளால் சொல் பெருக்குப் பெற்றவர் என்பது நம்பிக்கை.

குருபரர் காசியாத்திரை செல்லும்போது இடைப்பட்டு துன்பம் செய்த புலியை அடக்கி அதனை வாகனமாக்கி காசி சென்றாராம். அதுகேட்ட அக்பர் சக்கரவர்ததி அவரை விரும்பி அழைத்து விருந்து கொடுத்தாராம். விருந்திலும் விந்தைகள் பல நிகழ்ந்தனவாம். தமிழ் நூல்கள் இதுபற்றி விரிவாகப் பேசுகின்றன. அநேகர் வாழ்வில் அற்புதங்கள் இன்றும் நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன.

சைவத்திற்குக் குமரகுருபரர் போல கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு மீனாட்சிநாதன் கிடைத்தார்.

சிறந்த தொழிற்சங்கத்தலைவராக வளர்ந்த மீனாட்சிநாதன்- மில் தொழிலாளர்கள் நிறைந்த விக்கிரம சிங்கபுரம் என்ற சிங்கைப் பகுதியில் பணி செய்ய அனுப்பப்பட்டார். தொழிற்சங்கத்தை சிறந்த முறையில் கட்டி வரும்போது ஒரு கொடும்புலி குறுக்கிட்டது. முதலாளிகளின்

கைப்பொம்மையான வரதராஜ நாயுடுவின் போலித் தொழிற்சங்கத்தை உடைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்தப் புலியை தொழிற்சங்க ஸ்தாபன அமைப்பை வாகனமாகக் கொண்டு புலியை தம் காலடிக்குள் கொண்டு வந்தார் மீனாட்சி.

சிங்கையிலிருந்து தியாகி பாலுவுக்கு இறுதி மரியாதை செலுத்தச் சென்ற தோழர்களைப் பார்த்து பாலு இப்படிச் சொன்னார்.

'தோழரே, சிங்கை மில் சிறியது. மதுரை மில்லோடு ஒப்பிடும்போது தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறைவு. ஆனால் அவர்கள்தாம் மதுரைத் தொழிலாளர்களுக்கு வழிகாட்டினார்கள். அப்பொழுது நான் மதுரைத் தொழிலாளர் இயக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். சிங்கைத் தொழிலாளர்கள் சிறந்த வீரர்கள். புத்திசாலிகள் - அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைச் சொல்லுங்கள்' என்று அடலேறு போல முழங்கினார்.

அந்தப் பெருமை தோழர் மீனாட்சிநாதனையே சேரும்.

மீனாட்சிநாதன் கட்சி வாழ்வு ஒரு காதல் தியாக வாழ்வு. கல்லும் கரையும் அந்நிகழ்ச்சிகளை இங்கு சொல்லாமலிருக்க முடியாது.

1952 மே முதல் வாரத்தில் ஒரு நாள். நாலாம் பிளாக்கிலிருந்து தோழர் மீனாட்சி நாதன் 'இலியா எரன்பர்க்' எழுதிய ஸ்டாம் (புயல்) என்ற ஆங்கில நவீனத்தைப் படித்துக் கொண்டிருந்தார்.

உலகப்புகழ் பெற்ற அந்நாவலின் புகழுரைகளை வாத்தியார் படித்திருக்கிறாரே தவிர நாவலை முழுமையாகப் படிக்கவில்லை. அவருடைய ஆழ்ந்த கவனத்தில் குறுக்கிட்டு, 'காம்ரேட், நாவலின் கதைச் சுருக்கத்தை கூறுங்களேன் - நானும் சேர்ந்து அனுபவிக்கலாமே' என்றார் வாத்தியார்.

'இந்த நாவலை நான் இருமுறை படித்துவிட்டேன். என் வாழ்வை ஒட்டிய நாவலாயிருப்பதினால் நான் சுவைத்துப் படிக்கிறேன்' என்றார்.

அவர் பேசும்போது அவரது தடித்த உதடுகள் அழகாயிருக்கும். அந்த உதடுகளில் எப்போதும் ஒருவிதப் பசுமை இருக்கும்.

அவரது கண்களும் பிரகாசித்தன.

'மெடோ என்பவள் ஒரு பிரெஞ்சுக்காரி. செல்லமாகவும் செல்வமாகவும் வாழ்ந்தவள். தகப்பனாருடன் பழக்கப்பட்ட ரஷ்யரான செர்றி என்பவரை ஒரு தேனீர் விருந்தில் சந்திக்கிறாள். ரஷ்யர்கள் என்றாலே ராட்சதர்கள் என்ற தன் கருத்தைத் துணிந்து அவரிடமே சொல்கிறாள். அவளின் தகப்பனார் அவளின் கருத்தை மறுக்கிறார். அன்பாகக் கண்டிக்கவும் செய்கிறார். ஆனால் அந்த ரஷ்யரின் முகத்திலோ புன்முறுவலைத் தவிர வேறு எவ்வித மாறுதலும் இல்லை. ரஷ்யர்களைக் கொல்ல வேண்டும் என்று வெறிபிடித்துக் கத்துகிறாள். ஆனால் அந்த ரஷ்ய இளைஞனின் முகத்தில் கோபத்தின் சிறு ரேகை கூடத் தோன்றவில்லை. அது மெடோவை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

ரஷ்யரின் மாறுத்தரம் மிகவும் மென்மையாக இருந்தது.

காதல் கால் கொள்கிறது.

மெடோவின் ஆச்சரியம் ஆவலாகவும், ஆவல் ஆசையாகவும், ஆசை அணையாக் காதலாகவும் மலர்கிறது.

செர்றி காதலைக் கைவிட்டு, கொண்ட கொள்கைக்காக தன்நாடு செல்கிறான்.

மெடோவின் காதல் கருகவில்லை. மாறாக ஆழமாக வேர்விடுகிறது. ரஷ்யன் மீது காதலால் ரஷ்ய நாட்டின்மீதும் பாசம் ஏற்படுகிறது.

காதலை வளர்ப்பானேன்?

பிரான்சில் நடந்துவந்த கொரில்லாப்போரில் 'கொரில்லா வீராங்கனையாக மெடோ மாறுகிறாள்.

மனமின்றி மணந்த - ஆனால் மணவாழ்க்கை நடத்தியறியாத - நாஜி ஆதரவாளனான தன் கணவனை தன் கையாலேயே சுட்டுவீழ்த்துகிறாள். மேலும் மேலும் பாஸிச யுத்தத்தில் வெகுவேகமாக ஈடுபடுகிறாள்.

'என்றாவது ஒருநாள் என் செர்றியை சந்திப்பேன். நான் செய்த சேவையை எடுத்துரைப்பேன்' என்று கனவு கண்டு கொண்டே கடைசிவரை போரிடுகிறாள், காத்திருக்கிறாள்.

அப்பொழுது சுப்பாரெட்டியார் பாரதியின் குயில் பாட்டின் ஒருவரியைப் பாடிக்கொண்டே உள்ளே வருகிறார்.

"துன்பக் கதையின் தொடருரைப்பேன், கேளீரோ?'

அவர் வந்துவிட்டால் சாப்பாடு ரெடி என்று அர்த்தம். மீண்டும் அதே பாடலை தொடர்ந்து பாடிச் செல்கிறார்.

'என் வாழ்க்கையை ஊடுறுவிய உணர்வுமிக்க நாவல்இது' என்று சொல்லி தோழர் மீனா ஓர் அடையாளம் வைத்துப் புத்தகத்தை மூடினார். அவர் சொல்லில் ஆழ்ந்த அர்த்தம் புதையுண்டிருப்பதைக் கண்டு கொண்டார் வாத்தியார்.

குழம்பிலுள்ள முத்தின கீரைத்தண்டுகளை எடுத்து கீழே போட்டார்கள். இளம் தண்டுகளை உணவோடு குழப்பி உண்டார்கள். பக்கத்திலிருந்த சேவியர், 'எவ்வளவு நாள்தான் இங்கு சாவதோ' என்றார். உடனே மீனாட்சி 'சாகும்வரைதான்' என்றார். மூவரும் சிரித்தோம்.

'நேரான வழியில் திருடினவன் சிறையில் இருக்கிறான். மாறான வழியில் திருடினவன் மாடிவீட்டு மெத்தையில் புரள்கிறான்' என்றார் செண்பகம்.

நால்வரும் எழுந்திருக்கவும் கீழே போட்டிருந்த பெரிய கீரைத்தண்டுகளை பொறுக்கி எடுக்க சில கிரிமினல்ஸ் ஓடிவந்தனர். சிறை ரேஷன் அவர்களுக்குக் காணாது. பட்டினி அவர்களை வாட்டி வதைத்தது.

'தோழரே, அந்தப் புதினத்தின் பாத்திரத்திற்கும் உங்களுக்கும் ஏதோ ஓர் உறவு இருப்பதாகச் சொன்னீர்களே என்று மெதுவாகக் கிளறினார் வாத்தியார்.

மீனாட்சிநாதனின் உதட்டு ரேகைகள் நெளிந்தன. வாதாமரத்தின் அடியில் போய் அமர்ந்தார்கள்.

மீனாட்சிநாதன் பேசினார்.

'இந்தியாவின் ஒரு கோடியில் தெலிங்கானா எனும் பிரதேசத்தில் பல கிராமங்களை விவசாயிகள் விடுவித்து தங்கள் செஞ்சேனை ஆட்சியை 1948ஆம் ஆண்டில் ஏற்படுத்தி இருந்தார்கள். அச்சமயம் மீனாட்சி நாதன் தலைமறைவு வாழ்க்கையிலிருந்தார். கொள்கைப் பிடிப்பில் வைராக்கியமாயிருந்த காத்ரீன் என்ற இளம்பெண் மீனாட்சிநாதனை உளமார நேசித்தாள்.

மீனாட்சிநாதனின் தலைக்குமேல் கொலை கேஸ் தொங்குகிறது. இருப்பினும் அவரை மணக்கத் துணிந்து உறுதி கூறுகிறாள். அவளுக்கு மீனாட்சிநாதன் அரசியல் வகுப்புகள் பல நாட்கள் எடுத்துள்ளார்.

அச்சமயம் கம்யூனிச ஆங்கில வாரப்பத்திரிகையில் வெளியான கிரேக்கக் கொரில்லாக்கள் எடுத்த சபதத்தை வாசிக்கச் செய்து - அதன் ஆழத்தை விளக்கிய பின்பு - அதன்படி நடக்க இசைவதாக சம்மதித்து அதேபோல் அவளே எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்தாள்.

காத்ரீன் ஐந்தாம்படிவம்வரை படித்தவள் (தற்போதைய பத்தாம் வகுப்பிற்குச் சமம்). வயது பத்தொன்பது.

அன்றிருந்த கம்யூனிஸ்ட் கட்சியோ மகா பயங்கர வழிகாட்டுதலில் தண்டவாளத்தைவிட்டுப் புரண்டு சென்றது.

மீனாட்சிநாதன் தன் கோரிக்கையை கட்சியின்முன் வைத்தார். 'புரட்சிக்குத் தலைமை தாங்கும் தலைமறைவுத் தோழர்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது' என்று கட்சிவாதித்தது. மேலும் காத்ரீன் போன்றவர் ஒரு புரட்சிக்காரனுக்கு ஏற்றவளாக முடியாது' என்று மாகாணக்கமிட்டி தீர்மானித்தது.

'காத்ரீனோ தன் காதலில் மிக உறுதியாக இருக்கிறாள். மார்க்சீயம் படித்திருப்பதினால் பின்விளைவுகளைத் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் பெற்றிருக்கிறாள்' என்று மீனாட்சிநாதன் வாதிட்டார்.

அவரின் வாதம் எடுபடவில்லை. மீனாட்சிநாதனுக்குக் கட்சியின் முடிவு சரியெனப்படவில்லை.

ஆயினும் கட்சிக் கட்டுப்பாட்டிற்காக காதலைத் துறந்தார். கம்யூனிசத்தைக் காதலித்தார்.

"புயல் புதினத்தில் வரும் மெடோ உங்கள் காத்ரீனை ஒத்திருக்கிறார்' என்றார் வாத்தியார். மீனாட்சிநாதன் வாத்தியார் காதோடு காதாக 'தோழரே, இந்த நாவலை நான் முன்பே படித்திருந்தால் எனக்குத் திட்டவட்டமான கொள்கைத் தெளிவு கிடைத்திருக்கும். இந்த நாவலை ஆதாரமாக வைத்து மாகாணக் கமிற்றியில் வாதிட்டு வெற்றி பெற்றிருப்பேன்' என்றார்.

அவரது கண்கள் மங்கி ஜொலித்தன. உதடுகள் துடித்தன. 'இப்போதுதான் என்ன? காத்ரீன் காத்திருப்பாள்தானே? என்றார் வாத்தியார். அவர் மௌனித்து நின்றார். அவர் முகபாவங்கள் மாறிமாறி ஏதோ கூறின.

அவரை நிமிர்த்து பார்க்க வாத்தியார் கண்கள் கூசின. தொழிற்சங்க

வெற்றிக்காக தோழர் மீனாட்சிநாதன் செய்த தியாகங்களையும் - சிறைக் கைதிகளுக்காகப் போராடிய போராட்டங்களையும் சொல்லி முடியாது.

கடைசியாகக் கையிலிருந்த பிறிதொரு நூலிருந்து ஒரு பத்தியைப் படித்துக் காட்டினார்.

'வைஸ்ராய் இர்வின் லண்டனிலிருக்கும் பிரிட்டிஷ் ஆட்சியின் இந்திய இலாக்கா செயலாளருக்கு 1929 ஜனவரி 18இல் ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்.

'அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் கம்யூனிஸ்ட்கள் மீது இணைத்து சதி வழக்கு ஒன்றைத் தொடுத்து நடத்துவது நல்லதென்று நம்புகிறோம். இதைச் செய்வோமென்றால் கம்யூனிஸ்ட்களை ஒடுக்குவதற்கும் ... இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தலாமென்று நாங்கள் நாம்புகிறோம் (உள்துறை அரசியல் எப். 18-10-1929 கே.டபிள்யூ) 'அதுவே காட்டே, ஜோஷி, டாங்கே முதலியோர் மீது போட்ட சதி வழக்கு ஆகும். பிரிட்டிஷாரைப் பின்பற்றியே காங்கிரசும் செயல்படுகிறது. எனவே சதிவழக்குகள் என்பது பழிவாங்கும் ஒரு போக்கே தவிர வேறு அல்ல. தூத்துக்குடியிருக்கும் பாலனைப் பிடிக்க வக்கில்லாத அரசு எதனைச் சாதித்துவிடும். வரப்போகும் தேர்தலில் எல்லாம் புஷ்வாணமாகிவிடும். அதற்குள் பலமாகக் கொட்டிவிடத் தீ விரிப்பார்கள்.

'டைரி மூலம் சதி நிரூபணமாகிறது என்று காரணம் காட்டி நம்ம வாத்தியாருக்கு மரண தண்டனை கொடுத்தால்கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை' என்றார் மீனாட்சிநாதன்.

38

வாத்தியார் எண்ணங்களின் திரட்சியினால் சிந்தனைச் சிதறல்களில் சிக்கினார்.

'சரியாக இருபது ஆண்டுகளுக்கு முன்பு, 'தூக்கு மேடைக்குக் கூட்டிச் செல்வதற்காக தனிக்கொட்டறையைத் திறக்கும் நேரத்திலும், 'சிறிது நேரம் பொறுங்கள்'. புரட்சிக்காரனோடு ஒரு புரட்சிக்காரன் சந்தித்துக் கொண்டிருக்கிறான்' என்று சிறிதும் மனச்சலனமில்லாமல் பகவத்சிங் கூறினாராம். அப்போது லெனின் வாழ்க்கை வரலாற்றில் சில பக்கங்களைப் படித்து முடிக்க வேண்டி இருந்ததாம். படித்து முடித்ததும் நிம்மதியுடன் தூக்கு மேடைக்குச் சென்றாராம்.

தூக்கு மேடை செல்லும் வரை பாலுவும் படித்தார். பகவத்சிங்கும் படித்தார். அந்த அறிவுஜீவிகள் வாழ்க!

1931 மார்ச் 23 ஆம் தேதியன்று பகவத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரை தூக்கிலிட வெள்ளை அரசு உத்தரவிட்டது. காந்திஜியின் தலையீட்டாலும் முடியவில்லை. தூக்கிலிடும் நாள் வந்தது. லெனின் எழுதிய புத்தகத்தை படித்து முடிந்ததும் தூக்குமேடை நோக்கி வீர சிங்கமென நடந்தார். தூக்குமேடை ஏறியாயிற்று. கண்ணை மறைத்து கருப்புத் துணியை கட்டும்போது பகவத்சிங் சொன்னார்.

'கண்ணை கட்டாதே, எங்களை ஈன்றவள் பாரதத்தாய். பாரதமண்ணைப் பார்த்தவாறே உயிர்விடுவேன்' என்று சொல்லி முடியவும் தூக்குக் கயிற்றில் தொங்கினார்.

பகவத்சிங்கும், பாலுவும் நமக்குத் தேனும் தினைமாவும் போன்ற தேசபக்தர்கள்.

சிந்தனை கலைந்தபோது வாத்தியார் ஓர் பகற்கனவிலிருந்து விழித்தது போலிருந்தார்.

வழக்குகள் பற்றிய சில தெளிவிற்காக வக்கீல்தோழர்கள் முக்கிய தோழர்களைப் பார்க்க வந்திருந்தார்கள். வாத்தியாரையும் கூப்பிட்டிருந்தார்கள்.

பாளை வக்கீல் சண்முகம் வாத்தியாரிடம் தனியாகப் பேசினார். 'தோழர் வாத்தியார், உங்கள் வழக்கு வித்தியாசமானது. சில குற்றங்களுக்கு உங்கள் டைரியே போலீஸ் சாட்சியாக நிற்கிறது. அதுவேறு சில தோழர்களையும் பாதிக்கிறது. 13.10.1949ல் உங்கள் பள்ளியில் ரகசியக் கூட்டம் நடந்ததாக எழுதி உள்ளீர்கள். மறுநாள் தூத்துக்குடியில் ராமசசந்திரன் கொலை முயற்சி நடக்கிறது.

'தூத்துக்குடி மீளவிட்டான் பக்கம் குட்ஸ்ரயில் கவிழ்கிறது. அது உங்கள் டைரியில் உள்ளது. எனவே பள்ளியிலிருந்துதான் சதி உருவானது என்று எடுக்கிறார்கள். யானை பார்க்க வெள்ளெழுத்தா... உங்களுக்கு தண்டனை வழங்க உங்கள் டைரி தெளிவான ஆதாரம் - தீர்ப்பு வழங்குமுன் இன்னும் சாட்சிகளை போலீஸ் தரப்பு கொண்டுவரஉள்ளது.

'கீழ் கோர்ட்டில் கந்தையாவின் சாட்சி போலீசுக்கு பலத்த ஆதாரம். அவரை மீண்டும் கொண்டுவர முயற்சித்து வருகிறோம்.

'ஏன் சொல்கிறேன் என்றால் விடுதலைகிடைக்கும் அல்லது குறைந்த தண்டனை கிடைக்கும் என்ற நப்பாசையை மனதில் போட்டுக் கொள்ளக் கூடாது. நாங்கள் வாதாடுவோம். அது வேறுவிஷயம். சதி நிரூபிக்கப்பட்டால் தண்டனை கடுமையாய் இருக்கும். டைரியிலுள்ள எழுத்து உங்கள் கையெழுத்து அல்ல என்று வாதிட்டோம். கையெழுத்து நிபுணர் வந்து உங்கள் கையெழுத்து என்று நிரூபித்துவிட்டார். பூசணிக்காயை விழுங்கியவன் முதுகைத் தடவிய கதை போலாயிற்று.

"உங்கள் டைரிதான் உங்களுக்கு வைரி' என்று சொல்லி இரு தோள்களிலும் தட்டிக் கொடுத்து 'தைரியமாயிருங்கள்' என்று சொல்லிச் சென்றார்.

'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டால்

இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்ற தாயுமானவரின்

பராபரக்கண்ணியை வாய்விட்டுப் பாடிய வாத்தியார் சிறிதும் கலங்கவில்லை. தெளிவாகச் சிந்தித்தார்.

'எனக்கு டைரி எழுத யாரும் சொல்லித்தரவில்லை. என் சிறுவயதிலிருந்தே அந்த வழக்கமிருந்தது. முதலில் சர்க்கஸ் விளம்பரத் தாள்களை சேகரித்து அவைகளை தைத்து நோட்டாக்கி அதில் எழுதினேன். டைரி எழுதுவது என் பிறவிக் குணம் என்று கூடக் கூறலாம். கொஞ்சம் பெரியவனானபோது பழைய நோட்டுகளிலுள்ள மீதித்தாள்களை கிழித்து தைத்து நோட்டாக்கி அதில் எழுதினேன். அதுதான் அக்காலம் என் டைரி.

1935ஆம் ஆண்டு - ஒரு கோடை விடுமுறையில் அக்கா வீட்டிற்குப் போயிருந்தேன். அப்பொழுது நான் நாலாம் வகுப்புப் படிக்கிறேன். நான் செய்த ஒரு சிறு தவறுக்காக அத்தான் மிகவும் கடுமையாக நடந்துகொண்டார். அக்காவீட்டுச் சுவரில் 'அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது' என்று எழுதிவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்துவிட்டேன். என்னுடைய டைரியிலும் எழுதிவிட்டேன்.

'1942ஆம் ஆண்டு எட்டாம் வகுப்பு அரசுத் தேர்வு எழுத தூத்துக்குடி போயிருந்தோம்'. 'இன்று தூத்துக்குடியில் குண்டு விழுந்தது, உயிர்தப்பிப் பிழைத்தோம்' என்று எனது டைரியில் எழுதி வைத்திருந்தேன்.

'நான் ஆசிரியரானபிறகு 'திருநெல்வேலி திருச்சபைப் பஞ்சாங்கம்' என்ற ஒரு டைரியை வருடந்தோறும் நிர்வாகம் ஆசிரியர்களுக்கு வழங்கும். அதில் கடுகளவு இடத்தையும் விட்டுவிடாது எழுதித் தள்ளிவிடுவேன்.

'உள்வீட்டு நடப்பு, ஊர்நடப்பு, உலகச் செய்திகள் அனைத்துமே என் டைரியில் இடம்பெறும். உண்மையை மட்டுமே எழுத வேண்டும் என்றொரு கோட்பாடு எனக்குள் ஆழமாக வேரூன்றியிருந்தது.

நெல்லையில் பணிசெய்த மாபெரும் சமயத் தொண்டரான ரேனியஸ் ஐயர் (1820-1838) அன்றாடம் எழுதிய 'டைரிமூலம்தான் அநேகச் செய்திகளை இன்று அறியமுடிகிறது. நெல்லை மாவட்டத்தில் மட்டும் அவர் 400க்கும் அதிகமான பள்ளிகளையும், 300க்கும் அதிகமான திருச்சபைகளையும் உருவாக்கியிருக்கிறார்.

ஜெர்மானியரான அவர் தமிழ்நாட்டில் முதன்முதலாக 1832ஆம் ஆண்டில் 'பூமிசாஸ்திரம்' என்னும் விஞ்ஞான நூலை வெளியிட்டிருக்கிறார். அவரது டைரியில் ஒருநாள் (1820 ஜூலை) இப்படி எழுதி இருக்கிறார்.

'சொந்த மண்ணிலிருந்து பிடுங்கப்பட்டு வேற்று மண்ணில் நடப்பட்ட மரம்போல் நான் இருக்கிறேன்'.

வேற்று நாடுவந்து வெப்பதட்ப நிலைகளை தாங்கமுடியாமல் அரும்பெரும் பணிகளைச் செய்துவிட்டு 48 வயதில் பாளையங்கோட்டை மண்ணில் உறங்குகிறார் என்று நினைக்கும்போது இரத்தக் கண்ணீர் வருகிறது.

அவரது டைரியின் மகாத்மியம் மிகப்பெரியது.

என் டைரியை பிறன்ஒருவன் படிப்பான் என்று நினைத்துக் கூடப் பார்க்காத காலம். 1950 மார்ச் 17ஆம் தேதி என்னைக் கைது செய்யும்

வரை டைரி எழுதியுள்ளேன். கைது செய்த அன்று தங்கள் ஜீப்பில் அள்ளிப்போட்ட நூற்களில் 1945லிருந்து அன்றுவரை எழுதிஇருந்த அனைத்து டைரிகளையும் போலீஸ் ஜீப்பில் அள்ளிப் போட்டார்கள். எனது நூற்கள், உடைமைகள் அனைத்தையும் பறிமுதல் செய்தார்கள். மாற்கு எழுதிய சுவிசேஷத்தை 'மார்க்ஸ் எழுதிய அறிக்கை' என்று அர்த்தப்படுத்தினார்கள்.

உளவுப் போலீஸ் அதிகாரி சாமி முதலியார் தற்செயலாக ஒரு டைரியை எடுத்துப்படித்தார்.

'இன்று இரவு எம் பள்ளியில் கம்யூனிஸ்ட் இரகசியக் கூட்டம் நடந்தது' இந்த வாசகம் காவல்துறையினர் அனைவருக்கும் வாய்நிறைய அவுல் கிடைத்தது போலிருந்தது.

சதிவழக்கிற்கு ஆதாரமான ஆவணம் ஒன்று கிடைத்துவிட்டது என்ற களிப்பில் துள்ளினார்கள். குடித்துக் குதித்தார்கள். இந்த டைரியை வைத்து மூன்று நாட்கள் வாத்தியாரை சித்திரவதை செய்தார்கள்.

'வாத்தியானுக்கு தூக்குத்தண்டனை உறுதியாயிற்று' என்று எஸ்.ஐ. டாஸ் ஊர் முழுவதும் பறைசாற்றினான். டைரியை மையமாக வைத்து கொலை, கொள்ளை, அரசை தூக்கியெறிய சதி ஆகிய குற்றங்களை ஜோடிக்க தீவிர சிந்தனை செய்தார்கள். பொய்களைப் புனைந்தார்கள்.

இவ்விதமாக சிந்தித்த வாத்தியார் நிலை குலையாமல் நின்றார்.

வாத்தியார் டைரி எழுதியதை குறித்து பரிகாசமாகப் பேசிய தோழர்களும் உண்டு.

அறுபத்து ஏழு பேரில் பன்னிரெண்டாவது குற்றவாளி வாத்தியார். 'ஏழுபேருக்கும் எட்டுப்பேருக்கும் பங்கிட்டுக் கொடு, பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது' என்ற விவிலிய வாக்கு நிறைவேற என் வாழ்நாள் முழுவதும் உழைப்பேன்' என்று 1950 மார்ச் 15ஆம் நாளில் எழுதிவைத்திருந்த டைரி வாசகத்தை நினைத்துப் பார்த்த வாத்தியார் மனதிற்குள் சிரித்தார், நெஞ்சி விம்மச் சிரித்தார்.

39

வாத்தியாருக்கு டைரியை மறக்கமுடியவில்லை. 'ஒரு நல்ல டைரி சமூகத்தை பிரதிபலிக்கும்' என்பார்.

சுவிசேஷபுரம் நெல்லை மாவட்டத்தில் ஒரு கிறிஸ்தவக் குடியிருப்பு கிராமம். அங்கு பல வருடங்களாக சவரிராயபிள்ளை என்பவர் மிகச்

சிறந்த உபதேசியாராகப் பணிவிடை செய்து ஓய்வு பெற்றார். அவரது சொந்த ஊர் வடக்கன்குளம். அவர் ஈராயிரம் பக்கங்களில் எழுதிய டைரி (1836-1874) அவர் இறந்தபிறகுதான் அவரது பிள்ளைகளால் கண்டுபிடிக்கப் பட்டது. அதில் திருச்சபை நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் அரிய செய்திகளும் இடம்பெற்றிருந்தன.

அவர்மகன் தேவசகாயம்பிள்ளை அதனைப் பத்திரமாய் பாதுகாத்து 1898இல் தங்கள் குடும்ப உபயோகத்திற்கென்று 25 பிரதிகள் மட்டும், அச்சில் செய்துள்ளார். அது வெகுஜன அளவில் நூல் வடிவு பெறும்போது பிற்காலத்தில் பெரிய ஆய்வுக்குரிய நூலாகும்.*

பாழாப்போன போலீஸ்காரங்க எனது ஐந்து ஆண்டுகளின் டைரிகளை பறிமுதல் செய்து பாழடித்து விட்டார்களே என்ற ஏக்கத்தில் விழித்து எழுந்தார்.

ஸ்பெஷல் செஷன்ஸ் கோர்ட்டில் வழக்குகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன.

வழக்கின் இடைவேளைகளில் பெட்டி கேஸ்கள் நடைபெறும். அவைகளில் பல சுவையான வழக்குகளாக இருக்கும். தோழர்கள் மாமரத்து நிழலில் அமர்ந்து கேட்டு மகிழ்வார்கள். அவைகள் அனைத்தும் சமுதாயச் சீரழிவுகளை சித்திரம் வரைந்து காட்டுவது போன்றிருக்கும்.

ஓர் இளம்பெண், பிள்ளைபுதுசு, அழகி, சந்தர்ப்பச் சூழலால் மாட்டிக் கொண்ட ஒரு பேதைப்பெண்.

நீதிபதி, "ஒரு மாதம் தண்டனை, அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம், இரண்டு பேர் ஜாமீன்' என்று தீர்ப்புக் கூறினார்.

முன் ஆயத்தமாக போலீசார் இருவரைக் கூட்டி வந்திருந்தார்கள். அவர்கள் ஜாமீன் கையெழுத்திட்டார்கள்.

நீதிபதி போலீசாரைப் பார்த்து மிகுந்த வேதனையுடன் சொன்னார், 'ஏம்பா இப்படியெல்லாம் பண்றீங்க, இரண்டு பேரும் பங்கு போடுவாங்க. பிள்ளையை வம்பா கெடுத்துப்போடுவாங்க' மனமுடைந்து மண்டையில் அடித்துக் கொண்டார் நீதிபதி. சமுதாயம் நாறிச் சீழ்வடிவது நீதிபதிக்கும் நன்கு தெரிந்திருந்தது.

பாரதி மெதுவாக வாத்தியார் பக்கம்வந்து அவரது மூக்கைத் தடவி விட்டுக் கொண்டு 'வக்கீல் சண்முகம் சொன்னதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?' என்றார்.

வாத்தியார் சொன்னார்.

'இன்று ஓர் வேதவசனம் என் நினைவிற்கு வந்தது :

'யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கடவுள் அவன் சிறையிருப்பவை மாற்றினார்'

எனவே அந்த நிமிடமுதல் "இறைவா, என் தோழர்கள் யாரும் என்

---

* **இரண்டாயிரமாம் ஆண்டிலிருந்து அந்த டைரியை ஆய்வு செய்துவரும் திருமதி. சரோஜினி பாக்கியமுத்து அவர்கள் ஆங்கிலப்படுத்தி வருகிறார்கள்.**

எழுத்தினிமித்தமோ, என்னிமித்தமோ தண்டனை அடைந்துவிடக்கூடாது' என்று பாரத்தோடு பிரார்த்தித்து வருகிறேன்' என்றார்.

'பயித்தியக்காரப்பயல்' என்று சொன்ன பாரதி முழுப்பற்களையும் காட்டிச் சிரித்தார்.

வாத்தியார் மீதுள்ள குற்றச்சாட்டுகள் என்ன?

'பண்ணையூர் பள்ளி வாத்தியார் தலைமறைவு கம்யூனிஸ்ட்களுக்கு கம்பங் கஞ்சி கொடுத்தும், சாப்பாடு பரிமாறியும் ஆதரித்தார். அவர் பள்ளியில் இரகசியக் கூட்டம் நடத்த இடம் கொடுத்தார். அப்பொழுது கஞ்சி கொடுத்த செம்புகளை வாங்க வந்த பண்ணையூர் கந்தையா வெளியே ஜன்னல் ஓரத்தில் நின்றார்.

'கட்சியை காட்டிக் கொடுத்த துரோகிகளைக் குளோஸ் பண்ண வேண்டும்' என்று கூட்டத்தில் பேசியதை கந்தையா கேட்டார். அந்தக் கூட்டத்தினுள் வாத்தியார் இருந்தார்.

'வாத்தியார் சட்ட விரோத இயக்கமான முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராய் இருந்தார். புரட்சிகரமாக எழுதினார். விவசாய சங்கம் வைத்து முதலாளிக்கு விரோதமாக செயல்பட்டார்' என்பதாகும்.

வாத்தியாரின் வாதம் என்ன?

'பண்ணையூர் மாணவர்களுக்கு நல்ல கல்வி கொடுத்தார். கட்டாயக் கல்வியாக்கினார். அனைத்து மாணவர்களையும் பள்ளிக்கு அனுப்பும்படி பெற்றோரோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தார். பண்ணையூர் ஒரு முதலாளிக்கு அடிமைப்பட்டிருந்த கொத்தடிமைக் கிராமமாக இருந்தது. முதலில் படிக்கும் மாணவர்களை விவசாய சங்க ஆதரவு கொண்டு விடுவித்தார்.

முதியோர் கல்வி, மாணவர் சங்கம், பெற்றோர் சங்கம், வாலிபர் சங்கம் என்று பல அமைப்புகளை ஏற்படுத்தி ஊரை முன்னேற்றுவதில் துடிப்பாயிருந்தார். ஞாயிறுதோறும் இரு கிராம சபைகளில் உபதேசிப்பணி செய்தார். வாரம்தோறும் விவசாய வாலிபர் சங்கத்திற்கு பேச்சாளர்களை அழைத்துவந்து பிரசங்கமும், உரையாடல்களும், நிகழ்த்தினார். காங்கிரஸ் கட்சியிலிருந்தும் மற்றும் எல்லாக் கட்சித் தலைவர்களும் பேச வருவார்கள். மக்கள் மத்தியில் ஒரு பெரிய எழுச்சி ஏற்பட்டது. வாத்தியார் எந்தக் கட்சியும் கிடையாது. வாத்தியாரை ஒழித்துகட்ட முதலாளி முனைந்தார்.

விவசாய சங்கத்திற்கு தூத்துக்குடி வி.வி.தனுஷ்கோடி நாடாரிலிருந்து தொழிற்சங்கத் தலைவர் கிட்டு ஐயர் உட்படபலரும் பேச்சாளர்களாக வந்துள்ளார்கள். தேசபக்தி, காந்தி மீது பற்று, நாட்டுவிடுதலை, ஊர் முன்னேற்றம், மாணவர்களின் கல்வி அறிவு, பட்டினிச் சாவிலிருந்து மக்களைப் பாதுகாத்தல் இவைகளைத் தவிர, கம்யூனிசம், தலைமறைவு, சட்டவிரோதம் ஆகியவைபற்றி வாத்தியாருக்கு ஏதும் தெரியாது. டைரி எழுதும்பழக்கம் சிறுவயதிலிருந்தே உண்டு.

வாத்தியார் தம் வாதத்தை தெளிவாக வைத்தார்.

வாத்தியார் இரகசியக் கூட்டத்தினுள் இருந்தாரா இல்லையா என்பது

பற்றி இருதரப்பிலும் பலத்த வாதங்கள் நிகழ்ந்தன. கந்தையா கொன்னை நாவுடையவராதலால் அவரை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்ற வாதத்தை நீதிபதி ஏற்றுக் கொண்டார்.

மறுநாள்- எதிர்பாராதவிதமாக போலீஸ் தரப்பில் நான்கு சாட்சிகள் வந்திருந்தார்கள்.

முதலாவது கந்தையா.

கந்தையா கூண்டில் ஏறவும் வாத்தியார் விழியும் கந்தையாவின் பார்வையும் சந்தித்தன. அவரை அடித்து இம்சித்திருந்த போலீஸ்காரர்கள் அவருக்குப் புதுச்சட்டை, வேட்டி, பிரியாணி வாங்கிக் கொடுத்து கூண்டில் நிறுத்தி இருந்தார்கள். அவர்கள் கோர்ட்டைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தார்கள்.

வாத்தியாரின் அருமை நண்பர் கந்தையா பாதியாக மெலிந்து அரை உயிராயிருந்தார்.

கோர்ட் கூண்டில் ஏறியதும் கந்தையா அழுதார். கதறினார். சட்டையை கழட்டி அடிகளின் வடுக்களைக் காட்டினார்.

'உங்கள் ஊர் பள்ளியில் நடந்த இரகசியக் கூட்டத்தில் வாத்தியார் இருந்தார் என்று கீழ்கோர்ட்டில் சொல்லி இருக்கிறீர். அது உண்மைதானே....' அரசு வக்கீல் பாலாஜி கர்ஜித்தார்.

எதிரிகள் தரப்பு வக்கீல் என்.டி.வானமாமலை மிக அமைதலாக அவரைப் பேச விடுங்கள் என்றார்.

'போலீஸ் அடியும் மிதியும் உதையும் தாங்க முடியாமல் கீழ்கோர்ட்டில் அப்படிச் சொன்னேன். நான் சாகுமுன் உள்ளதைச் சொல்லிவிட்டுச் சாகவேண்டும். அந்த இரகசியக் கூட்டத்தில் வாத்தியார் இல்லை. அவர் எங்கள் ஊரை முன்னுக்குக் கொண்டு வந்த உத்தமர். நான் வெளியே போகவும் போலீசார் என்னை கொன்றுவிடுவார்கள். இனி நான் சாவதில் மகிழ்ச்சியடைகிறேன்' என்ற கொன்னிக்கொன்னி தெளிவாகச் சொன்னார். நீதிபதி அவருக்குப் பாதுகாப்பு கொடுத்தார். அவர் வெளியே வரவும் பண்ணையூரிலிருந்து இரகசியமாக வந்திருந்த பத்துப்பேர் அவரை சூழ்ந்து கொண்டார்கள். அவர் மயங்கி விழுந்தார்.

அடுத்து பண்ணையூர் சொக்காண்டி ரெட்டியார் கூண்டில் ஏறினார். அவர் முதலாளியின் கையாள் - எனவே அவரை கொண்டு வந்திருந்தார்கள்.

சொக்காண்டி ரெட்டியாருக்கு இப்பொழுது மிகுந்த தைரியம் வந்திருந்தது. ஊசலாட்டத்தைவிட்டு ஊக்கம் உறுமியது. அரசு வக்கீலின் கேள்வியை எடுத்தெறிந்து அவர் சொன்னார்.

'வாத்தியார் சுத்தமானவர், ஒழுக்கமுள்ளவர். அவரைப்பற்றி தப்பிதமாக நான் ஏதாவது சொன்னால் என் நாக்கு அழுகிவிடும். கண்கண்ட தெய்வம்'.

கோர்ட்டில் சிரிப்பொலி எழுந்தது.

அரசுவக்கீல் குதித்தார் - 'உங்க சாட்சிதானே' என்று நக்கலாக வக்கீல் சண்முகம் சொன்னார்.

'கம்யூனிஸ்ட்கள் உம்மிடம் வந்து, வாத்தியாருக்கு விரோதமாகச் சாட்சி சொன்னால் கொன்றுவிடுவோம் என்று உம்மை மிரட்டினார்களா?' வக்கீல் பாலாஜி கேட்டார்.

உடனே ரெட்டியார் தம் வெற்றிலைக்காவி நிறைந்த பற்களோடு சிரித்த முகத்துடன் சொன்னார்.

'போங்கையா... உங்க போலீஸ்காரங்கதான் எங்க இரண்டுபேரையும் அடித்து இம்சித்து பொய்சாட்சி சொல்லச் சொன்னாங்க. இப்ப மூன்று நாட்களாக ஒளித்துவைத்து - நல்ல விருந்தும் தந்து மிரட்டினார்கள். பாவம், அந்த வாத்தியார் போனார் ஊர் கழுத மேஞ்சி போச்சி - பிள்ளைகள் தெருக்காட்ல தவளையும், தட்டானும் பிடிச்சிக்கிட்டு திரியுறாங்க' என்றார்.

கோர்ட்டில் ஒரே சிரிப்பு. போலீஸ் தரப்பில் ஒரே எரிப்பு.

அனைவர் கண்களும் 12வது வரிசையிலிருந்த வாத்தியாரின் கண்களை நோக்கின. வாத்தியாரோ எவ்வித சலனமுமின்றி உள்ளுக்குள் நன்றி உணர்வுடன் உட்கார்ந்திருந்தார்.

இன்னும் இரு சாட்சிகளை விசாரிக்க அரசு தரப்பு வக்கீல் வாதிட்டார். நீதிபதி அங்குநின்ற போலீஸ் அதிகாரிகளை வெறுப்போடு பார்த்தார். உளவுத்துறை அதிகாரி சாமி முதலியார் கூனிக்குறுகிப்போய் இருந்தார்.

சாட்சிகளைக் கொண்டுவரும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

போலீஸ் ஜீப்கள் பறந்தன.

அதற்கிடையில் பெட்டிக் கேஸ்கள் ஆரம்பமாயின.

வாத்தியார் எதிர்பார்க்கவில்லை.

அவர் பணிபுரிந்த பள்ளியின் தாளாளர் அருள்திரு பேசில் அவர்கள் தம் பாதிரியார் உடையிலேயே வந்திருந்தார்.

அவரிடம் போலீஸ்காரர்கள் பாடம் படித்துக் கொடுக்க முடியவில்லை.

ஆனால் போலீஸ் சாட்சியாகவே வந்தார்.

அவர் கூண்டில் ஏறி நின்றார்.

அமைதியான புன்சிரிப்பு தோழர்கள் மத்தியில் நிலவியது-

அரசு வக்கீல் கேள்விகளை தொடுத்தார்.

'வாத்தியார் உங்கள் நிர்வாகத்திற்குட்பட்ட பண்ணையூர் பள்ளியில் பணி செய்கிறார்'

'ஆம்'

'வாத்தியார் ஓர் ஆபத்தான கம்யூனிஸ்ட் என்று போலீஸ் தரப்பில் சாட்சியங்கள் உள்ளன'

'அதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது'

'நீங்கள் ஒரு கிறிஸ்தவ குருவானவர். உண்மையே பேசுவீர்கள், வாத்தியார் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'

'வாத்தியார் பற்றி எனக்குத் தெரிந்தவரை பக்தியும், விசுவாசமும் உள்ள ஓர் உண்மை ஊழியர்'

'அதென்ன பக்தி, விசுவாசம், அவைகளின் பொருள் என்ன?' என்று வக்கீல் பாலாஜி பரிகாசமாகக் கேட்டார்.

'Pious and Faithful Teacher' என்று பாதிரியார் ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு நிமிர்ந்து நின்றார்.

அமைதி நிலவியது.

மீண்டும் பாலாஜி வக்கீல் பாதிரியாரை நோக்கி 'உங்கள் நிர்வாகத்திலிருந்து ஆண்டுதோறும்' 'திருச்சபை பஞ்சாங்கம்' என்றொரு டைரியை ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் வழக்கம் உண்டா?

'உண்டு'

'இந்த வாத்தியாருக்கும் கொடுத்தீர்கள்?'

'ஆம் கொடுத்தோம்'

'அவர் தினமும் டைரி எழுதும் வழக்கம் உண்டா?'

'அதுபற்றி எனக்குத் தெரியாது'

எதிர்தரப்பு வக்கீல் பாளை சண்முகம் பாதிரியாரிடம் கேள்விகள் கேட்டு அவர் சொல்லியதை மீண்டும் ஊர்ஜிதம் செய்தார்.

கோர்ட் வாயில்களைச் சுற்றி குர்குர் என்று திரியும் குற்றப்பிரிவு போலீஸ்கள் குட்டியைப் பறிகொடுத்த கரடிபோல உறுமித்திரிந்தார்கள்.

அடுத்து 'பள்ளிக்கூட டிப்டி இன்ஸ்பெக்டர் சேவியர் எம்.ஏ., எல்.டி.,' என்று டபேதார் மும்முறை கத்தினார்.

தணிக்கை அதிகாரி சாட்சிக் கூண்டில் ஏறினார்.

வக்கீல் பாலாஜி - 'நீங்கள் பள்ளிகளை தணிக்கைசெய்யும் அதிகாரி'

'ஆம்'

''பண்ணையூர் பள்ளி ஆசிரியர் பாடம் படித்துக் கொடாமல் கம்யூனிஸ்ட் பணிகளிலே ஈடுபட்டிருக்கிறார், சரிதானே?'

'அந்தப் பள்ளியை மும்முறை தணிக்கை செய்திருக்கிறேன். சாதி வெறியில் சீரழிந்து சின்னாபின்னமாகி - பிள்ளைகளே இல்லாமலிருந்த பள்ளியை சிறப்பான பள்ளியாக மாற்றி இருந்தார். பிள்ளைகள் இல்லாமல் பொய் ஆஜர்காட்டி ஏமாற்றி சம்பளம் வாங்கி வந்த பள்ளியில் கல கலவெனப் பிள்ளைகள் இருந்தார்கள். துடுக்கான ஓர் இளைஞர் அந்தப் பள்ளியை அற்புதமாக மாற்றியது கண்டு மகிழ்ந்தேன்.

பாலாஜி - பிரசங்கம் வேண்டாம் என்று கத்தினார். அரசு ஜூனியர் வக்கீல் சுப்ரமண்யமும் குறுக்கிட்டார். வக்கீல் சண்முகமும், வானுமாமலையும் எழுந்து 'கோர்ட்டார் அவர்களே, போலீஸ் மாதிரி அரசு வக்கீல்கள் சாட்சியை மிரட்டுகிறார்கள்' என்றார்கள்.

வக்கீல்களுக்குள் வாக்குவாதங்கள் எழுந்தன.

தணிக்கை அதிகாரி மீண்டும் பேசினார்.

'ஒரு முறை பள்ளியை திடீர் விசிட் பண்ணினேன். பள்ளியில் மாணவர் சங்கம் நடந்து கொண்டிருந்தது. பெற்றோரும் வந்திருந்தார்கள். தலைமை

ஆசிரியரின் கடின உழைப்பால் பள்ளியின் தரம் மிகவும் உயர்ந்திருக்கிறது. நான்கண்ட உண்மை இதுதான்'.

அதற்கான ஆவணங்களை சமர்ப்பித்தார்.

தோழர்களுக்குள் ஓர் இன்பக் கிளுகிளுப்பு எழுந்தது. 'வாத்தியார் எழுதிய டைரியில்தான் எல்லாவிஷமும் இருக்கிறது' தண்டனையிலிருந்து தப்ப வாத்தியார் கனவுகூட காணமுடியாது' என்று கருவினார் போலீஸ் குற்றவியல் அதிகாரி சாமி முதலியார்.

40

வாத்தியாருக்கு தாம் பணிபுரிந்த பண்ணையூர் நினைவு எழுந்தது. கந்தையாவை நினைத்து அழுதார்.

'உண்மையைச் சொல்லிவிட்டு உயிரைவிடுவேன்' என்றது எத்தனை பெரிய தியாகம்?

திம்மு ரெட்டியார் வாத்தியாரை பேட்டி காணவந்த போது பல செய்திகளை சொல்லிச் சென்றார்.

கந்தையாவை போலீசுக்கு பயப்படாமல் பலப்படுத்திய அவரது செயல் மிகப்பெரியது.

குறுக்குச் சாலைப்பக்கம் செய்த்தலை என்னும் கிராமம் உள்ளது. அங்கு வெள்ளையப்ப ரெட்டியார் மகன் அருணாசல ரெட்டியார் கல்லூரி மாணவர். முற்போக்குச் சிந்தனையாளர். செய்த்தலை கிராமத்தில் மக்கள் நலத்திட்டங்கள் வகுத்து செயல்பட்டார். அவரையும் கம்யூனிஸ்ட் என்று கல்லூரிக்குப் போய் கைது செய்து, புலன் விசாரணையின் பேரில் தார்குத்தினார்கள். 'வாத்தியானை தெரியுமா, அவன் பள்ளியில் நடந்த கம்யூனிஸ்ட் கூட்டத்தில் நீயும் இருந்தாயா? பாலனை காட்டித்தந்தால் போலீசில் உத்தியோகம் வாங்கித் தருகிறோம், இப்படிப் பல கேள்விகளை கேட்டு புண்படுத்தினார்கள். மறுநாள் காலை பத்துமணிக்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு ஆஜர் ஆக வேண்டும் என்ற நிபந்தனையில் விட்டார்கள்.

அவர் மறுநாளே கொழும்பு சென்று தலைமறைவாகிவிட்டார். 9.5.1951 அன்று அவரது வீடு சூறையாடப்பட்டது. பல பொருள்களை அள்ளிச் சென்று அக்கினியில் பிடுங்கிய தீக்கொள்ளி போல எறிந்தார்கள். அவர் கொழும்பு சென்றுவிட்டது அவர்களுக்குத் தெரியாது. அருமையான இளைஞனின் வாழ்க்கை பாழாயிற்றே என்று எண்ணிய வாத்தியார் கண்ணீர் சிந்தினார்.

வாத்தியாரின் உள்ளக் கடலில் திருச்செந்தூர் கடல் அலைகள் போன்று கருத்துக் குவியல்கள் குமுறி எழுந்தன.

'இட்லர் சர்வாதிகாரிதான், ஆனாலும் அவரது ஒரு கொள்கை எனக்கு மிகவும் பிடித்தது;

இட்லர் சொன்னார்;

'நீ உன் தேசத்திற்கு எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ அதை ஆரம்பப் பள்ளியிலேயே விதைத்துவிடு' என்றார்.

அதைத்தான் நான் பண்ணையூரில் செய்தேன்.

என் நாட்டு மக்கள் சமாதானத்தில் திளைக்க வேண்டும்

என் தேச மக்களிடம் சமத்வம் பரிமளிக்க வேண்டும்

என் பாரத மக்கள் எப்போதும் சந்தோஷமாக வாழ வேண்டும்

இவைகளே என் கோட்பாடுகளாக இருந்தன.

ஒரு ஆசிரியர் என்றால் தம்மாணவர்களை முழு மனிதனாகப் பயிற்றுவிக்க வேண்டும். இது என் பேராசை.

ஊர் மக்களிடம் சமத்துவம் சகோதரத்துவத்தை வளர்க்க ஒரு சர்வாதிகாரி ஆனேன். அந்த அளவிற்கு ஊர் மக்களின் அன்பைப் பெற்றிருந்தேன்.

அன்று மாலை நண்பர் திம்மு ரெட்டியார் பண்ணையூருக்கு வருவதாகச் சொல்லி அனுப்பி இருந்தார். எனவே நான் அங்கு தங்கினேன். சுப்பா ரெட்டியார் வீட்டு நடுக்கூடத்தில் அமர்ந்தோம். நண்பர் குழாமெல்லாம் கூடிவிட்டார்கள். அந்தநாள் 1947 டிசம்பர் பதினைந்தாம் தேதி. நான்கு மாதங்களில் சுதந்திரம் புளித்துவிட்டது.

எதிலும் தீவிரம் காட்டாமல் நிதானமாகச் செயல்பட அவ்வூரில் கற்றுக் கொண்டேன். ஆழமான ஆறு அமைதலாகத்தானே ஓடும். ஆனால் வசதிக்கேற்ப நெளியும் மண்புழுவைப்போல ஆளுக்கேற்றபடி வேஷம் போட - பண்ணையாரிடம்குழைந்து போக என்னால் முடியவில்லை. உலகில் தலை நிமிர்ந்து நடக்கும் ஒரே பிராணி மனித ஜீவி மட்டும்தானே.

ஓடாத கடிகாரம் கூட ஒரு நாளைக்கு இருமுறை சரியான நேரத்தைக் காட்டும். ஆனால் நான் பணிபுரிந்த பண்ணையூர் முதலாளியிடம் உண்மை வார்த்தை ஒருநாள்கூட வந்ததில்லை. அவர் வளர்த்துவிட்டிருந்த மூடக்கொள்கைகளை எதிர்த்துநிமிர்ந்து நின்றேன். என் மாணவன் வையப்பரெட்டி ஒரு வண்ணப்பெட்டி நிறைய காரச்சேவும், வெற்றிலைபாக்கும் வாங்கி வந்திருந்தான்.

வாதம், பிரதிவாதம், நகைச்சுவை, அரசியல், ஆன்மீகம் அனைத்தையும் அலசினோம்.

'பஞ்சத்திற்குக் காரணம் மக்கள் பெருக்கம் என்கிறார்களே?' ஆண்டி ரெட்டி ஒரு கேள்வியைப் போட்டான்.

வெற்றிலையை மடித்து வாயில் வைத்துக்கொண்டே திம்மு ரெட்டியார் 'நடுராத்திரியில் சுதந்திரம் கொடுத்தால் ஜனப்பெருக்கம் வருவது இயற்கைதானே' என்றார்.

பச்சமால் ரெட்டியார் ரசித்துச் சிரித்தார்.

'மக்களை திசைதிருப்பும் செப்படிவித்தை' என்றேன் நான்.

'பண்ணையார் செய்த கொடுமைகளுக்கெல்லாம் சேர்த்து ஒருநாள் அறுப்பார்' என்றார் கொன்னை கந்தையா.

'விதைத்தே அறுக்க முடியவில்லை, அவர் விதைக்காமலே அறுக்கப் பார்க்கிறார்' என்றார் பெருமாள்.

'நடுத்தெருவில் நாலு வயதுப் பயல் மலங்கழித்ததற்காக நீங்கள் பருத்திமார்கம்பால் ஒருநாள் விளாசிவிட்டீர்களே, அன்று முதல் நாரணத் தேவருக்கு உங்கள் மீது ரொம்பக் கோபம்' என்றார் சின்னகாசி.

'துன்பமும் இன்பமும் எனக்கு ஒன்றுதான் என்று நான் சொன்னவுடன், பெரியசாமித் தேவர், 'துன்பமும் இன்பமும் எனக்கு இரு கால்கள்' என்றார். அவரது பரந்த ஞானம் கண்டு நான் வெட்கிப் போனேன்.

'உண்மையே பேசவேண்டும் என்றால் முடியுமா' என்றார் திம்மு.

'முடியாதுதான், ஆனால் பேசுவதை உண்மையாய்ப் பேசினால் போதும்' என்றார் வாத்தியார்.

அப்பொழுது காப்பி கொண்டுவந்த வையம்மாள் முழு அர்த்தமும் புரிந்தவளாக 'மாவைத் தின்றால் பணியாரமில்லை, பணியாரத்தைத் தின்றால் மாவு இல்லை, எல்லாம் ஒன்றுதான்' என்றாள்.

எல்லோரும் ஏகோபித்துச் சிரித்தோம்.

'ஊரிலுள்ள சில பெண்கள் முதலாளியிடம் நடந்து கொள்ளும் கொச்சையான முறைகள் பற்றிப் பேச்சு வந்தது.

'வாத்தியாரையா, உங்கள் பைபிளில் 'குணசாலியான பெண்ணைக் கண்டுபிடிப்பவன் யார்?' என்று சாலமோன் ஞானியே ஒரு கேள்வி கேட்டுள்ளார். அவராவது கண்டுபிடித்தாரா' என்று பச்சமால் ரெட்டியார் கேட்டார்.

'ஆமா' என்று நான் பலமாகத் தலையை ஆட்டினேன். அதாவது குணமுள்ள பெண்கள் உலகில் இருவர் மட்டும் இருந்தார்கள். ஒருத்தி இறந்து போனாள், மற்றொருத்தி இன்னும் பிறக்கவில்லை என்றேன்.

வெற்றிலை குதப்பல்களுக்கு மத்தியில் வேடிக்கையான சிரிப்பொலியும் எழுந்தது.

கூடத்திற்குள் இருந்த ஒரு மண்சட்டியிலிருந்த தண்ணீரில் ஒரு காகம் குளித்தது.

'காகம் குளித்தால் மழைவரும்' என்றார் கந்தையா.

'நம்மூர் மக்கள் மழைவந்தால்தானே குளிப்பார்கள். பண்ணையார் நிலங்களை த்ரிசிபோட்டுவிட்டார் - மழைக்கென்ன வேலை' என்றார் பச்சமால்.

'நம்ம பயல்க ரொம்பத் தெளிஞ்சிட்டாங்க, ஒருநாள் 'கழுதைகளா' என்று ஏசினேன். உடனே ஆண்டி ரெட்டி 'ஸார் உண்மையில் நாங்கள் கழுதைகளே, நீங்கள் இந்த ஊருக்கு வருமுன்னால், நாங்கள் மழை

பெய்தால்தான் குளிப்போம், கழுதையும் அப்படித்தான். கழுதை மழைக்குத்தான் நம்மூர் பள்ளி வராண்டாவில் ஒதுங்கும். நாங்களும் அப்படித்தான்' என்றான்.

'உனக்கு இந்த புத்தி எப்படி வந்தது?' என்று கேட்டேன்.

'ஸார் நான் கழுதப்பால் காப்பி குடிச்சி வளர்ந்தவன் - அதனால எனக்கு நோய் நொடியும் கிடையாது' என்றான்.

எல்லோரும் சிரித்ததோடு ஆளுக்கொரு எள்ளுருண்டை தின்றோம்.

மானேஜர் முத்தையா ரெட்டியார் கேட்டார்.

'வாத்தியாரையா, நீங்க கிறிஸ்தவ உபதேசியாராகவும் இருக்கீங்க. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் காட்டு என்றாரே இயேசு பெருமான், அது நடைமுறையில் சாத்தியமா?' என்றார்.

வாத்தியார் திகைத்து நிற்கும்போது மூக்காண்டி பட்டென்று பதில் சொன்னான்.

'கன்னத்தில் அடிக்காமல் வயிற்றில் அடித்தால் வாத்தியார் என்ன செய்வார்? ஒரு வயிறுதானே இருக்கிறது' என்றான்.

யாவரும் சிரித்து மகிழ்ந்தோம். இரவு பன்னிரெண்டு மணிக்குப் பிறகு ஆளுக்கொரு தம்ளர் கம்பங்கஞ்சியை காணத்துவையல் கூட்டி ரசித்து உண்டோம். இப்படி எத்தனை இரவுகள் உரையாடி மகிழும் இன்ப இரவுகளாகக் கழிந்தன.

அந்நாட்களை நினைக்கும்போது வாத்தியார் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் உருண்டோடியது.

"நம்ம முதலாளி ஹார்லிக்ஸ் மாவைக் கொட்டி நாய்க்குக் கொடுப்பார்' என்றான் அருணாசலம்.

'நீ என்றைக்காவது ஹார்லிக்ஸ் குடிச்சிப் பாத்திருக்கியா' என்று வாத்தியார் கேட்டபோது அருணாச்சலம் கணீர் என்று பதில் சொன்னான்.

'எங்கம்மா ஹார்லிக்ஸ் டப்பாவில்தானே உப்பு வச்சிருக்காங்க. அதத்தான் பாத்திருக்கேன்' என்றான்.

எல்லோரும் குபீரென்று சிரித்து - மழையில் பிடித்து பத்திரமாக வைத்திருந்த தண்ணீரை குடல் குளிரக் குடித்து மகிழ்ந்தோம்.

இப்படியாகப் பண்ணையூர் நினைவுகளில் வீழ்ந்துகிடந்த வாத்தியார் சிறைத்துன்பங்களை மறந்து தூங்கிவிட்டார்.

41

மாயாண்டி பாரதி இந்த வழக்கின் ஒன்பதாவது எதிரி. பாரதி என்றே அன்புடன் அழைப்பர். பழைய காங்கிரஸ்காரர். துணிச்சல்மிக்கவர். கட்டையா கருப்பா இருப்பார். ஆனால் படை நடுங்கும் பேச்சாளர். கனல் கக்கும் எழுத்தாளர். மக்களின் நல்வாழ்வில் போதம்மிக்க கொள்கையர், தாம் நேசித்த கட்சிக்கு விசுவாசமுள்ளவர்.

இரண்டாம் யுத்த காலத்தில் யுத்த எதிர்ப்புப் பிரசாரத்தை சூடுபிடிக்கச் செய்துவந்தார். விருதுநகர் பக்கம் கன்னிச்சேரி என்ற கிராமத்தில் யுத்த எதிர்ப்புப் பிரச்சாரத்தில்

பட்டாளத்தில் சேராதே!

யுத்தநிதி கொடுக்காதே!

வரி கொடுக்காதே!

பட்டாளத்தில் உங்கள் பிள்ளைகள் இருந்தால் கடிதம்போட்டு உடனே ஓடிவரச் சொல்லுங்கள். இது மக்கள் யுத்தமல்ல, ஏகாதிபத்திய யுத்தம்' என்று துணிச்சலோடு தூள்பறக்கப் பேசினார். அங்கிருந்த இரகசியப் போலீஸ் சிவகாசி போலீஸ் நிலையத்திற்கு தகவல் அனுப்பினார்.

உடனே காவல்துறை வந்து பாரதியைக் கைதுசெய்து திருவில்லிப்புத்தூர் சப்ஜெயிலில் ரிமாண்டில் வைத்தார்கள். பிறகு சிவகாசி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த டிப்டி கலெக்டர் ஆர்.டி.அன்சாரி பாரதிக்கு ஆறுமாத சிறைத்தண்டனையும் ஐம்பது ரூபாய் அபராதமும் விதித்தார். பாரதியைப் பார்த்து கலெக்டர் 'உனக்கு சொத்து இருக்கிறதா?' என்று பரிகாசமாகக் கேட்டார்.

அதற்குப் பாரதி 'இருக்கிறது' என்றார் இறுமாப்போடு.

'எங்கே இருக்கு?' கலெக்டர் கேள்வி.

'மதுரை ரயில்வே ஸ்டேஷன் எதிரிலுள்ள மங்கம்மா சத்திரம் என்னுடையது, மதுரை 'மீனாட்சி அம்மன் கோயிலும், திருமலை நாயக்கர் மகாலும் என் அப்பனுடையது. பாரதநாடே என் பாட்டாளியின் சொத்து' என்று கர்ஜித்தார்.

அபராதம் செலுத்தாததால் அதிகப்படியாக கூட ஒருமாதம்தண்டனை போட்டார்.

பாரதியின் உடல் முழுவதும் தியாக வடுக்கள். அதன்பிறகு எத்தனை போராட்டங்கள் - சிறைகள்.

சதி வழக்கு நடைபெறும் ஸ்பெஷல் செசன்ஸ் கோர்ட்டிற்கு தன்நிலை விளக்க அறிக்கை ஒன்றை பதினாறு பக்கங்களில் எழுத்து மூலம் கொடுத்திருந்தார்.

அது மகா முக்கியத்துவம் வாய்ந்த சரித்திரப் பின்னணி. பாரதியின் தியாக வரலாறு, இரத்தத் தழும்புகள். அவைகளில் ஒரு சில வரிகளை மட்டும் இவண் காண்பம்.

'நான் ஒரு கம்யூனிஸ்ட் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்கிறேன். உலக சமாதானத்திற்காக மக்களை ஒன்று திரட்டுவது எம் பணி. நாட்டின் நல்வாழ்வே என் உயிர் மூச்சு.

என் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய். பின்னப்பட்ட ஜோடனைகள். சதி செய்தது அதிகார வர்க்கம். நாங்களல்ல. கிடைத்திருப்பது போலி சுதந்திரம்.

இம்மட்டாக ஐம்பதாயிரம் பேர்களை சிறையில் தள்ளிவிட்டார்கள். 3784 பேர்களை சுட்டுத்தள்ளியும், தடியால் அடித்தும் கொன்றுள்ளார்கள். ஹார்வி மில்கள் போன்ற ஜீவாதாரமான பிரிட்டிஷ் மூலதனங்கள் பறிமுதல் செய்யப்படவில்லை. வளர்ந்து வரும் ஜனநாயக இயக்கங்களை நசுக்குவதற்கு அரசு செய்த சதியே இந்தச் சதிவழக்கு.

தனிநபர் சிலர்கூடி சமூகத்தை மாற்றிவிடமுடியாது என்பதும், எனவே மக்களை திரட்டி ஜனநாயக ரீதியில் செயலாற்ற வேண்டும் என்பதுவுமே மார்க்சிய தத்துவம். பலாத்கார பயங்கர வாதத்திற்கும், பொதுஉடைமை இயக்கத்திற்கும் சம்பந்தம் கிடையாது. சம்பந்தப்படுத்துவது கட்சியை முடமாக்கச் செய்யும் சதி.

1930இல் வேதாரண்யத்தில் நடந்த உப்பு சத்தியாகிரகத்தில் கலந்து கொண்ட என் அண்ணனை அடித்துச் சித்திரவதை செய்தது. அதைக்கண்ட என் பால்ய உள்ளம் துடித்தது. தேசபக்தி என்னை ஆட்கொண்டது. 1932 முதல் காங்கிரஸ் ஊழியனானேன். கள்ளுக்கடை மறியல், கதர் அபிவிருத்தி, முதியோர் கல்வி.... முதலிய காந்தியின் நிர்மாணத் திட்டங்கள் அனைத்திலும் பங்கெடுத்தேன்.

நான் பிறந்த மதுரைநகரில் ஒவ்வொரு பகுதியிலும் தேசீய வாலிபர் சங்கங்களை நிறுவி செயலாற்றி வந்துள்ளேன். 1938ல் மதுரையை விட்டு சென்னை சென்று லோகசக்தி, பாரதசக்தி என்ற இளைஞர் இயக்கப் பத்திரிகைகளுக்கு ஆசிரியனாகவும், மற்றும் பல இதழ்களுக்கு கட்டுரைகள் எழுதுபவனாகவும் இருந்துள்ளேன். கடல் கடந்த தமிழர்கள் மத்தியில் என் பணியைத் தொடர்ந்தேன்.

1942ல் பாதுகாப்புக் கைதியாகச் சிறைப்படுத்தி வேலூர் ஜெயிலில் அடைத்தார்கள். 1942 ஜூலையில் விடுதலை ஆனேன். பாசிசத்தை எதிர்த்துப் போராடியதற்காக மீண்டும் செப்டம்பரில் பாதுகாப்புக் கைதியாக மூன்றாம் முறை ஜெயிலுக்குச் சென்றேன். 1944 கடைசியில் விடுதலை ஆனேன்.

காங்கிரசில் முரண்பாடுகள் முற்றி வெடிப்பதைக் கண்டேன். தலைவர்கள் சுயநலத்துடன் இருப்பது கண்டு வெறுப்புற்றேன். தொழிலாளி வர்க்கம் மட்டும்தான் தேசவிடுதலை இயக்கத்தை விஞ்ஞான ரீதியில் இழுத்துச் சென்று வெற்றி பெற முடியும் என்று அனுபவரீதியாக உணர்ந்தேன். அந்த வர்க்கத்தின் அரசியல் கட்சியான கம்யூனிஸ்ட்

இயக்கம் ஒன்றுதான் தலைமை தாங்கும் தகுதி படைத்தது என்று கண்டேன்.

1944ல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தேன். மதுரை நகர கட்சியின் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். 1945இல் சென்னை சென்று கட்சிப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தேன்.

1948 ல் காந்தியை வகுப்புவாதிகள் கொலை செய்ததைப் பயன்படுத்தி என்னை நள்ளிரவில் கைது செய்து வேலூர் கொண்டு சென்றனர். 1949 ஜூலையில் விடுதலை ஆனேன். 1949-50ல் முற்போக்கு எழுத்தாளர்களை ஒன்று திரட்டினேன். சுரண்டல்களையும் லஞ்ச ஊழல்களையும் எழுத்தாளர்கள் அம்பலப்படுத்தினார்கள். அதற்காகக் கைது செய்யப்பட்டு தூத்துக்குடி போலீஸ் லாக்கப்பில் வைத்து சித்திரவதை செய்தார்கள். அடியின் காரணமாக எனது வலது கணுக்காலில் முறிவு ஏற்பட்டது. எனது வலது காது செவிடாகிவிட்டது. மூன்று மாதங்கள் நடக்க முடியாமல் கஷ்டப்பட்டேன். கைவிரல்களை மடக்கி ஒடித்தார்கள். நீசபாஷையில் வசைமாறி பொழிந்தார்கள்.

எனக்கு விரோதமாகச் சொன்ன சாட்சிகள் யாவும் போலீஸ் துன்புறுத்தலால் இட்டுக்கட்டியவை.

சுதந்திரத்திற்கு முன்பு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடினேன். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அவர்களின் மக்கள் விரோதப் போக்கை எதிர்த்துப் போராடினேன்.

ஆகவே என்னைப் பொதுமக்களிடமிருந்து பிரிப்பதற்கும் வரும் பொதுத் தேர்தலில் கலந்து கொள்ளாமல் தடுப்பதற்கும் உண்டு பண்ணிய நயவஞ்சகச் சூழ்ச்சியே இந்தச் சதி வழக்கு. எனவே கோர்ட்டார் அவர்கள் என்னை விடுதலை செய்ய வேண்டுமாய் கேட்கிறேன்' என்று துணிச்சலோடு தன் அறிக்கையை சமர்ப்பித்திருந்தார்.

24.3.1952 முதல் 23.7.1952 வரை செஷன்ஸ் வழக்கு தொடர்ந்து நடந்தது. காலை சிறையில் இருந்து புறப்பட்டு வருகிறவர்கள் மாலைதான் சிறைக்குத் திரும்புவார்கள்.

42

தோழர் பாலதண்டாயுதம் இன்னும் அகப்படவில்லை. எனவே தோழர் பொன்னு தலைமையிலான 67 பேர்களைக் கொண்ட இரண்டாம் சதிவழக்கு விசாரணை நான்கு மாதங்களாக நடந்தது. விசாரணைகள், குறுக்கு விசாரணைகள், சாட்சிகள், சாட்சியங்கள் என்று பொழுது போவதே தெரியாமல் சிறையிருப்பின் நேரங்கள் சிறிது குறைந்தன.

365 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். சொல்லப்போனால் எட்டுச் சாட்சிகளே உண்மையான சாட்சிகள் எனலாம். போலீஸ் தரப்பு சாட்சியப் பொருள்கள் 450.

சிங்கை, தூத்துக்குடி, தூத்துக்குடி ரூரல், மணியாச்சி, களக்காடு, திருநெல்வேலி பாலம், அம்பை ஆகிய ஏழு போலீஸ் நிலையங்களில் தோழர்களை செக்கில் அகப்பட்ட புண்ணாக்கு போல பிழிந்தார்கள். விரல்களை ஒடித்தார்கள், கணுக்கால்களை நொறுக்கினார்கள். தீக்கொள்ளியால் சுட்டார்கள். வாத்தியாரின் கால்களில் உருட்டுக் கட்டை வைத்து ஏறி உருட்டி விளையாடினார்கள். வலதுகால் முட்டுக்குக் கீழான எலும்புகள் நொறுங்கின.

பேனாக்கத்தி, ஸ்டாலின் லெனின்படங்கள், சூட்கேஸ், ரோலர் அச்சு, சாக்கு மூடை, சம்மட்டி, கடப்பாரை, தடிக்கம்பு, பவுண்டன் பேனா உலர்ந்த எலும்புகள் இப்படி அற்பமான சாட்சியப் பொருள்கள் மட்டும் 73.

குண்டுவீச்சு, ரயில் கவிழ்ப்பு, வழிப்பறி, கொலைமுயற்சி, அரசியல் வகுப்பு எடுத்தல், ஸ்ட்ரைக், தந்திக் கம்பிகளை அறுத்தல், மீளவிட்டான் ரயில் கவிழ்ப்பு, ரயில்வே ஸ்டோர் உடைப்பு, ஆயுதங்கள் வைத்திருத்தல், சர்க்காரை தூக்கி எறியச் சதி.... இப்படிப் பல்வேறு குற்றச்சாட்டுகள். கொலை முயற்சி 302 செக்ஷன் உட்பட எல்லா செக்ஷன்களும் போடப்பட்டன.

நெல்லை மாவட்ட மாஜிஸ்ட்ரேட் கோர்ட், ஸ்பெஷல் செஷன்ஸ் கோர்ட் ஆகிய இருநீதிமன்றங்களில் சதிவழக்கு நாடகங்கள் நன்கு நடைபெற்றன.

பயிரைவிடக் களைகள் வேகமாக வளரும். அதுபோல உண்மையை விட பொய்மைகள் கொடிகட்டிப் பறந்தன.

பெருமழை பெய்து வானம் வெளிவாங்கியது போலிருந்தது.

* * * *

அன்று கோர்ட் விசாரணை முடிந்து சிறைக்குச் செல்லும்போது பாரதிக்கும், வாத்தியாருக்கும் சேர்த்து விலங்கிடப்பட்டிருந்தது.

பாரதி திடீரென்று வாத்தியாரிடம் கேட்டார்.

'கடவுளை நீ கண்டிருக்கியா?'

'ஆமா பாரதி'

'எங்கே கண்டாய், எப்படி இருந்தார்?'

'வானம் எவ்வளவு உயரம்? அதை நான் காண்கிறேன்
அதைப்படைத்த கடவுளை தினமும் காண்கிறேன்'

பாரதி மூக்கு சிவக்கச் சிரித்தார்.

மீண்டும் பாரதி வாத்தியாரிடம் வழக்கிற்கு வந்தார்.

'நானும் பைபிள் படிச்சிருக்கேன். நானே நல்ல மேய்ப்பன் என்கிறார். அப்படின்னா, நாமெல்லாம் ஆட்டு மந்தையா?'

'ஆட்டுக்குட்டிகளை ஓநாய்கள் பிடித்துத் தின்பதுபோல் பணம்

கொழுத்த முதலாளிகளும், திமிர் பிடித்த அரசியல்வாதிகளும் ஏழை எளிய மக்களை சுரண்டி விழுங்குகிறார்கள். ஏழைகளுக்காகப் பரிந்து பேசிப்பாடுபட்ட இறை மகனார் அம்மக்களை ஆட்டுக்குட்டிகளுக்கு உவமித்துச் சொன்னார்' என்று வாத்தியார் சொல்லவும் குனிந்து குனிந்து சிரித்த பாரதி,

'நீ ஒரு நல்ல கிறிஸ்தவன்'

'நீ ஒரு நல்ல கம்யூனிஸ்ட்' என்றார்.

சிறைக்குள் சென்றபிறகு சதிவழக்கின் முதல் எதிரியான பொன்னுவை நினைக்கலானார்.

தூத்துக்குடி பெற்றெடுத்த சுத்தத் தங்கம் பொன்னு. தொழிலாளர் நலனுக்காக ஹார்வி மில் வேலையை விட்டுவிட்டு பொதுஉடைமை இயக்கத்தில் சேர்ந்து தியாக சிந்தையோடு உழைத்தார்.

1948 முதல் 50 வரை கொடிய அடக்குமுறைக்கு ஆளானார். புலன் விசாரணையின் பேரால் உடலை நொறுக்கி சின்னாபின்னமாக்கி விட்டார்கள். பலமுறை மூலத்தை அறுவை சிகிச்சை செய்ததால் டாக்டரின் கவனக்குறைவினால் சுருங்கி நிமிரக்கூடிய தோல் வெட்டுப்பட்டுவிட்டது. மலங்கழிக்கும் போது தாங்கமுடியாத வேதனையால் துடித்தார்.

ஒருநாள் மதுரைசிறையில் அவரது அறையில் தங்கினேன். 'என்னை போலீசார் அடித்துத் துன்புறுத்தும்போது செத்திருக்கக் கூடாதா?' என்றுதான் புன்முறுவலோடு சொன்னார்.

'என் தாயே, என்னை ஏன் இப்படி வலுவுள்ள உடலாகப் படைத்தாய்?' என்று சொல்லி நொந்து கொண்டார்.

அப்போது பாரதியின் குயில்பாட்டுதான் என் நினைவிற்கு வந்தது.

'நாளொன்று போவதற்கு நான்பட்டபாடு அனைத்தும்

தாளம்படுமோ, தறிபடுமோ,' என்ற துன்ப ஏக்கத்தில் துயில் கொள்ள நினைக்கும்போது ஒரு நாடோடிப்பாடல் கேட்டு கவனத்தைத் திருப்பினார்.

ஆனி பிறந்தது சாரல் விழுந்தது
கோணிய சால்களில் ஓடி நிறைந்தது
கட்டி கரைந்தது கரிசல் மணத்தது
சுற்றிய துன்பங்கள் சுழன்று பறந்தது.

பாடியவன் புத்தூர் முத்து, கொத்தமல்லித் தழைகளை திருட்டுதனமாகப் பிடுங்கி தூத்துக்குடியில் கொண்டு விற்ற வழக்கில் வந்திருந்தான். கரிசல் காட்டு ஆசாமி.

'சுற்றிய துன்பங்கள் சுழன்று பறந்தது' என்று எவ்வளவு நம்பிக்கையோடு பாடுகிறான்.

'அந்த நம்பிக்கை எனக்குண்டா?' என்று மனதிற்குள் கேட்ட வாத்தியார் பெருமூச்சுவிட்டார்.

43

வாயெல்லாம் இரத்தம் வடிந்தாலும் ஒட்டகமானது முட்செடிகளைத் தின்பதை மட்டும் விட்டுவிடாது.

அப்படியே சந்தேகக் கேஸில் வந்தவன் விடுதலையான பிறகு பிக்பாக்கெட் கேஸில் வருகிறான். பின்பு கொள்ளைக் கேஸில், கடைசியாக கொலைக் கேஸில் வருகிறான். இப்படியே சிறைப்பறவையாகிவிட்ட சிலருக்கு போலீஸ் அடியும் உதையும் பழக்கமாகிவிடுகிறது. இப்படிப்பட்ட ஜென்மங்களை சிறையில் திருத்தவே முடியாது. இடுப்பொடிந்த கோழிக்கு உரக்குழியே தஞ்சம்போல் சமூகச் சிந்தனையே சிதைந்து போன சில முண்டங்கள் வெளியே போனால் திருட்டு, உருட்டுப்பிழைப்பு, சிறைக்குள் வந்தால் தீனி, தூக்கம், அவ்வளவுதான்.

வாத்தியாரின் உள்ளம் பண்ணையூர் மக்களுக்காக அழுதது. அன்று பேட்டி காணவந்த பண்ணையூர் பெருமாள் பேசிச் சென்றதை மீண்டும் மீண்டும் அசை போட்டார்.

'வாத்தியாரைய்யா, நம் பண்ணையூர் மக்கள் உங்களை ஒரு கம்யூனிஸ்ட் என்றோ, புரட்சிவாதி என்றோ எண்ணவே இல்லை. நீங்கள் ஒரு பெரிய கம்யூனிஸ்ட் சதி வழக்கில் மாட்டி இருக்கிறீர்கள் என்ற செய்தியும் தெரியாது' என்றான் பெருமாள்.

'வேறு என்ன நினைக்கிறார்கள்?' என்று கேட்டார் வாத்தியார்.

'உங்களை ஒரு பக்தியுள்ள இளம் சாமியாராக நினைக்கிறார்கள். ஏன்னா, நீங்க நம் ஊரில் இருந்த ஐந்து ஆண்டுகளும் சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்கள், பெண்கள் அனைவரின் கண்களையும் திறந்து விட்டீர்கள். சாதி, மத பேதமின்றி மக்களை நல்வழிக்குக் கொண்டு வந்தீர்கள்'.

'இப்படிப்பட்ட வேளையில் கம்யூனிஸ்ட் என்று ஒரு கட்சி இருப்பதும், அது சட்டவிரோதமாக்கப்பட்டிருப்பதும், அதன் தலைவர்கள் இங்கு வந்து போவதும் நம் ஊரில் யாருக்கும் தெரியாது. அதன் ஆபத்து உங்களுக்கும் தெரியாது. நல்லபடிப்பும், மாணவர்களின் துடிப்பும், சங்கமும் அது செய்த சேவைகளும் கண்டு பொறாத முதலாளி உங்களைத் தீர்த்துக்கட்ட பலமுறை முயன்றார். உங்களைக் கொல்ல கைக்கூலி வாங்கியவர்களே உங்கள் பக்கம் சேர்ந்து கொண்டார்கள்.

'கழுவிய மீனில் நழுவியபயல், 'பொல்லாத ஏமாற்றுக்காரன்' என்று என்னைப்பற்றி நம்மூரில் பேசுவார்கள். நானும் முதலாளியின் கையாளாக இருந்து அநேகரை கொடுமைப்படுத்தினேன். உங்கள் உறவிற்குப் பிறகு

மானுட நேயப் பிறவியானேன். குடி கூத்துகளை ஒழித்தேன். 'சிந்திக் கிடக்கும் ஒரு தானியமணி கூட உணவுப் பொருள்தானே, அப்படித்தான் தாழ்ந்து கிடக்கும் ஒவ்வொரு கீழ்மகனும் மாமனிதன்தான்' என்று நீங்கள் சொல்லித் தந்தது என் மனதில் பசுமரத்தாணிபோலப் பதிந்துவிட்டது.

'பால் பொங்கிவரும்போது பானை உடைந்தது போல ஒரு துரோகியால் (அப்ரூவர்) நீங்கள் கைது செய்யப்பட்டீர்கள். அப்பொழுது மக்கள் 'ஐயோ.... நம்ம வாத்தியார் நல்ல மனுஷன் - பண்ணையார்தான் இந்த வேலை பண்ணிவிட்டார், பண்ணையார் நாசமாப் போக, பள்ளிக்கூடத்தைப் பாழாக்கிவிட்டாரே, ஊரின் ஒற்றுமையைக் குலைத்துவிட்டாரே.... நீர் விளங்குவீரா?' என்று பண்ணையாரை சபித்தார்கள். உங்களை கைது செய்தபோது நீங்கள் பட்ட சித்திரவதையைக் கேள்விப்பட்டு அழுதார்கள்.

'நேர் எட்டாவது நாள், பண்ணையாருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. 15 நாட்களுக்குள் தூத்துக்குடி ரோட்டு வழியே திரிந்தார். மறுமாதம் விலங்கு போட்டார்கள்.

'நம்ம வாத்தியார் ஒரு பக்திமான், ஒரு சாமியார் மாதிரி, அவருக்குச் செய்த துரோகம் பண்ணையார் பைத்தியம் பிடித்துத் திரிகிறார்' என்றுதான் பண்ணையூர் மக்கள் இன்றும் பேசுகிறார்கள்'.

பெருமாள் வாங்கிவந்த கருப்புக்கட்டி மிட்டாயை தோழர்கள் பகிர்ந்து உண்டார்கள்.

பெருமாளின் பேட்டிச் செய்தியை வாத்தியாரால் மறக்கமுடியவில்லை.

"ஜாமீன் கேட்டு மனுச் செய்யலாம்" என்ற ஆணை கோர்ட்டிலிருந்து கிடைத்தது. வக்கீல் தோழர்கள் மூலம் செய்தி வந்தது. வழக்குகளை நுணுகி ஆய்ந்த நல்ல சிவனும், வக்கீல் குமாஸ்தா பிச்சையாவும் 31 பேருக்கு மனுச் செய்ய ஆயத்தங்கள் செய்தார்கள். அவர்களில் வாத்தியார் பெயரும் இடம்பெற்றிருந்தது.

வாத்தியாருக்கு ஓர் அற்ப மகிழ்ச்சி.

கடைசியாகச் சொன்ன நான்கு சாட்சிகளில் சிறிது நம்பிக்கை இருந்தாலும் 'டைரி' கண்முன் வந்து பூதாகாரமாகச் சிரித்தது.

44

அன்று வாத்தியாருக்கு ஒரே மகிழ்ச்சி. கடைசியாகச் சொன்ன நான்கு சாட்சிகள் மூலம் ஜாமீன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நனைந்தார்.

தம் சிறை உலக ஜனமாகிய கைதிகள் சிலரை கண்டுகளிக்க ஆசை கொண்டார்.

ஆறாம் எண் அறையினுள் ஒரு கைதி ஒரு மூலையில் முடங்கி அழுது கொண்டிருந்தான். வாத்தியார் அவனை அணுகி 'ஏம்பா அழுகிறாய்' என்று கேட்டார். 'எனக்கு இன்று முதலிரவு' என்றான். வாத்தியார் மேலும் வியப்போடு அவன் அருகில் அமர்ந்து வினவினார்.

'நான் ஒருபால் வியாபாரி, என்பேர் மாணிக்கம். வாடிக்கையாகப் பால் வாங்கும் ஒரு வீட்டிலுள்ள பிள்ளையை காதலித்தேன். அதிகாலை ஐந்து மணிக்கும் அவள்தான் பால்வாங்க ஒடிவருவாள். கர்ப்பிணி ஆனாள். இருவீடுகளிலும் கலகம் வலுத்தது. பஞ்சாயத்து கூடியது. பிள்ளையார் கோயிலில் திடீர் தாலிகட்டு நடந்தது. காலை தாலிகட்டு, மாலையில் குழந்தை பிறந்துவிட்டது.

'தாயையும் குழந்தையையும் அவங்க அம்மா வீட்டில் வைத்து முறைப்படி மூன்று மாதங்கள் கவனித்து அனுப்பும்படி நான் சொன்னேன். மைத்துனன் மறுத்தான். தகராறு வளர்ந்தது. ஆத்திரத்தில் மைத்துனன் கையில் வெட்டிவிட்டேன். ஜெயிலில் மாட்டிக் கொண்டேன்' அலறி அழுதான்.

வாத்தியாருக்கு அவனுக்கு என்ன ஆறுதல்கூறுவதென்று தெரியவில்லை. 'அழாதே, அமைதலாயிரு, உன் மைத்துனனே உன்னை வந்து ஜாமீன் எடுப்பான். கடினமாக உழைத்து - கோபத்தைத் தவிர்த்து - தனிக்குடித்தனம்வைத்து தாயும், சேயும், நீயும் நலமாக வாழ வேண்டும்' என்று வாழ்த்தி வழிவகைகளை சொல்லிக் கொடுத்தார்.

அடுத்து ஒரு கைதியைச் சந்தித்தார்.

அடர்த்தியான மீசையோடு பரட்டைத்தலையுடனிருந்த அவன் மிக அலட்சியமாகச் சொன்னான்.

'சிறை என் பரம்பரைச் சொத்து' என்றான். வாத்தியார் ஆச்சரியத்தோடு 'எப்படி' என்றார். அவன் பாட்டாகப் பாடினான்.

'என் பாட்டன் திருடிப்பிழைத்து வாழ்ந்து மடிந்தது இச்சிறையே
என் அப்பன் பெரும் கொள்ளையனாக உருவானதும் இச்சிறையே
என் மகனும் நானும் 'பெட்டி கேஸில்' மாட்டி
என்றென்றும் வாழ்ந்து மடிவதும் இச்சிறையே...'

மகிழ்ந்து பாடினான்.

'மாடு மேய்ந்த காட்டையே நோக்கும், மழை பெய்த இடத்திலேயே பெய்யும்' என்பதுபோல இவனுக்கும் இவன் மகனுக்கும் சிறையும், சோழக்களியுமே நிறைவான வாழ்க்கையாகிவிட்டது.

சமுதாயத்தின் அவலத்தை எண்ணி வாத்தியார் தலையில் அடித்துக் கொண்டார்.

பேதலித்துப் போன பித்து மனதோடு வாத்தியார் பிறிதொரு ஜெயில் புள்ளியை நெருங்கினார். அவர் சற்று நாகரீகமாகத் தோன்றினார். பரிவுடன் அவரிடம் பேசினார். அவர் சொன்னார்.

'எனக்கு திருநெல்வேலி டவுன். எழுத்தாளர் தொ.மு.சி.ரகுநாதனை நல்லாத் தெரியும். அவர் அடிக்கடி சொல்வார் :

'எங்க அப்பன் முத்து வியாபாரி, நான் மொச்சை கொட்டை வியாபாரி' என்று குடும்பப் பெருமை பேசுபவர்களைப் பற்றிக் கிண்டலடிப்பார். அதுமாதிரி, என் தகப்பனார் கள்ளமார்க்கெட் வியாபாரி, நான் கலப்பட வியாபாரி, காலமாற்றத்தை தவிர்க்க முடியாது' என்றார்.

'இதிலென்ன காலமாற்றம்?' வாத்தியார் ஆத்திரத்தோடு கேட்டார். கலப்பட வியாபாரி ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு பேசினார்.

'ஒலிம்பிக் ஆரம்பித்த காலத்தில் பெண்கள் விளையாட்டைப் போய் பார்க்க அனுமதி கிடையாது. சட்ட விரோதம் என்ற தடைவிதிக்கப் பட்டிருந்தது.

'தன் மகன் குத்துச்சண்டை போடுவதை கண்டுகளிக்க ஆசை கொண்ட ஒரு தாய் ஆண் உடையில் ஆடுகளம் சென்றுவிட்டாள். மகன் வெற்றி பெற்றதும் மகிழ்ச்சிப் பெருக்கால் கத்தினாள். அவளது பெண்குரல் அவளைக் காட்டிக் கொடுத்துவிட்டது. உடனே அவளை வெளியேற்றி வழக்கும் தொடர்ந்தார்கள். 1926 ஆம் ஆண்டில்தான் பெண்கள் முதன்முதலாக ஓட்டப்பந்தயத்தில் பங்கு பெற்றார்கள்.

'இந்தக் கதை எதற்கு?' வாத்தியார் கேட்டார்.

'சிறைக்குப் போவது கேவலம் என்றிருந்த காலம்மாறி - இப்பொழுது சிறைக்குச் செல்வது பெருமை என்று எண்ணும் காலம் வந்திருக்கிறது. நான் கலப்படத்தில் நிறைய சம்பாதித்து விட்டேன். இரவு தினம் எனக்கு புரோட்டா செட் இரகசியமாக வருகிறது. கொஞ்ச நாள் சிறையிலிருந்து விட்டு நல்ல வக்கீல்பிடித்து விடுதலை ஆகி விடுவேன்' என்றார்.

'இறையாண்மை எனப்படும் ஒரு சக்தி உன்னைவிடாது' என்றார் வாத்தியார்.

'மக்கள் சக்தி, ஜனசக்தி, இறை சக்தியில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கலாம். எனக்கு நம்பிக்கை இல்லை' என்றார்.

வாத்தியாருக்குப் பைத்தியம் பிடித்துவிடுவது போலிருந்தது.

வாழை இலைகளை வெட்டி விற்று சின்ன களவு கேசில் வந்து விடுதலையானபிறகு வாழைக்குலையை வெட்டிவிற்று பெரிய திருட்டு வழக்கில் வந்திருக்கும் இடையர்காடு இன்னாசியைப் பார்க்க மனமின்றி முகம்சுழித்த வாத்தியார் 'இவன் நாளை ஆளை கொலை செய்து விட்டு வருவான், சிறிய குற்றம் பெரிய குற்றங்களுக்கு வழிநடத்திவிடுகிறது. இது எத்தனை பெரிய அநியாயம்?' என்று தலை மயிரைப் பிய்த்துக் கொண்ட வாத்தியார் தம் அறையை நோக்கி விரைந்தார்.

45

கோர்ட் கூடியது, தோழர்களுக்குள் சிலுசிலுப்பும், சிணுசிணுப்பும் தோன்றின. லாட்டரி சீட்டில் லட்சத்தை எதிர்பார்க்கும் சில கோமாளிகளைப் போல 31 பேரில் சிலருக்கு கோணல் புத்திகள் தோணின.

தோழர்கள் காலரியில் வரிசையாக அமர்ந்திருந்தார்கள். சிறப்புப் போலீஸ் படையினர், கோர்ட்டைச் சுற்றி ஆயுதபாணியாக நின்றனர். தோழர்களின் குடும்பத்தினர், நண்பர்கள், கட்சித் தோழர்கள் ஆங்காங்கு மர நிழல்களில் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு கண்ணீர் மல்க காத்திருந்தனர்.

சரியாகப் பத்து மணிக்கு அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் ஆசனத்தில் அமர்ந்தார்.

முப்பத்தொன்றில் இருபத்தோருபேருக்கு ஒரு மாத ஜாமீன் கிடைத்தது. கடுமையான நிபந்தனைகளோடு கூடிய ஜாமீன்.

வாத்தியாருக்கும் ஜாமீன் கிடைத்தது.

வக்கீல் தோழர்களுக்கு மட்டுமல்ல அனைத்துத் தோழர்களுக்கும் ஆச்சரியமாகயிருந்தது. வாத்தியாருக்கோ அதிசயமாக இருந்தது.

'வாத்தியார் ஜாமீனை எதிர்பார்க்க வேண்டாம்' என்று வக்கீல் தோழர்கள் தெளிவாகச் சொல்லியிருந்தார்கள். ஜாமீன் கிடைக்காத பத்துப் பேருக்கு பெரும் அதிர்ச்சியே. சிப்பியில் விளைந்த முத்துக்கள் போல ஐம்பத்தோரு பேரும், விளைந்த விலையேறப்பெற்ற முத்துக்களாய் விளங்கினார்கள்.

'ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்'* என்ற விவிலிய வாக்கு வாத்தியாரின் உள்ளத்தை நிறைத்தது.

வாத்தியாரின் தந்தை, தமயன் கண்களில் ஒளியும், கண்ணீர் துளியும் நிறைந்திருந்தன.

பண்ணையூர் தோழர்கள் வாத்தியாரை தங்கள் தோள்களில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள். ஆடிப்பாடினார்கள். வாத்தியாரின் தந்தையிடம் 'எங்கள் ஊருக்குக் கூட்டிப்போய் இரவில் உங்கள் வீட்டில் கொண்டு விட்டுவிடுகிறோம்' என்றார்கள்.

ஆண்டிரெட்டி சொன்னான் :

'முதலில் தூத்துக்குடி போய் பண்ணையாரை பார்த்துவிட்டு ஊருக்குப் போகலாம்'.

'வாத்தியார் ஏதும் புரியாமல் தத்தளித்தார்'

* ரோமர் 8:26

'பண்ணையாரை பார்க்க வேண்டாம், இந்தத் துன்பங்களுக்கு காரணமே அவர்தானே, அவர் கொடிய தேசத்துரோகி' என்றான் பெருமாள்.

வாத்தியார் கணப்பொழுது மனதிற்குள் சிந்தித்தார் :

'கம்யூனிஸ்ட்கள் ஆன்மீகத்திற்கு எதிரானவர்கள் அல்ல, சித்தர்கள் மீது பல நாத்திகர்கள் நாட்டம் கொண்டார்கள். "நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே, சுற்றிவந்து முணுமுணென்று சொல்லும் மந்திரமேதடா? நட்டகல்லும் பேசுமோ..." என்ற பாடல் ஆன்மீகமற்ற அரசியல் வாதிகளையும் கொள்ளை கொண்டது.

'நான் கிறிஸ்தவன், அதாவது புரட்சியாளன், எப்படி?'

'உன் சத்துருவை நேசி' என்றார் இயேசு, அது புரட்சியில்லையா? அதோடு விடவில்லை. 'உன்னைப் பகைக்கிறவனுக்கு நன்மை செய்' என்றார். அரசியல் மூலம்தான் புரட்சிவரும் என்று எண்ணவேண்டாம், ஆன்மீகமும் இணைந்தால் மாபெரும் புரட்சி உண்டாகும், அது என்றைக்கும் நிலைக்கும்'.

'என்ன சார், இன்னும் சிறையில் இருக்கிற நினைப்பா?' என்று கேட்டு வாத்தியாரின் சிந்தனையை கலைத்தார் கோயில் மணி. அவர் அரிஜன மக்களின் பிரதிநிதியாக வந்திருந்தார்.

'சரி, பண்ணையாரை முதலில் பார்ப்போம்' என்றார் வாத்தியார்.

ஒரு சிறு இருட்டறை, அதற்கு முன்னால் சிறு இரும்பு அளி.

'அதோ பண்ணையார்' என்றார் பச்சமால்.

'ஐயகோ... ஐயையோ.... எலும்பும் தோலுமான ஓர் உருவம், முகத்தில் அலங்கோலமாக தாடி. பக்கத்தில் மலம் கொட்டிக் கிடந்தது. ஒரு தட்டில் சோறு இருந்தது. நாற்றம் தாங்க முடியவில்லை.... அடைபட்டுக் கிடந்தார்....

'ஆண்டவா, நான் உம்மிடம் பண்ணையார் பற்றி ஒருநாளும் கடிந்ததில்லையே...' என்று சத்தமிட்டார், அழுதார்.

வாத்தியாரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

பச்சமால் ரெட்டியார் அவரை அரவணைத்து இழுத்தார்.

'பண்ணை முதலாளியே, உம் மீது எனக்கு தனிப்பட்ட பகை கிடையாது. ஆனால் என்னைக் கொல்ல வகை தேடினீர். அதனை எப்போதோ மன்னித்துவிட்டேன். இது ஒரு பண்ணையாரின் நிலையல்ல, உலக முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ அழிவின் சின்னம்' என்று அழுகையோடு கதறினார்.

'என்னைக் கைது செய்து சித்ரவதை செய்தபோது காவல்துறைக்கு விருந்துவைத்து செந்தூர்க்கப் பொட்டோடு சிரித்த முகத்தில் நின்றாரே அந்த முதலாளியின் அச்சி அடையாளமே இல்லை.... ஒரு எலும்புக்கூடுதான் நின்றது'.

'வாத்தியார் ஐயா, அவருக்கு இதுவும் காணாது, இன்னமும் வேண்டும், விவசாயக் கூலிகளிடமும் இளம் பெண்களிடமும் அவர் செய்த கொடுமை கொஞ்சமா... எத்தனை குடும்பங்கள் அழிந்து நாசமாயின... வாங்க போகலாம்' என்று ஆவேசத்தோடு கத்தினார் பெரிய செல்வம்.

'வாத்தியாரா... என்று ஒரு குரல் அவர் வாயிலிருந்து வந்தது'

'நிலப்பிரபுத்துவமும், முதலாளித்துவமும் அரசியல் ஆணவமும் இன்னும் நிரந்தரமாகச் சாகவில்லை' என்றார் வாத்தியார்.

பண்ணையூரின் நிலைமை மாறியிருந்தது. விவசாயமே இல்லை. அநேகர் தூத்துக்குடி, இராமநாதபுரம், கீழக்கரை என்று பிழைக்கச் சென்று விட்டார்கள்.

காரவீட்டு கந்தையாவின் உயிரை, போலீஸ் சித்ரவதை கொஞ்சம் கொஞ்சமாக அரித்துக் கொண்டிருந்தது. வாத்தியாரை கண்ட ஆனந்தத்தில் கட்டியணைத்தார். மகிழ்ச்சி தாங்க முடியாத அதிர்ச்சியில் உயிர் பிரிந்தது.

'கந்தையா, இந்த ஊர் முன்னேற்றத்திற்காக உறுதுணையாக இருந்த உத்தமர், மானஸ்தன், சொன்ன சொல்லைக் காப்பாற்றிய வீரத்தியாகி' என்று சொல்லி அஞ்சலி செலுத்தினார் வாத்தியார்.

ஊரே ஆச்சரியத்தில் அதிர்ந்தது.

பண்ணைவீடு பட்டமரம்போல் மொட்டையாக வெட்டென வெளிறி நின்றது.

சிறைத் துன்பத்திலும் கொடிய துன்பம் வாத்தியாரை வருத்தியது. முத்தம்மாவை நினைத்து 'இவ்வூர் மக்களுக்காகப் போராடி இரத்தம் சிந்திய வீராங்கனையான இரத்தச் சாட்சி' என்று சொல்லி அஞ்சலி செலுத்தினார்.

இராசாவூர் செல்லும்போது உறவினர்கள், நண்பர்கள் காத்திருந்தார்கள். கண்ணீர் சிந்தியும், கட்டித் தழுவியும், விம்மியும் விக்கியும் இருந்தார்கள்.

'ஜாமீன் கிடைத்தாலும் டைரியின் எழுத்து வாத்தியாருக்கு ஆபத்து; ஜாமீன் கொடுத்து தண்டனை கொடுப்பார்கள்' என்று ஒரு வக்கீல் சொன்னதாக மாணிக்கம் அண்ணன் வந்து சொன்னார். வீட்டில் அச்செய்தி யாருக்கும் தெரியாதிருந்தது.

ரெபேக்காள் அக்காள் தன் இரத்தக்கண்ணீரை காணிக்கையாக்கி கடவுளுக்குத் துதி செலுத்தினாள். போலீசில் அடிபட்ட தம்பியின் பாதங்களை வருடி முத்தினாள். உச்சி மோந்து கண்ணீர் சொரிந்தாள்.

வயோதிபத் தந்தையும், அண்ணன் கோயிலும், தங்கை தங்கமும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இறைவனுக்கு நேர்த்தி கடன்களை செலுத்தினார்கள்.

வாத்தியாரின் ஒரு மத்தியதரக் குடும்பம் சிதைந்து நொறுங்கிச் சின்னாபின்னமாகி இருந்தது.

46

வாத்தியார் கிராமங்களைச் சுற்றிப் பார்த்துப் பரிதபித்தார். சுதந்திரம் கிடைத்த ஐந்து ஆண்டுகளுக்குள் பசி, பட்டினி, பஞ்சம், பற்றாக்குறை, பலாத்காரம், பரிதாப நிலைகள் தலைவிரித்தாடின.

'காலுக்குச் செருப்புமில்லை
கால் வயிற்றுக் கூழுமில்லை
பாழுக்குழைத்தோமடா - என் தோழா
பசையற்றுப் போனோமடா' 1936ல் ஜீவாபாடியது இன்றும் பொருந்தியது.

சுரண்டலும், கொள்ளையும் நிலப்பிரபுக்கள், முதலாளிகள் கையைவிட்டு மாறி அரசியல் ஆதிக்கவாதிகளிடம் குடிபுகுந்தன. ஆட்சி பீடத்தில் அமர்ந்த மனிதாபிமானமற்ற ஒரு அரசியல் தலைவர் ஒரு நிலப்பிரபுவை விடக் கொழுத்த சுகம் அனுபவிக்கக் கற்றுக் கொண்டார்.

வாத்தியார் நெல்லையில் தங்கி இருக்க வேண்டும் என்பது நிபந்தனை.

நெல்லை சந்திப்பு பி.பி.சிவம் அவர்களின் இளங்கோ ஸ்டோர்தான் தோழர்கள் சந்திக்குமிடம். அது ஒரு பத்திரிகைக் கடை. ஜனசக்தி, தாமரை, சாந்தி, சரஸ்வதி, சமரன் போன்ற முற்போக்கு இதழ்கள் இங்கு மட்டும்தான் கிடைக்கும். எனவே முற்போக்காளர்களின் சங்கமம் இளங்கோ ஸ்டோர்.

சிவம் சிறந்த முற்போக்காளர். தோழர்களுக்கு மிகவும் உதவியாக இருப்பார். மாலை ஐந்துமணிக்கு மேல் ரகுநாதன், செல்வராஜ், தி.க.சி... இன்னும் பல தோழர்களையும் சந்திக்கலாம். இங்குதான் இளைஞர் ஜி.நாகராஜனை வாத்தியார் சந்தித்தார்.

வாத்தியார் நெல்லையில் தங்கி இருந்து வாய்தாவிற்குப் போய் கொண்டிருந்தார்.

நாகராஜனும், வாத்தியாரும் மாலை ஆறுமணிக்கு தாமிரவர்ணி பாலத்துக்கு அடியில் ஆற்றுமணலில் அமர்ந்து பேசினால் இரவு பதினோரு மணிக்குமேல் ஆகிவிடும்.

அதன்பின்பு விபச்சாரத் தொழில்கள் அங்கு சகஜமாக நடக்கும். மாமூல் வாங்கும் போலீஸ்காரர்கள் லத்திக்கம்பை சுழட்டியாவாறு உலா வந்து போவார்கள்.

இருவரின் இலக்கிய சர்ச்சைகளில் நேரம் போவதே தெரியாது. 'பலாத்காரம் கூடாது, அது கட்சியை வளர்க்காது' என்று வாத்தியார் சொன்னபோது, நாகராஜன் 'மக்கள் புரட்சிகரமான தலைகீழ் மாற்றத்தை விரும்புகிறார்கள். சீர்திருத்தத்தையோ, கீதா உபதேசத்தையோ அல்ல' என்று வாதிட்டார். இக்காலத்தில்தான் ரகுநாதன் 'சாந்தி' என்ற இதழை

ஆரம்பித்திருந்தார். டி.செல்வராஜ், நெல்லை என். வேலாயுதம் போன்றோர் நட்பு இங்குதான் வாத்தியாருக்குக் கிடைத்தது.

அப்போது நாகராஜன் 23 வயது இளைஞர். பழனியில் வக்கீல் தொழில் செய்த கணேச ஐயரின் மகன். ஏழாவது பிள்ளை. தாயின் ஒன்பதாவது பிரசவத்தில் நான்கு வயதில் நாகராஜன் தாயை இழந்தார். மதுரையில் படித்து பட்டம் பெற்றவர். பாளை என். வானுமாமலை தனிப் பயிற்சிக் கல்லூரியில் திறமைமிக்கப் பேராசிரியராக விளங்கினார். தீவிர கம்யூனிஸ்ட்டாகச் செயல்பட்டார்.

வாத்தியார் நெல்லை டவுனில் ஈராண்டுகள் பயின்றவராதலால் அவருக்கு நெல்லையின் விபச்சாரச் சீரழிவுகள் பற்றித் தெரியும். தெப்பக் குளத்திற்குத் தென்பக்கம் விலைமாதர்கள் பலர் சட்டபூர்வமாக வசித்தார்கள். அங்கு குறத்தி முடுக்கு மிகப்பிரபலம். நாகராஜன் ஒரு பெண்ணிடம் ஒரு நாள் உறவு கொண்டார்.

அவரது முற்போக்குச் சிந்தனை அவரை சுட்டது. மனிதாபிமான முறையில் சிந்தித்தார். தங்கம் என்ற விலைமாதை தொட்டுவிட்டபடியால் அவளையே தாலிகட்டுவேன் என்று பிடிவாதம் பிடித்தார்.

நிலவொளியில் ஆற்று மணல் தங்கமணலாக மின்னியது. முழு நிலவு ஆற்றுத் தண்ணீரில் நின்று ஆடியது. இருவரும் ஆற்று மணலில் அமர்ந்தனர். உரையாடினர்.

வாத்தியார் : நாகு, நீங்கள் செய்தது பெரும்தவறு. தங்கத்தையே தாலிகட்டுவேன் என்பது அதைவிடப் பெருந்தவறு.

நாகராஜன் : வாத்தியார் ஸார், உங்கள் கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

வாத்தியார் : உங்களை உயர்ந்த இலக்கிய ஆசிரியராக எத்தனை மாணவர்கள் எண்ணி இருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் மாதிரி என்ன?

நாகராஜன் : அவளிடம் அழகு இருக்கிறது, இளமை இருக்கிறது. படிப்புதானே இல்லை.

வாத்தியார் : நீங்கள் பட்டதாரி இளைஞர். நாம் கல்விக் கூடங்களைக் கோயில்களாகக் கருதவேண்டும் என்று கொள்கை பேசுகிறோம். அவள் ஒரு வேசிப்பெண்.

நாகராஜன் : வேண்டாம் சார், பள்ளிகளைக் கோயில்களாக்கினால் அங்கும் உண்டியல்கள் வைத்துக் கறக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

வாத்தியார் சிரித்தார்.

மேலும் நாகராஜன் பேசினார்.

நாகராஜன் : படித்த பெண்களிடம் தங்கம் போன்ற ஒரு பண்பைக் காண முடியாது. இனிமையாகப் பாடுவாள். என்னோடு உறவு கொண்ட பிறகு மற்றவர்களை உள்ளே விடவில்லை. வசப்பிசகாக வழுக்கி விழுந்தவள். அவளுக்கு வாழ்வு அளிக்க வேண்டும்.

வாத்தியார் : அவளுக்கு வாழ்வு அளிக்க வேண்டியது அவசியம், திருமணம் என்பது வேறு காரியம். வெறும் ஹாரனை மட்டும் வைத்துக் கொண்டு காரோட்ட முடியாது. வாழ்க்கை மிக நுணுக்கமானது.

நாகராஜன் : வாழ்க்கை ஒருமுறைதான். அவளோடு வாழ்ந்து மடிவதுதான் நல்லது. அவளை வைத்து ஒரு நாவல் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

வாத்தியார் : அது ரொம்ப நல்ல காரியம், நாளையே முடித்துக் கொண்டு வாருங்கள், நாளை சந்திப்போம்.

(இரண்டு போலீஸ்காரர்களைக் கண்டு ஆங்காங்கு பதுங்கியிருந்த இரவு ராஜா ராணிகள் எழுந்து ஓடினார்கள்)

புனிதமான தாமிரவர்ணித் தாய் புனிதம் கெட்டுப் புலம்பினாள்.

47

ஆறின புண்ணின் அடியில் ரணம் இருப்பதுபோல வாத்தியாரின் உள்ளுக்குள் ஒரு வலி இருந்தது. அது அவரது 'டைரி' என்ற வலி. 'சதி' அதற்குள்தானே இருந்தது.

எழுத்தாளர் ரகுநாதனும் வாத்தியாரும் ஓட்டலில் சிற்றுண்டிக்காகச் சென்றார்கள். ரகுநாதன் சிகரெட் புகையைத் தட்டிக் கொண்டே சொன்னார்.

'சாட்சிகள் சாதகமாக உள்ளதால் மரணவாயிலிலிருந்து தப்பி இருக்கிறீர் ; ஆயினும் 'டைரி' உம்முடையதென்றும், எழுத்து உமது கையெழுத்து என்றும் நிரூபணம் ஆகிஇருக்கிறதே. எனவே 'கொடாமல்' விடமாட்டான். ஐந்து ஆண்டு தீண்டினால் உமக்கு நல்ல காலம்' என்றார்.

அப்பொழுது அங்கு வந்த பி.பி.சிவம் சொன்னார் : 'வாத்தியார் தோழரே, பயப்பட வேண்டாம், முதல் தேர்தல் வருகிறது. எல்லாம் தூள் தூளாகிவிடும்' என்றார்..

'தேர்தலுக்கு முன் தண்டனையைக் கொடுத்துவிடு என்பதுதானே அரசின் அறிவுறுத்தலாயிருக்கும், எனவே எத்தனைபேருக்கு ஜென்ம தண்டனை கிடைக்கிறதோ தெரியாது' என்றார் ரகுநாதன்.

வாத்தியார் காப்பியை குடியாமல் அப்படியே வைத்திருந்தார். 'முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். அரசியல் வழக்குகளை அரசியல்

அலைதான் அடித்து நொறுக்க வேண்டும்' என்றார் பி.பி.சிவம்.

அன்று மாலை நாகராஜனும் வாத்தியாரும் ஆற்று மணலுக்குச் சென்றார்கள்.

'தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் பாலம் அமைத்துத் தந்த சரித்திரச் சின்னம் நெல்லை தாமிரவர்ணிப்பாலம். அதன் அடியில் உள்ள ஆற்று மணலில் சிறுகதை மன்னர் புதுமைப்பித்தன், ஊரும் பேரும் தந்த ரா.பி.சேதுப்பிள்ளை, இராமாயணத்தை எளிய முறையில் சுவையாக எழுதிய டி.கே.சிதம்பரநாத முதலியார், எழுத்துச் சிற்பி ராஜவல்லிபுரம் வல்லிக்கண்ணன், திறனாய்வாளர் தி.க.சி., முத்துப்பட்டன் கதையை சொல்லும் ஆய்வாளர் நா.வானமாமலை ... இப்படி இன்னும் பல சிந்தனைச் சிற்பிகள் அமர்ந்திருந்து ஆலோசித்த பரிசுத்த பூமியாம் இந்த ஆற்று மணலில் உட்கார்ந்து உரையாடும் பெருமை நமக்கும் கிடைத்திருக்கிறதே' என்று சொல்லிப் பெருமிதம் கொண்டார் வாத்தியார். அங்கிருந்து பார்க்கும்போது கொக்கிர குளம் சிறைமதில் தெரிந்தது. அங்கு செத்துக் கொண்டிருக்கும் தோழர்களை எண்ணி கண்ணீர் சிந்தினார் வாத்தியார்.

பொன்னிற மணலில் இருவரும் அமர்ந்தனர். வெள்ளை ஜிப்பாவின் கைப் பையிலிருந்து கத்தையாக ஒரு நோட்டை எடுத்தார் நாகராஜன்

"குறத்தி முடுக்கு" நாவலின் கைப்பிரதி அது. " கொண்டு போய் இரவில் படியுங்கள்" என்று சொல்லித்தந்தார் நாகராஜன்.

திட்டுத்திட்டான பட்டு மணலில் உட்கார்ந்தவாறு தங்கள் உரையாடல்களைத் தொடங்கினார்கள்.

"பழம் நூல்களில் உங்களுக்குப் பரிச்சயம் உண்டா?" நாகராஜன் கேட்டார். "பட்டி தொட்டி எங்கும் நடந்து சென்று செல்லரித்துப்போன சுவடிகளைச் சேகரித்து நூல் வடிவாக்கித் தந்தாரே நம் உ.வே.சாமிநாதையர்.. அவர் போன்ற ஆளில்லையே.... என்று வருந்துகிறேன்' என்றார் வாத்தியார்.

'இனிமேல் திரட்டுவதற்கு என்ன இருக்கு? நீரும் நெருப்பும், எலியும் கரையானும்தான் தின்று அழித்திருக்குமே' என்றார் நாகராஜன்.

'இல்லை, இன்னும் திரட்டுவதற்கு நிறைய ஏடுகள் உள்ளன. கலியுகப் பெருங்காவியம் என்றொரு சுவடியை என் தந்தை படிக்கக் கேட்டிருக்கிறேன். அது இன்னும் நூல் உருப்பெறவில்லை. அந்தக் காலம் ஒரு சுவடிக்குப் பதினொரு பிரதிகள் எடுப்பார்களாம்' என்றார் வாத்தியார்.

'அந்தச் சுவடியின் சுருக்கம் என்ன ஸார்?' நாகு கேட்டார். 'அது பாஞ்சாலங்குறிச்சி போர் பற்றியது.

'பாஞ்சைப்பதி மீது மிகுந்த விசுவாசம் கொண்ட வீரண்ண மணியாரர் தொண்ணூற்றாறு வயதுத் தொண்டுக்கிழவர். அவர் மகன் நமச்சிவாயம் பாஞ்சை அரண்மனையின் ஆடுமாடுகளை மேய்த்து வந்தான். துருதுருவென்றிருக்கும் துடிப்பான பயல். கட்ட பொம்மு 1799 இல் தூக்கிலிடப்பட்டார். ஊமைத்துரை பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார். அவரை மீட்டு வந்து கோட்டை மீண்டும் எழுந்தது.

ஆனால் வெள்ளையரின் பீரங்கிகளுக்கு முன்னால் பாஞ்சை வீரர்களின் வேல் கம்புகளால் ஈடு கொடுக்க முடியவில்லை. கோட்டை சிதைந்தது. பிணக்குவியல்கள் நிறைந்தன. சிறுவன் நமச்சிவாயம் அனைத்தையும் உணர்ச்சிப் பெருக்கில் கவனித்து வந்தான்.

அப்பொழுது ஊமைத்துரையின் மனைவி வெள்ளையம்மாள் நிறை கர்ப்பிணி. பாஞ்சை வீரர்களுக்கு வாரிசு இல்லாமல் போய்விடுமோ என்று அஞ்சிய வீரண்ணமணியாரர் வெள்ளையம்மாளையும் அவள் தோழி சக்கம்மாளையும் கூட்டிக் கொண்டு வாழைத் தோட்டங்கள் நிறைந்த தெற்கு வாசல் வழியாக மறைந்து சென்றுவிட்டார்கள்.

அநாதையாக விடப்பட்டு ஒருவாய் சோற்றுக்கு வழி இல்லாமல் அலைந்தான். ஆனால் பாஞ்சைப் போர் பற்றி கடல் மடை திறந்தார் போல் சுயம்பாடினான். குற்றால அருவி போல கடகடவென்று வார்த்தைகள் உருண்டோடின.

'ஆடு மாடு மேய்ச்சபயல் கவி பாடுகிறான்' என்று அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். எல்லோரும் அவனை நமச்சிவாய புலவர் என்று புகழ்ந்து கவிபாடச் சொல்லி கஞ்சி கொடுத்தார்கள். ஆனால் தங்க இடம் இல்லை.

பாஞ்சைக்கு மேற்கே ஐந்து மைல் தொலைவில் உள்ள சண்முகபுரம் என்ற ஊரில் சென்னப்ப ரெட்டியார் என்பவர் சிறந்த தேசபக்தர் - வெள்ளையர் ஆட்சியை வெறுப்பவர். அவர் நமச்சிவாயப் புலவரைக் கூப்பிட்டு கூழுக்குப் பாடும்படி ஏடு கொடுத்தார்.

பனை ஓலையில் கவி மழை பொழிந்தார். மூவாயிரம் பாடல்களில் பெருங் காப்பியம் பாடினார்.

வாத்தியார் இவ்வாறு சொல்லி முடியவும், 'முதற்பாடலின் பொருளைச் சொல்ல முடியுமா சார்?' என்று கேட்டார் நாகராஜன்.

'திரேதா யுகத்தில் கம்பர் ராமாயணம் பாடினார்
துவார யுகத்தில் வேதவியாசர் பாரதம் பாடினார்
கிரேதா யுகத்தில் கச்சியப்பர் கந்தபுராணம் பாடினார்
கலியுகத்தில் நமச்சிவாயப் புலவர் கலியுகப்
பெருங்காவியம் பாடினார்'

என்றார் வாத்தியார்.

'இதனால் சமூகத்திற்கு என்ன சார் பயன்?' நாகராஜன் விரக்தியோடு கேட்டார்.

'தமிழுக்கு ஒரு புதிய இலக்கிய வரவு' என்று சொன்ன வாத்தியார் மீண்டும் பேசினார் :

'திருச்செந்தூர் வழிநடைச்சிந்து' என்று ஒரு நூலைப் பார்த்தேன். தூத்துக்குடி பக்கம் குலையன்கரிசல் என்ற ஊரைச் சேர்ந்த ராஜபாண்டி நாடார் என்பவர் பாடியிருந்தார்.

'காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை கவிராயரின் பாடல்களுக்கு இணையானது. காவடியை திருச்செந்தூர் முருகப்பெருமான் சன்னிதியில்

செலுத்த தூக்கிச் செல்லும்போது திருச்செந்தூர் வரையிலுள்ள திரவியபுரம், கோவங்காடு, மஞ்சள்நீர் காயல், குருவித்துறை, ஆத்தூர், ஆறுமுகநேரி... முதலான ஊர்களின் இயற்கை வளங்களை, காட்சிகளின் மாட்சிகளை அழகாக வர்ணித்துள்ளார்.

மிடுக்கான நடையில் துள்ளல் ஓசையில் பாடுகிறார். அந்தச் சிறுநூல் அரைகுறையில் நின்றுவிட்டது. அவர் முருக சன்னிதி போய் சேராமல் ஆறுமுகநேரியில் காவடியை வைத்துச் சென்று விட்டார். அவர் பின்னால் சென்றவர்களும் ஓடிவிட்டார்கள். முற்றுப் பெறாத நூலாக அது இருக்கக் கண்டேன்' என்றார் வாத்தியார்.

'ஏன் சார் அப்படி' மிகுந்த ஆர்வத்துடன் கேட்டார் நாகராஜன்.

'காவடி தூக்கிச் சென்றவர் தாழ்ந்த சாதி, ஆகையால் முருகனின் மூலஸ்தானம் வரை அவர் போக முடியாதாம். வெளிப்பிரகாரத்தில் நின்றுதான் காவடி, காணிக்கையை செலுத்த முடியும் என்று கேள்விப் பட்டார். கோபத்தில் காவடியைப் போட்டுவிட்டு ''சாமிக்கும் சாதி வித்தியாசமா'' என்று கேட்டுச் சென்று விட்டார்' என்றார் வாத்தியார்.

நாகராஜன் துள்ளி எழுந்தார்.

'இது ஒரு சிறந்த இலக்கியம் சார், சாமியின் பெயரால் நடந்த சாதிக் கொடுமை பளிச்சிடுகிறது. இதுமாதிரி சிற்றிலக்கியங்களை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்' என்றார்.

மணி இரவு 11:30

ஆணும் பெண்ணுமாக இரகசிய இடங்களைத் தேடி ஒதுங்கினர். போலீஸ் காவலுக்கு நின்றது.

தரணி புகழ் பரணி ஆறு சுற்றுச்சூழல் கெட்டு தலைகவிழ்ந்து நின்றது.

48

வெள்ளையர்கள் வெளியேறினார்கள். அவர்கள் விட்டுச் சென்ற நற்காரியங்களை மறந்தார்கள், மறுத்தார்கள். வேண்டாத சில வழக்கங்களை உடும்புபோல பிடித்துக் கொண்டார்கள்.

கோர்ட்டில் ஜூரிகள் என்று நால்வரை நியமிப்பதும் அப்படித்தான்.

எஜமான் வருகையைக் கண்டு வீட்டு நாய் குரைக்கும். அது குரைப்பதைப் பார்த்து அடுத்தவீட்டு நாய் குரைக்கும். பின்பு தெரு முழுதும் உள்ள நாய்கள் குரைக்கும். காரணம் இல்லாமலேயே குரைத்துக் கொண்டிருக்கும். அப்படித்தான் ஆங்கிலேயர்கள் காலத்தில் நியமித்த ஜூரிகள் இன்றும் நிலைத்து நிற்கிறார்கள்.

ஆங்கில நீதிபதிகளுக்கு தமிழ் தெரியாத காரணத்தினால் அன்று தேவையாயிருந்தது.

சுதந்திரம் கிடைத்தபிறகும் அது தொடர்கிறது.

அநேக வழக்குகளில் ஜூரிகளின் விருப்பு வெறுப்புகள், லஞ்ச லாவண்யங்கள் நீதிகளைப் புரட்டின.

அன்று வாய்தா நாள்.ஜூரிகள் தங்கள் கருத்தைக் கூறும் முக்கியமான வாய்தா. நீதிபதியின் தீர்ப்பிற்கு முன்னால் ஜூரிகளின் தீர்ப்பு முக்கியத்துவம் பெறும்.

1952 ஜூன் இறுதி.

வாத்தியாரின் வழக்கு பற்றி வரும்போது ஜூரிகள் நால்வரும் ஏகமனதாக 'வாத்தியார் குற்றவாளி' என்று தீர்ப்புக் கூறினார்கள்.

'வாத்தியாரின் டைரியும், எழுத்துமே சதியின் ஊற்று. சாட்சிகள் அவருக்குச் சாதகமாக இருந்தாலும் அவர் குற்றவாளி என்பதை நிரூபிக்க அவரது டைரி ஒன்றே போதும்' என்றார்கள்.

ஒட்டு மொத்தமாக இப்படி ஒப்பாரி வைப்பார்கள் என்று வக்கீல் தோழர்கள் உட்பட யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நீதிபதி சுப்ரமண்யம் அவர்களின் கண்கள் வாத்தியாரின் கண்களைத் தேடிக் கண்டுபிடித்தன. இருவரின் பார்வைகளும் ஒன்றையொன்று சந்தித்தன. கருணை வழியும் அப்பாவித்தனமான வாத்தியாரின் கண்களைக் கண்டு நீதிபதி கலங்கினார்.

11.8.1952 தீர்ப்பு நாள்.

வாத்தியாரை உடுத்த உடையோடு அப்படியே சிறைக்குள் கொண்டுபோய் விட்டார்கள். ஜூரிகளின் தீர்ப்பிற்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறது. கொடிய தூக்குத் தண்டனை குற்றவாளிகளை அடைக்கும் தனி அறை ஒன்று காலியாக இருந்தது. அதில் வாத்தியரை அடைத்தார்கள். அது அந்தமான் இருண்ட சிறையின் ஒரு கொடிய கொட்டடி போல் இருந்தது.

அரசு விடுமுறையைச் சேர்த்து கோர்ட்டிற்கு மூன்று நாட்கள் ஓய்வு கிடைத்தது. அம்மூன்று நாட்களும் நீதிபதி கொடைக்கானல் போவதாகவும், வாத்தியாரின் டைரியை உடன் கொண்டு செல்வதாகவும் நம்பிக்கையான செய்திகள் வந்தன.

வாத்தியார் மரண வாயிலான தனி அறையில் அடைபட்டார். டைரி ஒரு பூதம்போன்று அவர் முன்பாக நின்று அச்சுறுத்தியது.

வாத்தியாரைக் கைது செய்தபோது பறிமுதல் செய்த பலப்பல பொருள்களில் 1947 முதல் 1950 வரையிலான நான்காண்டுகளின் டைரிகளும் இருந்தன.

அவைகளை நீதிபதி பார்வையிடலானார்.

1947 லிருந்து டைரியின் இதழ்களைப் புரட்டுகிறார்.

1947 ஆகஸ்ட் 15 - சூரியன் அஸ்தமிக்காத எல்லையைக் கொண்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உடைந்தது. இப்பொழுது நாங்கள் சுதந்திர இந்தியாவில் வாழ்கிறோம் என்று எண்ணும்போதே உள்ளம் துள்ளுகிறது.

1947 அக்டோபர் 8 - பிரதமர் நேருஜிக்கு ஓர் ஆலோசனை :

உலகம் ஒன்று, சமுத்திரம் ஒன்று, கடவுள் ஒன்று, மானுட சாதியும் ஒன்று. அதுபோல உலகம் முழுமைக்கும் ஒரே பொதுவான கரன்சியை ஏற்படுத்தினால் என்ன? ரூபாய், ரூபிள், டாலர் என்ற குழப்பங்கள் ஏன்?..

1947 நவம்பர் 10 - இன்று என் தங்கையோடு சண்டை போட்டேன், அவளை அடித்துவிட்டேன், பின்பு அழுதேன். ஆண்டவரே என்னை மன்னியும். அவளுக்கு நல்ல மாப்பிள்ளை அமைய துணை செய்யும்.

1948 ஜன.4 - ராசாவூரில் பயங்கர குடிதண்ணீர் கஷ்டம், மக்களின் உழைப்பு முழுவதும் ஒரு குடம் தண்ணீரிலேயே முடங்கி விடுகிறது. எத்தனை முயற்சித்தும் விடிவு இல்லையே.... அரசு கண்விழித்துப் பார்க்காதா? குடிதண்ணீருக்கு இந்தப் பாடா?

1948 பிப். 2 - பண்படுத்தாத நிலத்தில் களைமுளைப்பதைப் போல புரட்சிகரமான சீர்திருத்தங்கள் இல்லாத நாட்டில் களை எனும் குற்றங்கள் மலியத்தான் செய்யும்.

1948 மார்ச் 3 - பண்ணையூரில் காமாட்சி என்ற பெண் என்மீது கண்களால் வலை வீசுகிறாள். இறைவா, அந்த மாய வலையிலிருந்து என்னை விடுவித்துவிடு. என் பணி பெரிது. நான் இன்னும் செல்ல வேண்டிய தூரம் வெகுதூரம். பண்ணையூர் மக்களை கொடிய அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க என் கால்களை திடப்படுத்து.

நீதிபதி தமக்குள்ளே சிரிக்கிறார். பின்பு ஆழமாகச் சிந்திக்கிறார்.

1948 மார்ச் 4 - இன்று இரவு எங்கள் வாலிபர் சங்கத்தில் ஊர் முன்னேற்றத்திற்கும் கல்வி முன்னேற்றத்திற்கும் திட்டங்கள் தீட்டினோம். கடவுளே, நான் பெரும்பணி செய்ய இந்தத் துரும்பை எடுத்து உபயோகியும்.

1948 ஏப்ரல் 5 - புத்தூர் தையல் கடை துரைசாமி அண்ணன் தாம் தைத்த ரெடிமேட் துணிகளுக்கு தாமே விலையை நிர்ணயிக்கிறார். விவசாயி உண்டுபண்ணும் பண்டங்களுக்கு மட்டும் இடைத்தரகர் ஏன்? என் தந்தை ஒரு விவசாயி, சிறு பருத்தி வியாபாரி. தூத்துக்குடி மில் முதலாளியிடம் போன பிறகுதான் பருத்தி விலை தெரியும். நாளுக்கொரு விலை, இது நியாயமா?

நீதிபதி தம் கண்ணாடியை கழட்டி சிந்திக்கிறார்

டைரிகளை வரிசையாக வாசியாமல் தாள்களை புரட்டித் தள்ளி ஓடவிட்டு வாசிக்கிறார்.

1948 ஆகஸ்ட் 4 - ஜெர்மானிய மிஷனரி ரேனியஸ் ஐயர். அவரது வரலாற்று நூலை இன்று படித்து முடித்தேன். அவர் நெல்லை மாவட்டத்தில் 1820 முதல் 1835 வரை அயராது உழைத்து பட்டி தொட்டி பாமரக் கிராமங்களில் 350 ஆரம்பப் பள்ளிகளையும் 400 வழிபாட்டுத் தலங்களையும் ஏற்படுத்தி உள்ளார். அனைத்தும் அழுத்தி அமுக்கப்பட்ட மக்களுக்குக் கிடைத்த அருட் கொடையே. எம் பண்ணையூர் பள்ளியும் அப்படித் தோன்றியதே. தாழ்குலமக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டிருந்த

காலம் அது. 1832 இல் அவர் எழுதிய 'பூமி சாஸ்திரம்' என்ற நூல் தமிழ் மக்களுக்குக் கிடைத்த முதல் விஞ்ஞான நூலாகும்.

1838 மே மாதம் ஒன்பதாம் தேதியோடு அவரது டைரி முடிகிறது. அவர் ஒழுங்காக டைரி எழுதியமையால் அநேக உண்மைகள் இன்று வெட்ட வெளிச்சமாயின.

ஜட்ஜின் கண்கள் கலங்கின.

அடுத்த டைரியை எடுத்தார்.

1949 ஏப்ரல் 9 - ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தமது முதலமைச்சர் பதவியை தாமே ராஜினாமா செய்தார். அது எம் நண்பர்கள் பச்சமால் ரெட்டியார், கந்தையா ஆகியோருக்கு வருத்தமாயிருந்தது. ஊழலற்ற ஆட்சியை நடத்திக் காட்டிய ஓர் உத்தமரல்லவா அவர்?

நியாய தேவதை நிமிர்ந்து நெடுநோக்கு நோக்கினார்.

1949 ஏப்ரல் 12 - அண்மைக் கிராமமான காயல் ஊரணி என்ற ஊரில் பள்ளிக்கூடமே இல்லை. என் சொந்தக் காசைச் செலவு செய்து கல்வி இலாக்காவுக்கு மனுச்செய்தேன். பண்ணையார்கள் பள்ளிகள் வராதபடி தடுத்து வருகிறார்கள். இன்னும் பள்ளியில்லாத ஊர்கள் லட்சம் லட்சம்.

1949 அக். 13 - இன்று எம் பள்ளியில் கம்யூனிஸ்ட் இரகசியக் கூட்டம் நடந்தது.

நீதிபதியின் நெற்றி விரிந்து சுருங்கியது.

1949 நவம்பர் 1 - கரிசல் காட்டு பருத்தி விவசாயிகள் பட்டினி கிடக்கிறார்கள். உற்பத்தி செய்கிறவனுக்கு விற்கத் தெரியவில்லை. வியாபாரிக்கு 'சந்தை ஞானம்' இருக்கிறது. வியாபாரி சீமானாகிறான், விவசாயி சீரோ ஆகிறான்.

நீதிபதி டைரியை கீழே வைத்துவிட்டு சிந்தனையிலாழ்ந்தார்.

அன்று இரவு வாத்தியாருக்குத் தூக்கமே வரவில்லை. தாம் எழுதிய டைரியின் வாசகங்கள் அலைஅலையாக நினைவிற்கு வந்தன. 'ஆ... தெய்வமே, என் டைரியை பிறர் ஒருவர் படிப்பார் என்று நான் கனவு கூடக் காணவில்லையே...' என்று அலறியபடி எழுந்தார்.

'என்பாடே இப்படி என்றால் மரணவாயிலில் நிற்கும் மற்றத் தோழர்களின் கதி என்ன? கையிலும் காலிலும் குண்டு துளைக்கப்பட்டு அனுதினமும் வேதனையில் வெந்து கொண்டிருக்கிறாரே கே.பி.எஸ்.மணி அவர் செய்த குற்றம் என்ன?

'கே.பி.எஸ்.மணி முப்பது வயது இளைஞர். பாபநாசம் மில்லில் ஸ்பின்னிங் தொழிலாளர். 1938 இல் வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டார். 1939 இல் யுத்த எதிர்ப்புப் பிரச்சாரத்தில் பங்கு கொண்டார். வேலை டிஸ்மிஸ் ஆனது. ஆறு மாதங்கள் தண்டனையும் கிடைத்தது. சிங்கை தொழிற்சங்கத்தை கட்டி வளர்த்த கட்டிளங்காளை. 1946 இல் ரயில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. சிங்கையில் தொழிலாளர்கள் அனுதாப வேலை நிறுத்தம் செய்ததில் ஏற்பட்ட கலவரத்தில் ஒரு வருடத்தண்டனை கொடுத்து சேலம் சிறைக்குள் தள்ளினார்கள்.

'சேலம்சிறையில் 1950 பிப்ரவரி 11இல் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின்போது மணி மீதும் துப்பாக்கி ரவைகள் பாய்ந்தன. அதன் விளைவாக இடது கை எலும்பு முறிந்தது. இன்னும் அவரது கையிலும், காலிலும் துப்பாக்கி ரவைகள் எடுக்கப்படாமல் இருக்கின்றன. இடது கை இயங்க முடியாமல் போயிற்று.

'கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இந்த இளைஞரின் உள்ளம் முழுவதும் மக்கள் நன்றாயிருக்க வேண்டும் என்ற சிந்தனை தவிர வேறு எண்ணமே கிடையாது. இப்படிப் பலர் மரணவாயிலில் நிற்கிறார்கள். தலைக்குமேல் மரணக்கயிறு தொங்குகிறது'.

வாத்தியாருக்குத் தூக்கம் வராமல் அங்குமிங்கும் புரண்டார்.

11.8.1952 தீர்ப்புநாள்.

டைரியின் வாசகங்களை நினைத்து வாத்தியாரின் உள்ளம் உருண்டு புரண்டது. கண்கள் சிவந்திருந்தன.

ரவுண்ட் வந்த வார்டர் செல்லப்பா வாத்தியாரின் லாக்கப் முன்னால் உட்கார்ந்தார்.

'வாத்தியாரே, நீங்கள் ஒரு கதாசிரியர் என்று கேள்விப்பட்டேன். நான் ஒரு கதை சொல்றேன், கதை இல்லை செய்தி' என்று சொல்லி ஆரம்பித்தார்.

'அமெரிக்காவில் 26 வயதுப் பெண்ணுக்கும் 56 வயது ஆணுக்கும் திருமணம் நடந்தது. ஆண் கோடீஸ்வரன். குழந்தை இல்லை.

'உம்மால்தான் எனக்குக் குழந்தை இல்லை?' என்றாள் மனைவி.

'இல்லை, இல்லை நீதான் மலடு' என்றார் கணவர்.

இருவருக்கும் சண்டை வலுத்தது. கடைசியாகக் கணவர் சொன்னார்.

'நீ யாரிடமாவது போய் பிள்ளைபெற்றுக் கொள். என் சொத்தில் பாதியை உனக்கும், மறுபாதியை பிறக்கும் பிள்ளைக்கும் எழுதி வைப்பேன்' என்றார். அதனை அவள் சவாலாக ஏற்று, பிள்ளைதரக்கூடிய ஓர் இளைஞனை தேடித்திரிகிறாள்' என்றார்.

'அமெரிக்க நாகரீகம் எங்கே போய் நிற்கிறது பாத்தீங்களா? இப்படி தினம்வந்து ஒரு கதை சொல்லுங்கள்' என்றார் வாத்தியார்.

49

அன்று ரிமாண்ட் பிளாக் கைதிகளுக்குள் ஒரு கலகலப்பு எழுந்தது. தங்கம் என்ற பெண் கைதி லிபச்சாரக் கேஸில் வந்திருந்தாள்.

லாக்கப்பிற்குள்ளிருந்த சில கிரிமினல்ஸ் அவளைப்பார்த்து பல்லிளித்துப் பரிகாசம் செய்தனர். ஆனால் அவள் உள்ளே அடைபட்ட நேரத்திலிருந்து இனிய பாடல்களை தேன்மதுர இசையில் பாடினாள்.

'மகளே, ஓ மகளே உன் இதயத்தை தாராயோ?'
இப்போ தாராயோ, இப்போ தாராயோ?'
கெட்ட மகளைப் போல துட்ட வழிகளிலே
மட்டுமிஞ்சி நீ அலைந்தாய் - உன்னைக்
கட்டிப்பிடித்து முத்தமிட்டே அரவணைப்பேன்
திட்டம் இது நீ ஓடிவா'

இந்த பக்திப்பாடல் சிறை முழுவதும் இழையோடியது. பரிகசித்த அனைவர் வாயும் அடைபடும்படி அமுதகானமாக ரீங்காரித்தது.

சீஃப் வார்டர் சொன்னார். அந்தப் பொண்ணு இப்போ மனசு மாறி ரொம்பப் பக்தியாயிட்டாங்க' என்றார்.

அவள் முகத்தில் இப்பொழுது ஒரு தெய்வீகப் பிரகாசம் இருக்கிறது' என்றார் அடுத்த வார்டர். வார்டர்கள் உட்பட அனைவரும் அவளைப் பார்த்து மரியாதையுடன் மௌனமானார்கள்.

ஒரு பக்காக் கிரிமினல் கைதி சொன்னான்.

'பெட்டைக் கோழி கூவியா பொழுது விடியப் போவுது? இந்த ஒரு பொம்பளை திருந்திட்டா விபச்சார தொழிலே இல்லாமல் போயிடுமா' என்றான்.

நாகராஜன் வாத்தியாரைப் பார்க்க மனுச் செய்திருந்தார். சிறை அலுவலக வளாகத்தில் பேட்டி நடந்தது.

'குறத்தி முடுக்கு' படித்தேன். அற்புதமான குறுநாவல், இளங்கோ ஸ்டோரில் கொடுத்தேன்' வாத்தியார் சொன்னார் 'அதை வாங்கிக் கொண்டேன். உங்கள் கருத்தை கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்கள்' நாகராஜன் கேட்டார்.

'சொல்லக்கூடாத அசிங்கங்களை அழகாக இலக்கியம் பண்ணி இருக்கிறீர்கள். உடனே பிரசுரியுங்கள். பல்லோராலும் விமர்சிக்கப்படும் மிகச் சிறந்த குறுநாவலாக இருக்கும்' வாத்தியார் சொன்னார்*.

'தங்கம் கதை தெரியுமா?' என்று கேட்டார் வாத்தியார்.

'என்னைத் திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டாள். அவளும்ஓர் இலட்சியப் பெண்ணே. அவளால் என் வாழ்வு பாதிக்கக்கூடாது என்பது அவளது வாதம்' என்று சொன்ன நாகு மீண்டும் சொன்னார்.

'அவளை ஒரு வேசி என்று உலகம் கேவலமாகக் கருதுகிறது. பரத்தை மாதவியின் நல்ல குணங்கள்தானே மணிமேகலையிடத்துக் குடிகொண்டன. தங்கத்திடமும் ஒரு தெய்வீக அழகைக் காண்கிறேன். அடி

* ஜி.என்.பக்தன் பட்டறை' என்ற பெயரில் பதிப்பகமொன்றை ஆரம்பித்து 1963இல் அவரது முதல் புத்தகமாக 'குறத்திமுறுக்கு' என்னும் குறுநாவல் வெளிவந்தது. அது மக்கள் மத்தியில் பரவாமல் முடங்கிவிட்டது. பின்பு மதுரை வர்ஷா பதிப்பகம் 1994இல் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டது.

சறுக்கினாலும் ஆனை ஆனைதான். அவள் எனக்குக் கொடுத்து வைக்கவில்லை' என்றார்.

'அவளுக்கும் உங்களுக்கும் உள்ள உறவிற்கு ''குறத்தி முடுக்கு'' என்ற படைப்பு ஒன்றே போதுமானது. அதனை வெளியிடுங்கள். தங்கத்தை மறந்து தரமான இலக்கியம் படையுங்கள்' என்ற வாத்தியார் 'தங்கத்தை நேற்று கைது செய்து இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்' என்றார்.

அதிர்ச்சியடைந்த நாகராஜன் 'அப்படியா... நான் உடனே ஜாமீன் எடுத்து மகளிர் சேவா நிலையத்தில் சேர்த்து விடுகிறேன். நத்தையானது விடா முயற்சியினால் பாதுகாப்பான இடத்தைச் சென்றடைகிறது. அதுபோல அவளையும் பாதுகாப்பான இடத்தில் சேர்த்தால்தான் என் மனம் நிம்மதியடையும்' என்றார்.

இருவரும் பிரியாவிடை பெற்றனர்.

சீஃப் வார்டருக்கு ரொம்ப அனுபவம். அவரிடம் பேசுவது வாத்தியாருக்குப் பிரியமாயிருந்தது.

'எங்க வழக்கில் வெங்கடசாமி, பெருமாள் மற்றும் நால்வர் அப்ரூவர்கள் ஆகிவிட்டார்கள். முதலில் பிரியாணிக்கும், நல்ல சாப்பாட்டிற்கும் போலீஸ் கையாளானார்கள். பிறகு உத்தியோகம் வாங்கித் தருவதாக ஏமாற்றினார்கள். உங்கள் நீண்ட அனுபவத்தில் அப்ரூவர்கள் கதி என்ன? போலீஸ் வாக்குறுதியைக் காப்பாற்றுமா?' வாத்தியார் கேட்டார்.

வார்டர் சொன்னார்.

'ஒரு திருடன் கையும் களவுமாகப் பிடிபட்டான். அரசன் அவனுக்குத் தண்டனையாக நூறு வெங்காயம் திங்கணும் அல்லது நூறு அடிபடணும்' என்று சொன்னார். அவன் முதலில வெங்காயம் தின்கிறேன்' என்றான். பத்து வெங்காயத்திற்கு மேல் தின்ன முடியவில்லை. அடிபடுகிறேன் என்றான். பத்து அடிகளுக்கு மேல் தாங்க முடியவில்லை. வெங்காயம் தின்கிறேன் என்றான். கடைசியில் நூறு அடிபட்டான், நூறு வெங்காயம் தின்றான். இதே கதைதான் அப்ரூவர்களுக்கும். பொறுக்கி நாய்கள் தெருவில் திரியும். இரண்டும் கெட்டான் கதைதான்' என்றார்.

வாத்தியாருக்கு டைரியின் நினைவுகள் மீண்டும் மீண்டும் முகத்தில் வந்து மோதின.

'கொழுக்கட்டை என்றால் எனக்கு ஓலைக் கொழுக்கட்டைதான் என் நினைவிற்கு வரும். பண்ணையூருக்கு வந்தபிறகுதான் முதலாளி தந்த முதுகுக் குழக்கட்டையை முனியனின் முதுகில் பார்த்தேன். இந்த முதலாளியை கடவுளாலும் மாற்ற முடியாது.

'இந்தியா ஏழைகள் வாழும் செல்வவளமிக்க நாடு என்று ஒரு பொருளாதார நிபுணர் சொன்னார். வெள்ளையர்கள் போல் கொள்ளையர்கள் நாட்டைக் கூறு போடுகிறார்கள்.

'தேனீயே உனக்கொரு கூடு உண்டு,

சிட்டுக்குருவியே உனக்கொரு மறைவிடம் உண்டு, ஆனால் எம் பண்ணையூர் மக்கள் பலருக்கு படுக்க இடமில்லை ஊர் மடத்தில்

படுக்கிறார்கள். இதை மாற்ற முடியாதா?

'ஆ ... ரட்சகா.. இந்த வாசகங்களை டைரியில் படித்துப் பார்க்கும் நீதிபதி என்னைப்பற்றி என்ன நினைப்பார்?'

வாத்தியாரின் காதுகளில் யாரோ அறைவது போன்றிருந்தது. பாலுவை நினைத்து மனதைத் திடப்படுத்திப் பார்த்தார்.

'மரணக்கட்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டன, மரணக் கண்ணிகள் என்மேல் விழுந்தன'* என்ற விவிலிய வாசகங்கள் அவர் வாயில் முணுமுணுத்தன.

'யானைக்குத் தும்பிக்கை, மனிதனுக்கு நம்பிக்கை' என்று வார்டர் அடிக்கடி சொல்வது அவர் முகத்தில் வந்து குத்துவது போலிருந்தது.

'அந்தகார லோகில்
ஒளி வீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும்
பிரகாசிப்போம்'

என்ற தங்கத்தின்பாடல் சிறையின் நாற்றத்தையும் தாண்டி மணம் பரப்பியது.

'வாத்தியாரே, தூக்கம் வரல்லியா?' என்று கேட்டுக் கொண்டே வார்டர் வந்தார்.

'ஆமா' என்று தலையாட்டினார் வாத்தியார்.

'நான் சின்னப் பையனா இருக்கும்போது எனக்குத் தூக்கம் வரல்லன்னா எங்க பாட்டி கடைசியா ஒரு கதை சொல்வா...

'ஏழுமலை தாண்டி, ஏழு கடல் தாண்டி
கொம்பேரி மூக்கன் மலை மேல,
பூதவாய் குகைக்குள்ளே கூண்டுக்குள் இருக்கும்
கிளியை எடுத்து வந்து...

'போதும் பாட்டி நான் தூங்கிடுவேன்' என்பேன்.

வாத்தியார் பாட்டி கதை கேட்டு சிரித்தார். நாளை தீர்ப்புநாள் என்று எண்ணியபோது அவரை அறியாமலே முழந்தாளிட்டார்.

ஒருசில நிமிடங்கள் கழித்து ஏதோ காட்சி கண்டவர் போல் துள்ளி எழுந்தார்.

பாரதி அடிக்கடி பாடும் ஒரு பாட்டை, ஆடிப்பாடவேண்டும் என்று ஆசைப்பட்டார்.

'அட
முக்கால் துட்டு கருப்பட்டியை
மூணுதரம் காப்பி போட்டு
முழுக்க முழுக்க குடிச்ச காலம் போச்சுதே - இப்போ
மும்மடங்கும் முப்பது மடங்கும் ஆச்சுதே -
அட முக்காத்துட்டு

* *சங்கீதம்* 18:4,5

கால்மானம் வைத்து ஆடியதைக் கண்ட வார்டர்கள் சிரித்தார்கள்.

'நாளைக்குத் தண்டனை தலைக்கு நேரா தொங்குது, இன்னிக்குக் குதித்து ஆட்றார்' என்று கூறி மகிழ்ந்தார்கள்.

50

அன்று ஜட்ஜ்மெண்ட்.

நெல்லை செஷன்ஸ் கோர்ட்டைச் சுற்றி பெருங்கூட்டம் அலைமோதுகிறது. சதிவழக்கு என்னும் பாவைக் கூத்து நாடகத்தின் பட்டாபிஷேக இறுதி நாள்.

அறுபத்து ஏழுபேரும் காலரியில் கம்பீரமாக அமர்ந்திருந்தனர். தோழர்கள் மத்தியில் இருக்கமான ஓர் அமைதி நிலவியது. வழக்குகள் பற்றி இருதரப்பு வக்கீல்களின் சூடு பறக்கும் வாதப் பிரதிவாதங்கள் முடிவுற்ற அந்நாளில் ஜட்ஜ் சுப்ரமண்ய நாடார் சொன்னார்.

'நீங்கள் அரசியல்வாதிகள், உங்களுக்குக் கொடுக்கும் தண்டனை அப்படியே நிலைத்துவிடக் கூடியதல்ல' என்ற கூற்றிலிருந்து தண்டனை கடுமையாக இருக்கும் என்பது எல்லோரின் கணிப்பாயிருந்தது.

தமிழகத்தின் முதல் சட்டமன்ற தேர்தலுக்கு முன் தண்டனையை கொடுத்துவிட வேண்டும் என்பது அரசின் அறிவுறுத்தலாகும். எனவேதான் இவ்வளவு நாட்களும் ஆறப்போட்டிருந்த விசாரணை துரிதமாக நடந்து முடிகிறது.

இருவருக்கு தூக்கும், சிலருக்கு ஜென்மமும், மீதிப்பேர்களுக்கு பத்து ஆண்டுகளும் கிடைக்கும் என்பது வதந்தி.

தலைவர்களான தோழர்களுக்கு சதிவழக்கு புதிதல்ல. முதுமையான பெற்றோர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. வாத்தியாரின் தந்தை இரு கைகளை கூப்பிக் கும்பிட்டவாறு நெருங்கி வந்தார். தமயன் கோயில்பிள்ளை கவலையின் முழு உருவாய் நின்றார்.

எஸ்.ஏ.பி. போலீசார் துப்பாக்கி சகிதமாக வந்திருந்தோரை விரட்டினார்கள். தோழர்கள் வேலாயுதம், பொன்னு இவர்களை நினைத்து வாத்தியார் மனதிற்குள் அழுதார்.

வாத்தியார் மரண வாயிலில் நிற்கிறார் என்பது எல்லோரும் தீர்மானித்த காரியம்.

நீதிபதி ஆசனத்திற்கு வரும் அறிகுறி தெரிந்தவுடன் மயான அமைதி நிலவியது.

தூத்துக்குடி பீர் இஸ்மாயிலின் அம்மா அல்லாவை நினைந்து அழுது கொண்டே நிற்கிறார். கவலையே உருவான மணியின்தாய், கண்கள் பஞ்சடைத்துப்போன லட்சுமணனின் அம்மா... இன்னும் எத்தனை எத்தனை சோக முகங்கள்.

அதோ வேலாயுதத்தின் தர்ம பத்தினி பாப்பு அம்மாள், இடுப்பில் கைக்குழந்தையோடும், கையில் சிறுமியோடும் வருகிறார். அந்தத் தாயின் வருகை அனைத்துத் தோழர்களின் உள்ளத்தையும் உலுக்கியது. தாம் சிறைக்கு வந்தபிறகு பிறந்த இடுப்பிலுள்ள ஆண்மகனை பாசத்தோடு பார்க்கிறார் வேலாயுதம். அனுதாபிகளும், ஆதரவாளர்களும் பெரும் திரளாய் நின்றார்கள்.

அமைதி... அமைதி....

அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் குஷன் சேரில் அமர்ந்தார்.

காலரி கப்சிப் ஆனது.

இதுவே இப்படியானால் இறைவனின் நியாயத்தீர்ப்பு நாள் எப்படி இருக்கும்?

வெளியேயுள்ள ஜனத்திரள் அமைதியாக முண்டியடித்தது- சற்று பெலமாக அடித்த காற்றில் காய்ந்த மா இலைகள் பெருவாரியாக உதிர்ந்தன.

நியாய தேவதை வாய் திறந்தது.

தீர்ப்பு படிக்கப்பட்டது.

பொன்னு முதல் நல்லகண் ஈறாக வேலுச்சாமித்தேவர், வேலாயுதம், மாணிக்கம், மாயாண்டி பாரதி, கே.பி.எஸ்.மணி, கிருஷ்ணக் கோனார், அழகுமுத்து ஆகிய ஒன்பது பேருக்கும் ஆயுள் தண்டனை.

ராமச்சந்திரன், ராமலிங்கம், ஆர்.பெருமாள், அண்ணாமலை, அனந்தகிருஷ்ணன், சொர்ணம் ஆகிய ஆறுபேருக்கும் ஐந்து ஆண்டுகள் தண்டனை, முனுசாமிக்கு ஓராண்டு தண்டனை.

எஞ்சிய 51 பேருக்கு விடுதலை.

வாத்தியாருக்கும் விடுதலை.

'பள்ளியில் நடந்த இரகசியக் கூட்டத்தில் 12 ஆம் குற்றவாளி வாத்தியார் பங்கெடுத்தார் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை. மேலும் அவரது டைரிகள் முழுவதும் அவரது உயர்ந்த உள்ளங்களையே உணர்த்துகின்றன. நாட்டு மக்கள் நன்றாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார், உழைக்கிறார். அவருக்கு வன்முறையில் நம்பிக்கை இல்லை. எனவே ஜூரிகள் ஏகோபித்துக் குற்றவாளி என்றாலும் நான் அவரை 'சுத்தவாளி' என்று விடுதலை செய்கிறேன்' என்று நீதிபதி தம் தீர்ப்பில் எழுதியிருந்தார்.

'சத்தியம் உங்களை விடுதலையாக்கும்' என்ற வேத வாக்கை நினைத்து வாத்தியார் நெக்குருகினார்.

'ஆயுள் தண்டனையை ரத்துச் செய்;

பொதுஉடைமை வாழ்க;

புரட்சி ஓங்குக

உலக சமாதானம் ஓங்குக' என்ற முழக்கங்கள் விண்ணை முட்டின. 'வாத்தியார் வாழ்க!' என்ற பண்ணையூர் மக்களின் குரல் மேலோங்கி ஒலித்தது.

முடிவுரை

1952 பிற்பகுதியில் பாலன் பிடிபட்டார். அவரை முதல் எதிரியாகக் கொண்டு மூவர் மீது வழக்கு நடந்தது. பாலதண்டாயுதம் என்ற பாலன், மீனாட்சிநாதன் இருவருக்கும் ஆயுள்தண்டனை. பயில்வான் அருணாசலத்திற்கு நான்காண்டு தண்டனை. மொத்தத்தில் சதி வழக்குத் தோழர்கள் 11 பேருக்கு ஆயுள்தண்டனை.

அதன் பின்பு 1962 வரை பத்து ஆண்டுகள் சிறைவாசம் புரிந்தனர். 1962 ஏப்ரலில் பாலன் தம் நீண்ட கோவை சிறைவாழ்விலிருந்து விடுதலையானார்.

பாலனின் வாழ்க்கைச் சரிதை 55 ஆண்டுகளே. சிறையில் கழிந்த ஆண்டுகள் 12. தலைமறைவு வாழ்க்கை ஆறு ஆண்டுகள். அவருக்குக் கிடைத்த மணவாழ்வு 11 ஆண்டுகளே. 1962 முதல் 1973 வரை. அந்நாட்களில் அவர் வீட்டில் செலவு செய்த நேரம் ஒரு சில மணி நேரங்களே.

அவர் நாடாளுமன்ற உறுப்பினரான பிறகு 1973 மே 31இல் விமான விபத்தில் மடிந்தார். தமிழகத்தின் தலைசிறந்த முதலமைச்சராக வரவேண்டிய பாலனை விமானம் மேலுலகிற்கே அழைத்துச் சென்றுவிட்டது.

தோழர் வேலாயுதம் 1955 அக்டோபர் 26ஆம் தேதி தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் வாளி வாளியாக இரத்தம் கக்கி உயிர் நீத்தார். தோழர் பொன்னு வேதனையால் வெந்து நொந்து மரித்தார்.

வாத்தியாரின் எழுத்துக்களுக்கெல்லாம் சாட்சியாக காம்ரேட் மாயாண்டிபாரதியும், தோழர் நல்லகண்ணும் வாழ்கிறார்கள்.

அதன்பிறகு வாத்தியார் பல்கல்வி பயின்றார். 1953 முதல் 1966வரை நெல்லைத் திருமண்டில சிறுவர் ஊழியனாகப் பணி செய்தார். தமிழில் புலமை பெற்று மேனிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகத் தொண்டாற்றினார். பாளை தூய யோவான் மேனிலைப் பள்ளியிலிருந்து தமிழாசிரியராக 1985இல் ஓய்வு பெற்றார்.

1956இல் அவரது திருமணம் நடந்தது. அவர் மனைவி வைலற் அம்மாவும் ஓர் ஆசிரியரே. நான்கு ஆண்கள், மூன்று பெண்கள். அவர்களின் பிள்ளைகள், மருமக்கள்மார் ஆகிய 28 உறுப்பினர்களைக் கொண்ட பெரிய குடும்பத் தலைவராக இன்று இருக்கிறார். பாரம்பரியம் மிக்க 'நற்போதகம்' என்ற புராதன இதழில் பொறுப்பு ஆசிரியராகப் 13 ஆண்டுகள் பணிபுரிந்தார். 1983 முதல் மனைமலர் என்ற கிறிஸ்தவ இலக்கிய மாத இதழில் 12 ஆண்டுகள் ஆசிரியராயிருந்தார். இக்காலங்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்களை எழுத்தாளர்களாக உருவாக்கினார். இம்மட்டுமாக 90 நூற்கள் வெளியிட்டுள்ளார். அவைகளில்

அவரது சொந்தப் படைப்புகள் மட்டும் எண்பது நூற்கள். 1987இல் 'வாத்தியார்' நாவலின் முதற்பாகம் நூல்வடிவு பெற்றது. வாத்தியாருடைய நூற்களின் பேரில் பலர் ஆய்வு செய்து பல்கலைக்கழகப் பட்டம் பெற்றுள்ளார்கள். பல சுயநிதிக் கல்லூரிகளில் முதுகலைக்குப் பாடமாக வைத்துள்ளார்கள். அவரது மற்ற நூல்களின் பேரில் ஆய்வு செய்து இருவர் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள். இவர் தற்போது 'மனைதீபம்' இதழின் ஆசிரியர்.

நாள் ஒன்றிற்கு இரண்டுமணி நேரமே துயில்கிறார். இவ்வாறு ஐம்பதாறு ஆண்டுகளாக எழுதி வருகிறார்.

அவரது இரண்டாம் மகள் ஜெயரதி அகஸ்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளர். மூன்று சிறுகதை தொகுப்பு நூல்கள் வெளியிட்டுள்ளார். ஆண்மக்களில் மூத்தமகன் கவிஞர் தியாரூ இன்று மிகப் பிரபலம். மூன்று கவிதை நூற்கள் வெளியிட்டுள்ளார். அவரது 'வானம் உன்னை வணங்கும்' என்ற கவிதை நூல் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இரண்டாம் மகன் ஜே.பி.ஜெயதாஸ் சிறந்த இசைப்பாடல்கள் எழுதி வருகிறார். இசையமைத்தும் அருமையாகப் பாடுவார்.

வாத்தியாரின் இனிய மனைவி பெண்கள் மத்தியில் நல்ல அருளுரை யாளர். தர்மசிந்தையுள்ளவர். அவரது அருளுரைச் செய்திகள் கொண்ட நூல் வெளிவர உள்ளது. பாளையில் உள்ள சாந்திநகரில் வசித்து வருகிறார்கள்.

இந்நாவல் எழுதி முடிந்த வரலாறு அற்புதங்கள் நிறைந்த அதிசயச் செயலாகும். அதன் விவரங்கள் தனி நூலாக வர உள்ளது. இன்னும் வெளியிட நூற்கள் ஏராளம் உள்ளன.

அவரது டைரியினால் ஏற்பட்ட மரண வாயில்... அவரது டைரியினாலேயே விடுதலை வாயிலானது.

இது வாத்தியாரின் வரலாற்றுக் காவியம். மற்றும் ஒவ்வொரு தோழர்களின் வாழ்வும் இதைவிடப் பயங்கரம்.

'வாத்தியார்' நாவல் அவரது வாலிப வாழ்வின் முதற்பாகம்-

'மரண வாயிலில்..' நாவல் அவரது வாழ்வின் இரண்டாம்பாகம். 1953க்குப் பிறகு அவர் எழுதிய பிற நூற்கள் அவரது வாழவின் மூன்றாம் பாகம் ஆகும். வாத்தியார் இன்றும் வாழ்கிறார். அவரது நூற்கள் என்றும் நின்று வாழும்.

சிறைக் காவியங்கள்

ஜான் பனியனும் - வாத்தியார் ஜேக்கப்பும்

இங்கிலாந்தில் 'ஜான் பனியன்' பெட்போர்ட் நகருக்கருகில் எல்சிட்டோ என்ற கிராமத்தில் பிறந்தார்.

இந்தியாவில் வாத்தியார் ஜேக்கப் தூத்துக்குடி நகருக்கருகில் ராஜாவின் கோவில் என்ற கிராமத்தில் பிறந்தார்.

பனியன், திருமுழுக்கு திருச்சபையைச் சேர்ந்தவர் ; வாத்தியார் தென் இந்தியத் திருச்சபையைச் சேர்ந்தவர்.

பனியன் 1652 இல் பிறந்தார். வாத்தியார் சரியாக 300 ஆண்டுகளுக்குப் பிறகு 19-11-1926 இல் பிறந்தார்.

பனியன் பழைய பாண்டங்களை செப்பனிடுகிற கண்ணாடி தொழில் செய்தார். வாத்தியார், மாணவர்களை சிறந்த சமூக ஜீவியாக உருவாக்குகிற ஆசிரியப்பணி செய்தார்.

பனியன் ஒரு பாப்திஸ்ட் சபையின் போதகராயிருந்தவர். வாத்தியார் ஆசிரியப்பணியோடு இரு கிராமச் சபைகளின் உபதேசியாராயுமிருந்தார்.

பனியன் திருச்சபையின் நாட்டுச்சட்டத்துக்கு மாறாகப் போதனை செய்தார் என்று குற்றம் சாட்டி பெட்போர்ட் சிறையில் தள்ளப்பட்டார்.

வாத்தியார் தாம் பணிபுரிந்த கிராமத்தின் கொத்தடிமைத்தனத்தை ஒழிக்கவும் ஒரு சிலருக்கு மட்டும் சொந்தமாயிருந்த கல்வியைப் பொதுமையாக்கவும் பாடுபட்டார். பண்ணையார் இடறலாக இருந்தார் அவரோடு போராடினார். மக்கள் நலனில் நாட்டம் கொண்ட கம்யூனிஸ்ட்களுக்கு உதவினார் என்ற குற்றங்கள் சாட்டி தூத்துக்குடி, கொக்கிரகுளம், மதுரை முதலிய சிறைகளில் தள்ளினார்கள். கம்யூனிஸ்ட் சதி வழக்கில் மாட்டினார்கள்.

பனியனுக்கு பைபிள் தவிர வேறு நூல் எதுவும் சிறையில் தரப்படவில்லை. 12 ஆண்டுகள் சிறையில் இருந்தார்.

வாத்தியார் இரண்டரை ஆண்டுகள் விசாரணைக் கைதியாகச் சிறையில் இருந்தார். இரண்டு ஆண்டுகள் படிக்க எதுவும் கொடுக்கவில்லை. இறுதியில் தான் நூற்கள் படிக்க அனுமதி வழங்கினார்கள்.

பனியன் பைபிளைப் பலமுறை படித்துப் படித்துக் கனவு கண்டார். மாபெரும் கனவுக்காப்பியமாம் " பரதேசியின் மோட்சபிரயாணம்" என்ற நூலை எழுதினார்.

வாத்தியார் சதி வழக்கைச் சரித்திர நாவலாக்க தம் இதயமாகிய பலகையில் அனைத்தையும் எழுதிவைத்தார். விடுதலையாகி 33 ஆண்டுகளுக்கு பிறகு "வாத்தியார்" என்ற முதற்பாக சமூகவரலாற்று நூலை எழுதினார்.

பனியனுக்கு 1672 இல் விடுதலை கிடைத்தது.

வாத்தியாருக்கு 1952 கடைசியில் விடுதலை கிடைத்தது. மோட்ச

பிரயாணம் "கனவுக்காப்பியம்". "வாத்தியார்" நனவுக் காப்பியம். பனியனின் முதற்பாகம் கிறிஸ்தியானின் திருப்பயணமான முன்னேற்றத்தைச் சொல்வது. வாத்தியார் புதினத்தில் முதற்பாகம் சுதந்திரத்திற்கும் முன்னும் பின்னும் ஒரு கிராமத்தில் நிலவிய சூழலைச் சொல்வது.

1678க்குப் பிறகு ஆறு ஆண்டுகள் கழித்து 1684 ல் பனியனின் இரண்டாம் பாகம் "கிறிஸ்துயானின் திருப்பயணம்" என்ற தலைப்பில் வெளியானது. வாத்தியார் நாவலின் இரண்டாம் பாகம் "மரண வாயிலில்..." என்ற தலைப்பில் 15 ஆண்டுகள் கழித்து வெளிவருகிறது. பனியனின் இரண்டாம் பாகம் அவரது மனைவி கிறிஸ்துயானின் திருப்பயண முன்னேற்றத்தைச் சொல்வது. வாத்தியார் நாவலின் இரண்டாம் பாகம் நெல்லை கம்யூனிஸ்ட் சதி வழக்கில் அவரோடு சிறையிருந்த 67 தோழர்களைப் பற்றிச் சொல்வது.

மோட்ச பிரயாணம் பல மொழிகளில் ஆக்கம் பெற்றது. "வாத்தியார்" நாவலைப் படித்த பல பேராசிரியர்கள் திறனாய்வுக் கட்டுரைகளை பக்கம் பக்கமாக எழுதி அனுப்பினர். பலர் அந்நூலின் பேரில் ஆய்வுகள் செய்தனர்.

மோட்ச பிராயணம் இரு பாகங்களைக் கொண்டது.

"வாத்தியார்" இருபாகங்களைக் கொண்டது.

மோட்ச பிராயணம் 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய உருவக உரைநடை நூல்.

வாத்தியார் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கிளர்ந்தெழுந்த சமூக வரலாற்று உரைநடைப் புதினம். "மரண வாயிலில்..." இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மலர்ந்த நவீனம். மோட்ச பிரயாணம் ஆன்மீகப் புத்தெழுச்சி நூல். "வாத்தியார்" ஆன்மீகக் கம்யூனிசம் பேசும் சமூக வரலாற்றுப் புத்துணர்வுப் புதினம்.

ஜான் பனியன் மா மனிதர், வாத்தியார் மிகச் சாமானியர். ஆயினும் இருவரும் இறைவன் உபயோகித்த வல்லமையான கருவிகள். மகத்தான பாத்திரங்கள்.



கரிசல் மண்ணில் வேர்கொண்டு
தழைத்தோங்கிய கற்பகத் தரு !

வானம் பார்த்த பூமியில்
ஊற்றெடுத்துப் புரண்டெழுந்த ஜீவநதி !

தொழிலாளர்களின் இரத்தம் குடிக்கும்
முதலாளித்துவத்தை மோதிச்சாடிய
கொள்கைச் சூரியன் !

கல்விச்சாலை தொடங்கி சிறைச்சாலை
வரையிலும் அறவழி நின்ற
கிராமத்துத் தென்றல் !

எழுதுகோலை தர்மத்தின் போர்வாளாய்
ஏந்திப் பிடித்த நெருப்புக்குயில் !

மனித நேயமிக்க மாபெரும் எழுத்தாளர் -
ஆர்.எஸ்.ஜேக்கப் !

பல்லாயிரக்கணக்கான வாசக
உள்ளங்களைக்
கொள்ளை கொண்ட அருட்கலைஞர்
ஆர்.எஸ்.ஜேக்கப் அவர்களின்
இலட்சியப் படைப்பு-
கற்பனை சிறிதும் கலவாத அற்புதக்
காப்பியம் **'வாத்தியார்'**.
அதன் இரண்டாம் பாகம்
'மரண வாயிலில்....'
என்னும் இக்காவியம்.

இதனை வெளியிடுவதில்
பாளை ஜெயா பப்ளிகேஷன்ஸ்
பெருமிதம் கொள்கிறது.

"ஆர்.எஸ்.ஜே. வாழ்க ! வாழ்க !!
அவர்தம் பணி தொடர்க ! தொடர்க !!"
என உளமுவந்து வாழ்த்துகிறது.

- தியாரூ
&
ஜே.பி.ஜெயதாஸ்
(பதிப்பகத்தார் சார்பில்)